

# الطريق إلى الإسلام

# சத்திய மார்க்கம் இஸ்லாம்.

باللغة التاميلية

# சத்திய
# மார்க்கம் இஸ்லாம்.

மூலம்
முஹம்மத் இப்றாஹீம் அல் ஹமத்

தமிழில்
முஹம்மத் உனைஸ்

மேற்பார்வை
அப்துல் அஸீஸ் ஷாஜஹான்

HOUSE OF THE PROPER KNOWLEDGE
FOR PUBLISHING & DISTRIBUTION
Riyadh- 11438 P.O.Box 32659 Tel 4228837 Fax 2933407

ح دار الورقات العلمية للنشر والتوزيع ، ١٤٢٥هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

الحمد، محمد إبراهيم

الطريق إلى الإسلام. / محمد إبراهيم الحمد.- الرياض، ١٤٢٥هـ

١٦٠ ص، ١٢ × ١٧ سم

ردمك: X - ٧ - ٩٥٨٣ - ٩٩٦٠

(النص باللغة التاميلية)

١- اعتناق الإسلام أ. العنوان

ديوي ٢١٣ ١٤٢٥/٥٦٨٣

رقم الإيداع: ١٤٢٥/٥٦٨٣

ردمك: X - ٧ - ٩٥٨٣ - ٩٩٦٠

**حقوق الطبع محفوظة**

**الطبعة الأولى**

**١٤٢٥هـ - ٢٠٠٤م**

بسم الله الرحمن الرحيم

**முன்னுரை**

எல்லாப் புகழும் வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும். அவனை மனமாறப் புகழ்ந்து அவனிடமே நாம் மேற்கொள்ளும் காரியங்களில் வெற்றிபெற உதவியையும், தயவையும் வேண்டுகின்றோம். மேலும் நமதுள்ளங்கள் ஏற்படுத்துகின்ற கெடுதிகளை விட்டும், நாம் செய்யக்கூடிய கிரியைகளில் தீயவைகளை விட்டும் நம்மைப் பாதுகாக்குமாறு அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் இவ்வுலகில் யாருக்கெல்லாம் நேர்வழி காட்டுகின்றானோ அவர்களை அவனைத் தவிர வேறு எவராலும் வழிகெடுத்திட முடியாது. மேலும் அவன் யாருக்கு வழிகேட்டை எழுதி வைத்திருக்கின்றானோ அவர்களை அவனைத்தவிர வேறு எவராலும் நேர்வழிப்படுத்திடவும் முடியாது. சாந்தியும் கருணையும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

இன்று உலகில் வாழும் மனிதர்களில் பெரும்பாலானோர் தாங்கள் வாழும் நாட்களை சந்தோஷம் நிறைந்த சுபீட்சமான வாழ்வாக அமைத்துக்கொள்ள வேண்டும் என நினைக்கின்றார்கள். அதற்காக எண்ணற்ற முயற்சிகளிலும் தங்களை அர்பணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களிடம் நீங்கள் ஏன் இவ்வாறாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்? என்ற கேள்வியை நாம் கேட்போமேயானால், உடனே அவர்களிடமிருந்து வெளிவரும் வார்த்தை நமது கவலைகள் நீங்கி சந்தோஷமான முறையில் வாழவேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் எனக்கூறுவதைப் பார்க்கலாம். ஆக அவர்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளும், அவர்கள் காணும் அனைத்துக் கனவுகளும், பேராவலும் அச்சுபீட்சமான வாழ்வை அடைந்து கொள்ள வேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் நேரங்காலம் பார்க்காமல் இரவு, பகலாக பசித்திருந்து, தாகித்திருந்து, விழித்திருந்து ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சாதாரண பாமர மனிதனைப் போலவே அவனை விடவும் அறிவில், அல்லது அந்தஸ்தில், அல்லது கண்ணியத்தில் உயர்ந்த இடத்தில் வகித்துக் கொண்டிருப்பவர்களும் அந்த சபீட்சமான வாழ்வையே தேடியலைந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். ஆக மனிதன் என்ற வட்டத்தினுள் அதனைப்பெற்றுக் கொள்ள முயற்சிக்காத, அல்லது அதனைப் பெற்றுக்கொள்ள பேராவல் கொள்ளாத, அல்லது அதனை அடைந்துகொள்ள கனவு காணாத எவரும் இல்லை என்றே கூற வேண்டும். அதனடிப்படையில்தான் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனைவாதிகள், தத்துவ வித்துவான்கள், வைத்தியர்கள் போன்று பலதரப்பட்ட பதவிகளில் அங்கம் வகித்துவரும் ஒவ்வொருவரும் இவ்வுலக வாழ்வில் வாழும் நாட்களை எவ்வாறு சந்தோஷமான முறையில் அமைத்துக் கொள்ளலாம்? என்ற ஆய்வில் ஈடுபட்டார்கள். இறுதியில் அவர்களுக்குக் கிடைத்த முடிவுகளையும், அவர்களது சிந்தனைகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் தட்டுப்பட்டவைகளையும் எழுத்து மூலமாக வடித்து வைத்திருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கூறியிருக்கும் கருத்துக்களை நாம் சற்று சீர்தூக்கிப் பார்ப்போமேயானால் அக்கருத்துக்களனைத்தும் ஒன்றோடொன்று முரண்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இன்று அதிகமானோர் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற, அல்லது கண்டு கொண்டிருக்கின்ற சந்தோஷமான நிகழ்வுகள், இன்பகரமான நேரங்கள் அனைத்தும் பெரும்பான்மையில் திருப்திகரமற்றவை, உண்மையான சந்தோஷம் காணப்படாதவை, போலியானவை என்று அவர்கள் கூறிவருவது நம் செவிகளுக்கும் எட்டத்தான் செய்கின்றன. அவர்கள் கூறும் அக்கருத்துக்களிலும் உண்மை இருப்பதைக் காண முடிகின்றது. உதாரணமாக போதைப் பொருள் பிரயோகிக்கும் ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் அப்போதைப் பொருளை உட்கொண்ட பிறகுதான் ஒருவித சந்தோஷத்திலும், பரவசத்திலும் காணப்படுகின்றான். எப்போது அதனது தாக்கம் குறைந்து சுய நினைவை அடைந்து விடுகின்றானோ அப்போது அவன் கண்ட சந்தோஷங்களையும், இன்பங்களையும் இழந்து அவனது பழைய

நிலைக்கே திரும்பி விடுகின்றான். ஆக அவன் அனுபவித்துக் கொண்டிருந்த சில வினாடிகளுக்குற்பட்ட இன்பம் போலியான ஒன்று தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேபோன்றுதான் ஏனையவைகளின் மூலம் மனிதன் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்பமும் போலியானதுதான் என அவர்களாகவே கூறிவருகின்றனர். தாங்கள் அனுபவிக்கும் இன்பத்தில் எவ்வித மனஆறுதலும் இல்லை எனக்கூறிவரும் இவர்கள் ஏன் இவ்வாறான தொரு நிலையிலிருக்க வேண்டியிருக்கின்றது? அதற்குரிய காரணம் என்ன? என்பதை சிந்திக்கத் தவறி விடுகின்றார்கள். எப்போது மனிதன் அதனை சிந்திக்கத் தலைப்படுகின்றானோ அப்போது உண்மையான இன்பம் எதிலே இருக்கின்றது? என்பதைப் புரிந்து கொள்வான். அதுமட்டுமின்றி அதன்பிரகாரம் தனது வாழ்வை அமைத்துக் கொள்ளவும் முயற்சி செய்வான்.

அப்படியென்றால் மனிதன் தேடும் உண்மையான சந்தோஷம் எதில்தான் இருக்கின்றது? என்ற கேள்வியை நீங்கள் கேட்பது எனக்கும் புரிகின்றது. உண்மையில் கேட்கப்பட வேண்டிய கேள்விதான். இக்கேள்வியை ஒவ்வொரு மனிதனும் தனது உள்ளத்திடம் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றான். எப்போது அவன் இக்கேள்வியை அவனது சிந்தனைக்கு கொண்டு வருகின்றானோ அப்போதே அவன் உண்மையான சுபீட்சத்துக்குரிய வழியைக் கண்டு கொள்கின்றான். காரணம் ஒருவன் காணும் ஒவ்வொரு வெற்றியிலும், அல்லது ஒவ்வொரு பதவியிலும் தான் தேடும் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ளாதபோது, தான் தேடும் சந்தோஷம் எதில்தான் இருக்கின்றது? இந்த அழிந்துபோகும் அற்ப உலக விஷயங்களின் மூலம் நாம் சந்தோஷம் காணத் துடிக்கின்றோமே! அவைகளின் மூலம் நமது வாழ்வையே இன்பகரமாக்கத் துடிக்கின்றோமே! அவைகளின் மூலம் அதனைப் பெற்றுக் கொள்ள முடியுமா? அல்லது நமது வாழ்வைத்தான் சந்தோஷமாக்கிக் கொள்ள முடியுமா? என்ற கேள்விகள் அவனதுள்ளத்தில் எழுகின்றன. இறுதியில் அவைகளால் ஒருபோதும் உண்மையான சந்தோஷத்தைப் பெற்றுத்தர முடியாதென்பதை அவ்வுள்ளம் ஏற்றுக் கொள்கின்றது.

எப்போது அவ்வுண்மையை ஏற்றுக் கொள்கின்றதோ அப்போதே தான் தேடும் சந்தோஷம், தனது வாழ்வின் உண்மையான இன்பம் அல்லாஹ்வை நம்பி அவனது கட்டளைகளையும், சட்டதிட்டங்களையும் ஏற்று நடப்பதில்தான் இருந்து கொண்டிருக்கின்றது என்பதை உணரத் தலைப்படுகின்றது. எனவே மனிதன் தேடிக்கொண்டிருக்கின்ற உண்மையான இன்பம் அல்லாஹ்வை நம்பி, அவன் கூறும் கட்டளைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் அடிபணிந்து நடப்பதில் தான் இருக்கின்றது. அந்த அடிப்படையில் வாழ்ந்தவன் தான் இம்மையிலும், மறுமையிலும் அவ்வின்பத்தை மனதாற அனுபவித்துக் கொண்டிருக்கின்றான்.

அன்பார்ந்த சகோதரனே!

தற்போது உனது கையில் தவழ்ந்து கொண்டிருக்கும் இச்சிற்றேடு நீ தேடிக் கொண்டிருக்கும், அல்லது அடைந்து கொள்ள வேண்டும் என பேராவல் கொண்டிருக்கும், அத்துடன் இரவு, பகல் பாராது பசி, தாகத்தை உணராது எப்படியாவது அடைந்தே தீர வேண்டும் என்ற வெறியோடு போராடிக் கொண்டிருக்கும் அந்த சுபீட்சமான வாழ்வுக்குரிய வழியைக் காட்டித் தரப்போகின்றது. மேலும் உன்னைப்படைத்த இறைவன் யார்? அவனை நீ தெரிந்து கொள்ள வேண்டுமா? அவனைப்பற்றித் தெரிந்து கொண்டபின் அவனை நீ ஏற்றுக் கொள்ள வேண்டுமா? வேண்டாமா? அவனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் வேறு யாரை நீ ஏற்றுக் கொள்ளப் போகின்றாய்? நீ இவ்வுலகில் கடைபிடித்து நடக்க வேண்டிய கொள்கை யாது? உன்னைப் படைத்தவனுக்கு நீ செய்ய வேண்டிய கடமைகள் யாவை? என்பன போன்ற கேள்விகளுக்குரிய விடைகளையும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்? அவனது ஆரம்பம் எவ்வாறிருந்தது? அவனது இறுதி முடிவு எவ்வாறிருக்கப் போகின்றது? அவன் இவ்வுலகில் ஏன் படைக்கப்பட்டான்? போன்ற கேள்விகளுக்குமுரிய பதில்களையும் இச்சிற்றேடு உனக்கு சிறந்த முறையில் தெளிவுபடுத்தப் போகின்றது. அத்துடன் இவ்வுலகையும், அதிலிருக்கும் படைப்பினங்களையும்

படைத்து அவைகளை சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருக்கும் வல்ல நாயன் அல்லாஹ்வுடைய மார்க்கமான இந்த இஸ்லாத்தில் இணைந்து கொள்ளுமாறும் உன்னைப் பணிப்பதுடன் அதுகூறும் சட்டதிட்டங்களை கடைபிடித்து அல்லாஹ்வுக்கு முற்று முழுதாக அடிபணிந்து நடக்குமாறும் போதித்துக் கொண்டிருக்கின்றது.

இச்சிற்றேட்டைப் படிக்கும் நீ இது கூறும் உண்மையை தெரிந்து கொள்வதோடு, இந்த இஸ்லாம் மார்க்கம்தான் எல்லாக் காலங்களுக்கும், எல்லா நேரங்களுக்கும் பொருத்தமானதோர் மார்க்கம் என்பதையும் புரிந்து கொள்ளப் போகின்றாய். இதனை முழுவதுமாக நீ படித்து முடித்து விட்டாய் என வைத்துக் கொள். அப்படிப் படித்தும் உனது சில கேள்விகளுக்குரிய பதில்கள் அதிலே கிடைக்க வில்லையாயின் இஸ்லாத்தின் அடிப் படை நூல்களான அல்குர்ஆன், அல் ஹதீஸ் இவ்விரண்டிலும் அவைகளைத் தேடிப்பார். அவைக ளிலே கண்டிப்பாகப் பெற்றுக் கொள்வாய். ஏனெனில் மனிதன் பிறந்த திலிருந்து இறக்கின்ற வரைக்கும் அவன் எதிர்நோக்கக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்குமுரிய தீர்வுகள் அவை இரண்டிலும் தான் இருந்து கொண்டிருக்கின்றன என வல்ல நாயன் அல்லாஹுத் தஆலா கூறிக்கொண்டிருக்கின்றான். சில சந்தர்ப்பங்களில் உனது கேள்விகளுக்குரிய பதில்கள் அவைகளில் கூறப்பட்டிருக்காது, அவைகளைப் படிப்பதில் நான் ஏன் எனது காலத்தை வீணாக்க வேண்டும்? என்ற எண்ணம் சிலவேளை உனதுள்ளத்தில் எழலாம்.

அப்படி எழுந்தால் அது உனது எதிரி ஷைத்தான் ஏற்படுத்தும் சில குழப்பங்கள் என்பதையுணர்ந்து அதனை உனதுள்ளத்திலிருந்து அகற்றிவிடு. ஏனெனில் அந்த அல்குர்ஆனே தன்னை ஆராய்ந்து பார்க்குமாறும், ஆராய்ந்து பார்ப்போர் ஆச்சரியப்படும் விஷயங்களை பெற்றுக் கொள்வார்கள் என்றும் கூறி நம்மை ஆர்வமூட்டிக் கொண் டிருக்கின்றது. ஆக உன்னிடத்தில் எத்தனை கேள்விகள், எத்தனை பிரச்சினைகள், எத்தனை சந்தேகங்கள் இருந்தாலும் அவைகளுக் குரிய பதில்களை, தீர்வுகளை குர்ஆனிலும், ஹதீஸிலும் தேடிப்பார். நீ தேடிக் கொண்டிருப்பவைகளை அவை உனக்கு தாராளமாக வழங் கிக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்வாய்.

எனவே இச்சிற்றேட்டைப் படிக்கும் ஒவ்வொருவருடைய உள்ளத்துக்கும் புரிந்து கொள்ளக்கூடிய சக்தியைக் கொடுத்து படித்து பயன் பெறுவதற்கும், இதிலிருந்து தெரிந்து கொண்டவைகளை ஏனைய சகோதரர்களுக்கு எத்தி வைப்பதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக! அத்தோடு நமது இச்சிறிய பணியை இஸ்லாத்துக்காகச் செய்யும் பணியாக ஏற்று அதற்குரிய நன்மைகளை இம்மையிலும், மறுமையிலும் தந்தருள்வானாக!

ஆசிரியர்.

**மனிதனது சரித்திரம்.**

மனிதனின் ஆரம்பம் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட அன்றிலிருந்தே ஆரம்பித்துவிட்டதென இஸ்லாம் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. நபி ஆதம்(அலை)அவர்களை அல்லாஹுத் தஆலா தனது இரு கைகளினாலுமே படைத்தான். அவரைப் படைப்பதற்கு அவன் களிமண்ணை உபயோகித்தான் என்ற உண் மையை அல்குர்ஆன் நமக்கு இன்றும் ஞாபகப்படுத்திக் கொண்டி ருக்கின்றது. நபி ஆதம் (அலை) அவர்களை இன்று காணப்படும் மனிதனுடைய தோற்றத்தில் படைத்த இறைவன் அவருக்குரிய உயிரை தன்னுடைய உயிரிலிருந்தே கொடுத்தான். எப்போது அக்களி மண்ணால் செய்யப்பட்ட அந்த உருவம் மனித உருப்பெற்றதோ அன்றே அவனுக்கு பறவைகள், மிருகங்கள், பயிர்கள், ஊர்வனங்கள் மற்றும் உலகில் காணப்படுகின்ற ஏனைய அனைத்துப் பொருட்களி னதும் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். அம்மனிதனை மேலும் கண்ணி யப்படுத்துவதற்காக தனது வானவர்களையே அவருக்கு சிரம் பணியுமாறு பணித்தான். அவனது கட்டளையை நிறைவேற்று வதற்காகவே படைக்கப்பட்ட அவ்வானவர்கள் அவனது வார்த்தை யைக் கேட்டவுடனேயே சிரம்பணிந்தார்கள். ஆனால் அவர்களுடன் இருந்து கொண்டிருந்த ஷைத்தானோ மண்ணால் படைக்கப்பட்ட ஒருவனுக்கு நெருப்பால் படைக்கப்பட்ட ஒருவன் சிரம்பணிவதா? என கர்வங் கொண்டு அல்லாஹ்வின் கட்டளை யென்பதை பொருட் படுத்தாது அவருக்கு சிரம்பணிய மறுத்து விட்டான். அவ்வாறு சிரம்பணிய மறுத்த அவன்மீது அல்லாஹுத்தஆலா கோபம் கொண்டு சபித்து, இழிவுபடுத்தி அந்த மதிப்பிற்குரிய இடத்திலி ருந்தே தூக்கி எறிந்து விட்டான். அன்றிலிருந்துதான் இம்மனிதனு டைய சரித்திரமே சூடுபிடிக்க ஆரம்பிக்கின்றது.

எப்போது ஷைத்தான் சபிக்கப்பட்டு, இழிவாக்கப்பட்டு அந்த மதிப்பிற்குரிய இடத்திலிருந்து தூக்கியெறியப்பட்டானோ, அன்றே அவனது கோபம் அக்னிப் பிழம்பாய் எரிய ஆரம்பித்தது. இவ்வள வுக்கும் காரணம் இந்த மண்ணினால் படைக்கப்பட்ட மனிதன்தான் என நினைத்தான். அவனை எவ்வாறாவது பழிவாங்கி தன்னைப்

போன்றே அவனையும் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாக்க வேண் டும் என வைராக்கியம் கொண்டான். அதற்கொரு சந்தர்ப்பத்தை அமைத்துக் கொள்வதற்காக தன்னை மறுமைநாள் வரை மரணிக் கச் செய்யாது பிற்படுத்தி வைக்குமாறு அல்லாஹ்விடம் அவகாசம் வேண்டி நின்றான். ஏராளமான அருட்கொடைகளை வழங்கி கண் ணியப்படுத்தப்பட்ட இம்மனிதன் தனது கட்டளைகளுக்கு கட்டுப் பட்டு நடக்கின்றானா? என்பதை பரீட்சிக்க நினைத்த இறைவன் அவனது வேண்டுதலை தட்டாமல் ஏற்றுக் கொண்டான். அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக நீ (அவ்வாறே) அவகாசமளிக்கப்பட்டோ ரில் (ஒருவனாக) இருக்கின்றாய் என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்(7.15).

மேற்கூறப்பட்ட வசனத்தில் உள்ளவாறு அவனுக்கு அவகாசம ளிக்கப்பட்டதும், தான் இவ்வாறானதோர் சந்தர்ப்பம் கேட்டது தன் னைத் திருத்திக் கொள்வதற்காகவோ, அல்லது உனது கட்டளை களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்காகவோ அல்ல. மாற்றமாக உனது கண்ணியத்திற்குரிய படைப்பான மனிதனை வழிகெடுப்பதற்காகத்தான் என்று அதுவரையும் அவனதுள்ளத்தில் மறைத்து வைத்திருந்த உண்மையை அல்லாஹ்வின்மீது சத்தியம் செய்து அவனிடம் எடுத் துக் கூறுகின்றான். அதனைப்பற்றி இறைமறை பின்வருமாறு கூறிக் காட்டுகின்றது. (அப்போது) அவன் உன் மகத்துவத்தின் மீது சத்தி யமாக நிச்சயமாக நான் அவர்கள் அனைவரையும் வழிகெடுத்து விடுவேன். அவர்களில் (உன்னால்) தேர்ந்தெடுக்கப்பட்ட உன் அடி யார்களைத் தவிர எனக்கூறினான்(38.82–83).

தான் மனிதனை எவ்வாறு வழிகெடுக்கவிருக்கின்றேன். அதற் காக எப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் தீட்டி வைத்திருக்கின் றேன். எதிலிருந்து அவர்களை வழிகெடுக்கவிருக்கின்றேன்? என்ப வைகளையெல்லாம் தன்னைப்படைத்த இறைவனிடமே சவாலிடுகின் றேன் என்ற எவ்வித அச்சமுமின்றி அவன் தொடர்ந்து அவனது திட்டங்களைப்பற்றி கூறிக்கொண்டிருந்தான். அதனைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். நீ என்னை வழிகெட்டவனாக ஆக்கிய தன் காரணத்தால் (ஆதமுடைய சந்ததிகள்) உன்னுடைய நேரான

வழியில் (செல்லாது தடைசெய்ய வழி மறித்து அதில்) அவர்களுக் காக திட்டமாக உட்கார்ந்து கொள்வேன் என்றும் (இப்லீஸாகிய) அவன் கூறினான். பின்னர் நிச்சயமாக அவர்களுக்கு முன்னும், அவர் களுக்குப் பின்னும், அவர்களின் வலப்புறங்களிலும், அவர்களின் இடப் புறங்களிலும் அவர்களிடம் நான் வந்து (அவர்களை வழிகெடுத் துக்) கொண்டேயிருப்பேன். மேலும் அவர்களில் பெரும்பாலோரை (உனக்கு) நன்றி செலுத்துவோர்களாக நீ காணமாட்டாய்(என்றும் கூறினான்)(7.16–17).

அவன் அவ்வாறு அகங்காரமாக கர்வத்தோடு மனிதர்களை வழி கெடுப்பேன் என்று அல்லாஹ்வுக்கு முன்னால் சபதமிட்டுக் கொண்டி ருந்தான். ஆதலால் அவன்மீது மென்மேலும் கடுமையான கோபம் கொண்ட இறைவன் அவ்விடத்திலிருந்து உடனே வெளியேறுமா றும், உன்னையும், உன்னைப் பின்பற்றி நடப்போரையும் மரணத்தின் பின் நரகில் போட்டு வேதனை செய்வேன் என்றும் எச்சரித்து, சபித் துத் துரத்தியதையும் இவ்வாறு எடுத்துக் கூறுகின்றான். இகழப்பட் டவனாகவும், விரட்டப்பட்டவனாகவும் நீ இதிலிருந்து வேளியேறி விடு. நிச்சயமாக (உன்னையும்) அவர்களில் உன்னைப் பின்பற்றியவர் களையும் (சேர்த்து) உங்கள் அனைவரிலிருந்தும் நிச்சயமாக நர கத்தை நான் நிறப்புவேன் என்று (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான்(7.18)

மேற்கூறப்பட்ட திருவசனம் கூறிய பிரகாரம் அல்லாஹுத்தஆலா அவனை சபித்து அவன் வாழ்ந்து கொண்டிருந்த புனிதமிக்க இடத் திலிருந்தே வெளியேற்றி விட்டான். அதுமட்டுமின்றி மனிதர்களை வழிகெடுக்கும் வகையில் வீண் சந்தேகங்களையும், பிரச்சினைகளை யும் அவர்களிலே ஏற்படுத்தி அவர்களை வழிகெடுக்கும் தன்மையை யும் அவனுக்கு நிறையவே கொடுத்திருக்கின்றான். அவ்வாறான தொரு தன்மையை அவனுக்குக் கொடுத்ததன் மூலம் அவனால் படைக்கப்பட்ட மனிதர்களில் யார் தன்னைப் படைத்தவனை வணங் குகின்றார்கள்? யார் தனது விரோதியின் ஆசாபாசங்களுக்கு மதி மயங்கி தங்களது வாழ்வை அழித்துக் கொள்கின்றார்கள்? என்ப தைப் பரீட்சிக்கின்றான். மேலும் ஷைத்தான் அல்லாஹ்வின் முதல்

கட்டளைக்கே மாறு செய்ததினால் அவன் அதிகதிகமாக அல்லாஹ் வுக்கு மாறுசெய்து அவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் தண்டனைக ளில் பெரும் பான்மையானவைகளை அனுபவிக்க வேண்டும் என்ப தற்காக அவனை மறுமைநாள் வரையும் மரணிக்கச் செய்யாது அவ னது மரணத்தைப் பிற்படுத்தி வைத்திருக்கின்றான். இவ்வாறு மனித னதும், ஷைத்தானினதும் கதை தொடர்ந்து கொண்டே போகின்றது.

மேற்கூறப்பட்ட சம்பவங்களெல்லாம் நடந்ததன் பின் அல்லாஹுத் தஆலா நபி ஆதம் (அலை) அவர்களின் விலாப்புறத்திலிருந்து அவ ரோடு ஒன்றி வாழக்கூடியவாறு ஒரு பெண்ணைப் படைக்கின்றான். அவ்வாறு படைத்த அப்பெண்ணுக்கு ஹவ்வா எனப் பெயரிட்டு அவளை அவரது மனைவியாக ஆக்கிவிடுகின்றான். அவர்கள் இரு வரும் சந்தோஷமாகவும், இன்பமாகவும் வாழக்கூடியவாறு எந்தக் கண்களும் கண்டிராத, எந்தக் காதுகளும் கேட்டிராத, எந்த உள்ளத் தாலும் கற்பனை பண்ணிப்பார்க்க முடியாத எண்ணற்ற சுகண்டிக ளும், இன்பங்களும் நிறைந்து காணப்படக்கூடிய சுவனத்தில் வாழு மாறு கட்டளையிட்டான். அப்படிப்பட்ட பெரிய பாக்கியத்தை அவர்க ளுக்குக் கொடுத்த இறைவன் இப்லீஸ் எனப்படும் தனது விரோதி எப் பொழுதும் உங்களுக்கு எதிராகவே செயல்படுவான். ஆகவே அவனது எந்த ஆசை வார்த்தைகளுக்கும், எந்த சூழ்ச்சிகளுக்கும் ஆளாகிவிட வேண்டாம் என்ற கட்டளையையும் நேரங்காலத்துடனே அவர்களிருவருக்கும் எடுத்துக்கூறி எச்சரிக்கை செய்து விட்டான். தனது இந்த சாதாரண கட்டளைக்கு இவர்கள் வழிப்பட்டு நடக்கின் றார்களா? என்பதைப் பரீட்சிக்கும் முகமாக சுவனத்திலுள்ள மரங்க ளில் ஒரு மரத்தை சுட்டிக்காட்டி அதனது பழத்தை எச்சந்தர்ப்பத் திலும் உற்கொள்ள வேண்டாம் என நிபந்தனையிட்டு அனுப்பினான்.

அவர்கள் இருவரும் அல்லாஹுத்தஆலா தமக்கருளிய அப்பேரு பகாரத்தை நினைத்து, நினைத்து அவனது கட்டளைக்கு முற்று முழுதாக அடிபணிந்து சந்தோஷமாக தங்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் ஷைத்தானும் இவர்களை வழி கெடுப்பதற்காக எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டும் தோல்விகண்ட அவன் கவலையோடு காணப்பட்டான். இவர்களை

எவ்வாறாவது வழிகெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளில் சரியான தோர் உபாயத்தைத் தேடிக் கொண்டிருந்த அவனுக்கு இறுதியில் ஒரு விஷயம் தட்டுப்பட்டது. அதனைப்பயன்படுத்தி அவர்களை வழி கெடுக்கலாம் என்ற சந்தோஷத்தோடு அவர்களிடம் நெருங்கி பின்வரு மாறு கூறினான். அல்லாஹுத்தஆலா இந்த சுவனத்தில் உங்களுக்கு எல்லா சுகண்டிகளையும் தந்திருக்கின்றான். அனைத்து வாய்ப்பு வச திகளையும் அளவுக்கதிகமாக சொரிந்திருக்கின்றான். எல்லா வகையி லும் உங்கள் இருவரையும் கண்ணியப்படுத்திருக்கின்றான். இவை அனைத்தும் உண்மைதான். சந்தோஷமான சமாச்சாரம்தான். என்றா லும் நீங்கள் இச்சுவனத்தில் நிரந்தரமாக இருக்கக்கூடாது என்பதற் காக ஒரு மரத்தைச் சுட்டிக்காட்டி அம்மரத்தின் கனியை மாத்திரம் உற் கொள்ள வேண்டாம் எனத்தடுத்து விட்டானே! அது எந்த வகையில் நியாயமாகும்? எனக்கூறிவிட்டு பின்வருமாறு தொடர்ந்து கூறினான். நான் இங்கு உங்களுக்கு நல்லது செய்யவே வந்திருக்கின் றேன். நீங்கள் மரணிக்காது காலாகாலம் இந்த சுகண்டிகள் நிறைந்த பூங்காவில் ஜீவிக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. ஆதலி னால் அவன் உங்களுக்கு விடுத்த எச்சரிக்கையை மறந்து விட்டு நீங்கள் அம்மரத்தின் பழத்தை உண்ணுங்கள். அழிவே இல்லாத இந்த சுவனத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வரலாம் என அவர்களது உள்ளங்களில் ஒருவித சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டான்.

ஆரம்பத்தில் அவர்கள் அவனது பேச்சை நம்ப மறுத்தாலும் திரும்பத்திரும்ப அவன் வற்புறுத்துகையில் அவனது அந்த பொய் யான ஆசைவார்த்தைக்கு மதிமயங்கி அம்மரத்தின் கனியை உண்டு அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்தார்கள். தனது எதிரியின் ஆசை வார்த்தைக்கு மதிமயங்கி தனது கட்டளைக்கு மாறுசெய்த அவர்களை அல்லாஹுத்தஆலா கோபம் கொண்டு பலவாறு தண்டித் தான். அத்தண்டனைகளையெல்லாம் அனுபவித்த அவர்கள் கடைசி யாக தாம் செய்த தவறுக்காக அவனிடம் மண்றாடி பாவமன்னிப்புக் கேட்டுப்பிரார்த்தித்தார்கள். இறுதியில் அல்லாஹ் அவர்களது பாவமன் னிப்பை ஒப்புக்கொண்டு அவர்களை மன்னித்து விட்டான். அவர்க ளது பாவத்தை அவன் மன்னித்த போதிலும் மீண்டும் அச்சுகண்டி

கள் நிறைந்த சுவனத்தில் அவர்களை வாழவைக்க விரும்பவில்லை. தனது கட்டளைக்கு மாறுசெய்ததின் மூலம் தான் எவ்வளவு கோபத்துடன் இருக்கின்றேன் என்பதை உணர்த்தும் முகமாக அவர்களை கஷ்டங்களும், துன்பங்களும் நிறைந்த உலகில் போய் வாழுமாறு கூறி அவர்களை சுவனத்திலிருந்தே தூக்கியெறிந்து விடுகின்றான். அன்றிலிருந்து ஆதம் (அலை) அவர்கள் தனது மனைவியுடன் இப்பாழான பூமியில் பல ஆண்டுகள் வாழ்ந்து பல குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். பின்பு அவர்களது உலக வாழ்வின் முடிவாக அல்லாஹுத்தஆலா அவர்களை மரணிக்கச் செய்து விடுகின்றான். இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நானும், நீங்களும், ஏனைய மனித சமுதாயங்களும் அவர்கள் இருவரின் மூலம் உருவானவர்கள் தான் என்பதை இச்சந்தர்ப்பத்தில் மறந்துவிடக் கூடாது.

எப்போது நபி ஆதம்(அலை)அவர்களும், அவர்களது மனைவி ஹவ்வாவும் சுவனத்திலிருந்து இவ்வுலகுக்கு தூக்கி எறியப்பட்டார்களோ, அன்றிலிருந்து மனிதர்களுக்கிடையிலும், ஷைத்தானுக்கும் அவனது சந்ததியினருக்குமிடையிலும் பகை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. அதுமட்டுமல்லாது உலகில் வாழ்ந்து வரும் மனித சமுதாயத்தை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு வாழவிடாமல் ஷைத்தான் தடுத்துக் கொண்டேயிருக்கின்றான். அதனடிப்படையில் அவர்களுக்கு கெட்டவைகளையும், மோசமானவைகளையும் அழகுறக்காட்டுகின்றான். நல்லவைகளை எடுத்து நடக்க விடாமல் தடுத்து விடுகின்றான். இதுபோன்ற இன்னும் எத்தனையோ வழிமுறைகளால் அவர்களை வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றான். அதனை வேறுவிதமாகக் கூறுவதென்றால் மொத்தத்தில் அல்லாஹ்வின் அருளிலிருந்தே அவர்களைத் தூரமாக்கிக் கொண்டிருக்கின்றான் எனக்கூறலாம். அதன்மூலம் அவர்கள் உலகில் துரதிஷ்டவாளிகளாகவும், மறுமையில் நரகிற்குரியவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

அல்லாஹுத்தஆலா இம்மனித சமுதாயத்தை வீணுக்காகப் படைக்கவில்லை. அதேநேரம் படைத்த அவர்களை ஷைத்தான் எப்படியும் வழிகெடுத்து குட்டிச்சுவராக்கி விடட்டும் என்றோ, அவர்கள்

அவனுடைய மாயவலைகளில் வீழ்ந்து தமது வாழ்வை அழித்துக் கொள்ளட்டும் என்றோ பொடுபோக்காக விட்டு விடவுமில்லை. மாற்ற மாக அவனை வணங்கி வழிப்படு வதின் முக்கியத்துவத்தையும், அதன்மூலம் கிடைக்கவிருக்கும் இம்மை, மறுமை சம்பந்தப்பட்ட நன்மைகளையும், வெற்றிகளையும், சந்தோஷமான வாழ்வையும் எடுத் துக் கூறவும், தெளிவுபடுத்தவும் காலத்துக்கு காலம் நபிமார்களை யும், தூதர்களையும் அனுப்பிக் கொண்டேயிருந்தான். அவன் அனுப் பும் நபிமார்களுக்கும், தூதர்களுக்கும், அவர்கள் கொண்டு வரும் வேதங்கள் கூறும் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்குமாறு அவர்களையும், அவர்களோடு மற்றுமொரு சமுதாயமான ஜின்னினத் தையும் பணித்தான். யாரெல்லாம் தம்மைப் படைத்தவனுக்கும், அவ னால் அனுப்பப்பட்ட நபிமார்களுக்கும், தூதர்களுக்கும், வேதங்கள் கூறும் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றார்களோ, அவர் கள் ஒருபோதும் வழிகெடவோ, அல்லது பயப்படவோ மாட்டார்கள் என்றும், அவர்கள்தான் இம்மை, மறுமையின் வெற்றியைப் பெற்றுக் கொண்டவர்கள் என்றும் வாக்குறுதியளித்திருக்கின்றான்.

இவ்வாறுதான் நபி ஆதம் (அலை) அவர்களும் அவர்களுக்குப் பின் தோன்றிய அவர்களது சந்ததியினரும் எவ்விதப் பிரச்சினையு மின்றி அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கும், கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு சிறந்தமுறையில் சுமார் பத்து நூற்றாண்டுளாக வாழ்ந்து வந்தார்கள். பிறகு அச்சமுதாயத்தவர்களுக்கு மார்க்க சட்டதிட்டங் களையும், கட்டுப்பாடுகளையும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த மார்க்க அறிஞர்கள் அவர்களது காலமுடிவோடு மரணித்துக் கொண் டிருந்தார்கள். இவ்வாறு அச்சமுதாயத்தில் காணப்பட்ட மார்க்க அறி ஞர்களனைவரும் மரணித்து அறிஞர்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டதும், அதுவரையும் இம்மனித சமுதாயத்தை வழிகெடுப்ப தற்கு எப்போது தனக்கொரு சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த ஷைத்தான் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தான். அதன்பிரகாரம் அவர்கள் அல்லாஹ்வை மாத்தி ரம் வணங்குவதை விட்டுவிட்டு வேறு சில சிலைகளையும் வணங் கும் வகையில் சிலை வணக்கத்தில் ஆர்வமூட்டினான். அம்மனிதர்க

ளும் அவனது மாயவலையில் வீழ்ந்து சிலைகளை வணங்கத் தொடங்கினார்கள். இவ்வாறாக அவன் அவர்களை வழிகெடுத்துக் கொண்டிருந்தான். இப்படி தமது அறியாமையினாலும், பலவீனத்தாலும் படைத்தவனை விட்டுவிட்டு கற்களாலும், மண்ணாலும், வேறு பொருட்களாலும் செய்யப்பட்ட சிலைகளை வணங்கி வரும் மனித சமுதாயம் வல்லோனின் கொடிய தண்டனைக்கும், துன்பத்துக்கும் ஆளாகக் கூடாதென அல்லாஹ் அவர்கள் மீது கருணை கொண்டான். அவர்கள் செய்துவரும் சிலை வணக்கத்தின் விபரீதத்தை அவர்களுக்கு புரிய வைக்க விரும்பினான். அதன் மூலம் அவர்கள் என்னென்ன வேதனைகளை அனுபவிக்கவிருக்கின்றார்கள் என்பதையும் தெளிவுபடுத்த விரும்பினான். அவர்களுக்கு இவ்வாறான இழி செயல்களை செய்யுமாறு ஏவிக் கொண்டிருப்பவன் தங்களது பரம விரோதி ஷைத்தான் என்பதையும் மீண்டுமொருமுறை ஞாபகப்படுத்த விரும்பினான். தாங்கள் தங்களைப் படைத்தவனை மாத்திரமே வணங்கி வழிப்பட வேண்டும் என்பதனை மீண்டும் போதிக்க விரும்பினான். அந்த அடிப்படையில் முதன்முதலாக தனது தூதராக நபி நூஹ் (அலை) அவர்களை தேர்ந்தெடுத்து நேர்வழியைப் போதிக்குமாறு கூறி அனுப்பி வைக்கின்றான்.

இறைத்தூதராக வந்த நபி நூஹ்(அலை)அவர்களும் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களையும், கட்டளைகளையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை நேர்வழியின் பக்கம் தினமும் அழைத்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி வழிப்படுமாறு பணித்துக் கொண்டிருந்தார்கள். இவை அல்லாஹ்வின் கட்டளை என்பதையும் அவர்களுக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருந்தார்கள். நபி நூஹ் (அலை) அவர்களது வருகைக்குப் பின் காலத்துக்குக் காலமெனவும், நேரத்துக்கு நேரமெனவும் உலகில் வாழ்ந்து வந்த மனித சமுதாயங்களின் மொழிகளுக்கேற்பவும் பல நபிமார்களையும், தூதர்களையும் அவன் அனுப்பிக் கொண்டேயிருந்தான். அவர்களும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அவனது சட்ட திட்டங்களை அவர்களுக்குப் போதித்து வந்தார்கள். அவனுடன் சேர்த்து வணங்கப்படும் விக்ரகங்களை விட்டுவிடுமாறு எச்சரித்துக்

கொண்டிருந்ததுடன் அவனை மாத்திரமே வணங்கி வழிப்பட வேண்டும் என்ற ஏகத்துவக் கொள்கையின்பால் அவர்களை அழைத்துக் கொண்டுமிருந்தார்கள்.

நபி இப்றாஹீம்(அலை)அவர்கள் வரையும் தோன்றிய அனைத்து நபிமார்களும், தூதர்களும் மேற்கூறப்பட்ட கொள்கையின்பால் அம்மக்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு நபி ஆதம் (அலை) அவர்களது சந்ததியில் தோன்றிய நபித்துவம் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் வருகையோடு அவரது சந்ததியினருக்கு மாற்றப்படுகின்றது. அதன் பிரகாரம் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் பரம்பரையில் வந்த நபிமார்களான நபி இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை) போன்றோர் தோன்றி மறைகின்றார்கள். பின்பு இப்றாஹீம் (அலை) அவர்களது சந்ததியிலிருந்த நபித்துவம் நபி இஸ்ஹாக் (அலை) அவர்களின் சந்ததியினருக்கு மாற்றப்படுகின்றது.

இஸ்ஹாக்(அலை)அவர்களின் பரம்பரையில் தோன்றிய நபிமார்களில் மிகவும் முக்கியமானவர்களாக நபி யஃகூப் (அலை), யூசுப் (அலை), மூஸா (அலை), தாவூத் (அலை), சுலைமான் (அலை), ஈஸா (அலை) போன்றோர்களைக் குறிப்பிடலாம். இவர்களில் கடைசியாக வந்த நபி ஈஸா (அலை) அவர்களின் வருகையோடு பனூ இஸ்ரவேலர்களின் பரம்பரையில் தோன்றிய நபித்துவம் முற்றுப் பெறுகின்றது. அவரது வருகைக்குப் பின்னால் அப்பரம்பரையிலிருந்து எந்தவொரு நபியும் தோன்றவில்லை.

பனூஇஸ்ரவேலர்களின் பரம்பரையில் வந்து கொண்டிருந்த நபித்துவத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதோடு, மீண்டும் அந்த நபித்துவம் நபி இஸ்மாயில் (அலை) அவர்களின் பரம்பரைக்கு மாற்றப்படுகின்றது. அப்பரம்பரையிலிருந்து அல்லாஹுத்தஆலா நபி முஹம்மத் (ஸல்) அவர்களை இறுதி நபியாகவும், இறுதித் தூதராகவும் தேர்ந்தெடுக்கின்றான். அவரது வருகைக்குப்பின் எந்தவொரு நபியோ, அல்லது எந்தவொரு இறைத்தூதரோ தோன்ற முடியாது என்ற சட்டத்தையும் நிரந்தரமாக்கி விடுகின்றான். இறுதித் தூதராக அனுப்பப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆனை வேத நூலாகவும் கொடுத்தனுப்புகின்றான்.

இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்)அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மார்க்கம் எவ்விதக் குறைபாடுமின்றி பூரணத்துவமிக்கதாகவும், மனிதன், ஜின், அரேபியர், அரேபியல்லாதோர் அனைவரும் பின்பற்றி நடக்கக் கூடியதாகவும் ஆக்கியிருக்கின்றான். மேலும் அதனை எல்லாக் காலங்களுக்கும், எல்லா நேரங்களுக்கும் பொருத்தமானதாகவும் ஆக்கியிருக்கின்றான். உலகில் காணப்படக்கூடிய அனைத்து நற்கிரியைகளை தெளிவுபடுத்தியும், அதேபோன்று அனைத்துத் தீயவைகளை எச்சரித்துக் கொண்டுமிருக்கக் கூடியதாகவும் அமைத்து வைத்திருக்கின்றான். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அந்த இஸ்லாம் மார்க்கத்தைத்தவிர வேறு எந்த மார்க்கத்தையும் தான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அவனே தனது அருள்மறையில் பல இடங்களில் கூறியுமிருக்கின்றான்.

**முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாறு.**

இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்களிலும், தூதர்களிலும் இறுதியானவர் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்தான் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொண்டோம். அவர் ஓர் மாமனிதர் என்றும், அவரது வாழ்க்கைச் சரித்திரத்தை எடுத்துக் கூறியும் அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்சிற்றேட்டிலே அவைகளைக் கூறி இதனை ஒரு பெரும் நூலாக மாற்றிக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆதலால் அவர்தான் நபிமார்களிலும், இறைத் தூதர்களிலும் இறுதியானவர் என்பதையும், அவருக்கு வழங்கப்பட்ட வேதம் அல்குர்ஆன் என்பதையும் சுறுக்கமாகக்கூறி முடித்துக் கொள்கின்றேன். அவரைப்பற்றியும், அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் பற்றியும் மேலதிகமாக அறிந்து கொள்ள வேண்டுமெனில் அவரைப்பற்றி சரியான, உண்மையான கருத்துக்களோடு எழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களை வாசித்தறிந்து கொள்ளுங்கள்.

**முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவ அறிகுறிகள்.**

அல்லாஹுத்தஆலா நபி முஹம்மத் (ஸல்) அவர்களை தனக்குரிய நபியாக ஒரே நாளில் தேர்ந்தெடுத்து அனுப்பவில்லை. மாறாக இறுதி நபியாக வரப்போகும் அவர் தனக்குக் கொடுக்கப்போகும் சட்டதிட்டங்களை சிறந்த முறையில் நடை முறைப்படுத்தி, பிறருக்

கும் எத்திவைக்க வேண்டிய கட்டாய நிலையிலிருக்கின்றார்கள். அதனால் முதலில் அவர்களை அவர்களே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படவிருக்கின்ற தூதுத்துவத்தை சரிவர நிறைவேற்ற வேண்டும். அதற்குரியவாறு அவர் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஆதலினால் அல்லாஹுத் தஆலா அவர்களுக்குப் பல முன்னறிவிப்புக்களைத் திடீர், திடீரென வழங்கிக் கொண்டிருந்தான். அவைகளில் சிலதைப் பார்ப்போம்.

- நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் முஹம்மத்(ஸல்)அவர்களுக்காகப் பிரார்த்தித்திருக்கின்றார்கள். மேலும் நபி ஈஸா (அலை) அவர்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தனக்குப் பின்னால் நபியாக வருவார்கள் என நன்மாராயம் கூறியிருக்கின்றார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னால், தனக்குப் பிறக்கும் குழந்தை உலகில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவாறு இருக்கும் என்ற அடிப்படையில் அவர்களது தாயார் கனவு கண்டிருக்கின்றார்கள். அவைகளைப்பற்றி நபியவர்களே கூறியுமிருக்கின்றார்கள்.

  ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தன்னைப்பற்றிக் கூறுகையில், எனக்காக நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் பிரார்த்தித்திருக்கின்றார்கள் என்றும், நபி ஈஸா(அலை)அவர்கள் தனது சமுதாயத்துக்கு கூறும்போது, அவருக்குப் பின்னால் முஹம்மத் நபியாக அனுப்பப்படுவார் என்று என்னைப்பற்றி சுபசோபனம் கூறியிருக்கின்றார்கள் என்றும், எனது தாய் என்னைக் கருவில் சுமந்து கொண்டிருக்கையில் அவளது உடம்பிலிருந்து ஒரு ஒளிவட்டம் வெளியாகி சிரியா நாட்டிலுள்ள பஷ்ரா என்ற ஊர் வரையும் ஒளி பரப்பியதாக கனவு கண்டிருக்கின்றார்கள் என்றும் கூறினார்கள்(ஹதீஸ்). இந்த நபிவாக்குக் கூறும் கருத்துக்களை சற்று விரிவாகப் பார்வையிடுவோம்.

  முதலாவதாக நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தனக்காகப் பிரார்த்தித்திருக்கின்றார்கள் என்பதன் கருத்தாவது, நபி இப்றாஹீம்(அலை)அவர்கள் தனது மகன் இஸ்மாயீல்(அலை)அவர்

களுடன் மக்காவில் வசித்து வந்தார்கள். அக்கால கட்டத்தில் அங்கேயிருக்கின்ற அல்லாஹ்வின் மாளிகை எனக்கூறப்படும் கஃ பாவின் அஸ்திவாரத்தைக் கட்டிக் கொண்டிருக்கையில் பின் வரக்கூடிய திருவசனத்திலிருப்பதைப் போன்று பிரார்த்தித்தார்கள். அந்த பிரார்த்தனையின் பிரதிபலிப்பாகத்தான் முஹம்மத் அவர்கள் நபியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார் என்பதாகும். நபி இப்றா ஹீம் (அலை) அவர்கள் பிரார்த்தித்த பிரார்த்தனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். எங்களுடைய இரட்சகனே! (உனக் காக நாங்கள் செய்த இப்பணியை)எங்களிலிருந்து ஏற்றுக்கொள் வாயாக! நிச்சயமாக நீயே(யாவற்றையும்) செவியேற்கிறவன். நன்க றிகிறவன். எங்கள் இரட்சகனே! எங்களிருவரையும் உனக்கு(முற் றிலும்) கீழ்ப்படிகின்ற (முஸ்லிமான)வர்களாகவும், எங்களுடைய சந்ததியிலிருந்தும் ஒரு கூட்டத்தினரை உனக்குக் கீழ்ப்படிகிற வர்களாகவும் ஆக்கி வைப்பாயாக! (ஹஜ்ஜுக்குரிய) எங்களு டைய கிரியை(செய்ய வேண்டிய இடங்)களையும் எங்களுக்குக் காண்பிப்பாயாக! (எங்கள் பிழைகளை மன்னித்து)எங்களின் தவ் பாவையும் அங்கீகரித்துக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே தவ் பாக்களை மிக்க ஏற்பவன். மிகக் கிருபையுடையவன். எங்கள் இரட்சகனே!(என் சந்ததியினரான)அவர்களிலிருந்து ஒரு தூதரை அனுப்புவாயாக! அவர்களுக்கு அவர் உன்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து வேதத்தையும், (குர்ஆனின் விளக்கமாகிய சுன் னத் எனும்) ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அவர்களைப் பரிசுத்தமாக்கியும் வைப்பார். நிச்சயமாக நீயே(யாவ ரையும்)மிகைத்தவன். தீர்க்கமான அறிவுடையவன்(என்றும் *பிரார்த்தித்தார்)(2-127,128,129)*.

அன்று நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கேட்ட பிரார்த்த னையை அல்லாஹ் ஏற்றுக்கொண்டு அதற்கு விடையளித்திருக் கின்றான். அதன்பிரகாரம்தான் அவர்களது வம்சத்திலிந்து இறுதி நபியாக முஹம்மத் (ஸல்) அவர்கள் தோன்றியிருக்கின்றார்கள்.

இரண்டாவதாக நபி ஈஸா (அலை) அவர்கள் தனது சமு தாயத்தினரிடம் கூறும்போது தனக்குப் பின்னால் முஹம்மத் என்

றொருவர் நபியாக வருவார் என நன்மாறாயம் கூறியிருக்கின் றார் என்பதின் கருத்தாவது, நபி ஈஸா (அலை) அவர்களே தங் களுக்கருளப்பட்ட வேதப் புத்தகமான இன்ஜீலில் தனக்குப்பின் னால் அஹ்மத் என்று பெயர் குறிப்பிடப்படும் நபியொருவர் வரு வார் எனக்கூறியிருக்கின்றார்கள் என்பதாகும். அல்லாஹ் கூறுகின் றான். மேலும் மர்யமின் புதல்வர் ஈஸா இஸ்ராயீலின் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை உண்மைப் படுத்தியவனாகவும், எனக்குப் பின்னர் அஹ்மது எனும் பெயருள்ள ஒரு தூதர் வரு வார் என நன்மாராயம் கூறுபவனாகவும் நிச்சயமாக உங்கள்பால் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக நான் இருக்கின்றேன் என்று கூறினார்(61.6).

நபி ஈஸா (அலை) அவர்கள் பனூஇஸ்ரவேலர்களில் தோன் றிய இறுதி நபியாவார்கள். அவர்களுக்கும் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குமிடையில் வேறு எந்தவொரு நபியும் தோன்ற வில்லை என இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கின்றது. நபி ஈஸா (அலை) அவர்கள் கூறிய சுபசோபனத்தின் பிரகாரம் நபி முஹம் மத் (ஸல்) அவர்கள் இறுதி நபியாகவும், இறுதித் தூதராகவும் தோன்றியிருக்கின்றார்கள். அஹ்மத், முஹம்மத் என்ற இரு பெயர் களும் நபி(ஸல்)அவர்களுக்குரிய திருப் பெயர்களாகும்.

மூன்றாவது நபியவர்களது தாயார் கனவு கண்டார்கள் என்பதின் கருத்தாவது, நபி முஹம்மத் (ஸல்) அவர்களது தாயார் ஆமினாவுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டு நபி முஹம்மத் (ஸல்) அவர்களை பிரசவிக்கின்றபோது அவர்களது உடம்பிலி ருந்து ஒருவித ஒளி வெளியாகி சிரியா நாட்டின் பஷ்ரா என்ற ஊர் வரையும் ஒளி பரப்பியதாக உணர்ந்தார்கள் என்பதாகும்.

- நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அரேபிய வம்சத்தில் பிறந் ததும் நபித்துவத்துக்குரிய முன்னறிவிப்புக்களிலுள்ளதாகும். அன் றைய காலத்தில் வாழ்ந்த சமுதாயங்களில் அரேபிய சமுதாயம் தான் சிறந்த சமுதாயமாக விளங்கியது. அச்சமுதாயத்தினர் படிப் பறிவில்லாமலும், சிலைகளையும், விக்ரகங்களையும் வணங்கி,

அவர்களுக்கிடையில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளால் பிளவு பட்டிருந்தார்கள். என்றாலும் அவர்கள்தான் பின்னால் கொடுக்கப் படவிருக்கின்ற சத்தியத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு பொருத் தமானவர்களாக விளங்கினார்கள். அத்தோடு உலக விஷயத்தில் சாஷ்திரக்காரர்களதும், மார்க்க விஷயத்தில் அறிவாளிகளதும் சொல்லை மீறி செயல்பட முடியாமல் கட்டுண்டு கிடந்த அன் றைய சமுதாயத்தினர்களுக்கு மத்தியில் அந்த அரேபிய சமுதாயத் தினர் மாத்திரம்தான் கருத்துச் சுதந்திரத்திலும், சுயவிருப்பத்தில் செயல்படுவதிலும் சுதந்திரவான்களாகக் காணப்பட்டார்கள்.

அதேபோன்று அன்று வாழ்ந்த மக்கள் அரசர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் அடிமைகளாயிருந்து யுத்தத்திலும் சரி, பேச் சுவார்த்தைகளிலும் சரி, தொழில் வியாபாரத்திலும் சரி அவர்களுக் கென்று ஒரு சுதந்திரமின்றி ஆடு, மாடு போன்ற மிருகங்களைப் போன்று நடத்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் அரேபிய சமு தாயத்தினர் மட்டும் அவர்களுடைய எல்லா வேலைகளையும் எவருடைய குறிக்கீடுமின்றி அவர்களது சுயவிருப்பத்தின் அடிப் படையில் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அக்காலத்தில் வாழ்ந்த சமுதாயங்களனைத்தும் கோழைகளா கவும், இழிவானவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருந்த சமயத் தில் அரேபிய சமுதாயத்தினர் மட்டும் திடகாத்திரமான உடல் வாகு கொண்டவர்களாகவும், எதனையும் தாங்கிக் கொள்ளும் திடகாத்திர உள்ளம் படைத்தவர்களாகவும், கண்ணியமானவர் களாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

அந்த சமுதாயத்தினர்தான் அன்று காணப்பட்ட சமுதாயத்தி னர்களில் தனிநபர்களோடு நீதியாகவும், நியாயமாகவும் நடந்து கொள்பவர்களாகக் காணப்பட்டார்கள். அத்தோடு அவர்கள் புத்தி சாதுர்யம் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள். மேலும் விருந்தா ளிகளை உபசரித்தல், உயர்ந்த எண்ணம், எதிலும் தாராள மனம், அன்பு செலுத்தல், அடைக்கலம் புகுந்தோருக்கு பாதுகாப்பளித் தல், அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்தல், எதிலும் நிதான

மாய் நடந்து கொள்ளல் போன்ற பரம்பரைப் பழக்க வழக்கங்க ளும் அவர்களிடம் நிறைந்து காணப்பட்டன.

அன்று வாழ்ந்த சமுதாயங்கள் அவர்களுடைய மார்க்க விஷயத்திலும், வழிமுறைகளிலும், குலப்பெருமையிலும் விதண் டாவாதம் செய்து கொண்டிருந்த நேரத்தில் அரேபிய சமுதாயம் மட்டும்தான் பேச்சாற்றலிலும், தத்துவக் கலையிலும் பாண்டித் தியம் பெற்று விளங்கியது. அதனால்தான் அவர்கள் மார்க்கம் சம்பந்தப்பட்டவைகளையும், உலகம் சம்பந்தப்பட்டவைகளையும் கவிதைகளாகவும், கடிதங்களாகவும் எழுதி குறிப்பிட்ட இடத்தில் தொங்கவிட்டு முடியுமானவர்கள் அதைவிட சிறந்ததை எழுதிக் காட்டுமாறு சவால்விடக் கூடியவர்களாகவும், மற்றோர்களது சவால்களை ஏற்று முறியடிப்பவர்களாகவும் இருந்தார்கள்.

மேற்கூறப்பட்ட சிறப்பம்சங்கள் காணப்பட்ட அச்சமுதாயத் தைத்தான் பிற்காலத்தில் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏற் படுத்திய பாரிய சீர்திருத்தங்களுக்கு ஒத்துப்போகக் கூடிய சமுதா யமாக அல்லாஹுத்தஆலா தயார்படுத்திக் கொண்டிருந்தான்.

- நபி (ஸல்) அவர்கள் உயர்ந்த குலத்தில் பிறந்ததும் அவர் களது நபித்துவத்தின் முன்னறிவிப்புக்களில் உள்ளதாகும். ஆக நபி முஹம்மத் (ஸல்) அவர்களது குலம்தான் அன்று காணப்பட்ட குலம், கோத்திரத்தில் சிறப்புமிக்கதாகக் காணப்பட்டது. அல்லாஹ் கூறுகின்றான். நிச்சயமாக அல்லாஹ் ஆதமையும், நூஹையும், இப்றாஹீமுடைய குடும்பத்தினரையும், இம்ரானுடைய குடும்பத்தி னரையும் அகிலத்தாரைவிட மேலாகத் தேர்ந்தெடுத்தான்(*3.33*).

மேலேயுள்ள வசனத்தில் எவர்களையெல்லாம் குறிப்பிட் டுக் கூறப்பட்டிருக்கின்றதோ அவர்களை அல்லாஹுத்தஆலா நபிமார்க ளாகத் தேர்ந்தெடுத்து முன்னோர்களது வழிகாட்டிகளாக அனுப்பி வைத்தான். அந்த அடிப்படையில் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு கினானா என்ற கோத்திரத் திலிருந்து குறைஷ் குலத்தை தேர்ந்தெடுத்தான். பின்னர் குறைஷ் கோத்திரத்திலிருந்து பனூஹாசிம் குலத்தைத் தேர்ந்தெடுத்தான்.

அந்த பனூஹாசிம் குலத்திலிருந்துதான் மனித குலத்தின் தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுத்தான்.

இப்பகுதியில் அல்லாஹுத்தஆலா ஏன் மேலே குறிப்பிட்ட குலங்களிலிருந்து நபி முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுத்தான்? என்பதற்குரிய சில காரணங்களைப் பார்ப்போம்.

குறைஷிக் குலம்: இக்குலத்தைச் சேர்ந்தவர்கள்தான் அன்று வாழ்ந்த அரேபிய சமுதாயத்தில் நபி இஸ்மாயில் (அலை) அவர்களுடைய பரம்பரையில் தோன்றியவர்களில் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்களாகவும், சிறப்பானவர்களாகவும், போற்றப்படக்கூடிய பண்பாடுகள் நிறைந்தவர்களாகவும், பேச்சாற்றலில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும், மக்காவிலுள்ள க.ஃபாவை பரிபாலிப்பவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

பனூஹாசிம்: இக்குலத்தைச் சேர்ந்தவர்கள் சிறப்பான குணங்கள் படைத்தோராகவும், கொடை வழங்கும் வள்ளல்களாகவும், பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அமைதியை நிலைநாட்டுபவர்களாகவும், ஏழைகளுடனும், அநாதைகளுடனும் அன்பாக நடந்து கொள்பவர்களாகவும் இருந்தார்கள்.

அப்துல் மனாபின் மகன் அம்று என்பவர் ஹாசிம் என பட்டம் சூட்டி அழைக்கப்பட்டதற்குரிய காரணம்: அவருடைய காலத்தில் ஒவ்வொரு வருடமும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அக்காலத்தில் வாழ்ந்த மக்களனைவரும் உண்டு பசியாறக் கூடியவாறு ஒருவித இனிமையான உணவை முதன் முதலில் சமைத்துக் கொடுத்தவர் அம்று என்பவராகும். ஒவ்வொரு வருடமும் செய்து வைக்கப்படும் அவ்வுணவை உண்டு அன்று வாழ்ந்த மக்களனைவரும் பசியாறுவார்கள். இப்படியான ஒரு நல்ல காரியத்தில் ஈடுபட்டதால்தான் மக்கள் அவரை ஹாசிம் எனப்பட்டம் சூட்டி அழைத்தார்கள்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிப் சிறப்பாக்கப்பட்டதற்குரிய காரணம்: அவர் ஆடு, மாடு போன்ற மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் உணவளிப்பவராகவும், முதன்முதலில் ஹிராக் குகையில் வணங்கியவராகவும், மது

அருந்தாதவராகவும் இருந்தார்கள் என்பதனாலாகும். மொத்தத்தில் நபி (ஸல்) அவர்களது குலம் ஏனைய குலங்களை விடவும் உயர்ந்த நற்குணங்களாலும், பண்பாடுகளாலும் சிறந்து விளங்கியது என்பது மேற்கூறப்பட்டவைகள் மூலம் தெளிவாகின்றது.

- நபி (ஸல்) அவர்கள் நற்குணங்களின் சிகரமாக காணப்பட்டதும் நபித்துவத்துக்குரிய முன்னறிவிப்புக்களில் உள்ள தாகும். நபி (ஸல்) அவர்கள் அன்று வாழ்ந்த மக்களில் சிறந்த தன்மைகள் கொண்டவராகவும், நற்குணங்கள் நிறைந்தவராகவும், சிறந்த பண்பாடுகள் காணப்படக் கூடியவராகவும் வாழ்ந்து வந்தார்கள். மேலும் நபியவர்கள் அநாதையாக வளர்ந்து, ஏழை வாலிபராக மாறி, மனைவியை உண்மையான முறையில் நேசிக்கக் கூடியவராக திருமண பந்தத்தில் நுழைகின்றார்கள்.

நபியவர்களோ, அல்லது அவர்களது தந்தையோ குறைஷிக் குலத்தில் மார்க்க விஷயத்திலும் சரி, உலக விஷயத்திலும் சரி எதற்கும் பொறுப்பாக இருக்கவில்லை. மேலும் நபி யவர்கள் அச் சமுதாயத்தினர் வணங்கி வந்த விக்ரகங்களை வணங்குபவராகவோ, அல்லது அச்சிலைகள் இருக்குமிடங்களுக்கும், அவர்களது பிரச்சார வைபவங்களுக்கும் சமுகமளிப்பவராகவோ இருக்கவில்லை. அத்தோடு அவர் அரசாட்சியை விரும்பினார் என்றோ, அல்லது அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்றோ எவ்வித சான்றுகளும் இல்லை.

மேலும் அவர்கள் உண்மை பேசுபவராகவும், வாக்குகளை நிறைவேற்றுபவராகவும், உயர்ந்த ஒழுக்க மாண்புகள் கொண்டவராகவும் காணப்பட்டார்கள். அதனால்தான் அவர்களுக்கு நபித்துவம் கொடுக்கப்படுவதற்கு முன்பே மதிப்புக்குரியவராக அனைத்து மக்களாலும் பாராட்டப்படக்கூடியவராக வாழ்ந்து வந்தார்கள். எந்தளவுக்கென்றால் அன்று வாழ்ந்த மக்கள் நபியவர்களை நம்பிக்கைக்குரியவர் என பட்டம் சூட்டி அழைத்தார்கள். இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் அவர்களது குறிப்பிட்ட வயதையும், உடலுக்கும், உள்ளத்துக்கும் போதிய சக்தியையும் பெற்றுக் கொள்ளும்

வரை செல்வத்தையோ, பதவியையோ, பிரபல்யத்தையோ விரும் பாதவர்களாக வாழ்ந்து வந்தார்கள். அதன்பின்புதான் அல்லாஹ் வின் புறத்திலிருந்து அவருக்குரிய வஹி எனும் தூது இறங்க ஆரம்பித்தது. அதைப்பற்றி விரிவாக பின்னால் வரக்கூடிய பகுதி களில் பார்ப்போம்.

- நபி (ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந் தார்கள் என்பதும் நபித்துவத்துக்குரிய முன்னறிவிப்புக்களிலுள்ள தாகும். நபியவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார் கள் என்பது பிற்காலத்தில் அவர் கொண்டு வந்த தூதை உண் மைப் படுத்துவதற்குரிய பெரிய சான்றாக விளங்கியது. இவ்வாறு ஒரு எழுத்தையேனும் எழுதத் தெரியாத, ஒரு வார்த்தையையே னும் பார்த்து வாசிக்கத் தெரியாத, கவிதைகள் புனையத் தெரியாத ஒருவர்தான் பிற்காலத்தில் பாரிய பிரச்சாரத்தையும், நீதிகள் நிறைந்த கட்டளைகளையும், சமூக சீர்திருத்தங்களையும், அத் தூதை ஏற்றுக் கொள்பவருக்கு நிரந்தர சுபீட்சத்தையும், விக்ரக வணக்கத்திலிருந்து விடுதலையையும் எடுத்து வருகின்றார். மேற் கூறப்பட்டவை அனைத்தும் நபித்துவத்துக்குரிய முன்னறிவிப்புக் களும் அதனை உண்மைப்படுத்தும் சான்றுகளுமாகும்.

**முஹம்மத் (ஸல்) அவர்களின் வம்சாவழியும், வாழ்வும்.**

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தாய் வழியையும், தந்தை வழியையும் இங்கே பார்வையிடுவோம். முதலில் அவரது தந்தை வழியைப் பொறுத்த வரையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை) அவர் களது அரேபியப் பரம்பறையில் வந்த அத்னான் என்பவருடைய குழந்தைகளின் குழந்தை என்ற அடிப்படையில் வந்த ம:த், நிஸார், முளர், இல்யாஸ், முத்ரிகா, குஸைமா, கினானா, நழ்ரு, மாலிக், பஹ்ரு, காலிப், லுஅய்யி, க:பு, முர்ரஹ், ஹகீம், குசய், அப்துல் மனாப், ஹாஷிம், அப்துல் முத்தலிப் என்பவருக்குப் பிறந்த அப்துல் லாஹ் என்பவருடைய குமாரராவார்கள். இரண்டாவது அவரது தாய் வழிமுறையைப் பொறுத்த வரையில் நபி (ஸல்) அவர்களது தாய் ஆமினா அவர்கள் நபி (ஸல்) அவர்களது தந்தை வழிப்பாட்டனொ

ருவரின் சகோதரரான சுஹ்ராவின் குழந்தைகளின் குழந்தை என்ற அடிப்படையில் பிறந்த அப்துல் மனாப் என்பவருடைய மகன் வஹ்ப் என்பவருடைய மகளாகும்.

அப்துல்லாஹ் என்பவர் ஆமினா எனும் பெண்ணை திரு மணம் செய்து ஆமினாவின் தந்தையின் வீட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார்கள். அக்குறுகிய நாட்களில் இருவரும் பகிர்ந்து கொண்ட உடலுறவின் காரணமாக ஆமினா அவர்கள் கருவுற்றார் கள். அக்கரு ஆமினாவின் கருவறையில் இருந்த காலத்தில் சிறந்த உடலமைப்பும், பத்தினித்தனமும் நிறைந்த பெண்கள் எவ்வாறு கஷ்டப்படாமலும், துன்பப்படாமலும் தெளிவானவர்களாக காணப்படு வார்களோ அதேபோன்றுதான் ஆமினாவும் அன்று காணப்பட்டார்கள். ஆமினா அவர்கள் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையை வயிற் றில் சுமந்து கொண்டிருக்கையில் முன்பு நாம் கூறியது போன்று சந்தோஷப்படக்கூடிய பல கனவுகளையும் கண்டு கொண்டிருந்தார் கள். இவ்வாறாக அப்பெறுமதிமிக்க கருவை சுமந்து கொண்டிருந்த ஆமினா பிராட்டியார் யானை ஆண்டு 571ல் உடலமைப்பில் எவ்வி தக் குறைவுமில்லாத, அழகான தோற்றம் கொண்ட தேகாரோக்கி யத்தில் உயர்ந்து காணப்பட்ட ஒரு ஆண் குழந்தையைப் பிரசவித் தார்கள். அன்று அக்குழந்தைக்குப் பொறுப்பாக இருந்த அக்குழந் தையின் பாட்டனார் அப்துல் முத்தலிப் என்பவர் அக்குழந்தைக்கு முஹம்மத் என்ற பெயரைச் சூட்டி அழைக்க ஆரம்பித்தார். அக் குழந்தைதான் இன்று நாம் கூறிக்கொண்டிருக்கின்ற நபி முஹம்மத் (ஸல்) அவர்களாகும்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே தனது தந்தையை இழந்து அநாதையாகி விட்டார் கள். தந்தையை இழந்த முஹம்மத் (ஸல்) அவர்களை அநாதை யாக விட்டுவிடாது அவரது பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்ததும் தன் தாயிடம் மூன்று தினங் கள் மாத்திரமே பால் அருந்தக்கூடிய பாக்கியத்தைப் பெற்றார்கள். அதன்பின் கிராமப் புறங்களில் வாழும் பெண்களிடம் தமது குழந்தை

கள் பால் அருந்தினால் அக்குழந்தைகள் சிறந்த தேகாரோக்கியத்தி லும், சிறந்த பழக்க வழக்கங்களிலும் தேறிவருவார்கள் என்ற கருத்து அன்றைய அரேபியர்களுக்கிடையில் பரவலாகக் காணப்பட் டது. அதன் காரணத்தால் நபி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவரது தாயார் குழந்தைகளை தேடிவந்த ஸஃதிய்யா பரம்பரையைச் சேர்ந்த ஹலீமா என்ற பெண்மணியிடம் அனுப்பி வைக்கின்றார்கள்.

ஹலீமா என்ற பெண்மணி நபி (ஸல்) அவர்களை பால் குடி சிறுவராக எடுத்துக் கொண்டபோது நடந்த சில அதிசய சம்பவங்க ளைப்பற்றி வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். அவை களை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே சிலதைக் குறிப்பிடுகின்றேன். அக்காலத்தில் காணப்பட்ட வழமையின் பிரகாரம் ஸஃதிய்யா என்ற பரம்பரையில் வாழ்ந்து வந்த ஹலீமா எனப்படும் பெண்மணி தானும் பால் கொடுப்பதற்கு ஒரு குழந் தையை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் தனது கணவனுடன் மக்கா நகர் செல்லப் புறப்பட்டாள். அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த வறுமையின் காரணமாகவும், செல்வச் செழிப்புகள் இல்லாத காரணத்தாலும் தன்னிடமிருந்த ஒரு மெலிந்த, நடந்து செல்வதற்கே சக்தியற்ற ஒரு கோவேறுக் கழுதையை பிரயாணத் துக்கு ஏற்பாடு செய்தார்கள். அதன் உதவியுடன் பல கஷ்டங்களுக் கும், துன்பங்களுக்குமிடையில் மக்காவை வந்தடைந்தார்கள்.

மக்காவை வந்தடைந்ததும் குழந்தைகள் இருக்குமிடம் சென்று பார்க்கையில் அங்கேயிருந்த பணக்கார குழந்தைகளனைவரும் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் அநாதையாக இருந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் மாத்திரம் தனியாகக் காணப்பட்டார்கள். அவ்வளவு நீண்ட தூரத்திலிருந்து வந்து வெறுங் கையோடு போக விரும்பாத ஹலீமாவும், அவரது கணவரும் எஞ்சியிருந்த முஹம்மத் என்ற குழந்தையை தத்தெடுத்துக் கொண்டு தமது கிராமம் நோக்கிச் செல்லப் புறப்பட்டார்கள். அக்குழந்தையை தனது மடியில் வைத்துக் கொண்டு ஹலீமா பிராட்டியார் கோவேறுக் கழுதையில் ஏறியதும், நடப்ப தற்கே சக்தியற்றுக் காணப்பட்ட அம்மெலிந்த கழுதை நடை யில் வேகம் கொண்டு விரைய ஆரம்பித்தது. அதுமட்டுமின்றி தன்

னோடு வந்த அனைத்துக் குதிரைகளும் பின்னோக்கிச் செல்லும் வகையில் கம்பீரமாக முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்த ஆச்சரிய நிகழ்ச்சியைக் கண்ணுற்ற ஹலீமாவோடு வந்த ஏனைய உறவினர்கள் ஆச்சரியத்தால் திகைத்தார்கள்.

மேலும் ஒருமுறை ஹலீமா பிராட்டியார் கூறும்போது, அன்றைய நாட்களில் என்னுடைய மார்பகத்தில் மிகவும் குறைவாகவே பால் சுறந்து கொண்டிருந்தது. எந்தளவுக்கென்றால் எனது குழந்தையே பாலின்றி தினமும் அழுது கொண்டிருக்கும். அந்தளவுக்கு பாலில்லா மல் எனது மார்பகம் வறண்டுபோய் காணப்பட்டது. எப்போது முஹம்மத் என்ற குழந்தை என்னுடைய மார்பில் வாய் வைத்து பாலருந்தியதோ உடனே எனது மார்பில் பால் திரண்டுவர ஆரம்பித் தது. அன்றிலிருந்து அக்குழந்தையும், எனது குழந்தையும் வயி றாறவே பால் அருந்துவார்கள். அவர்கள் ஒரு நொடிப்பொழுதேனும் பசியோடு இருந்ததேயில்லை எனக்கூறுகின்றார்கள்.

தொடர்ந்து அப்பிராட்டியார் கூறுகையில், முஹம்மத் என்ற குழந்தை நமது கிராமத்துக்கு வரும் முன்னர் நம்முடைய பூமிகள் எவ்வித பயிர் பச்சைகளுமின்றி வரண்டு காணப்பட்டன. அக்குழந் தையை நாம் நமது கிராமத்துக்கு எடுத்து வந்ததன் பின் நமது பூமிகள் பசுமையடைந்தது. சிறந்த முறையில் பயிர் களைத் தழைக் கச் செய்தது. அதிலிருந்து ஆடு, மாடுகள் உண்டு குடித்து பல்கிப் பெறுகின. அதன்மூலம் வறுமையில் வாடிக் கொண்டிருந்த நாம் செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருந்தோம் எனக்கூறுகின்றார்கள்.

இரண்டு வருட ஒப்பந்தத்தின் பிரகாரமே குழந்தையை தத் தெடுத்த ஹலீமா அவர்கள் இரண்டு வருட முடிவோடு குழந் தையை தாயாரிடம் ஒப்படைக்க அழைத்து வருகின்றார்கள். என்றா லும் தனக்கு அக்குழந்தையின் மூலம் கிடைக்கப்பெற்ற செல்வங் களை நினைத்துப் பார்க்கின்றார்கள். மேலும் பாசத்தால் ஒன்றிவிட்ட அக்குழந்தையை விட்டு பிரிவதற்கு மனம் இடங் கொடுக்காததையும் உணர்கின்றார்கள். அதனால் மீண்டும் இரு வருடங்கள் தனக்கு அவகாசம் தருமாறு ஆமினா பிராட்டியாரை வற்புறுத்திக் கேட்டார் கள். ஹலீமா அவர்கள் தான் வைத்த கோரிக்கையில் பிடிவாதமாக

இருப்பதையும், குழந்தையின்மீது அதிக பாசம் கொண்டிருப்பதையும் கண்ட ஆமினா பிராட்டியார் மீண்டும் இரண்டு வருடங்கள் ஹலீமா விடம் இருக்க சம்மதம் தெரிவிக்கின்றார்கள். ஆமினா பிராட்டியாரின் சம்மதத்தைப் பெற்ற ஹலீமா பிராட்டியார் பூரித்துப்போய் உள்ளம் குளிர்ந்து அக்குழந்தையை மீண்டும் இரு வருடங்கள் தன்னுடன் வைத்திருக்கலாம் என்ற சந்தோஷத்தில் ஊர் திரும்புகின்றார்கள்.

இவ்வாறு ஹலீமா பிராட்டியாரிடம் நான்கு வருடங்கள் வாழ்ந்து வந்த நபியவர்கள் நான்கு வருட முடிவோடு தனது தாயிடம் வந்து சேர்கின்றார்கள். நபியவர்களது நான்காவது வயதிலிருந்து தனது தாயார் மரணிக்கும் வரை தாயிடமே வாழ்ந்து வருகின்றார்கள். நபிய வர்கள் ஆறாவது வயதையடையும் போது அவர்களது தாயார் மர ணிக்கின்றார்கள். அவர்களது மரணத்தின்பின் அவரது பாட்டனார் அப்துல் முத்தலிப் பொறுப்பேற்று வளர்த்து வருகின்றார்கள். நபியவர் கள் தனது பாட்டனாரின் அரவணைப்பில் வாழ்ந்து வருகையில் பாட்டனாரும் இரண்டு வருடத்தோடு மரணித்து விடுகின்றார்கள். அவர் மரணிக்கு முன்னமே தான் மரணித்து விட்டால் தனது மைந் தனின் மைந்தனைப் பாராமரிக்க யாரும் இருக்க மாட்டார்களே என்ற கவலை அவரை வாட்டி வதைத்தது. ஆதலால் தனது மகனும் நபியவர்களது சிறிய தந்தையுமான அபூதாலிப் என்பவரை அழைத்து நபியவர்களது நிலைமையை தெளிவுபடுத்தினார்கள். அவர்களை பரி பாலிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறும் பணித்தார்கள். அவர் களும் அதனைப் புறக்கணிக்காது ஏற்றுக் கொண்டார்கள்.

தனது தந்தையின் மரணத்துக்குப்பின் அவரது கட்டளைக் கேற்ப தனது குழந்தைகளையும், தனது குடும்பத்தையும் பராமரிப் பது போன்று தனது சகோதரனின் மைந்தனையும் பராமரித்து வந் தார்கள். என்றாலும் அன்று தனக்கேற்பட்டிருந்த வறுமையினால் சற்று கஷ்டத்துக்கு மத்தியிலேதான் நபியவர்களை வாழவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். அதனால் நபி (ஸல்) அவர்கள் அவர்களது சிறு பிராயத்திலும் ஒரு செல்வச் செழிப்பான வாழ்வை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார் கள். இவ்வாறான முறையில் வாழ்ந்தும், வாழப்பழகியும் தன்னைப்

பக்குவப்படுத்திக் கொள்ள அல்லாஹ்தான் அவ்வாறானதோர் நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான் என்பதை அறியாது நபியவர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறான ஒரு வாழ்க்கையை அவன் ஏற்படுத்திக் கொடுத்ததும் நபியவர் களை ஒரு வகையில் பக்குவப்படுத்துவற்கேயாகும் என்பதை இஸ் லாம் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

நபியவர்கள் ச.்.த் கோத்திரத்தில் வாழ்ந்து வரும்போது தனது பால்குடி சகோதரர்களுடன் இணைந்து ஆடு மேய்த்து பழக்கப் பட்டிருந்தார்கள். அதனால் தனது சிறிய தந்தை கஷ்டப்படக்கூடாது என்ற நோக்கில் பக்கத்து வீட்டார்களுடைய ஆடுகளை மேய்த்து வந்தார்கள். அதன்மூலம் கிடைக்கும் சிறு வருமானத்தில் தனது செலவுகளைக் கவனித்துக் கொள்வார்கள். நபியவர்களுக்கு பண்ணி ரண்டு வயதும், இருமாதங்களும், பத்து நாட்களுமாக இருக்கை யில் தனது சிறிய தந்தையுடன் வியாபார நோக்கமாக சிரியா நாடு செல்கின்றார்கள். அங்கே நபியவர்களையும், அவரது தோள்புயத்திலி ருந்த நபித்துவ முத்திரையையும் புகைரா எனப்படும் கிரிஸ்துவப் பாதிரியார் காணுகின்றார்கள். அவர்தான் பிற்காலத்தில் தோன்றவிருக் கும் இறைத் தூதர் என்பதை அவ்வடையாளத்தின் மூலம் புரிந்து கொண்ட புகைரா எனும் பாதிரியார் நபியவர்களைப்பற்றி அவரது சிறிய தந்தையிடம் எடுத்துக் கூறுகின்றார்கள். அத்துடன் இவருக்கு யூதர்களால் தீங்குகள் ஏற்பட நிறைய வாய்ப்புகளிருக்கின்ற தென்றும் தெளிவுபடுத்தி அத்தீங்குகள் இவரை நெருங்காமல் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறியனுப்புகின்றார்கள்.

மற்றுமொருமுறை அதே சிரியா நாட்டுக்கு கதீஜா பிராட்டியாரின் செல்வத்தை எடுத்துக்கொண்டு வியாபார ரீதியாக செல்வதற்கொரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சிரியா நாடு சென்று வியாபா ரம் செய்து திரும்பிய நபியவர்களிடம் காணப்பட்ட உண்மை, நேர்மை போன்றவைகளால் கதீஜா பிராட்டியார் கவரப்பட்டார்கள். அன் றிலிருந்து கதீஜா பிராட்டியவர்கள் நபியவர்களை வியாபார நோக்க மாக அனுப்பும்போது ஏனைய வணிகர்களுக்குக் கொடுப்பதைவிட அதிகமாகவும், சிறந்தவைகளாகவும் கொடுத்தனுப்பினார்கள். நபியவர்க

ளும் அவைகளை எடுத்துச் சென்று வியாபாரம் செய்து பன்மடங்கு வருமானத்தை ஈட்டிக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு கூறுவதை விட ஈருலக வெற்றியையும் அள்ளி வந்தார்கள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

கதீஜா பிராட்டி அவர்கள் குறைஷிக் கோத்திரத்தில் பிறந்தாலும் குறைஷிக் கோத்திர ஏனைய பெண்களைப் போன்றல்லாது அவர்கள் சிறந்த புத்தி சாதுர்யம் நிறைந்த பெண்ணாகமிருந்தார்கள். அத்துடன் எல்லா வகையிலும் சிறப்பு வாய்ந்த பெண்ணாகவும் காணப்பட்டார்கள். அன்றைய மக்களால் (தாஹிரா) சுத்தமானவள் எனப் போற்றப்படக் கூடியவாறு தனது கற்பைப் பாதுகாத்து வந்த பத்தினியாகவும் தென்பட்டார்கள். சிறந்த பண்பாடுகளும், நல்லொழுக்கங்களும் நிறைந்த பெண்ணாகவும் திகழ்ந்தார்கள்.

ஒருமுறை மய்சரா எனப்படும் தனது பணியாள் நபியவர்களுடன் சிரியா நாட்டுக்கு வியாபார ரீதியாக சென்றபோது நபியவர்களிடம் கண்ட சிறந்த குணங்களையும், பண்பாடுகளையும், கதீஜாப் பிராட்டியாரிடம் புகழ்ந்து கூறினார். அதேபோன்று நபியவர்கள் தனது சிறிய தந்தையுடன் சென்ற முதல் பயணத்தில் புகைரா என்ற பாதிரியார் கூறிய நற்செய்தியையும் எடுத்துச் சொன்னார். முன்னமே திருமணமாகி கணவனை இழந்திருந்த கதீஜா பிராட்டிக்கு மய்சரா எனும் பணியாள் கூறிய நற்செய்திகளைக் கேட்டதும் நபியவர்கள் மீது ஒரு வித அன்பு ஏற்பட்டு அவரை திருமணம் செய்துகொள்ள விரும்பினார்கள். அதனை தனது பணியாளின் மூலம் நபியவர்களிடம் தெரிவித்தார்கள். இறுதியாக அவர்களிருவது விருப்பத்தின் பேரில் இனிதே திருமணம் நடந்தேறியது. திருமணம் நடக்கும் போது நபியவர்களுக்கு 25 வயதாகவும், கதீஜாப் பிராட்டியாருக்கு 40 வயதாகவும் இருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நபியவர்கள் கதீஜா பிராட்டியாருடன் வாழும் காலங்களில் கதீஜா பிராட்டியாரின்மீது அதிக அன்பு செலுத்தி வந்தார்கள். கதீஜாப் பிராட்டியாரிருக்கும் போதே வேறு திருமணம் செய்யாதவராக அவர்களுடனே குடும்பம் நடத்தி வந்தார்கள். இவ்வாறு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த நபியவர்களது வாழ்வில் அல்லாஹ்வின்

விதி விளையாட ஆரம்பித்தது. அதாவது நபியவர்களுக்கு நபித்து வம் கிடைத்து பத்து வருடங்களில் தன்னுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த அன்பு மனைவி கதீஜா பிராட்டியவர்களை அல்லாஹ் மரணிக்கச் செய்து விடுகிறான். தனது மனைவியின் பிரி வால் பெரிதும் கவலைப்பட்ட நபியவர்கள் தினமும் கதீஜாப் பிராட்டி யாரை நினைவு கூறுபவராக இருந்தார்கள். அவர்களுக்காக அதிகதி கம் தானதர்மம் செய்பவராகவும் இருந்தார்கள். மனைவியின் தோழிக ளுக்கு மனைவியின் நினைவாக நன்கொடை வழங்குபவராகவும் இருந்து வந்தார்கள். மாரியத்துல் கிப்திய்யா என்ற மனைவியின் மூலம் பிறந்த இப்றாஹீம் எனப்படும் குழந்தையைத் தவிர நபியவர்க ளது ஏனைய அனைத்து குழந்தைகளும் கதீஜாப் பிராட்டியாரின் மூலம் கிடைக்கப் பெற்றவர்கள் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் ஞாப கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவைதான் நபியவர்களதும், அவர் களது வாழ்க்கை வரலாற்றினதும் மிகக்குறுகிய சுருக்கமாகும்.

**வஹியின் ஆரம்பம்.**

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது 40ஆவது வயதில் அவரது உள்ளமும், சிந்தனையும் பக்குவப்பட்டு வலுவடைந்த போது அல் லாஹ்வின் புறத்திலிருந்து அவருக்கு வஹீ எனப்படும் இறைத்தூது இறங்க ஆரம்பித்தது. அவனுடைய தூதின் முதல் கட்டமாக நபி யவர்கள் சிறந்த கனவுகளைக் காணக்கூடியவர்களாக இருந்தார்கள்.

எப்போது நபியவர்கள் வழமைக்கு மாறாக வித்தியாசமான கனவு களைக் காண ஆரம்பித்தார்களோ அப்போதே அவர்களுக்கு தனிமை யிலிருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றி தனிமையை விரும் பக் கூடியவர்களாக மாறினார்கள். அதன் பிரகாரம்தான் உண்ணுவ தற்குரிய உணவையும், குடிப்பதற்குரிய நீரையும் எடுத்துக் கொண்டு மக்காவிலிருந்து சற்றுத் தொலைவிலிருக்கும் ஹிரா குகைக்குச் சென்று விடுவார்கள். அவர்கள் கொண்டு சென்ற உணவுப் பொருட் களும், நீரும் முடியும்வரை அங்கேயிருந்து அல்லாஹ்வை தியானித் துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எடுத்துச் சென்ற உணவுப் பொருட்கள் முடிந்ததும் மீண்டும் வீடு வந்து தேவையான உண வைப் பெற்றுச் செல்வார்கள்.

இவ்வாறு அவர்கள் சென்று வணங்கிக் கொண்டிருக்கையில் தான் ஒருநாள் இரவு அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் திடீரென வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவருடைய உண்மையான தோற்றத்தில் நபியவர்கள் முன் தோன்றினார்கள். இப்படி தனது வாழ் விலே கண்டிராத ஆச்சரியத்துக்குரிய ஒரு உருவத்தை அன்றுதான் நபியவர்கள் பார்க்கின்றார்கள். வந்தவர் உடனே நபியவர்களை கட்டி யணைத்துக் கொண்டார்கள். அதைப்பற்றி நபியவர்களே கூறும்போது அவர் என்னை அணைத்த அணைப்பில் எனது உயிர் பிரிந்து விடுமோ என்று பயந்தேன் அந்தளவுக்கு என்னை இறுக்கி அணைத் தார்கள் எனக்கூறுகின்றார்கள். அவ்வாறு அனைத்துக் கொண்டவர் ஓதுவீராக என்ற வார்த்தையை அவரது பாஷையான அரபியில் கூறி அல்லாஹ்வின் தூதுத்துவத்தை முதன் முதலில் முன் வைத்தார்கள். நபியவர்கள் இப்படியொரு நிலையை சற்றும் எதிர்பார்த்திருக்க வில்லை. தனக்கு எழுதப்படிக்கத் தெரியாததை நினைத்து பயந்து நடுங்கினார்கள். பின்பு அவர் கூறியதற்கு பதில் கூறும் வகையில் தனக்கு ஓதத் தெரியாது என்ற உண்மையை ஒப்புவித்தார்கள். அவ ருடைய அவ்வார்த்தையை பொருட்படுத்தாத ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மீண்டும் நபியவர்களை இறுகக் கட்டியணைத்து ஓது வீராக எனக் கட்டளையிட்டார்கள். இரண்டாவது முறையும் நபியவர் கள் தனக்கு ஓதத் தெரியாதென்றே பதிலளித்தார்கள். மூன்றாவது முறையாகவும் அவர்கள் அவ்வாறே செய்து ஓதுமாறு பணிக்க நபியவர்கள் ஓதத் தெரியாதென்றே பதிலளித்தார்கள்.

மூன்று முறையும் நபியவர்கள் ஓதத் தெரியாதென்பதையே திரும் பத்திரும்பக் கூறியதும் உடனே ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபிய வர்களை அப்படியே விட்டுவிட்டு பின்வரும் இறை வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள். உம்முடைய இரட்சகனின் (சங்கையான) பெயரைக் கொண்டு நீர் ஓதுவீராக! அவன் எத்தகை யவனென்றால்(படைப்பினங்கள் அனைத்தையும்)படைத்தான். மனி தனை (அட்டைப் பூச்சி போன்று ஒட்டிக் கொண்டிருக்கும்) இரத் தக் கட்டியிலிருந்து அவன் படைத்தான். நீர் ஓதுவீராக! மேலும் உமதிரட்சகன் மிக்க சங்கையானவன். அவன் எத்தகையவனென்றால்

எழுது கோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான். மனித னுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம்(அல்லாஹ்வாகிய) அவன் கற்றுக் கொடுத்தான்(*96–1,2,3,4,5*).

மேலேயுள்ள இறைவசனங்கள் மனிதன் கட்டாயமாக கற்றுக் கொள்ள வேண்டிய அறிவைப்பற்றியும், மனிதனது ஆரம்பப் படைப் பைப் பற்றியும் தெளிவுபடுத்தக்கூடிய வசனங்களாகும். அவ்வசனங் களை ஓதிக்காட்டிவிட்டு வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவ் விடத்திலிருந்து மறைந்து சென்றார்கள். அன்றிலிருந்து நபியவர் களுக்கு அல்லாஹ்வின் தூது இறங்க ஆரம்பித்தது. வானவர் ஜிப்ர யீல் (அலை) அவர்கள் வந்துபோன நிகழ்ச்சியால் பாதிக்கப்பட்டு கடும் பயத்துக்கும், காய்ச்சலுக்கும் நபியவர்கள் இலக்கானார்கள். உடனே ஹிராக் குகையிலிருந்து வெளியாகி வீட்டை நோக்கிச் சென் றார்கள். வீட்டினுள் நுழையும்போதே என்னைப் போர்த்தி விடுங்கள், என்னைப் போர்த்தி விடுங்கள் எனக்கூறியவாறே வீட்டினுள் நுழை கின்றார்கள். நபியவர்களது பீதிகலந்த தோற்றத்தைக் கண்ட கதீஜா பிராட்டியார் ஒரு துணிகொண்டு அவர்களைப் போர்த்தி விடுகின்றார் கள். நபியவர்களது பயம் சற்று தெளிந்ததும் கதீஜா பிராட்டியாரிடம் ஹிராக்குகையில் நடந்த சம்பவத்தையும், தன்னிடம் சமூகமளித்தி ருந்தவரைப் பற்றியும், அவர் தன்னை இறுக அணைத்ததைப் பற்றி யும், அவ்வரவணைப்பால் தான் இறந்து விடுவேனோ எனப்பயந்த தைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

நபியவர்கள் கடுமையாக பயந்திருக்கின்றார்கள் என்ற விஷயத்தை பாசத்தின் உறைவிடமான மனைவி கதீஜா பிராட்டியார் அவர்கள் அறிந்து கொண்டார்கள். உடனே நபியவர்களைத் தேற்றும் வகை யில் பின்வருமாறு ஆறுதல் கூறினார்கள். நீங்கள் நடந்துமுடிந்த அச்சம்பவத்தை நினைத்து வீண்பயம் கொள்ள வேண்டாம். நீங் களோ தங்களது உறவினர்களை சேர்ந்து நடக்கின்றீர்கள். கஷ்டத்தி லுள்ளோருக்கு கை கொடுக்கின்றீர்கள். அனாதைக் குழந்தைகள் தமக்கு உறவுகள் இல்லை என்பதை மறக்குமளவு அவர்களுடன் உறவு கொண்டாடுகின்றீர்கள். பலவீனர்களுக்கு ஒத்தாசையாக இருந்து வருகின்றீர்கள். அவைகளெல்லாவற்றையும் விட உண்

மைக்கு அயராது பாடுபடுகின்றீர்கள். இவ்வாறு எல்லா வகையிலும் நன்மையாக இருந்து கொண்டிருக்கும் உங்களை நிச்சயமாக அல்லாஹ் ஒருபோதும் கவலைக்குள்ளாக்க மாட்டான் என அன்பான வார்த்தைகளாலும், அழகான பேச்சுக்களாலும் நபியவர்களை சமாதானப்படுத்தினார்கள். பொதுவாக மனிதர்களுக்கு நல்லது செய்பவர்களை அல்லாஹ் ஒருபோதும் துன் பத்துக்கு ஆளாக்க மாட்டான் என்பதையும், நன்மை செய்பவர்களுக்கு நன்மையைத்தான் கூலியாகக் கொடுப்பான் என்பதையும் கதீஜாப் பிராட்டியவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள். அவ்வார்த்தைகளின் மூலம் நபியவர்களைச் சமாதானப் படுத்த அன்று அவர்களுக்கு ஏதுவாகிப் போய்விட்டது.

பயத்திலிருந்து தெளிவு பெறாத நபியவர்களை அப்படியே விட்டு விட கதீஜாப் பிராட்டியாருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. எனவே அவரை சரியான ஒரு மனிதரிடம் கொண்டு போய் காண்பிக்க நினைத்தார்கள். அதன்பிரகாரம் அக்காலத்தில் இன்ஜீல் வேதத்தை இப்றானி மொழியில் எழுதி கிரிஸ்தவ மதத்தை உரிய முறையில் பின்பற்றியும், மற்றோருக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டுமிருந்த தனது சிறிய தந்தை வறகத் பின் நவ்பல் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள். அன்றைய நிலையில் வறகத் பின் நவ்பல் என்பவர் கண் பார்வையை இழந்த குருடராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்ட நபியவர்கள் தான் ஹிராக்குகையில் கண்ட நிகழ்ச்சியைப்பற்றி ஒன்று விடாமல் எடுத்துக் கூறினார்கள். நபியவர்கள் கூறியவைகளை செவிமடுத்துக் கொண்டிருந்த வறகத் பின் நவ்பல் அவர்கள் பின்வருமாறு கூறத் தொடங்கினார். நீங்கள் ஹிராக்குகையில் கண்ட அந்த உருவம்தான் நபி மூஸா (அலை) அவர்களிடம் இறங்கிய நாமூஸ் எனப்படும் அல்லாஹ்வின் வஹியை எடுத்துச் செல்லும் வானவராவார். அவர்தான் உங்களிடமும் ஒரு சுபசோபனத்தை எடுத்து வந்திருக்கின்றார் எனக்கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் ஒரு காலத்தில் உமது சமுதாயத்தினர் உம்மை உமது ஊரிலிருந்தே வெளியேற்றுவார்கள். அவ்வாறு வெளியேற்றும் காலத்தில் நானும் உயிரோடிருக்க வேண்டும். உம்மை அவர்கள் வெளியேற்றும் சந்தர்ப்

பத்தில் துடிப்புள்ள வாலிபனைப் போன்று உமக்கு உதவிசெய்ய வேண்டும். அதற்கொரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென அல்லாஹ்விடம் ஆதரவு வைக்கின்றேன் எனக்கூறினார்.

தான் என்றோ ஒருநாள் தனது ஊரைவிட்டே துரத்தப்படுவேன் என்ற செய்தி நபியவர்களின் காதைத் துளைத்துக் கொண்டு ஊடுருவிச் செல்கின்றது. அச்செய்தியைக் கேட்ட நபியவர்கள் வறகத் பின் நவ்பலைப் பார்த்து எனது சமுதாயத்தினர் என்னை ஊரை விட்டே வெளியேற்றுவார்களா? என ஆச்சரியத்தோடு வினவினார்கள். அதற்கவர் ஆம் நீர் எதைப் பிற்காலத்தில் மக்களுக்குப் போதிக்க விருக்கின்றீரோ அதனைப் போதிக்க வந்த அனைவரும் அவரவர்களுடைய சமுதாயத்தினரால் துன்பமிழைக்கப்பட்டே இருந்திருக்கின்றார்கள் எனக்கூறினார்கள். அக்காலத்தில் நானும் உயிரோடிருப்பதற்கொரு சந்தர்ப்பம் கிடைத்தால் உம்மை அவர்களது தீங்குகளிலிருந்து பாதுகாக்க உதவியாயிருப்பேன் எனவும் கூறினார்கள். ஆனால் அவரோ சிறிது காலத்தின்பின் மரணிக்க நபியவர்களுக்கு இறங்கிக் கொண்டிருந்த வஹியு(தூது)ம் திடீரென நின்றுவிட்டது.

திடீரென நின்றுவிட்ட வஹி (தூது) தொடர்ந்து மூன்று வருடங்களாக இறங்கவேயில்லை. அதைப்பற்றிய கவலை அவர்களிடம் காணப்பட்டாலும் தனக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறங்கும் வஹி(தூதை)யையும், அதுகூறும் சட்ட திட்டங்களையும் சிறந்த முறையில் கடைபிடித்து நடப்பதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். அதன் பிரகாரம் அவர்கள் அக்கால இடைவெளிக்குள் தன்னை சிறந்த முறையில் பக்குவப்படுத்தி, தயார்படுத்திக் கொண்டார்கள். அதேநேரம் தனக்கு இறங்கிக் கொண்டிருந்த வஹி மீண்டும் தொடர மாட்டாதா? என்ற பேராவலும் அவர்களிடம் காணப்பட்டது. வஹி நின்றுபோன அக்கால கட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நபியவர்கள் ஓரிடத்தில் கூறுகையில், ஒருநாள் நான் ஒரு பாதைவழியாக சென்று கொண்டிருந்தேன். அவ்வாறு சென்று கொண்டிருக்கையில் ஒரு திடுக்கிடும் சத்தம் வானத்திலிருந்து வெளியாகியது. அச்சத்தம் வந்த திசையை உற்று நோக்கிப் பார்த்தேன். ஆனால் எனது கண்களுக்கு புலப்படும் வகையில் எதையும்

நான் பெற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் எனது பார்வையை அங்கு மிங்குமாக செலுத்திப்பார்த்தேன். அப்போது ஹிராக்குகையில் வைத்து நான் பார்த்த அதே உருவம் அதே தோற்றத்துடன் ஆகாயத்தில் வீற் றிருப்பதைக் கண்டேன் எனக்கூறினார்கள். அவர்கள் தன்னை சிறந்த முறையில் பக்குவப்படுத்திக் கொண்ட காரணத்தால் முதலாவது முறை அவ்வானவரை கண்டபோது ஏற்பட்ட அதிர்ச்சியும், பயமும் இரண்டாவது முறையாக காணும்போது சற்று குறைந்திருந்தது. உடனே அங்கிருந்து வீடுவந்து போர்வையால் தன்னைப் போர்த்திக் கொண்டார்கள். பின்பு அல்லாஹுத்தஆலா பின்வரும் திருவசனத்தை இறக்கி வைக்கின்றான். (போர்வை) போர்த்திக் கொண்டிருப்பவரே! நீர் எழுந்திருப்பீராக! பிறகு (அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! மேலும் உமதிரட்சகனைப் பெரு மைப்படுத்துவீராக! மேலும் உமது ஆடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வீராக! இன்னும் அசுத்தத்தை வெறுத்து விடுவீராக!(74-1,2,3,4,5).

அவ்விறைவசனம் இறங்கியதிலிருந்து தொடராக அல்லாஹ்வின் தூது இறங்க ஆரம்பித்தது. நபியவர்களுக்கு இறங்கிய மேற்கூறப் பட்ட வசனத்தினடிப்படையிலும், அதுகூறும் கட்டளையினடிப்படை யிலும் மக்களை அழைக்க ஆரம்பித்தார்கள். அல்லாஹ்வை மாத்திரம் வணங்குமாறு அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அவன் பொருந் திக்கொண்ட தூய மார்க்கமான இஸ்லாத்தின் பக்கம் திரும்புமாறு அவர்களைப் பணித்தார்கள். இவ்வாறு சிறந்த மதிநுட்பங்களைக் கையாண்டு சிறந்த பேச்சாலும், தெளிவான விளக்கங்களாலும் இறை வணக்கத்தின் பால் மக்களை அழைத்துக் கொண்டேயிருந்தார்கள்.

அவர்கள் மேற்கொண்ட இறை அழைப்புப்பணியை முதன் முத லில் பெண்களில் அவரது அன்பு மனைவி கதீஜா பிராட்டியார் ஏற் றுக் கொண்டார்கள். அதேபோன்று ஆண்களில் அவரது உற்ற தோழர் அபூபக்ர் (ரலி) அவர்களும், சிறுவர்களில் அலி (ரலி) அவர் களும் ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறு ஆரம்ப கட்டத்தில் சிலர் நபியவர்களுடன் சேர்ந்து ஒத்தாசையாக இருந்து செயல்பட்டதால் அவர்கள் தொடர்ந்து பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார்கள். சிலை

வணக்கங்களில் ஈடுபட்டிருந்த அம்மக்களை இடைவிடாது உண்மையின் பக்கம் அழைத்துக் கொண்டேயிருந்தார்கள். அதன் பலனாக ஒன்றிரண்டாக இருந்த அவரது இஸ்லாமியத் தோழர்கள் பத்தாகவும், பத்து நூறாகவும் பெருகிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு ஏகத்துவப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு மக்களை தன் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பதை அன்றைய மக்கா குறைஷிக் காபிர்கள் காணுகின்றார்கள். நபியவர்கள் மீதும், அவர்களது பிரச்சாரத்தின் மீதும் கடுங் கோபம் கொள்கின்றார்கள். கோபம் கொண்டதோடு நின்று விடாமல் நபியவர்கள் மேற்கொள்ளும் அப்பிரச்சாரத்தை விட்டு விடும்படி கண்டித்தார்கள். அவரது பிரச்சாரத்தை ஏற்றுக் கொண்டவர்களை அவர்களது பழைய கொள்கைக்கே விட்டுவிடும் படியும் எச்சரித்தார்கள். அவர்களது எச்சரிக்கையை பொருட்படுத்தாத நபியவர்கள் தொடர்ந்து தனது தோழர்களுக்கு ஆர்வமூட்டினார்கள். அவர்களுக்கு அல்லாஹ்விடம் கிடைக்கவிருக்கின்ற நன்மைகளையும், வெற்றிகளையும் கூறி உற்சாகப்படுத்திக் கொண்டேயிருந்தார்கள். காபிர்களின் எச்சரிக்கையையும் மீறி அவர்கள் செயல்பட்டதால் நபியவர்களை கடுமையாக கொடுமைப்படுத்தினார்கள். அதுமட்டுமின்றி-அன்று வரகத் பின் நவ்பல் என்ற பாதிரியார் கூறியது போன்று-இறுதியில் நபியவர்களது சொந்த ஊரான மக்காவை விட்டே அவர்களை வெளியேற்றினார்கள்.

இவ்வாறாக நபியவர்களும், அவர்களது உத்தமத் தோழர்களும் குறைஷிக் காபிர்களால் கடுந் துன்பத்துக்கும், இன்னல்களுக்கும் ஆளாகிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில்தான் தனது தோழர்களை அழைத்துக் கொண்டு மக்காவை விட்டு மதீனாவுக்குச் செல்லுமாறு நபியவர்களுக்கு அல்லாஹ்வின் மறு கட்டளை வருகின்றது. அக்கட்டளையின் பிரகாரம் நபியவர்களும், அவர்களது தோழர்களும் மதீனா நகர் செல்கின்றார்கள். அங்கு சென்ற அவர்களுக்கு பெரும் ஆதரவு இருந்து வந்ததால் அவர்களுடைய உதவியோடு இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொள்கின்றார்கள். அவர்களது பிரச்சாரப் பணியில் இடையிடையே குறிக்கிடும் குறைஷிக் காபிர்களது அடாவடித்தனத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அல்லாஹ்வின் உத்த

ரவின் பேரில் அவர்களுடன் பல போர்களும் செய்ய வேண்டிய நிலையிலிருந்தார்கள். அவ்வாறு அவர்களுடன் நடந்த யுத்தங்களில் சிலதில் நபியவர்கள் தோல்வியைத் தழுவினாலும், இறுதியில் எந்த ஊரிலிருந்து தன்னை தனது சமூகத்தினர் வெளியேற்றினார்களோ அதே ஊருக்குள் வெற்றிவாகை சூடியவர்களாக நுழைகின்றார்கள்.

இவ்வாறு இறைவனது கட்டளையின் பிரகாரம் இஸ்லாத்தை பல பாகங்களிலும் வாழ்ந்து வந்த மக்களுக்கு போதித்துக் கொண்டிருந்த நபியவர்களை அல்லாஹுத்தஆலா தன் பக்கம் அழைத்துக் கொள்ள விரும்பினான். அதற்குரிய முன்னேற்பாடாக ஹஜ்ஜதுல் வதா எனப்படும் நபியவர்களது இறுதி ஹஜ்ஜில் தனது மார்க்கத்தை பூரணமாக்கி விட்டதாக அறிவித்தான். தான் விரும்பக்கூடிய மார்க்கமும், மக்கள் கட்டாயமாக பின்பற்றிவர வேண்டிய மார்க்கமும் அந்த இஸ்லாம்தான் என்பதை அன்றைய தினம் தெளிவாகவும், உறுதியாகவும் கூறினான். அன்றோடு நபியவர்களுக்கு இறங்கிக் கொண்டிருந்த இறைத்தூதுக்கும் முற்றுப்புள்ளியிடுகின்றான். இவ்வாறான முன்னேற்பாடுகளை அறிவித்துக் கொண்டிருந்த இறைவன் அவரை 63வது வயது பூர்த்தியோடு தன்னிடம் அழைத்துக் கொள்கின்றான். இவ்வாறாக நபியவர்கள் நபித்துவத்துக்கு முன் 40 வருடங்களும், நபித்துவத்துக்குப் பின் 23 வருடங்களும் வாழ்ந்துவிட்டு இறையடி சேர்ந்து விடுகின்றார்கள்.

நபியவர்களது மரணத்தோடு அல்லாஹுத்தஆலா வானத்திலிருந்து இறக்கிக் கொண்டிருந்த வேதங்களுக்கு முற்றுப்புள்ளி யிட்டு விட்டான் என்பதை அறிந்து கொண்டோம். அந்த இறுதி வேதத்தைத்தான் மனித, ஜின் ஆகிய இரு இனங்களும் பின்பற்றி நடக்க வேண்டிய வேதமாக ஆக்கியிருக்கின்றான். அதனடிப்படையில் யாரெல்லாம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும், இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் வழிப்பட்டு நடக்கின்றார்களோ அவர்களனைவரும் இவ்வுலகில் ஈடேற்ற மடைந்தவர்களாகவும், வெற்றி பெற்றவர்களாகவும் கருதப்படுகின்றார்கள். அதேபோன்று நாளை மறுமையில் சுவனத்துக்குரிய வர்களாகவும் ஆகிவிடுகின்றார்கள். அதற்கு மாற்றமாக யாரெல்லாம் அவனது கட்டளைக்கும், சட்டதிட்டங்களுக்

கும், அவனது இறுதித் தூதருக்கும் வழிப்பட மறுக்கின்றார்களோ அவர் களனைவரும் உலகில் நற்பாக்கியத்தை இழந்தவர்களாகக் கரு தப்படுகின்றார்கள். அதேபோன்று நாளைமறுமையில் நிரந்தர நர கைப் போய்ச் சேரக்கூடியவர்களாகவும் ஆகிவிடுகின்றார்கள். நபியவர்க ளது மரணத்துக்குப் பின் அவர்கள் தமது உத்தமத் தோழர்களுக் குக்கற்றுக் கொடுத்துச் சென்றதின் பிரகாரம் அவர்கள் மேற்கொண்ட ஏகத்துவப் பிரச்சாரப் பணியை தோழர்கள் மேற்கொண்டு வந்தார்கள். அவர்களது அயராத முயற்சியின் பலனாக இஸ்லாம் பல நாடுகளுக் குப் பரவியது. அதுமாத்திரமின்றி அந்நாடுகளை இஸ்லாமிய அடிப் படையில் வாழும் நாடுகளாக மாற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் ளும் கொண்டு வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அச்சத்திய மார்க்கம்தான் மறுமை நாள் வரையும் பின்பற்றப்படக் கூடிய மார்க்கமாகும். அவ ரைப்பற்றி எப்படிச் சொல்வது நபியவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத மனிதர்களுக்கு மத்தியில் பிறந்த ஒரு மாமனிதராவார். அவர்தான் உலகமே மெச்சும்படி அன்று வாழ்ந்து வந்த சமுதாயத்திலும், கொள் கைகளிலும், அரசியல் சம்பந்தப் பட்டவைகளிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினார். அவர் கொண்டு வந்த அச்சத்தியம் ஒரு நூற்றாண்டு காலத்துக்குள் சவூதி அரேபிய தீபகற்பத்திலிருந்து மேற்குப்பகுதியில் ஐரோப்பா, மற்றும் ஆப்பிரிக்கா வரையும், கிழக்குப் பகுதியில் சீனா வரையும் போய்ச் சேர்ந்தது. எந்த நாட்டுக்குகெல்லாம் அச்சத்தியம் போய்ச் சேர்ந்ததோ அந்நாட்டு தலைவர்களும், அதில் வாழ்ந்த மக்க ளும், அச்சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தார்கள். அவர்கள் ஒவ் வொரு நாடுகளையும் வெற்றி கொள்ளும்போது அந்நாடுகளில் இஸ் லாமிய கலாச்சாரத்தையும், மனித நேயத்தையும், நீதியையும், நேர்மை யையும் நிலை நாட்டி அந்நாட்டு மக்களோடு அன்பாகவும் நடந்து கொண்டார்கள். அதனைப்பற்றி இன்றுவரை அல்குர்ஆன் புகழ்ந்து கூறிக் கொண்டிருக்கின்றது.

**நபி (ஸல்) அவர்களின் நற்குணங்கள்.**

நபித்துவம் கொடுக்கப்படுவதற்கு முன்னமே அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களில் நபி(ஸல்)அவர்கள்தான் சிறந்த குணம் படைத்

தவர்களாக இருந்தார்கள். அதேபோன்று அவர்கள்தான் நற்பண்புகளாலும், சிறப்புகளாலும், ஒழுக்கங்களாலும் உயர்ந்து காணப்பட்டார்கள். அப்பண்புகளின் மூலம் அம்மக்களால் போற்றப்படக்கூடியவர்களாகவும் இருந்து வந்தார்கள் என்பதனை அல்குர்ஆனும், நபிமொழிகளும், வரலாற்றுச் சான்றுகளும் நமக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. நபித்துவம் கிடைப்பதற்கு முன்பிருந்த அறியாமைக் காலத்திலே நபியவர்கள் அவ்வாறு போற்றப்படக் கூடியவராக இருந்திருந்தால் அல்லாஹ்வின் புறத்திலிருந்து மதிப்புக்குரிய தூது கொடுக்கப்பட்டதன் பின் எவ்வாறிருந்திருப்பார்கள்? என்பதனை சொல்லாமலே புரிந்து கொள்ளலாம். அதனால்தான் அவரை அல்லாஹுத்தஆலா இவ்வாறு புகழ்ந்து கூறுகின்றான். (நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணத்தின் மீதும் நீர் இருக்கின்றீர்(68.4).

அல்லாஹுத்தஆலா அவருக்கு சிறந்த முறையில் ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்து அதற்குரியவாறு வாழவும் பழக்கி விட்டிருந்தான். அதேபோன்று மக்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய தன்மையையும், அவர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் இருக்கக்கூடியவாறு ஆக்கிவிட்டிருந்தான். குறிப்பிட்டுக் கூறுவதாயின் அவரது மொத்தக் குணங்களும் குர்ஆன் கூறுபவைகளாகவே இருந்து வந்தன எனக் கூறலாம். அவர்கள் அக்குர்ஆனிலிருந்தே தனக்குரிய ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் கற்றுக் கொண்டது மாத்திரமின்றி ஏனைய மக்களுக்கும் அதனைக் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகவும் ஞானமிக்கவராகவும், சிறந்த நீதிவானாகவும், எதிலும் சிறிதளவைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் பெருமனம் கொண்டவராகவும் இருந்து வந்திருப்பது அவர்களது நற்குணங்களையே தெளிவுபடுத்துகின்றன. அவை மட்டுமின்றி தனது செருப்பையும், ஆடையையும் தானே தைத்துக் கொள்வார்கள். தனது மனைவியர் உணவு சமைக்கும் சந்தர்ப்பங்களில் இறைச்சி போன்றவைகளை வெட்டிக் கொடுத்து உதவி செய்பவராகவும் இருந்திருக்கின்றார்கள். மேலும் எல்லா விஷயங்களிலும் அதிகம் வெட்கப்படுபடக் கூடியவராகவும் இருப்பார்கள்.

மேலும் அவர்களை யாராவது விருந்துக்கு அழைத்தால் அவ் விருந்துபசாரத்துக்கு விடையளிப்பார்கள். அவர்களுக்கு நன்கொடைகள் வழங்கப்படுகையில் அவைகள் கொஞ்சமாக இருந்த போதிலும் மனதிருப்தியோடும், முகமலர்ச்சியோடும் ஏற்றுக்கொள்வார்கள். மேலும் அவர்ளுக்கு வழங்கப்பட்ட நன்கொடைக்கு பிரதியுபகாரம் செய்யும் முகமாக இவர்களும் நன்கொடை வழங்குவார்கள். அவருக்குச் சூழாலுள்ளவர்கள் அவருடைய விஷயத்தில் தவறிழைக்கும் போது கோபமடையாமல் மன்னித்து விடுவார்கள். ஆனால் அல்லாஹ்வுடைய விஷயத்தில் தவறிழைக்கையில் அதனை பொறுத்துக் கொள்ள முடியாமல் கோபமடைபவராக இருப்பார்கள். மேலும் அவர்கள் அதிகம் பசித்திருப்பவராகவும், பசியின் கொடுமை தாங்க மாட்டாமல் வயிற்றில் கல்லைக் கட்டிக் கொள்ளும் பழக்கமுடையவராகவும் இருந்து வந்திருக்கின்றார்கள். சிலபொழுதுகளில் கிடைப்பதை உண்பவராகவும், கிடைத்தவைகள் தரக்குறைவாக இருந்தால் அவைகளை ஒரு போதும் தட்டிக் கழிக்காதவராகவும் இருந்திருக்கின்றார்கள்.

தனக்குக் கிடைக்கும் உணவை ஒருபோதும் குறை கூறமாட்டார்கள். தனக்குக் கொடுக்கப்படும் பேரீத்தம் பழம், கோதுமை ரொட்டி, தேன், இனிப்புப் பண்டம், பால் போன்றவைகளில் எது கிடைத்தாலும் இது தனக்குப் போதாது கொஞ்சமாயிருக்கின்றது என்றோ, அல்லது அதிகமாயிருக்கின்றது என்றோ பாராமல் தனக்குப் போதுமான அளவு உண்டு கொள்வார்கள். அதேபோன்று நோயாளிகளை சென்று நோய் விசாரிப்பதிலும், யாராவது மரணித்து விட்டால் அம்மரண வீட்டுக்கு சமூகமளித்து அங்குள்ளோருக்கு ஆறுதல் கூறுவதிலும், மையித்தை அடக்கம் செய்யும் இடம்வரை தொடர்ந்து செல்வதிலும், தனது பகைவர்களுக்கு மத்தியில் எவ்விதப் பாதுகாப்புமின்றி தைரியமாக நடந்து செல்வதிலும் பிரசித்தி பெற்றிருந்தார்கள்.

அவர்கள் மக்களோடு பணிவாக நடந்து கொள்வார்கள். எவ்விதப் தற்பெருமையுமின்றி எப்போதும் அமைதியான வர்களாகவே காணப்படுவார்கள். மக்கள் சலித்துக் கொள்ளுமளவுக்கு தனது பேச்சை நீட்டிக் கொண்டிருக்காமல் சொற்ப வார்த்தைகளால் மக்களுக்கு தெளிவுபடுத்தி விடுவார்கள். அத்தோடு அவர்கள் மனிதர்களில்

மிகவும் அழகானவராகக் காணப்பட்டார்கள். அவர்கள் ஒருபோதும் உலக விஷயங்களில் மூழ்கி தன்னை அழித்துக் கொள்ள மாட்டார் கள். அதேபோன்று தனக்குக் கிடைக்கும் ஆகுமான ஆடைகளில் பொருத்தமானதை அணிந்து கொள்வார்கள். தன்னிடத்திலிருக்கும் குதிரை, ஒட்டகம், கோவேறுக் கழுதை, கழுதை போன்றவைகளில் பிரயாணம் செய்வார்கள். அவைகள் கிடைக்காத பட்சத்தில் நடந்து செல்ப வராகவும் இருந்திருக்கின்றார்கள். மேலும் ஏழைகளுடன் ஒரே இடத்தில் உட்கார்ந்து ஒன்றாய் உண்டு, குடித்து வருவார்கள். மனி தர்களில் மதிக்கப்பட வேண்டியவர்களை மதிப்பார்கள். கண்ணியத் துக்குரியவர்களை கண்ணியப்படுத்துவார்கள். அவர்களுடைய நல்ல விஷயங்களில் அவர்களை சேர்ந்து நடப்பார்கள். தனது உறவினர்க ளில் எவரது உள்ளமும் நோகாதவாறு அவர்களுடன் சந்தோஷமாக உறவாடி வருவார்கள்.

அவர்கள் யாரிடமும் கடினமாக நடந்து கொள்ள மாட்டார்கள். அதேபோன்று யாராவது அவருக்குச் செய்த தவறுக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டால் தாராள மனதுடன் அவைகளை மன்னித்து விடுவார்கள். தனது தோழர்களுடன் கேலியில் ஈடுபடும் போது உண் மையானவைகளைக் கூறியே கேலி பண்ணுவார்கள். சிரிக்கும் போது ஒருபோதும் சத்தமிட்டு சிரிக்க மாட்டார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போது தனது மனைவிமார்களோடு ஓடி விளையாடுவார்கள். அவர் களுக்கு முன்னிலையில் யாராவது சத்தமிட்டுப் பேசினால் அதனை யிட்டு கோபம் கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய அதிகமான நேரங்களை அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதிலே கழிப்பார்கள். தன்னுடைய எந்தத் தேவைகளாயிருந்தாலும் தானாகவே செய்து கொள்பவராகவும் இருந்து வந்திருக்கின்றார்கள்.

மேலும் ஒரு ஏழையைக் கண்டால் அவரது ஏழ்மை நிலை யைக் கருதி இழிவுபடுத்த மாட்டார்கள். அல்லாஹ்வினது ஆட்சிக்கே தவிர வேறு எவரது ஆட்சிக்கும் பயப்படமாட்டார்கள். மனிதர்களில் ஏழை, பணக்காரன் உயர்ந்தவன், தாழ்ந்தவன் ஆண்டி, அடிமை என்ற வித்தியாசமின்றி அனைவரையும் ஒரேதரத்தில் கணித்து ஏகத் துவக் கொள்கையின் பக்கம் அழைப்பார்கள். நபியவர்கள் எழுதப்

படிக்கத் தெரியாத படிப்பறிவில்லாத ஒருவராக இருந்தாலும் சிறந்த நற்குணங்கள் கொண்டவராகக் காணப்பட்டார்கள். அரசியல் சமாச் சாரங்களில் படித்தோர்களையும் மிஞ்சியவர்களாக இருந்திருக்கின்றார் கள். அவ்வாறான சிறப்பியல்புகளைக் கொடுத்து அல்லாஹ் அவர் களை கண்ணியப்படுத்தியிருந்தான். இவ்வாறான கண்ணியங்களும், மதிப்புகளும், அந்தஸ்துக்களும் கொடுக்கப்பட்டிருந்தும் அவர்களி டம் எவ்விதப் பெருமையோ, கர்வமோ காணப்படவில்லை. அதனால் தான் பாலை வனமும், வறுமையும் நிறைந்த நாட்டில் அநாதையாகப் பிறந்து, ஆடுகளை மேய்த்து அதன்மூலம் கிடைத்த வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ் அழகிய நற் குணங்களையும், புகழப் படக்கூடிய வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தது போன்று அவருக்கு முன்னால் வாழ்ந்து அழிந்து போனோர்களது சரித்திரங்களையும், பின்னால் வாழவிருப்போர்களது செய்திகளையும், இவ்வுலகம் அழிந்து போகக்கூடிய ஒரு மாயை யென்பதையும், மறுமைதான் அழிவேயில்லாத நிலையான உலகம் என்பதனையும் தெளிவாகவே கற்றுக் கொடுத்திருந்தான்.

மேலும் யாராயினும் ஒருவர் தனது தேவையைக்கூறி உதவி கேட்டு வந்தால் அவருடன் சென்று அதனை நிறைவு செய்து கொடுப்பவராகத்தான் இருந்தார்களே தவிர தன்னால் முடியாது எனக் கூறி நிராகரித்து உதரித் தள்ளுபவராகவோ, கடின உள்ளம் கொண்ட வராகவோ, மோசமான வார்த்தைகளை பிரயோகிப்பவராகவோ இருக்க வில்லை. அதேநேரம் ஒருவன் தவறு செய்துவிட்டால் உடனே அத் தவறைக் கண்டித்து தண்டிக்கும் பழக்கமுடையவராகவும் காணப் பட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் சில தவறுகளை மன்னித்துவிடும் மனப்பாங்கு கொண்டவராகவும் இருந்திருக்கின்றார்கள். மேலும் அவரை சந்திக்கும் எவரையும் சலாம் கூறி இன்முகத்துடனேயே வர வேற்கும் பழக்கமுடையவர்களாக இருப்பார்கள். அதேபோன்று யாரா வது வந்து அவரது கையைப் பிடித்து கை குழுக்கினால் பிடித்த வர் தனது கையை எடுக்கும்வரை அவரது கையை பறித்தவராக எடுக்க மாட்டார்கள்.

தனது தோழர்களில் ஒருவரை சந்தித்தால் அவரை ஆரத் தழுதி, கை குலுக்கிக் கொள்வார்கள். பெரும்பாலும் அவர்கள் ஓரி டத்தில் உட்காருகையில் இரு முட்டுக்கால்களையும் மடித்து உட் கார்ந்து, தனது இரு தொடைகளின் மேல் இரு கைகளையும் வைத்தவராகவே இருப்பார்கள். மேலும் ஒரு கூட்டத்தில் இருக்கும் போது பெருமைக்காக அனைவரும் பார்க்கக் கூடியவாறு தனிப்பட்ட இடத்திலோ, அல்லது உயர்ந்த இடத்திலோ உட்காராமல் மக்களோடு மக்களாக சேர்ந்திருக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அவர் இருக்கும் இடம் விசாலமாக இருந்தாலே தவிர தனது தோழர்க ளுக்கு நெருக்கடியை உண்டு பண்ணும் விதத்தில் இரு கால்களை யும் நீட்டியவராக உட்கார மாட்டார்கள். அவரை சந்திக்க வருபவர் யாராக இருந்தாலும் அவரை மரியாதையோடு வரவேற்பார்கள்.

நபியவர்களுடைய கூட்டத்தில் யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களனைவருடனும் பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சொல் லுவதை காது தாழ்த்திக் கேட்பார்கள். அவர்களுடன் சிறந்த முறை யில் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கிடையில் பாரபட்சம் காட்ட மாட்டார்கள். மேலும் அவர்களுக்கு நல்ல விஷயங்களை கற்றுக் கொடுப்பார்கள். இத்தனை விஷயங்கள் அவர்களிருக்கும் கூட்டத்தில் இடம் பெற்றாலும் எப்போதும் அக்கூட்டம் ஒழுக்கம் நிறைந்ததாக வும், பாதுகாப்பானதாகவும், எழிமையானதாகவுமே இருந்து கொண்டி ருக்கும். அதனால்தான் அவர்களைப் பற்றிக் கேள்வியுறும் அனைவ ரும் மனிதர்களில் மாமனிதர் எனப்போற்றுவதைக் காணுகின்றோம்.

மேலும் தனது தோழர்களை ஒருபோதும் பெயர் கூறி அழைக்க மாட்டார்கள். அவர்களை கண்ணியப்படுத்தும் வகையில் அவர்களது புனைப் பெயர்களைக் கூறியே அழைப்பார்கள். புனைப்பெயர் இல்லா தோருக்கு அவராகவே சில புனைப்பெயர்களை சூட்டி அழைப்பார் கள். பெண்களைப் பொறுத்தவரை அவர்களது குழந்தைகளின் பெய ருடன் தாய் என்ற சொல்லை இணைத்தே அழைப்பார்கள். குழந்தை கள் இல்லாதோருக்கு அவராகவே சில புனைப் பெயர்களைச் சூட்டி அழைக்கும் பழக்கமுடையவர்களாக இருந்திருக்கின்றார்கள். மேலும் சிறுவர் களையும் சந்தோஷப்படுத்துவற்காக அவர்களையும் சில

புனைப் பெயர் கூறியே அழைப்பார்கள். மேலும் அவர்கள் அதிகம் கோபப்பட மாட்டார்கள். பிறரிடம் காணப்படும் நல்லவைகளை ஏற்றுக் கொள்பவராகவும், மனிதர்களின் நடவடிக்கைகளை நன்றாகப் புரிந்து அவர்களுக்கேற்ற முறையில் நடந்து கொள்ளும் தன்மை கொண்டவராகவும் இருந்திருக்கின்றார்கள். பிறருக்கு தொண்டு செய்வதில் முதன்மையிடத்தை வகிப்பவராகவும், பிரயோஜனமானவைகளை கற்றுக் கொடுப்பவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்.

மேலும் எச்சந்தர்ப்பத்திலும் எந்த வேலையைச் செய்யும் போதிலும் இலகுவான முறையில் செய்வதையே விரும்புவார்கள். எந்த வகையிலும் அதில் கஷ்டப்படுவதை விரும்ப மாட்டார்கள். மேலும் அவரிடம் எவரும் வெறுக்கப்பட்ட வார்த்தைகளைப் பிரயோகிக்க மாட்டார்கள். யாரிடமாவது மோசமான செயல்களை நபியவர்கள் பெற்றுக் கொண்டால் அவைகளையிட்டு கண்டிப்பார்கள். நல்லவைகளைச் செய்து வரும் ஒருவரைப் பெற்றுக் கொண்டால் அவருடன் நேசமாய் நடந்து கொள்வார்கள். நபியவர்களது நற்குணங்களில் இப்புத்தகத்தில் கூறமுடிந்தவை இவை மட்டும்தான். இவை தவிர்ந்த ஏராளமான நற்குணங்களும், நற்பண்புகளும் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை வேறு நூல்களைப் படித்து தெரிந்து கொள்ளவும். நபியவர்களிடம் போற்றப்படக்கூடிய நற்குணங்களும், நற்பண்புகளும் நிறைந்து காணப்பட்டதால்தான் அவர்களது நற்குணங்களையும், நடவடிக்கைகளையும் பற்றி அந்நிய மதத்தவர்களும் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள். தற்காலத்தில் கூறிக் கொண்டுமிருக்கின்றார்கள். அவர்கள் கூறியவைகளில் சிலதை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

நடு நிலைமிலிருந்து சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை உண்மைப்படுத்துவார்கள் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில் அவ்வாறு அதனை உண்மைப்படுத்துவ தற்குப் பல ஆதாரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற ஒருவன்கூட அதனை ஆழமாகப் படித்து அதுகூறும் கருத்துக்களையும், அதனைப் போதிப்பவரையும் பற்றி புகழ்ந்து கூறும் போது அதனது உண்மை நிலையறிந்தே கூறுகின்றான் என்பது

தெளிவான ஒன்றாகும். பொதுவாக ஒரு காரியத்துக்கு எதிராக செயல்படும் ஒருவனே அதிலிருக்கும் சிறப்புகளை அறிந்து, அதைப் பற்றி நல்லமுறையில் எடுத்துச் சொல்லும்போது அதன் உண்மை நிலையையே தெளிவுபடுத்துகின்றது. அந்த அடிப்படையில் பலர் இஸ்லாத்தைப்பற்றி சிறப்பாகக் கூறியுள்ளார்கள். அப்படிக் கூறிய ஒரு வரின் கருத்தை பின்வரும் பகுதியில் பார்ப்போம்.

**நபித்துவத்தை உண்மைப்படுத்தும் தோமஸ் கார்லைலின் கருத்து.**

நோபல் பரிசு பெற்ற தோமஸ் கார்லைல் எனப்படும் பிரபல்யமிக்க ஆங்கிலேய எழுத்தாளர் தனது வரலாற்றுக் கதாநாயகர்கள் என்ற நூலில் தனது கிரிஸ்தவச் சகோதரர்களுக்குக் கூறும்போது நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றியும், அவர்கள் கொண்டு வந்த தூதைப்பற்றியும் நீண்டதோர் அறிவுரையை முன்வைக்கின்றார். இவ் வாறு அவர் கூறியிருப்பது முஹம்மத் (ஸல்) அவர்களும், அவர்கள் கொண்டு வந்த மார்க்கமும் உண்மை என்பதற்கு பெரியதோர் சான் றாக இருந்து கொண்டிருக்கின்றது. அவர் அப்புத்தகத்தில் கூறும் போது பின்வருமாறு கூறுகின்றார். இஸ்லாத்தின் விரோதிகளாக இருப்பவர்கள் இஸ்லாம் மார்க்கம் பொய்யானதென்றும், அதனைப் போதிக்க வந்த முஹம்மத் சதிகாரரும், பொய்களைக் கூறும் கற் பனைவாதியும், பதவியையும், பட்டத்தையும், மனிதர்களது புகழாரத் தையும் எதிர்பார்ப்பவர் என்றும் கூறி அவர்களையும், அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையும் இழிவுபடுத்திப் பேசுகின்றார்கள். அவ்வாறு பேசுபவர்களுடைய பேச்சுக்குக் காது கொடுப்பது மிகவும் மோசமான ஒன்றாகும். அத்தோடு இப்படி மோசமான, கேட்பதற்கே காது கூச்சப்படுகின்ற கருத்துக்களை பரப்புவோருக்கு எதிராக செயல்படுவது நம்மீது கட்டாயக் கடமையாகும்.

அந்த இறைத்தூதர் கொண்டு வந்த தூது சுமார் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக 200 மில்லியன்களுக்கும் மேற்பட்ட மக்களால் பின் பற்றப்பட்டது மட்டுமல்லாமல் தொடர்ந்து ஒளிவிளக்காக திகழ்ந்து கொண்டிருக்கின்றதையும் பார்க்கின்றோம். அம்மடையர்கள் கூறும் கருத்தின் பிரகாரம் மறைந்து போன எண்ணிக்கைக்கு அடங்காத அம்மக்களனைவரும் அந்த பொய்யிலும், புரட்டிலும், சதியிலும்

வாழ்ந்து விட்டுத்தான் மரணித்திருக்கின்றார்கள் என உங்களில் எவராவது நினைக்கின்றீர்களா? இன்றைய உலகில் பொய்களும், புரட்டுகளும், இவ்வாறான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் காணப் பட்டாலும் என்னைப் பொறுத்த வரையில் ஒருபோதும் அக் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஏனெனில் பொதுவாக மனிதர்கள் மடமை நிறைந்தவர்களாகவும், மூடக் கருத்துக்களை பரப்புபவர்களுமாகவே இருக்கின்றார்கள். இவ்வாறு அம்மாமனிதரைப் பற்றி இழிவுபடுத்திக் கூறுவது அபாண்டமானது. அப்படி நாகரீகமற்ற கருத்தைக் கூறுவது எவ்வளவு மோசமானது? அப்படிக் கூறுபவர்கள் மடமையின் உச்ச கட்டத்திலல்லவா இருக்கின்றார்கள்?

உலக அறிவுகளைப் பெற்று அதிலே ஒரு படித்தரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புபவர்கள் அம்மடையர்கள் கூறும் அக்கருத்தை எக்காரணம் கொண்டும் உண்மைப்படுத்த வேண்டாம். ஏனெனில் அக்கருத்துக்கள் இறைநிராகரிப்பிலும், எதனையும் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து வாழும் சமுதாயத்திலுமிருந்து வெளியாகும் நச்சுக் கருத்துக்களாகும். அந்த இழிவான கருத்துக்களின் மூலம் அவர்கள் கெட்ட உள்ளம் படைத்தவர்கள் என்பதும், மோசமான கருத்துக்கள் கொண்டவர்கள் என்பதும், சிந்திக்கும் ஆற்றலற்றவர்கள் என்பதும் தெரிய வருகின்றது.

உலகில் வாழும் எவராக இருந்தாலும் அவர்கள் கூறிய கருத்தைவிட மோசமானதொரு கருத்தைக் கேட்டிருக்கவே மாட்டார்கள். எனவே சகோதர நெஞ்சங்களே! ஒரு மார்க்கத்தை உருவாக்கி அதனை பகிரங்கமாக பரப்புவதற்கு ஒரு பொய்யனால் முடியும் என நினைக்கின்றீர்களா? ஒருபோதும் முடியாது என்பதை ஏற்றுக் கொள்வீர்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! வீடு கட்டத் தெரியாத ஒருவன் தன்னை பொய்யாக தச்சனென பகிரங்கப்படுத்திக் கொண்டு வீடு கட்ட முன்வந்து அவனுக்குக் கொடுக்கப்படும் செங்கற்களையும், அது எந்த மண்ணால் செய்யப்பட்டது? அதனோடு சேர்க்கப்படவிருக்கின்ற சுண்ணாம்பு, மணல் போன்றவைகளின் தன்மையையும் அறியாத நிலையில் கட்டட வேலையை ஆரம்பிப்பானேயானால் நிச்சயமாக அவன் அவ்வீட்டைக் கட்டிக் கொள்ள மாட்டான். ஒருவாறு

அவன் கட்டி முடித்தாலும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பொருட்களையும், அதற்காக செலவு செய்த பணத்தையும் நாசமாக்கி விட்டான் என்றே பொருள்படும். உலக விஷயமே இவ்வாறிருக்கும் போது 12 நூற்றாண்டு காலம் சுமார் 200 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பின்பற்றக் கூடியவாறு அம்மார்க்கம் இருந்து கொண்டிருப்பதென்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறிருப்பது அதனது உண்மையையே தெளிவுபடுத்துகின்றது. அவர்கள் கூறுவது போன்று அம்மார்க்கம் பொய்யாகவும், புரட்டாகவும் இருந்தால் முஹம்மத் (ஸல்) அவர்கள் முன்வைத்த அடிப்படைகளும், கொள்கைகளும் புறக்கணிக்கப்பட்டு வந்த இடம் தெரியாமல் அழிந்து போயிருக்கும்.

எனவே நாம் முஹம்மத் (ஸல்) அவர்களை பொய்களை இட்டுக்கட்டிக் கூறும் பொய்யன் என்றோ, அல்லது அவரது நச்சுக் கருத்தை உண்மைப்படுத்துவதற்குரியவாறு தந்திரங்களைக் கையாள்பவர் என்றோ, அல்லது பதவிகளையும், அதிகாரங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் அப்பிரச்சாரக் கொள்கையில் ஈடுபட்டார்கள் என்றோ ஒருபோதும் கூறக்கூடாது. மாறாக அவர் முன்வைத்த மார்க்கம் உண்மையானதாகும். அவர் சொன்ன கருத்துக்கள்தான் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய சத்தியக் கருத்துக்களாகும். எனவே அவர்கள் கூறுவது போன்று முஹம்மத் (ஸல்) அவர்கள் பொய்யரோ, அல்லது பித்தலாட்டக்காரரோ, அல்லது தான் விரும்பியதை பெற்றுக் கொள்ளாதவரோ அல்ல என்பதை நாம் அறிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆனால் அவர்கள் கூறுவதற்கு மாற்றமாக அன்று காணப்பட்ட பொய்களையும், மூடப்பழக்க, வழக்கங்களையும் அழித்தொழிக்க வந்ததுதான் நபியவர்கள் கொண்டு வந்த மார்க்கமாகும். நபியவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்து கொண்டே இவ்வாறானதொரு கொள்கையை பரப்பியிருக்கின்றார்கள் என்றால் அவர் போதித்த கொள்கை உண்மை என்பதையே தெளிவுபடுத்துகின்றது. அதேபோன்று அவர் யாரிடமும் கால் மடித்து உட்கார்ந்து எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளவோ, அல்லது அக்கொள்கையை எந்தவொரு மனிதரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளவோ இல்லை. மாற்ற

மாக முன்னைய நபிமார்களிடம் காணப்பட்ட பண்புகள் நிறைந்தவரா கவே அவரும் காணப்பட்டார். நான் அவர்களை உலகிலுள்ள ஒன் றுக்கு ஒப்பிட்டுக் கூறுவதாயின் காரிருளில் மெள்ளிய ஒளியைப் பரப் பிக் கொண்டிருக்கும் மின் விளக்குகளுக்கே ஒப்பிடுவேன். அவ்வா றாக அவர்கள் அமைதியாக இருந்து கொண்டு பிறருக்கு நேர்வழி யைப் போதித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலும் அவர்கள் உயர் பண்புகள் கொண்டவர்களாகவே காணப் பட்டார்கள். அவ்வாறு அவர்களிடம் காணப்பட்ட உயர் பண்புகளில் சிலதைப் பார்ப்போம். குறிப்பாக அவர்கள் முன்வைத்த கொள்கையில் இறுதி வரையும் உறுதியானவர்களாகவே காணப்பட்டார்கள். அதே நேரம் கொடை வள்ளலாகவும், எதனையும் தூர நோக்கில் சிந்தித்து முடிவெடுப்பவராகவும், நன்மையான காரியங்களில் தீவிரமாக ஈடுபடு பவராகவும், எல்லா மனிதர்களுடனும் அன்பாகப் பழகுபவராகவும், அல்லாஹ்வை அதிகம் அஞ்சிப் பயந்து நடப்பவராகவும், எல்லா வகையிலும் கண்ணியமானவராகவும், ஆண்மை நிறைந்தவராகவும், கடின முயற்சியுடைவராகவும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட் டுப்பட்டு நடப்பவராகவும், மனைவிமார்களோடு கண்ணியமாக நடந்து கொள்பவராகவும், மனிதர்களோடு இனிமையாகப் பழகுபவராகவும் இருந்து வந்தார்கள். மேலும் சில சந்தர்ப்பங்களில் உண்மையைக் கூறி பரிகசித்து விளையாடுபவராகவும், தான் கொண்டு வந்த சத்தி யத்தை வெளிப்படுத்தும் முகமாக எப்போதும் ஒரு புன்முறுவலை அவரது முகத்தில் வெளிக்காட்டியவராகவும் இருப்பார்கள்.

மேலும் நபியவர்கள் எல்லா மனிதர்களுடனும் நீதமாகவே நடந்து கொள்வார்கள். அவர்களுக்கிடையில் எந்த விதத்திலும் பாரபட்சம் காட்ட மாட்டார்கள். அவர்களிடம் மதிநுட்பம் நிறைந்து காணப் பட்டது. அவர்களிடம் நல்ல எண்ணங்கள் தான் இருந்தனவே தவிர கெட்ட எண்ணங்கள் காணப்படவில்லை. அவர்களுக்கு அல்லாஹ் வின் புறத்திலிருந்து வழங்கப்படும் கட்டளைகளை சிரமேற் கொண்டு பொறுமையுடன் கடைபிடித்து வருவார்கள். அத்துடன் எல்லா மனிதர்களாலும் போற்றப்படக்கூடிய மதிப்புக்குரியவராகவும் காணப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் மதிக்கப்படக் கூடியவர்களாக

இருந்தாலும் அதற்குரிய வழிவகைகளை கலாசாலைக்கோ, அல்லது ஆசிரியரிடமோ சென்று கற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவரைப்படைத்த அல்லாஹுத்தஆலா அக்குண, நலன் களை அவரிடமிருந்தே கற்றுக் கொள்ளப்படக் கூடிய முறையில் அவர்களை அவைகளது அடித்தளமாக ஆக்கியிருந்தான்.

இவ்வாறு போற்றப்படக்கூடிய தன்மைகளில் காணப்படக் கூடிய அம்மாமனிதரைப்பற்றி, அவர் நான் என்ற அகங்காரம் கொண்டவ ரென்றும், அரச பதவியையும், மனிதர்களது புகழாரத்தையும் எதிர் பார்த்துத்தான் ஒரு புதிய கொள்கையை எடுத்து வைத்தார் என்றும் கிரிஸ்தவ மதக் கொள்கையில் பிடிவாதமாய் இருப்போரும், ஏனைய இறை நிராகரிப்போரும் நா கூசாமல் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கூறுவது போன்று நபியவர்கள் ஒருபோதும் எண்ண வில்லை. மாற்றமாக அவர்கள் வசதியற்ற ஒரு ஏழையின் மைந்தன் என்றே தன்னைக் கருதினார்கள். அப்படி தன்னை எடைபோட்டுக் கொண்டிருப்பவரால் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கும், அந்தஸ்துக்க ளுக்கும் எவ்வாறு ஆதரவு வைக்க முடியும்? ஒருபோதும் முடி யாது. அவர்கள் கூறுவது வீண் பழிச்சுமையே அன்றி வேறில்லை. நபியவர்கள் தன்னை ஒரு ஏழையென்று எடை போட்டிருந்த கார ணத்தால் தான் ஏழைகளிடம் காணப்படக்கூடிய பெருந்தன்மையும், இரக்க மனப்பான்மையும், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற பேரவாவும், அவைகளை மிஞ்சிய ஞானமும், உலக ஆசை யற்ற சிந்தனைகளும், பதவிகளையும், பட்டங்களையும் எதிர்பார்க்காத எண்ணமும் நிறைந்து காணப்பட்டன. இவ்வாறான உயரிய பண்பு கள் அவரிடம் காணப்படுவது நியாயம் தான். ஏனெனில் மனிதகுலமே தாம் கொண்ட கொள்கைகளுக்கு பொய்யான ஆதாரங்களை ஏற் படுத்தி அதன் பிரகாரம் நடந்து வருகையில் பொய், புரட்டுகளின் பக்கம் திரும்பிக்கூட பாராமல் பெருமனதோடும், அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தோடுமல்லவா அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

அத்தோடு அவர்கள் எடுத்து வந்த தூதை உலக அதிசயங்க ளையும், உண்மையான நிகழ்ச்சிகளையும் எடுத்துக்கூறி தனி மனித

ராய் இருந்து பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார்கள். மரணத்தின் பின் நடக்கவிருக்கின்ற கொடூரமான காட்சிகளையும், பயங்கரமான வேதனைகளையும், நோவினைகளையும் தெரிந்து வைத்திருந்ததால்தான் உலகில் என்ன காரணத்துக்காகப் பிறந்தேன் என்ற விஷயம் எப்போதும் அவரது மனக்கண்முன் காட்சியளித்துக் கொண்டேயிருக்கும். உலகில் காணப்படக் கூடிய எந்த மாயையாலும் அவருடைய உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்த அந்த உண்மையை மறைக்க முடியவில்லை. அதனால்தான் எப்படிப்பட்ட இறைகட்டளைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் இதோ அதற்கு முற்று முழுதாக வழிப்படுகின்றேன் எனக்கூறி வழிப்படுவார்கள். இவ்வாறான தன்மையில் காணப்படக்கூடிய ஒரு மனிதர் இறைவனது தூதர் என்பதில் எவ்விதத்திலும் சந்தேகமேயில்லை. அதுமட்டுமின்றி உலகில் எவ்வளவு பிரசித்தி பெற்ற மனிதர் பேசினாலும் கேட்ட மறு நிமிடத்தில் காற்றில் கலந்த பஞ்சைப் போன்று உள்ளத்தில் தங்காது பறந்து விடுகின்றன. ஆனால் அம்மனிதர் பேச ஆரம்பித்தால் அச்சத்தத்தை கேட்கும் அனைவரும் காது தாழ்திக் கேட்பார்கள். கேட்டது மட்டுமின்றி அவைகளை சிறந்த முறையில் மனனமிட்டுக் கொள்வார்கள். அவருடைய பேச்சுக்கு இறைவன் அவ்வாறானதொரு சிறப்பைக் கொடுத்திருந்தான்.

எனவே நபியவர்கள் பொய்யனென்றும், கற்பனைவாதியென்றும், பதவி, பட்டங்களை எதிர்பார்த்தவர் என்றும் கூறிய அவர்களது கருத்து மிகவும் மோசமானது. இழிவானது. பழிக்குரியது. மனித நாகரீகத்துக்கு அப்பாற்பட்டது எனக்கூறி அக்கருத்துக்கு நாம் எவ்விதத்திலும் உடன்பட மாட்டோம் என்பதை தெளிவுபடுத்தி நிரபராதியாகின்றோம். ஏனெனில் நபியவர்கள் தான் கொண்டுவந்த தூதை அன்று வாழ்ந்த அரேபியச் சமுதாயத்தினரிடம் முன்வைத்தபோது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அவர்களது உள்ளங்கள் எரிமலைகளாக வெடித்தன. காலப்போக்கில் அவ்வுள்ளங்களே அதன் உண்மை நிலையுணர்ந்து ஏற்றுக் கொண்டதென்றால் நிச்சயம் அது சத்தியக் கொள்கையாகத்தான் இருக்க வேண்டும். கட்டாயம் அதனை உண்மைப் படுத்தித்தான் ஆகவேண்டும்.

நபியவர்கள் கொண்டு வந்த தூது போதிக்கும் முதலாவது விஷயம் அதுகூறும் ஓரிறைக் கொள்கையை மனித சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். இதே கருத்தைத்தான் உலகில் காணப்படக்கூடிய ஏனைய மதங்களும், கொள்கைகளும், கோட்பாடுகளும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. அந்த ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் மனிதன் தன்னைப் படைத்தவனின் கட்டளைகளை ஏற்று அவைகளின் பிரகாரம் நடந்து வருவானேயானால் அவன்தான் உலகில் எல்லாப் பாக்கியங்களையும் பெற்றுக் கொண்டவனாவான்.

மேலும் நபியவர்களுக்குத் தூது கொடுக்கப்படுவதற்கு முன்னர் அன்றைய அரேபிய சமுதாயத்தினர் விக்ரகங்களை வணங்கியும், சூனிய, சாஸ்திரங்களில் ஈடுபட்டும் தமது வாழ்வை அழித்துக் கொண்டிருந்தார்கள். அவைகளுக்கு முடிவு கட்டும் முகமாகவே அல்லாஹுத்தஆலா இஸ்லாம் மார்க்கத்தை இறக்கி வைத்தான். அம்மார்க்கம் வளர, வளர விக்ரக வணக்கங்களும், மூடக் கொள்கைகளும் அழியத் தொடங்கின.

நபியவர்கள் கூறிய ஒப்பற்ற கருத்துக்களும், நிகரில்லா நடைமுறைகளும் அவர்கள் ஒரு மனிதநேயம் கொண்டவர் என்றும், எங்கள் மீது அன்பும், ஆதரவும் கொண்ட சகோதரர் என்றும், நமது முதல் தாய், தந்தையின் மைந்தன் என்றும் தெளிவுபடுத்துகின்றன. உங்களிடம் நான் கூற விரும்புவது யாதெனில், நான் முஹம்மத் நபியவர்களை மனப்பூர்வமாக நேசிக்கின்றேன். ஏன்? என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது. அதற்கு என்னால் எண்ணற்ற காரணங்களைக் கூறமுடியும். என்றாலும் அவைகளில் சிலதை மாத்திரம் உங்கள் முன் வைக்கின்றேன். நான் அவரை அதிகம் நேசிப்பதற்குரிய காரணம், அவர் எந்த காரியத்தைச் செய்வதாயிருந்தாலும் மக்களிடம் புகழ்பெற வேண்டும் என்றோ, எல்லோரும் கூறுகின்றார்கள் என்ற அடிப்படையிலோ செய்யாமல் நன்றாக சிந்தித்து, ஆராய்ந்து தனது சொந்த அபிப்பிராயத்தின் பேரிலே செயல்படுத்துவார். மேலும் அவர் ஒரு ஏழையின் மைந்தனாக இருந்திருக்கின்றார்கள். மேலும் அவர் அடுத்தவர்களைப்பற்றி வம்பளக்க மாட்டார். அவரிடம் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி விதண்டாவாதம் செய்யவும் மாட்

டார். தற்பெருமை என்பது அவரிடம் துளி அளவும் காணப்படவில்லை. ஆனாலும் அவர் இழிவானவராகவும் இருக்கவில்லை. இம்மைக்கும், மறுமைக்கும் தேவையானவைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும்? என்ற வழி முறையை சாதாரண மனிதர்களுக்கு மட்டுமின்றி ரோம், பாரசீக மன்னர்களுக்கும் தெளிவாகவே எடுத்துக் கூறினார். மேலும் தான் எந்த அந்தஸ்தில் இருந்து கொண்டிருக்கின்றேன் என்பதையும் மறக்க மாட்டார்.

மேலும் இஸ்லாத்துக்கெதிராக செயல்பட்ட அன்றைய முஷ்ரிகீன்களோடு யுத்தத்தில் ஈடுபடுகையில் அவர்களது படை பலத்தைக் கண்டு ஒருபோதும் அவர் பின்வாங்கியதில்லை. அதேநேரம் யுத்தத்தில் பிடிபடும் கைதிகளோடும், பெண்களோடும், சிறார்களோடும் அன்பாக நடந்து கொள்ளவும் தவறவில்லை. தன்னுடைய மனைவியரில் முதலாமவளை உதரித் தள்ளிவிட்டு இரண்டாமவளோடு குதூகலிப்பவராகவும் இருந்ததில்லை. மாறாக எல்லோரையும் ஒரே தரத்தில் வைத்துக் கவனிப்பவராக இருந்தார்கள். மேலும் அவர் தவறியேனும் வீண், விளையாட்டுக்களில் ஈடுபட்டதில்லை. அதேபோன்று விளையாட்டுக்காக வேனும் பொய் கூறியதுமில்லை. அவர் பேசினால் உலகில் மனிதன் எவ்வாறு வாழ்ந்தால் வெற்றி பெறுவான்? எவ்வாறு வாழ்ந்தால் கைசேதப்படுவான்? என்பதையும், அழிந்து போகும் இந்த உலகத்தையும், முடிவேயில்லாத மறுமை வாழ்க்கையைப் பற்றியும் தான் பேசுவார். அவர் அவரது செறுப்பை அணிவதாயிருந்தாலும் தூய்மையான எண்ணத்தோடும், அல்லாஹ்வின் பெயர் கூறியும், அவனது வழிகாட்டலின் பிரகாரமுமே அணியக் கூடியவராக இருந்திருக்கின்றார். அவர் ஈடுபடும் எக்காரியத்தையும் முழு முயற்சியுடனும், நல்லெண்ணத்துடனுமே செய்து வருவார். பொய் பித்தலாட்டங்களும், தந்திரமாகப் பேசி தனது காரியத்தை முடித்துக் கொள்ளும் பழக்கமும் சிறிதளவேனும் அவரிடம் காணப்படவில்லை. இப்படி போற்றப் படக்கூடிய குணங்களும், பண்புகளும் காணப்படும் ஒரு மாமனிதரை நேசிப்பது நியாயம்தானே?

இஸ்லாத்தின் பார்வையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்ற சட்டம் அதுகூறும் ஏனைய சட்டங்களையும் விட போற்றப் படக்கூடிய ஒன்றாகும். இச்சட்டத்தை மார்க்க மாக்கியதன் மூலம் இஸ்லாம் சரியான கண்ணோட்டத்தின் அடிப்படையில் சிறந்த கருத்துக்களை வழங்கும் சத்திய மார்க்கம் என்பது தெளிவாகின்றது. அதனடிப்படையில் ஒரு இறை விசுவாசி உலக நாடுகளுடன் தொடர்புடையவனாகவும், மனிதர்கள் அனைவரும் இஸ்லாத்தின் பார்வையில் சமமானவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மார்க்கம் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று உலகின் நாலா பாகங்களுக்கும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. எந்தளவுக்கென்றால் ஒரு நூற்றாண்டு முடிவுக்குள் அரேபிய தீபகற்பத்தில் காணப்பட்ட இஸ்லாமிய ஆட்சிக்கு இந்தியாவில் ஒரு கவர்னர், ஸ்பெய்ன் நகரில் ஒரு கவர்னர் என்ற நிலைக்கு மாறிவிட்டது. இவ்வாறு அந்த ஆட்சி இஸ்லாம் போதித்துக் கொண்டிருந்த உயரிய பண்புகளோடும், அடிப்படைக் கொள்கைளோடும் நீண்ட காலம் நிலைத்திருந்தது எனக்கூறி அவரது உரையை முடித்துக் கொள்கின்றார். இவ்வாறாக அம் மாமனிதரைப்பற்றி மாற்றுமத அறிஞர்களும், விஞ்ஞானிகளும் இன்று வரையும் போற்றிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இதனை வாசித்துக் கொண்டிருக்கும் சகோதரனே! நபி (ஸல்) அவர்களது வரலாற்றிலும், அவரது ஏகத்துவப் பிரச்சாரத்திலும் சிலதை தெரிந்து கொண்ட உனக்கு நபியவர்கள் கொண்டு வந்த அம்மார்க்கம் எவைகளையெல்லாம் போதித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் சற்று எடுத்துக் கூறுகின்றேன் வாசித்துப்பார்.

**இஸ்லாத்தின் விஷேஷத் தன்மைகள்.**

இஸ்லாம் மார்க்கம் உலகில் காணப்படும் ஏனைய மதங்களைப் போன்றல்லாது அல்லாஹ்வினது அடிப்படை மார்க்கமாகவும், அமைதியையும், பாதுகாப்பையும் ஈட்டித்தரும் உன்னத மார்க்கமாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஒரு மனிதன் இஸ்லாம் கூறும் எல்லா வழிகாட்டல்களையும், நடைமுறைகளையும் பின்பற்றி வாழ்ந்தாலே தவிர அவன் உலகில் எவ்வித மனநிம்மதியையும், வாழ்க்கை

யின் சுபீட்சத்தையும் பெற்றுக் கொள்ள மாட்டான். இஸ்லாம் ஏனைய மதங்களையும்விட சிறந்ததொரு மார்க்கம் என்பதற்கு பல காரணங்களை முன் வைக்கலாம். அவைகளில் ஒன்றாக எந்த மதங்களிலும், எந்த பிரிவுகளிலும் இல்லாத சில சிறப்பம்சங்களை இச்சேற்றேட்டில் கூறவிரும்புகின்றேன். அவைகளை நீங்களும் படித்து பயன் பெற்றுக் கொள்ளுங்கள். இதோ அவைகளில் சில.

- அல்லாஹுத்தஆலா தனது மனிதப் படைப்பைப்பற்றி மிகவும் தெளிவாகவே அறிந்து வைத்திருக்கின்றான். அவர்களுக்கு எவையெவையெல்லாம் தேவையோ அவைகளைக் கூறியே இந்த இஸ்லாத்தை மார்க்கமாகவும் இறக்கி வைத்திருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். (யாவையும்) படைத்தவன் அவனோ நுட்பமான(அறிவுடைய)வனாக, யாவையும் நன்குணர்பவனாக இருக்க (நெஞ்சங்களில் உள்ளவற்றை)அவன் அறிய மாட்டானா?(64.14).
- மனிதன் எவ்வாறு உருவானான் என்பதையும், அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை எவ்வாறு தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், அவனது இறுதி முடிவு என்னவாக அமையப் போகின்றது என்பதனையும் இஸ்லாம் தெளிவான முறையில் அறிவித்து விட்டது. அல்லாஹ் கூறுகின்றான். மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் எத்தகையவனென்றால் உங்களை(யாவரையும்)ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான். இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்(4.1)
  மேலும் கூறுகின்றான். (பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம். பின்னர் அதிலேயே நாம் உங்களை மீள வைப்போம். மற்றொரு தடவையும்(உங்களுக்கு உயிர்கொடுத்து) அதிலிருந்தே நாம் உங்களை வெளிப்படுத்துவோம்(என்று அவனுக்குக் கூறும்படிச் செய்தோம்(20.55). மேலும் கூறுகின்றான். மேலும் ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்க வில்லை(51.56).

- இஸ்லாம்தான் உலகிலிருக்கும் மார்க்கங்களில் அடிப்படை மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் மனிதர்களை எ(ந்த மார்க்கத்)தில் படைத்தானோ அத்தகைய இயற்கை மார்க்க(மாகிய இஸ்லா)த்தைப் (பற்றிப்பிடித்து நிலைத்திருப்பீராக!) (30.30).
- மனிதனது மடமையை வெறுத்து, அவன் கண்மூடித்தனமாக ஒன்றைப் பின்பற்றி வருவதை இஸ்லாம் கடுமையாக கண்டிக்கின்றது. அந்த அடிப்படையில் அவன் சிறந்த முறையில் சிந்தித்தே அவனது காரியங்களை செய்யுமாறு தூண்டுகின்றது. அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? (இதனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோரெல்லாம் அறிவுடையோரே என்று (நபியே!) நீர் கூறுவீராக!(39.9). மேலும் கூறுகின்றான். நிச்சயமாக வானங்கள், மற்றும் பூமியைப் படைத்திருப்பதிலும் இரவும், பகலும் மாறிமாறி வருவதிலும், அறிவுடையோருக்குப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அறிவுடைய) அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், தங்கள் விலாப்புறங்களின் மீது (சாய்ந்து)ம் அல்லாஹ்வையே நினைத்து வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைப் பற்றியும் சிந்திப்பார்கள்(3.190-191).
- உலகில் காணப்படும் மதங்களில் சரியான கொள்கைகளையும், மார்க்க அடிப்படைகளையும் உள்ளடக்கியிருக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டும்தான். அதனால்தான் அம்மார்க்கம் சிந்தனை ரீதியான மார்க்கமன்றி கொள்கையடிப்படையில் சரியானவைகளையும், மார்க்க சட்டதிட்டங்களினடிப்படையில் சிறந்த சட்டதிட்டங்களையும், அழகான பண்பாடுகளையும், கட்டுப்பாடுகளோடு கூடிய நடைமுறைகளையும் உள்ளடக்கிய பூரணத்துவ மார்க்கமாகத் திகழ்கின்றது. அத்துடன் தனி மனிதனுக்கும், சமூகத்துக்கும் ஏற்றவாறும், மறுமையின் வெற்றிக்கு இட்டுச் செல்லுகின்ற மார்க்கமாகவும் காணப்படுகின்றது.
- மனிதன் மனித நேயத்தோடு வாழுவதற்குரியவாறு அவனுக்கு சரியான வழிமுறைகளைக் கற்றுக் கொடுப்பதுடன், மனித சமு

தாயத்துக்கு நன்மை செய்பவனாகவும், அச்சமுதாயத்தைக் கட்டி யெழுப்பக் கூடியவனாகவும் அவனை மாற்றியமைக்கின்றது.

- நண்பன், பகைவன் உறவினர், அந்நியன் பணக்காரன், ஏழை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அனைவரையும் ஒரே தரத்தில் வைத்து நீதி வழங்கும் நீதி நிறைந்த நேர்மை யான மார்க்கமாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். (விசுவாசங் கொண்டோரே!) நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறு பணிக்கின்றான்(16.90). மேலும் கூறுகின்றான். நீங்கள் பேசினால் (பாதிக்கப்படுபவர் நெருங்கிய) உறவினராயி னும்(சரியே)நீதத்தையே கூறுங்கள்(6.152). மேலும் கூறுகின்றான். எந்த சமூகத்தவரின் விரோதமும் நீங்கள் நீதமாக நடந்து கொள் ளாமலிருக்க உங்களைத் திண்ணமாக தூண்டிவிட வேண்டாம். (எவ்வளவு விரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதி செலுத் துங்கள். அதுதான் பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும்(5.8).
- உலகில் வாழும் மனிதர்களுக்கிடையில் உண்மையான சகோதரத் துவத்தைப் போதித்துக் கொண்டிருக்கும் மார்க்கம் இஸ்லாம் மார்க்கமாகும். அதனடிப்படையில்தான் முஸ்லிம்கள் அனைவரை யும் சகோதரர்கள் என்று கூறிக்கொண்டிருக்கின்றது. மனிதர்கள் நாடு, நிறம், இனம், மொழி என்ற அடிப்படையில் வேறுபட்டா லும் இஸ்லாம் என்ற வட்டத்துக்குள் வந்து விட்டால் ஒரே நாடு, ஒரே நிறம், ஒரே இனம் என்ற அடிப்படையில் கணிக்கப் படுகின்றார்கள். மேலும் ஏனைய மதங்களில் இருப்பது போன்று இஸ்லாத்தில் மனிதப் படித்தரங்களோ, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலைப்பாடோ இல்லாமல் அனைவரும் ஒரே தரத்தினர் என்றுதான் இஸ்லாம் போதித்துக் கொண்டிருக்கின்றது. அவர்க ளில் அல்லாஹ்விடத்தில் சிறந்தவர்கள் வணக்கத்தாலும், பயபக்தி யாலும் சிறந்தவர்களாகும் எனவும் போதிக்கின்றது.

- அறிவுக்கு முக்கியத்துவமளித்து அதனைக் கற்றுக் கொள்ளுமா றும், பிறருக்கு கற்றுக் கொடுக்குமாறும் வலியுறுத்திக் கொண்

டிருக்கும் மார்க்கம் இஸ்லாம் மார்க்கம் மாத்திரமேயாகும். எனவே இஸ்லாம் கூறும் சட்டத்தினடிப்படையில் மார்க்க அறிவைத் தேடிப்படிப்பது ஆண், பெண் இருபாலார் மீதும் கட்டாயக் கடமையாகும். மேலும் அறிவு கொடுக்கப்பட்டவன்தான் மனிதர்களில் உயர்ந்த அந்தஸ்தை வகிக்கின்றான் என்றும் இஸ்லாம் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும், கல்வி அறிவு கொடுக்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்(58.11).

- இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்து வழிப்பட்டு நடப்பவர்களுக்கு உலகில் சுபீட்சமான வாழ்வு இருக்கின்றது. அவர்கள் மக்களுக்கு மத்தியில் கண்ணியமான முறையிலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவி செய்து பக்கத் துணையாக இருப்பதாக அல்லாஹுத்தஆலா வாக்குறுதியளித்திருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். (மனிதர்களே!) உங்களில் விசுவாசங் கொண்டு நற்கருமங்களையும் செய்கிறார்களே அத்தகையவர்களுக்கு- அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை அதிபதிகளாக்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாகப் பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும், அவன் அவர்களுக்குப் பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக உறுதிப்படுத்தி வைப்பதாகவும், அவர்களுடைய பயத்திற்குப் பிறகு அமைதியைக் கொண்டு நிச்சயமாக மாற்றிவிடுவதாகவும் அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். அவர்கள் எனக்கு யாதொன்றையும் இணையாக்காது என்னையே வணங்குவார்கள்(24.55). மேலும் கூறுகின்றான். ஆண் அல்லது பெண் அவர் விசுவாசங் கொண்டவராக இருக்க யார் நற்செயலைச் செய்தாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். இன்னும் நிச்சயமாக அவர்களுக்கு அவர்களது கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிக அழகானதைக் கொண்டு திண்ணமாக நாம் வழங்குவோம்(16.970.
- உலகில் மனிதன் எதிர்நோக்கக்கூடிய அனைத்து பிரச்சினைகளுக்குமுரிய தீர்வுகளை இஸ்லாம் மார்க்கம் மாத்திரமே வழங்கிக்

கொண்டிருக்கின்றது. அதனடிப்படையில் நவீன யுகத்தில் நிக ழும் அதிசய நிகழ்வுகளது சட்டங்களையும், அவைகளது அடிப்படைகளையும் இஸ்லாம் குறிப்பிட்டே இருக்கின்றது.

- இஸ்லாம் மார்க்கத்தின் சட்டதிட்டங்கள்தான் மனித சமுதாயத் துக்கு தேவையான சிறந்த தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருக் கின்றது. அதனடிப்படையில் மனிதர்களுக்கிடையில் ஏற்படும் பிரச் சினைகளையும், உரிமைப் போராட்டங்களையும் சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் முதலிடத்தை வகிக்கின்றது.
- பொதுவாக எல்லாக் காலங்களுக்கும், எல்லா நேரங்களுக்கும், எல்லா சமுதாயத்தினருக்கும் பொருத்தமான மார்க்கம் என்று ஒன்று இருக்குமானால் அது இஸ்லாம் மார்க்கமாகத்தான் இருக்க வேண்டும். அதனால்தான் காலங்கள் செல்லச் செல்ல, உலகம் முன்னேற்றப் பாதையில் வீறு நடை போடுகின்றது. அத னோடு சேர்ந்து அறிவும் எழுச்சி பெறுகின்றது. அறிவு எழுச்சி பெற்று ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் இடம் பெறும்போது அவைகளின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற பலாபலன்களும், அத்தாட்சிகளும் இஸ்லாத்தின் உண்மை நிலையையும், அதனது மகத்துவத்தையும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.
- மனிதர்கள் தமது சகோதரர்களுடன் அன்பாகவும், பாசமாகவும் இருந்து ஒன்று சேர்ந்து வாழுமாறும், ஒருவர் மற்றவருக்கு எல்லா காரியங்களிலும் ஒத்தாசையாக இருந்து கொள்ளுமாறும் போதிக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், உண்மையான இறைவிசுவாசிகள் தங்களுக்கிடை யில் அன்பாகவும், உதவி ஒத்தாசையாகவும் இருந்து கொள்வார் கள். அவ்வாறாக இருப்பதற்குரிய உதாரணம் மனிதனுடைய உடம்பைப் போன்றதாகும். அந்த உடம்பின் ஒரு பகுதி நோயி னால் பாதிக்கப்பட்டு விட்டால் அதன்மூலம் ஏற்படுகின்ற வெப் பத்தையும், வேதனையையும் ஏனைய உறுப்புகளும் உணர்ந்து அவைகளும் அனுபவிக்கின்றன. கண்களும் தூங்க மறுக்கின் றன. அதேபோன்றுதான் உண்மையான இறைவிசுவாசிகளும்

இருந்து கொள்வார்கள் எனக்கூறினார்கள்(ஹதீஸ்). மேலும் கூறு கையில், உலகிலிருக்கும் தனது சகோதரனுக்கு அன்பு செலுத்துவோனுக்கு அல்லாஹ் அன்பு செலுத்துகின்றான். அதனால் நீங்கள் பூமியிலிருப்போருடன் அன்பாய் இருந்து கொள்ளுங்கள். வானத்திலிருப்பவன் எப்போதும் உங்களுடன் அன்பாய் இருந்து கொள்வான் எனக்கூறினார்கள்(ஹதீஸ்).

- மனிதன் எந்த விஷயத்திலும் முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்றும், தனது குறிக்கோள் நிறைவேறும் வரை முயற்சியை தளரவிடக் கூடாதென்றும், எதனையும் அடைந்து கொள்வேன் என்ற மனஉறுதி நிலைத்திருக்க வேண்டுமென்றும் போதிக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமாகும். அதனைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், சக்தி வாய்ந்த இறைவிசுவாசி பலவீனமான இறைவிசுவாசியைவிட அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவனாகும். எப்போதும் உனக்கு நன்மையளிக்கும் விஷயங்களில் உனது கவனத்தை செலுத்துவாயாக! உன்னால் முடியாதென்று எதனையும் விட்டுவிடாதே! உனக்கு ஏதோவொரு துன்பம் ஏற்பட்டுவிட்டால், நான் இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமே என்று கூறாதே! மாறாக அல்லாஹ்வின் ஏற்பாடு அவ்வாறிருந்திருக்கின்றது. அவன் நாடியதை செய்து விட்டான் எனக்கூறுவாயாக! எனக்கூறினார்கள்(ஹதீஸ்).
- காலத்துக்குக் காலமென தனது கருத்துக்களை மாற்றிக் கொள்ளாமல் எப்போதும் ஒரே கருத்தைக் கூறிக் கொண்டிருக்கும் மார்க்கம் இஸ்லாம் மாத்திரமாகும். அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து உள்ளதாக இது இருந்தால் இதில் அநேக முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்(4.82).
- இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களை யாரெல்லாம் சிறந்த முறையில் ஏற்றுக் கொள்கின்றார்களோ, அவைகள் அவர்களை மனக் குழப்பத்திலிருந்தும், நேர்வழியை விட்டு தூரமாகுவதிலிருந்தும் பாதுகாக்கின்றது. அவர்கள் உள்ளத்தாலும், சிந்தனையாலும் அமைதியாக இருக்கவும் வழிவகுக்கின்றது.

- உலகில் பிறந்த எல்லா மனிதர்களும் இலகுவாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ளக்கூடிய ஒரே மார்க்கம் இஸ்லாமாகும்.
- ஏனைய மதங்களைப் போன்றில்லாமல் இந்த இஸ்லாத்தில் யாரெல்லாம் இணைந்து கொள்ள விரும்புகின்றார்களோ, அவர்களனைவரையும் அன்போடும், ஆதரவோடும் அறவணைத்துக் கொள்ளும் மார்க்கம் இஸ்லாமாகும்.
- சிந்தனைகளாலும், அறிவுகளாலும், நற்குணங்களாலும் உயர்ந்து காணப்படும் மார்க்கம் இஸ்லாமாகும். எனவே யாரெல்லாம் அம் மார்க்கத்தையும், அதுகூறும் சட்டதிட்டங்களையும், உண்மையான முறையில் பின்பற்றி வருகின்றார்களோ அவர்கள்தான் மனிதர்களில் சிறந்தவர்களாக, தூய்மையானவர்களாக இருப்பார்கள்.
- உலகிலுள்ள மார்க்கங்களில் இஸ்லாம் மாத்திரம்தான் நற்குணங்களை வளர்த்துக் கொள்ளுமாறும், அதிகதிகமாக நற்கிரியைகளில் ஈடுபட்டு வருமாறும் மனிதகுலத்தைப் பணித்துக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். (நபியே!) நீர் மன்னிப்பை எடுத்துக் கொள்வீராக! நன்மையை ஏவியும் வருவீராக! அறிவீனர்களைப் புறக்கணித்தும் விடுவீராக!(7.199). மேலும் கூறுகின்றான். (நபியே!)எதுமிக அழகானதோ அதைக்கொண்டு(தீமையை) தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உம்முடைய உற்ற சிநேகிதரைப்போல் ஆகிவிடுவார்(41.34).
- இஸ்லாம் மனிதனது சிந்தனா சக்தியைப் பாதுகாக்கின்றது. அதனால்தான் அச்சிந்தனா சக்தியை பாழ்படுத்தும் மது, போதைப் பொருட்கள், புகை பிடித்தல் போன்றவற்றை ஹராமெனக்கூறி தடை செய்திருக்கின்றது.
- மனிதர்களது பணங்களையும், சொத்து செல்வங்களையும் பாதுகாக்கின்ற ஒரே மார்க்கம் இஸ்லாமாகும். உதாரணத்துக்கு ஒருவன் தனது பொருளை ஒருவரிடம் கொடுத்து பாதுகாத்து வைக்குமாறு கூறப்பட்டால், அப்பொருளை கடைசி வரையும்

பாதுகாத்துக் கொடுக்குமாறு வலியுறுத் திக்கொண்டிருக்கின் றது. அதுமட்டுமின்றி அவ்வாறு பாதுகாத்துக் கொடுப்பவர்க ளைப்புகழ்ந்து, அவர்களுக்கு உலகில் சந்தோஷமான வாழ்க்கை இருப்பதாகவும், மரணத்தின்பின் அவர்கள் பெற்றுக் கொள்ள விருக்கும் இடம் சுவனம் என்றும் பறைசாற்றிக் கொண்டிருக் கின்றது. மேலும் ஒரு பொருளை திருடுபவனின் கையைத் துண்டித்து அடுத்தவர்களுக்குப் பாடமாக இருக்கச் செய்யுமாறு கூறி, அடுத்தவர்களது செல்வத்தைப் பாதுகாக்கின்றது. அவ் வாறு திருடுபவனின் கை துண்டிக்கப்படும் போது பொதுவாக திருட்டுத் தொழிலில் ஈடுபடும் ஒருவன் மறுமையின் தண்டனை யைப் பயப்படாவிட்டாலும் இவ்வுலகில் தனது கை துண்டிக் கப்படுமே என்ற பயத்திலாவது திருடுவதை தவிர்ந்து கொள்கின் றான். இதனால்தான் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் நாடுகளில் வாழக் கூடியவர்கள் அவர்களது செல் வங்கள் திருடப்படும் என்ற பயமின்றி நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். அத்துடன் அந்நாடுகளில் திருட்டுக் கும்பல்களும் குறைந்து, கை துண்டிக்கப்படும் நிலையும் அபூர்வமாக இருப்பதைக் காணுகின்றோம்.

மேலும் திருடுபவனின் கையைத் துண்டிப்பதில் மற்று மொரு நன்மையும் இருந்து கொண்டிருக்கின்றது. அதாவது அவ்வாறு கை துண்டிக்கப்பட்டவன் மீண்டும் திருட்டுத் தொழி லில் ஈடுபட எண்ணமாட்டான். அதே போன்று திருட்டுத் தொழி லில் ஈடுபடுகின்ற ஏனையோரும் கை துண்டிக்கப்பட்டவனைப் பார்த்துப் பயந்து திருட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்கின் றார்கள். இவ்வாறான சட்டங்களின் மூலம் இஸ்லாம் மனிதனது செல்வங்களைப் பாதுகாக்கின்றது.

- மனிதர்களது உயிர்கள் வீணான முறையில் பறிக்கப்படுவதை யிட்டு வன்மையாக கண்டித்துக் கொண்டிருக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமேயாகும். மேலும் தனது சகோதரனது உயிரை வீணாக பறிப்பதையிட்டு மனிதகுலத்தை எச்சரிப்பதோடு விட்டு விடாமல் கொலையாளிக்குரிய தண்டனையை இவ்வுலகிலேயே

நிறைவேற்றுமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. அதனால் தான் தனக்கு உரிமையில்லாத ஒரு உயிரை கொலை செய் வதை இஸ்லாம் ஹராமாக்கியிருக்கின்றது. யார் தனக்கு உரிமை யில்லாத ஒரு உயிரை கொலை செய்கின்றானோ அவனையும் கொலை செய்யுமாறே இஸ்லாம் சட்டம் வகுத்திருக்கின்றது. இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் இஸ்லாமிய நாடுகளில் கொலைகள் குறைந்து காணப்படுவதைக் காணலாம். ஏனெ னில் எப்போது ஒரு மனிதன் தான் ஒருவனை கொலை செய் தால் தானும் கொலை செய்யப்படுவேன் என்பதை அறிந்து கொள்கின்றானோ அப்போது அவன் கொலை செய்வதற்கு ஒரு போதும் எண்ணமாட்டான். இவ்வாறான சட்டங்களை இஸ்லாம் வகுத்திருப்பதனால்தான் இன்று அந்நாடுகளில் வாழும் மனிதர்கள் எதிரிகளின் கொலை மிரட்டல்களிலிருந்து அச்சமின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

- உலகில் காணப்படும் மதங்களில் மனிதனது ஆரோக்கிய வாழ் வுக்கு முக்கியத்துவமளிக்கும் மார்க்கம் இஸ்லாம் மட்டுமேயா கும். மனிதனது ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியத்துவமளித்த தைப் பற்றி இஸ்லாமிய அடிப்படை நூல்களான அல்குர்ஆனும், ஹதீஸும் பல இடங்களில் தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கின் றன. அல்லாஹ் கூறுகின்றான். மேலும் (அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்தவற்றை) நீங்கள் (தாராளமாக) உண்ணுங்கள். மேலும் பருகுங்கள். (ஆனால்) வீண் விரயம் செய்யாதீர்கள்(7.31).

  மேற்கூறப்பட்ட திருவசனத்தைப்பற்றி அறிஞர்கள் கூறுகை யில், அவ்வசனம் வைத்தியத்தின் எல்லாத் துறைகளையும் உள் ளடக்கியிருப்பதாகக் கூறுகின்றார்கள். தொடர்ந்து அவர்கள் கூறு கையில் ஒருவன் உண்ணும் உணவுகளிலும், குடிக்கும் குடி பானங்களிலும் நடுத்தரமாக உண்டு குடித்து வந்தால், அவனது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அதுவே பெரிய காரணியாக அமைகின்றது எனக்கூறுகின்றார்கள். அது மட்டுமின்றி இஸ்லாம் மதுவை ஹராமாக்கியதன் மூலமும் மனித

குலத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கு முக்கியத்துவம் அளித்தி ருக்கின்றது. ஏனெனில் ஒருவன் தொடர்ந்து மது அருந்து கையில் அது உடம்பில் உட்சென்று ஏற்படுத்தும் விளை வுகள் காரணமாக இருதயக் கோளாறு, சிறுநீரகக் கோளாறு, ஈரல் கரைதல் போன்ற தீங்குகள் ஏற்படுகின்றன என்பதை யாரா லும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எப்போது அவன் மது அருந்துவதை தவிர்ந்து கொள்கின்றானோ அப்போது மேற் கூறப்பட்ட நோய்கள் அவனை நெருங்குவதை விட்டும் பாது காத்துக் கொள்கின்றான்.

அதேபோன்று தகாத உடலுறவு, விபச்சாரம், தன்னினச் சேர்க்கை போன்றவைகளையும் இஸ்லாம் தடுத்து மனித குலத் தினது ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகோலுகின்றது. அது எப்படி யெனப் பார்ப்போமேயானால் ஒருவன் தகாத உடலுறவு, விபச்சா ரம், தன்னினச் சேர்க்கை போன்றவைகளில் ஈடுபடுகையில் அவ னுக்கு வயிற்றோட்டம், எய்ட்ஸ் போன்ற இன்றைய உலகம் கண்டு கொண்டிருக்கும் எண்ணற்ற கொடூரமான நோய்களால் பாதிக்கப்பட்டு அவஸ்தைப்படுகின்றான். எப்போது ஒருவன் மேற் கூறப்பட்ட இழிசெயல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றானோ அப்போது அந்நோய்கள் நெருங்காமல் தன் னைப் பாதுகாத்துக் கொள்கின்றான். மேலும் மனிதனது ஆரோக் கியத்தைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டுதான் மனிதனுக்கு எண்ணற்ற நோய்களை ஏற்படுத்தி மரணத்தின் வாயிலுக்கே இட் டுச் செல்லக்கூடிய கிருமிகள் நிறைந்து காணப்படும் பன்றி இறைச்சியை உண்பதையும் தடுத்திருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் மற்றுமொரு விஷயத்தையும் ஞாபகப் படுத்த விரும்புகின்றேன். அதாவது ஒரு முஸ்லிம் ஒரு நாளைக்கு ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கின்றான் என்பதை நாமனைவரும் அறிவோம். அந்த ஐவேளைத் தொழுகைக்கு அவன் வுளூ எனும் சுத்தம் செய்ய வும் கடமைப்பட்டிருக்கின்றான். இவ்வாறு அவன் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தனது உறுப்புக்களைச் சுத்தம் செய்

யும்போது, பல் வலி, காது வலி, உடலுறுப்புகள் இயங்காமை, அதேபோன்று குடல் சம்பந்தப்பட்ட நோய்கள் நெருங்குவதிலிருந்து தடுக்கப்படுகின்றான். மனிதனுக்கு குடல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதற்குரிய முக்கிய காரணங்களை சில வைத்தியர்கள் குறிப்பிடுகையில், மனிதனது நாசித் துவாரமும் முக்கியப் பங்கு வகிப்பதாகக் கூறுகின்றார்கள். அது எப்படி எனக் கேட்டால்? இவ்வாறு பதில் கூறுகின்றார்கள்.

மனிதனுடைய நாசித் துவாரங்களில் பல வகையான கிருமிகள் தினமும் ஒட்டிக் கொள்கின்றன. அக்கிருமிகள் அவனது நாசித்துவாரத்திலிருந்து குடல் வழியாகச் சென்று அக்குடலிலே பலநோய்களை உண்டு பண்ணுகின்றன. ஆனால் அவன் தனது நாசித்துவாரங்களை ஒரு நாளைக்கு 15 முறை சுத்தம் செய்து கொள்வானேயானால் அத்துவாரங்களில் தங்கியிருக்கும் கிருமிகள் அகற்றப்பட்டு அவைகள் மூலம் ஏற்படுகின்ற நோய்களிலிருந்து பாதுகாக் கப்படுகின்றான். அவர்களது அந்த ஆய்வு தந்த முடிவின் பிரகாரம் பார்க்கும்போது மேற்கூறப்பட்ட குடல் நோய்கள் முஸ்லிம்களில் குறைவாகவும், மேற்கத்திய நாடுகளில் வாழுபவர்களிடம் மலிந்தும் காணப்படுவதின் மூலம் அக்கருத்து உண்மையென்பதை ஏற்றுக் கொள்ள முடிகின்றது. முஸ்லிம்களுக்கிடையில் அந்நோய்கள் குறைவாகக் காணப்படுவதற்குரிய முக்கிய காரணம் முஸ்லிம்கள் தொழுகைக்காக ஒரு நாளைக்கு ஐந்துமுறை வுளூ எனும் சுத்தம் செய்கின்றார்கள். அவ்வாறு சுத்தம் செய்யும்போது ஒவ்வொரு முறையும் தனது நாசியை மும்மூன்று முறை சுத்தம் செய்து மொத்தம் 15 முறை சுத்தம் செய்து கொள்கின்றார்கள் என்ற ஒரே காணத்தைத் தவிர வேறொரு காரணமும் கிடையாது.

- உலகில் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் எல்லா விஞ்ஞானக் கருத்துக்களும் இஸ்லாத்தோடு ஒன்றிப் போகின்றன. அந்த அடிப்படையில் இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களோடு விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் ஒன்றிப் போவதைப் பார்க்கின் றோம்.

இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களும், விஞ்ஞானக் கண்டு பிடிப்பு களும் ஒருபோதும் முரண்பட மாட்டாது என்ற கருத்தை இஸ்லாமிய அறிஞர்களும், மேற்கத்திய அறிஞர்களும் வலியு றுத்திக் கூறியிருக்கின்றார்கள். அவர்களில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் மூரிஸ் பூகாய் என்பவர் தனது தவ்றாத், இன்ஜீல், குர்ஆன் என்ற நூலில் கூறுகையில் கருத்துத் திரிக் கப்பட்ட தவ்றாத்தும், இன்ஜீ லும் கூறும் கருத்துக்கள் இன்று காணப்படக்கூடிய புதிய கண்டு பிடிப்புகளுக்கு முரண்பட்டுக் காணப்படலாம். ஆனால் அல்குர்ஆன் மாத்திரம் அவைகளுக்கு ஒருபோதும் முறண்பட மாட்டாது. ஏனெனில் அதுதான் இவ்வா றான கண்டு பிடிப்புகளைப்பற்றி 1400 ஆண்டு காலமாக தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றது. அவரது அக்கருத்தின் மூலம் அல்குர்ஆனுடைய கருத்துக்கள் ஒருபோதும் புதிய கண்டுபிடிப் புகளுக்கு முரண்படாது என்பதனை தெளிவுபடுத்துகின்றார். மேலும் இஸ்லாம் போதிப்பவைகள் அனைத்தும் சத்தியமும், மறுக்க முடியாதவைகளுமாகும் என்பதனை புதிய ஆராய்ச்சிக ளும், கண்டு பிடிப்புகளும் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

முன்னய காலங்களில் இஸ்லாம் கூறுபவைகளில் சில கருத் துக்கள் சிந்தனைக்கு எட்டாதவை எனக்கூறி மறுத்துக் கொண் டிருந்தவைகளையெல்லாம் இன்று விஞ்ஞானம் கண்டுபிடித்து உண்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. அவைகளில் ஒன்றாக நாயினது எச்சிலில் பல நோய்களை உண்டுபண்ணக் கூடிய கிருமிகள் இருப்பதாகவும், அவைகளை நீரால் மாத்திரம் அகற்ற முடியாதெனவும், மாறாக மண்ணும் அவசியம் சேர்க்கப்பட வேண்டுமெனவும் கண்டு பிடித்துள்ளார்கள். அத்தோடு நாய் நீர் அருந்திய பாத்திரத்திலிருந்து ஒருவர் நீர் அருந்தினால் அவ ருக்கு பல நோய்கள் ஏற்படுவதாகவும் கண்டு பிடித்துள்ளார்கள்.

அதனைத் தெளிவுபடுத்திக் கூறுகையில், நாயினது எச் சிலில் நுண்ணிய கிருமிகள் நிறைந்து காணப்படுகின்றன. அது நீரருந்திய பாத்திரத்திலிருந்து ஒருவன் நீரருந்தினாலோ, அல்லது அந்நாயை தனது கையால் தொட்டாலோ, அல்லது தனது

ஆடை அதன்மேல் பட்டாலோ அக்கிருமிகள் அவன்மீது ஒட்டிக் கொள்கின்றன. இறுதியில் அந்நுண்ணிய கிருமிகள் அவனது உணவோடு, அல்லது குடிபானத்தோடு சேர்ந்து குடலுக்குப் போய்ச் சேர்கின்றன. அங்கே சென்ற அக்கிருமிகள் அவனது இரத்தத்தோடு கலந்து உடலில் முக்கிய பகுதிகளான இருதயம், மூளை போன்றவைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அச்சந் தர்ப்பங்களில்தான் கடுமையான தலைவலி, இருதய நோய், தொடர் வாந்தி, உணர்வற்றுக் காணப்படல், பாரிச வாதம் போன்ற நோய்களுக்கு அவன் ஆளாகின்றான். சிலசந்தர்ப்பங்களில் திடீர் மரணத்துக்கும் ஆளாகின்றான். எனக்கூறுகின்றார்கள்.

அதேபோன்று இயற்கையின் அடிப்படையில் இடம் பெறுபவைகளையும் ஆராய்ந்து இஸ்லாம்கூறும் கருத்துக்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். அதற்குதாரணமான புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட மரங்களினது மகரந்தச் சேர்க்கையைக் குறிப்பிடலாம். இவர்களால் அவ்விஷயத்தை இன்றுதான் அறிந்து கொள்ள முடிந்திருக்கின்றது. ஆனால் அதைப்பற்றி அல்குர்ஆன் பதினான்கு நூற்றாண்டுகளாக கூறி வருகின்றது. அருள்மறை பின்வருமாறு கூறுகின்றது. இன்னும் காற்றுகளை சூல் கொண்ட மேகங்களாக நாமே அனுப்புகின்றோம்(15.22). மற்றொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றது. அழகான (புற்பூண்டுகளை) ஒவ்வொரு வகையிலிருந்தும் நாம் அதில் முளைப்பித்தோம்(50.7). மற்றுமொரு இடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றது. நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக ஒவ்வொரு பொருளிலிருந்தும் (ஆண், பெண் கொண்ட) இரு வகையை நாம் படைத்திருக்கின்றோம்(51.49). மற்றுமொரு இடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றது. ஒவ்வொன்றிலிருந்தும் ஜோடியைப் படைத்தானே அவன் மிகத் தூய்மையானவன்(36.36).

மேற்கூறப்பட்ட அனைத்து சான்றுகளும் மரங்களிலும் ஆணினம், பெண்ணினம் என இரு இனங்கள் இருக்கின்றன என்பதை இப்புதிய கண்டுபிடிப்புகள் நிகழுமுன்னமே அறிவித்து விட்டன என்பதை அறிய முடிகின்றது.

அல்குர்ஆன் கூறும் கடல் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொண்ட ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த சில அறிஞர்கள் இஸ்லாத்தின் உண்மை நிலையறிந்து அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அச்சம்பவங்களை நாளாந்தப் பத்திரிகைகளும் பிரசுரித்து உறுதிப்படுத்தியிருக்கின் றன. அக்கடலைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். அல்லது (அவர்களுடைய செயல்களுக்கு உதாரணம்) ஆழ் கட லிலுள்ள இருள்களைப் போன்றதாகும். அதனை ஒரு அலை மூடிக் கொள்கிறது. அதற்குமேல் மற்றோர் அலை. அதற்கு மேல் மேகம். (இவ்வாறு) பல இருள்கள். அதில் சில சிலவற் றுக்கு மேல் இருக்கின்றன. (இருள்களால் சூழப்பட்ட நிலையில் பார்ப்பவன்)தன் கையை வெளியாக்கி(நீட்டி)னால் அதனை அவ னால் பார்க்க முடியாது(24.40).

- உலகிலுள்ள மதங்களிலும் பிரிவுகளிலும் இஸ்லாம் மட்டும் தான் மனிதர்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் வழங்கியி ருக்கின்றது. அதனடிப்படையில் மனிதனுக்குக் கருத்துச் சுதந் திரத்தையும், எதனையும் ஆராய்ந்து செயல்படக்கூடிய சிந்தனைச் சுதந்திரத்தையும் வழங்கியிருக்கின்றது. ஆதலால் தான் அல்லா ஹுத்தஆலா இம்மனிதனுக்கு பார்க்கக்கூடிய கண்களையும், கேட் கக்கூடிய காதுகளையும் சிந்திக்கக்கூடிய உள்ளத்தையும் கொடுத்து சிந்தித்து உண்மை எதுவென்பதை அறிந்து செயல் படுமாறு பணித்துக் கொண்டிருக்கின்றான். அவ்வாறு அவனுக் குக் கொடுக்கப்பட்ட அவ்வுறுப்புக்களை பயன்படுத்தாது பொடு போக்காக விட்டுவிட்டால் அதனைப்பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவான் என்றும், அவ்வுறுப்புக்களை தீங்குகளை ஏற் படுத்தும் காரியங்களுக்காக உபயோகித்தால் அதைப்பற்றியும் விசாரிக்கப்படுவான் என்றும் எச்சரித்துக் கொண்டிருக்கின்றது.

அதேபோன்றுதான் சதி மோசடிகள், பொய், பித்தலாட்டங்கள் போன்றவைகளைத் தவிர்ந்து வியாபாரம், கொடுக்கல், வாங்கல் போன்றவைகளில் ஈடுபடுமாறும், இஸ்லாம் தடுத்தவைகளைத் தவிர்ந்து கொள்வதுடன் உணவு, குடிப்பு, உடை, மனைவி,

குழந்தைகள் போன்றவைகளின் மூலம் சந்தோஷமாக வாழுமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது.

மேலும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட அவ்வுரிமைகளைப் பயன்படுத்தி ஏனையோருக்கு தீங்கு செய்யாதவாறு ஒரு வரை யறையையும் விதித்திருக்கின்றது. உதாரணத்துக்கு மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் காம உணர்வை எடுத்துக் கொள்வோம். அக்காம உணர்வுக்கும் ஒரு வரையறையிருக்கின்றது. அதனால் தான் எவரும் தாம் விரும்பியவாரெல்லாம் காமலீலைகளில் ஈடு பட்டு தம்மை அழித்துக்கொள்ள வேண்டாம் எனவும், எவ்வழி களில் அதனைப் பயன்படுத்தினால் நன்மையான முறையில் பயன் பெறலாம் என்பதையும் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. எனவே ஒருவனுக்கு ஆசையைக் கொடுத்து அவன் விரும்பிய வாறு ஹலால், ஹராம் பாராது அதனைத் தீர்த்துக் கொள்ளலாம் என விட்டுவிடுவது சுயஉரிமையை வழங்கியதாக கருதப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவன் நினைத்தவா றெல்லாம் ஈடுபட்டு அவனது வாழ்க்கையை அழித்து இறுதியில் கைசேதப்படக் கூடியவனாகவே மாறுவான். மேலும் அவனது ஆசையை அவன் நினைத்தவாறு தீர்த்துக் கொள்ளலாம் என சட்டம் வழங்கியிருந்தால் அவனால் நிம்மதியாக, அல்லது அமை தியாக வாழத்தான் முடியுமா? ஒருபோதும் முடியாது. அதற்கு தெளிவான ஆதாரம் வேண்டும் என நீங்கள் கருதினால் நவீன கலாச்சாரங்கள் நிறைந்து காணப்படக்கூடிய தற்காலத்தை எடுத் துப்பாருங்கள். மனிதன் எப்படி வாழவேண்டும் என்று அறியாமல் தான் நினைத்தவாறெல்லாம் வாழ முற்பட்டதால்தான் அவனிடம் மனப்பயமும், சோதனைகளும், தற்கொலைகளும், கொலைகளும், வழிப்பறிக் கொள்ளையும், மாற்றானின் சொத்துக்களை சூரையாடு வதும் அவனிடம் நிறைந்து காணப்படுவதுடன், அபூர்வமான நோய்களும் அவனைத் தொற்றிக் கொள்கின்றது.

இன்றைய உலகில் நடப்பது போன்று தனது பேராசைக ளுக்கு ஒரு வரையறையின்றி அவைகளை அடைந்து கொள்வ தற்காக ஏழைகளது சொத்துக்களையும், செல்வங்களையும்

சுரண்டி, அவர்களுக்கு அநியாயம் செய்து வாழ்வதையும் சுய உரிமை என்றோ, அல்லது சுதந்திரம் என்றோ நினைத்து விடக் கூடாது. ஏனெனில் உண்மையான சுதந்திரம் என்பது இஸ்லாம் எந்த அடிப்படையில் வாழ வேண்டும் என்று ஒரு வரைய றையை விதித்திருக்கின்றதோ அதன்பிரகாரம் வாழ்வதுதான் சுதந் திரம் எனப்படும். அப்படியான ஒரு வழிமுறையைத்தான் இஸ்லாம் மக்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கின்றது. மனிதனுக்கு வழங்கப்பட்ட எல்லா வகையான உரிமைகளையும் விட மேலான உரிமை தன்னைப் படைத்தவனுக்கு அடிமையாக இருப்பதாகும். காரணம் மனிதன் தன்னைப் படைத்தவனை பயந்து, அவனது சுவனத்துக்கு ஆதரவு வைத்தவனாக அடிபணிந்து நடக்கும் போது அவனால் படைக்கப்பட்ட படைப்பினங்களின் கட்டுப்பாடுக ளிலிருந்து விலகி சுய உரிமை பெற்றவனாகக் காணப்படுகின் றான். தன்னைப் படைத்தவனைத் தவிர வேறு எவருக்கும் பயப் படாதவனாக மாறுகின்றான். அவனிடமே தனது தேவைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றான். இவ்வாறு அவன் தனது அனைத்துக் காரியங்களையும் வல்ல நாயனிடமே ஒப்படைக்கும் போது அவனது வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் வெற்றி பெற்று சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றான்.

அன்பார்ந்த சகோதரர்களே!

இது வரையும் நாம் பார்த்ததிலிருந்து இஸ்லாம் மார்க்கம் பூரணமான, உயர்ந்ததொரு மார்க்கம் என்பதனையும், நேர்வழியை யும், கண்ணியத்தையும் போதிக்கும் மார்க்கம் என்பதனையும் அறிந்து கொண்டோம். ஆனால் இஸ்லாம் என்ற பெயரில் வாழும் சிலர் இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பின்பற்றாது மோசமானவர் களாக, சத்தியத்தை விட்டும் தூரமானவர்களாக காணப்பட்டாலும் அது அவர்களில் காணப்படும் தவறுகளேதவிர மார்க்கம் போதிக் கும் ஒன்றாக இருக்க மாட்டாது. ஏனெனில் சத்தியத்தை போதிக்க வந்த மார்க்கம் எவ்விதத்திலும் அசத்தியத்தையோ, கீழ்த் தரமான விஷயங்களையோ போதிக்க மாட்டாது என்பதனை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களில் அதனைப்

பின்பற்றுவோர்தாம் அதைப்பற்றி சரியாக அறிந்து கொள்ளாமலும், அதன் வழிகாட்டல்களின் பிரகாரம் நடக்காமலும் தவறுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

**இஸ்லாம் கூறும் நல்லொழுக்கங்கள்.**

இஸ்லாம் கூறும் சிறப்பம்சங்களில் சிலதை இதற்கு முன்னுண் டான பகுதியில் பார்த்தோம். அப்பகுதியைப் பூரணப்படுத்தும் வகை யில் அதோடு சேர்ந்த இஸ்லாம் கூறும் நல்லொழுக்கங்களைப்பற்றி இப்பகுதியில் பார்ப்போம். இவைகளைப் படித்துத் தெரிந்து கொள் ளும் நீங்கள் இஸ்லாம் என்பது வெறும் பெயரளவில் பின்பற்றப்படும் மார்க்கமன்றி மனித குலத்துக்கு வெற்றியையும், சுபீட்சமான வாழ் வையும் பெற்றுக் கொடுக்க வந்த சத்திய மார்க்கம் என்பதை நன்றா கப் புரிந்து கொள்வீர்கள். மேலும் இம்மார்க்கம் மனிதனுக்கும், அவ னது மனைவி, மக்களுக்கும், குடும்பத்துக்கும், அண்டை வீட்டா ருக்குமுரிய சில சட்டதிட்டங்களைக்கூறி முடிக்கவில்லை. மாறாக அவனது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்தையும் போதித் துக் கொண்டிருக்கின்றது. அத்தோடு அவனது சந்தோஷத்துக்குத் தேவையானவைகளையும், அவன் வாழும் காலத்தில் அவசியம் பின் பற்றி நடக்க வேண்டிய ஒழுக்கங்களையும், பண்பாடுகளையும் ஒன்று விடாமல் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

மாற்றுமத சகோதரர்களே!

இன்று முஸ்லீம்கள் என்ற பெயரில் வாழ்ந்து வரும் சிலர் பல தீயசெயல்களில் ஈடுபட்டு வருவதைக் காண்பீர்கள். அவர்களின் அவ் வாறான இழி செயல்களை பார்த்து இஸ்லாத்தை தவறாக எடை போட்டு விடாதீர்கள். ஏனெனில் அவர்கள் செய்து வரும் அத்தீய செயல்கள் அவர்களது மனோஇச்சையின் பிரகாரம்தான் செய்து வரு கின்றார்கள் அவைகளை மனிதன் நடைமுறைப்படுத்துவதற்கு உகந்த காரியங்களென எந்த இடத்திலும் இஸ்லாம் குறிப்பிடவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அத்தோடு இஸ்லாம் எவைகளையெல்லாம் போதித்துக் கொண்டிருக்கின்றது? அவர்கள் செய்து வரும் இழிசெயல்களையும் போதித்துக் கொண்டிருக்கின்

றதா? என்ற விஷயத்தை இஸ்லாத்தின் அடிப்படை நூல்களான அல் குர்ஆனையும், அல்ஹதீஸையும் படித்துத் தெரிந்து கொள்ள வேண் டும். அதுகூறும் கட்டளைகளையும், விலக்கல்களையும் தெரிந்து கொள்ளும் நீங்கள் அவர்கள் செய்துவரும் அத்தீய செயல்கள் இஸ் லாத்திலுள்ளவையல்ல என்பதை சிறந்த முறையில் புரிந்து கொள்வீர் கள். அவ்வாறு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவைகளில் சிலதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

**முதலாவது: இஸ்லாம் கூறும் கட்டளைகள்.** உலகில் வாழும் மனி தனது நடவடிக்கைகள் சீர்பெறவும், அதன்மூலம் அவனது நாட்டு நிலைமைகள் சீராகி அவனது வாழ்க்கை சிறப்பாகவும் அமைய முக்கியமான சில கட்டளைகளை இஸ்லாம் பிறப்பித்துக் கொண்டி ருக்கின்றது. அவைகளைப் போதிக்கும் விஷயத்தில் இஸ்லாம் ஆழம் காண முடியாததோர் கடலைப்போன்று காணப்படுகின்றது. உயர்ந்த எண்ணம் கொண்ட ஒருவன் அவனது எண்ணத்தை தீய வழிகளில் சென்று பெற்றுக் கொள்ளாதவாறும், அதிகதிம் செல்வம் சேமிக்க வேண்டுமென்று பேராசை கொள்பவன் தவறான வழிகளில் சென்று செல்வம் திரட்டாமலும் இருப்பதற்காக அவைகளுக்குரிய நேரான அனைத்து வழிமுறைகளையும் தெளிவாக கற்றுக் கொடுத்தி ருக்கும் தனித்துவமிக்க ஒரே மார்க்கம் இஸ்லாம் மார்க்கமேயாகும்.

நமது வாழ்வில் நாம் கடைபிடித்து நடக்க வேண்டிய கட்ட ளைகளையும், சட்டதிட்டங்களையும் எளிதான நடையிலும், அனைவ ரும் புரிந்து கொள்ளக்கூடிய வசனங்களாலும் அது நமக்குப் போதித் துக் கொண்டிருக்கின்றது. மேலும் அதுகூறும் சட்டதிட்டங்களை யும், கட்டளைகளையும், யாரெல்லாம் கடைபிடித்து நடக்காது அவர் களது மனோ இச்சையின் பிரகாரம் நடக்கின்றார்களோ, அவர்களுக்கு நாளை மறுமையில் கடுமையான தண்டனைகள் இருப்பதாகவும் எச் சரித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் அல்லாஹ்வின் கட்டளைக ளும், சட்டதிட்டங்களும்தான் தனது வாழ்க்கையென நினைத்து அவ னது கட்டளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் அடிபணிந்து நடப்ப வர்களுக்கு சிறந்த நற்கூலிகள் இருப்பதாகவும், சுகபோகங்கள் நிறைந்த சுவனப் பூங்காவை அல்லாஹ் சன்மானமாக வழங்க விருப்

பதாகவும் வாக்குறுதியளித்திருக்கின்றது. ஆக நாமும் அக்கட்ட ளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடந்து அவனு டைய சிறப்புமிக்க அந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ள முயற் சிக்க வேண்டும். அந்தடிப்படையில் இப்பகுதியில் இஸ்லாம் கூறும் கட்டளைகளிலும், சட்ட திட்டங்களிலும் சிலதைப் பார்ப்போம்.

- மனிதர்கள் மிருகங்களுக்கு இணையாகாதவாறு சிந்தித்து செய லாற்றுமாறும், அவர்களது மனோஇச்சைகளுக்கும், ஆசாபாசங்க ளுக்கும் கட்டுப்பட்டு நடக்காது அல்லாஹ்வை அஞ்சி நடக்கு மாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று அல் லாஹ் அல்லாத சிலைகளையோ, மனிதர்களையோ கடவுள்களாக நினைத்து வணங்க வேண்டாம் என்றும் எச்சரித்துக் கொண்டி ருக்கின்றது. மொத்தத்தில் அவர்கள் படைக்கப்பட்டது போன்று கண்ணியமானவர்களாகவே வாழுமாறு பணிக்கின்றது.
- நமது சிந்தனைகளையும், உடல் உறுப்புக்களையும் இம்மையி லும், மறுமையிலும் பிரயோஜனமளிக்கும் விஷயங்களில் பயன் படுத்துமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது.
- நமது சீரிய சிந்தனைகள் சரிகண்டு, உள்ளம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான கொள்கையையும், தூய்மையான தவ்ஹீதை (ஏகத்துவக் கொள்கையை)யும் கடைபிடித்து நடக்குமாறு பணிக்கின்றது. இஸ்லாம் போதித்துக் கொண்டிருக்கும் அக் கொள்கைதான் மனிதர்களுக்கு மத்தியில் ஒருவனை மதிப்பிற் குரியவனாகவும், கண்ணியத்துக்குரியவனாகவும் ஆக்குவதுடன் ஈமானின் இன்பத்தை உணர்த்திக் கொண்டுமிருக்கின்றது.
- நம்மில் மறைக்க வேண்டிய பகுதிகளை மறைத்துக் கொள்ளு மாறும், நாம் எவைகளில் ஈடுபட்டால் சந்தேகத்துக்குரியவர்க ளாக கணிக்கப்படுவோமோ அவைகளை தவிர்ந்து கொள்ளுமா றும் கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றது.
- நமது இஸ்லாமிய சகோதரர்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு உதவி ஒத்தாசையாக இருக்குமாறும்,

அவர்களுக்கு கஷ்ட, துன்பங்கள் ஏற்படுமிடத்து அவைகளில் பங்கெடுத்துக் கொள்ளுமாறும் பணிக்கின்றது.

- நமது இஸ்லாமிய சகோதரர்களை சந்திக்கும்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்ற சலாத்தைக்கூறி இன்முகத்தோடு வரவேற்குமாறும், அவர்கள் நம்மை விட்டு தூரமாகியிருக்கையில் தமது மனைவி, மக்களுக்கு உதவி ஒத்தாசையாக இருந்து கொள்ளுமாறும் கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றது.
- நம்மில் நோய்வாய்ப்பட்டிருக்கும் நோயாளிகளிடம் சென்று நலம் விசாரித்து ஆறுதல் கூறுமாறும், அதேபோன்று மரணம் சம்பவிக்குமிடத்து அம்மையித்திற்குரிய கடமைகளைச் செய்யுமாறும், அதனை நல்லடக்கம் செய்ய எடுத்துச் செல்லுகையில் அதனைத் தொடர்ந்து செல்லுமாறும், அடிக்கடி கப்றுகளைத் தரிசித்து அதிலே அடக்கப்பட்டிருக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறும் ஏவுகின்றது.
- தான் வாழும் காலங்களில் தனக்குச் சூழால் வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய சமூகத்தோடு எல்லா விஷயங்களிலும் நீதமாக நடந்து கொள்ளுமாறும், தான் விரும்பும் நல்ல விஷயங்களை அவர்களும் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று விரும்புமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது.
- பிறரிடம் சென்று யாசகம் கேட்டு அதன்மூலம் கிடைக்கும் பணத்தால் வாழ்ந்து தனது வாழ்க்கையை இழிவுபடுத்திக் கொள்ளாமல், அல்லாஹ் தனக்கருளிய உடலுறுப்புக்களைப் பயன்படுத்தி உழைத்து, அதன்மூலம் கிடைக்கும் செல்வத்தினால் உண்டு, குடித்து கண்ணியமாக வாழத் தூண்டுகின்றது.
- உலகில் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்பினங்களோடும் அன்பாக இருந்து, அவைகளுக்கு இரக்கம் காட்டுமாறும், அவைகளுக்கு தீங்குகள் ஏற்படாதவாறு சிறந்த முறையில் கண்காணித்துக் கொள்ளுமாறும் பணிக்கின்றது. மேலும் அப்படைப்புகளில் உயர்ந்த நிலையிலிருக்கும் மனித இனத்துக்கு நல்லதைக் கற்றுக் கொடுத்து நன்மைகளை ஈட்டிக் கொள்ளச்

செய்வதிலும், கெட்டவைகளைத் தடுத்து அவைகளின் தீங்குக ளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளச் செய்வதிலும் தீவிரமாக செயல்படுமாறும் கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றது.

- மார்க்கம் அனுமதித்தவைகளைக் கொண்டு தமது பெற்றோ ருக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பணிவிடை செய்யுமாறும், தனது உறவினர்கள் தன்னுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்ட போதிலும் அவர்களைச் சேர்ந்து நடக்குமாறும் பணிக் கின்றது. அதேபோன்று அண்டை வீட்டாரை எல்லா விஷயங் களிலும் சங்கைப்படுத்துமாறும், வாய் பேச முடியாத மிருகங்களு டனும், பறவைகளுடனும் அன்பாக நடந்து கொள்ளுமாறும் நம் மைத் தூண்டிக் கொண்டிருக்கின்றது.
- நாம் நமது சகோதரர்களுக்களித்த வாக்குறுதிகளை நிறை வேற் றுமாறும், மனைவி, குழந்தைகளுடன் நற்குணங்களோடும், சிறந்த பண்பாடுகளோடும் நடந்து கொள்ளுமாறும் நம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்றது.
- இஸ்லாத்தைப் பின்பற்றி வாழும் முஸ்லிம்களிடம் வெட்கம், கொடை கொடுக்கும் தன்மை, தைரியம், சத்தியத்துக்கு துணை போதல் போன்ற நல்ல பண்புகள் நிறைந்து காணப்பட வேண்டு மெனவும் போதித்துக் கொண்டிருக்கின்றது.
- நம்மிடம் மனித நேயம் காணப்பட வேண்டுமென்றும், தமக்கு அவசியமில்லாதவைகளில் வாய்மூடியிருக்க வேண்டுமென்றும், எல்லா சந்தர்ப்பங்களிலும் அமைதியை கடைபிடிக்க வேண்டு மென்றும் பணித்துக் கொண்டிருக்கின்றது.
- நம்மிடம் வழங்கப்படும் பொறுப்புக்களைப் பாதுகாத்து நிறை வேற்றிக் கொடுக்குமாறும், நமது சகோதரர்களது விஷயத்தில் நல்லெண்ணம் கொள்ளுமாறும், நமது காரியங்களை செயல்படுத் துகையில் நிதானமாய் இருந்து செயல்படுத்துமாறும், நன்மை களை கொள்ளையடித்துக் கொள்ளும் விஷயத்தில் தீவிரமாய் இருந்து கொள்ளுமாறும் போதித்துக் கொண்டிருக்கின்றது.

- மனிதனுக்கு இழிவை ஏற்படுத்தும் விபச்சாரத்தில் ஈடுபடாமல் தன்னைப் பாதுகாத்து நேர்மையாகவும், தூய்மையாகவும் இருந்து கொள்ளுமாறும், மார்க்கத்தில் நிலையாய் இருந்து கொள்ளுமாறும் பணிக்கின்றது.
- மனிதனுக்கு அல்லாஹுத்தஆலா வழங்கிய அருட்கொடைகளுக் காக அதிகதிகம் நன்றி செலுத்துமாறும், அவனை அதிகதிகம் நேசம் கொள்ளுமாறும், எல்லா விஷயங்களிலும் அவனைப் பயந்து கொள்ளுமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. அதே போன்று அவனது சுவனத்தை பெற்றுக்கொள்ள ஆதரவு வைக் குமாறும், தனது அனைத்துத் தேவைகளையும் அவனிடமே ஒப்படைக்குமாறும் கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றது. இவ் வாறாக இஸ்லாம் நமக்குப் பல விஷயங்களைப் போதித்துக் கொண்டிருக்கின்றது.

**இரண்டாவது: இஸ்லாம் செய்ய வேண்டாம் என தடுத்தவைகள்.** இஸ்லாம் கூறும் முக்கியமானவைகளில் மற்றுமொன்றுதான் இஸ் லாம் தடுத்துக் கொண்டிருக்கும் தீயவைகள். எனவே உண்மையான முஸ்லிம்கள் அத்தீய செயல்களில் ஈடுபட்டு அவர்களை அழித்துக் கொள்ளக்கூடாது. அத்தோடு அவைகளுக்கு நாளை மறுமையில் கூலிகளாக கொடுக்கப்பட விருக்கின்ற நரக நெருப்பிலிருந்தும் தங் களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதனடிப்படையில்தான் அவ்வாறான தீய வைகளைக் குறிப்பிட்டுக்கூறி அவைகளைச் செய்ய வேண்டாம் என இஸ்லாம் தடுத்துக் கொண்டிருக்கின்றது. அவ் வாறு இஸ்லாம் தடுத்துக் கொண்டிருக்கும் தீயவைகள் ஏராளம் இருக்கின்றன. நீங்கள் அவைகளில் சிலதையாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சிலதை உங்கள் முன் வைக்கின்றேன்.

- இறைநிராகரிப்பு, அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குத் தீங்கி ழைத்தல், அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு மாறுசெய்தல், தனது மனோஇச்சைகளின் பிரகாரம் நடத்தல் போன்றவைக ளைத் தவிர்ந்து நடக்குமாறு நம்மைப் பணிக்கின்றது.

- மனிதனது வாழ்வை அழித்துவிடக்கூடிய தற்பெருமை, வஞ்ச கம் போன்றவைகளை விட்டும் விலகி நடக்குமாறும், தனது சகோதரனுக்கு வழங்கப்பட்டிருக்கும் அருட்கொடைகளைப் பார்த்து ஆச்சரியப்படாமலும், அவர்களது சொத்து, செல்வங் களிலும், சந்தோஷமான வாழ்விலும் பொறாமை கொள்ளாமலும் இருக்குமாறு போதித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் அல் லாஹ்வின் புறத்தால் சோதனைக்குற் படுத்தப்பட்டவர்களை ஓரக் கண்ணால் பார்ப்பதையும், அதையிட்டு சந்தோஷமடைவதையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- தனது சகோதரர்களைப்பற்றி தவறான எண்ணம் கொள்வதை யும், தனது காரியங்களை செய்யலாமா? கூடாதா? என்ற விஷ யத்தில் சகுணம் பார்ப்பதையும், தான் எதிர்பார்க்கும் அல்லாஹ் வின் அருட்கொடைகள் தனக்குக் கிடைக்காது என்று நிராசை யடைவதையும், தனக்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் செல்வத்தி லிருந்து ஏழைச் சகோதரர்களுக்கு கொடுத்துதவாமல் கஞ்சத்த னம் காட்டுவதையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் தனது அன்றாட தேவைகளில் அளவுக்குமீறி வீண்விரயம் செய் வதையும் தவிர்ந்து கொள்ளுமாறு எச்சரிக்கின்றது.
- நமது பரம விரோதியான ஷைத்தான் நம்மிலே ஏற்படுத்தும் சோம்பேரித்தனம், கோழைத்தனம், கடின உள்ளம், பலவீனம், எதி லும் அவசரம், அடாவடித்தனம், வெட்கமின்மை, கோபம் போன்ற வைகளை வெறுத்து நடக்குமாறும், தனக்குத் தவறிப் போன வைகளையிட்டு கவலை கொள்ளாமலிருக்குமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது.
- தனது சகோதரர்களுக்கு அநீதியிழைத்தல், துன்பப்பட்டவர்க ளுக்கு மனமிறங்காது தனது உள்ளத்தை கல்நெஞ்சாக ஆக்கிக் கொள்ளல் போன்றவைகளையும் தவிர்ந்து நடக்குமாறு கட்டளை யிட்டுக் கொண்டிருக்கின்றது.
- தனது சகோதரனைப்பற்றி புறம் பேசித்திரிய வேண்டாமென்றும்,

கோள்சொல்லி பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டாமென்றும் நம்மைத் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

- வீணான பேச்சையும், இரகசியமாய்ச் செய்த தவறுகளை பகிரங்கப் படுத்துவதையும், மனிதர்களை இழிவுபடுத்துவதையும், இயலாதோரை பரிகசிப்பதையும் தவிர்ந்து நடக்குமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது.
- தனது சகோதரனை இழிவான வார்த்தைகளால் திட்டுதல், சபித்தல், மோசமான பட்டப்பெயர்களால் அழைத்தல் போன்றவைகளைத் தவிர்ந்து கொள்ளுமாறும் பணிக்கின்றது.
- தனது தரப்பில் நியாயம், உண்மை இருந்த போதிலும் அதிகம் தர்க்கிக்காமலும், சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம் தனது சகோதரனுடன் சண்டை செய்யாமலும், தன்னை அழிவின்பால் இட்டுச் செல்லும் நீண்டநேர பரிகசிப்பில் ஈடுபடாமல் இருக்குமாறும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட வேண்டாமென்றும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- விசாரணைகளின்போது உண்மையான சாட்சியை மறைப்பதையும், பொய்ச் சாட்சி கூறுவதையும், பத்தினிப் பெண்களை அவதூறு கூறுவதையும், மரணித்தவர்களை ஏசுவதையும், அல்லாஹ்வின் புறத்தால் வழங்கப்பட்ட அறிவை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்காமல் மறைப்பதையும் தவிர்ந்து கொள்ளுமாறு தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- மனிதனிடம் காணப்படும் மடமை, அடுத்தவர்களுக்கு தீங்கிழைத்தல், தான் வழங்கிய தர்மத்தை சொல்லிக் காட்டல், தனக்கு நன்மையைக் கற்றுக் கொடுத்தவனுக்கு நன்றி தெரிவிக்காமல் இருத்தல் போன்றவற்றையும் தவிர்ந்து கொள்ளுமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது.
- தன்னுடைய தந்தையில்லையென்று தெரிந்தும் ஒருவரைக் குறிப்பிட்டு அவர்தான் தனது தந்தையெனக் கூறுவதையும், தனது

நண்பனுக்கு நல்லதை ஏவி, தீயதைத் தடுக்காமலிருப்பதையும் தவிர்ந்து நடக்குமாறு பணிக்கின்றது.

- தனது சகோதரனுக்கு சதி செய்தல், அவனுக்கெதிராக மோசடிக ளில் ஈடுபடுதல், அவனுக்குக் கொடுத்த வாக்கை நிறை வேற்றா திருத்தல், மனிதர்களுக்கு தீங்கு ஏற்படும் விதத்தில் பிரச்சினை களை உண்டு பண்ணுதல் போன்றவைகளையும் தவிர்ந்து நடக் குமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது.
- பெற்றோருக்கு நோவினை செய்தல், உறவினர்களது உறவைத் துண்டித்து நடத்தல், தமது குழந்தைச் செல்வங்களை உரிய முறையில் கவனியாது பொடுபோக்காய் விட்டுவிடல் போன்றதை யும் தவிர்ந்து நடக்குமாறு கட்டளையிடுகின்றது.
- அடுத்தவர்களது குறைகளைத் துருவித்துருவி ஆராய்தல், அல் லது அவர்களது காரியங்களில் குறைகாணல், பிற சகோதரர்க ளது மறைவிடங்கள், அவர்களது மனைவி, பெண் பிள்ளைகள் போன்றோர்களை உற்றுப்பார்த்தல் போன்றவைகளையும் தவிர்ந்து நடக்குமாறு நம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்றது.
- ஆண்கள் பெண்களைப்போன்று வேஷமிடுவதையும், பெண்கள் ஆண்களைப் போன்று வேஷமிடுவதையும், கணவன், மனைவி யர் தாங்கள் உடலுறவில் நடந்துகொண்ட முறைபற்றி பிறரிடம் கூறுவதையும் தவிர்ந்து கொள்ளுமாறு பணிக்கின்றது.
- மது அருந்துதல், போதைப் பொருட்களை உட்கொள்ளல், தனது செல்வத்தை அழிக்கும் சூதாட்டங்களில் ஈடுபடல் போன்ற வற்றையும் தவிர்ந்து கொள்ளுமாறும் பணிக்கின்றது.
- வியாபாரம் செய்யும்போது பொய்ச் சத்தியம் செய்தல், அளவை நிறுவைகளில் மோசடி செய்தல், ஹராமான காரியங்களில் செல் வத்தை செலவிடல், பக்கத்து வீட்டாருக்கு தீங்கு விளைவித் தல் போன்றவைகளையும் தவிர்ந்து நடக்குமாறு நம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்றது.

- மாற்றானுடைய பொருளைத் திருடல், வீணாக கோபம் கொள்ளல், தனது சகோதரனது திருமணப் பேச்சுக்கு எதிராக திருமணப் பேச்சு நடத்தல், தனது சகோதரனது வியாபாரத்துக்கு எதிராக விலைகளைக் குறைத்து வியாபாரம் செய்தல் போன்றவற்றையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- கூட்டுச் சேர்ந்து வியாபாரம் செய்கையில் தனது பங்காளிக்கு மோசடி செய்தல், இரவல் பொருட்களை இரவல் கொடுத்தவன் அனுமதிக்காதவைகளில் பிரயோகித்தல், கூலி வேலையாளியின் கூலியைப் பிற்படுத்தல், அல்லது அவனது கூலியைக் குறைத்துக் கொடுத்தல் போன்றவற்றையும் தடுக்கின்றது.
- தனக்கு நோயோ, அல்லது வேறு ஏதேனும் தீங்கோ ஏற்படும் வகையில் அளவுக்கதிகமாக உணவு உற்கொள்வதையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- ஒருவர் மற்றவரது தொடர்பின்றி விலகி வாழ்வதையும், தனது இஸ்லாமிய சகோதரனை மூன்று தினங்களுக்கு மேல் பகைத்திருப்பதையும் கண்டிக்கின்றது.
- மார்க்கம் அனுமதிக்காத ஒரு விஷயத்துக்காக ஒருவரை கைநீட்டி அடித்தல், அல்லது கத்தி, கம்பு போன்ற ஆயுதங்களால் பயங்காட்டுதல் போன்றவற்றையும் தடுக்கின்றது.
- விபச்சாரத்தில் ஈடுபடுவதையும், தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுவதையும், தனக்கு உரிமையில்லாத ஒரு உயிரை கொலை செய்வதையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- ஒருவருக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்குவதற்கு அவரிடமிருந்து நீதிபதி நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளல், விருந்துபசாரங்களில் குறிப்பானவர்களின் விருந்துகளை மாத்திரம் ஏற்று அவைகளுக்கு சமூகமளித்தல் போன்றவற்றையும் தடுக்கின்றது.
- கட்டாயமாக கொடுத்தே தீர வேண்டும் என்ற அடிப்படையில் இருக்கும் நல்ல காரியங்களுக்கேயன்றி ஏனைய சாதாரண விஷ

யங்களுக்கெல்லாம் இலஞ்சம் கொடுப்பதையும், எடுப்பதையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.

- அநியாயம் செய்யப்பட்டவனுக்கு உதவி செய்ய முடியுமென்றிருக்கின்ற நிலையில் அவனுக்கு சதி செய்யும் பொருட்டு உதவி செய்யாதிருப்பதை தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- மாற்றானுடைய வீட்டில் இருப்பவைகளை அவனுடைய அனுமதியின்றி உற்றுப் பார்த்தல், தாம் பேசுவதை பிறர் கேட்பதை வெறுக்கின்றவர்களின் பேச்சை உற்றுக் கேட்டல் போன்றவற்றையும் தடுத்துக் கொண்டிருக்கின்றது.
- தனக்கோ, அல்லது தனது சமுதாயத்தினருக்கோ, அல்லது தனது சிந்தனைக்கோ, அல்லது தனக்கிருக்கும் கண்ணியத்திற்கோ, அல்லது தனது மானத்திற்கோ பங்கம் விளைவிப்பவைகளையும் தவிர்ந்து நடக்குமாறு நம்மைப் பணிக்கின்றது.

மேற்கூறப்பட்டவைகள் இஸ்லாம் கூறும் சில கட்டளைகளும், விலக்கல்களுமாகும். இவை தவிர்ந்த இன்னும் எத்தனையோ கட்டளைகளும், விலக்கல்களும் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை விரிவாகவும், தக்க ஆதாரங்களுடனும் கூறுவதென்றால் இதனைப் பெரும் நூல்களாகவே வெளியிட வேண்டியிருக்கும். ஆதலால் அவைகளை தெளிவாக அறிந்து கொள்ள விரும்புவோர் இஸ்லாத்தின் அடிப்படை நூல்களான அல்குர்ஆனையும், ஹதீஸையும் வாசித்துத் தெரிந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**இஸ்லாத்தின் கடமைகள்.**

இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கும் ஐம்பெரும் கடமைகள் இஸ்லாத்தைக் கட்டியெழுப்பும் மிகமுக்கிய தூண்களாகும். முஸ்லிம் என்ற அடிப்படையில் வாழ்ந்து வரும் அனைவரும் அக்கடமைகள் ஐந்தையும் கடைபிடித்து நடக்குமாறு இஸ்லாம் பணித்துக் கொண்டிருக்கின்றது. அக்கடமைகளாவன வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் என்றும், அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்றும் ஏற்றுக் கொள்தல், தொழுகையை நிறைவேற்றுதல், தனது செல்வத்திலிருந்து ஏழை வரியெனப்படும் ஸகாத்தை நிறை

வேற்றுதல், ரமழான் மாதத்தில் நோன்பு வைத்தல், வசதியும், சக்தியும் படைத்தவர்கள் மக்கா நகர் சென்று புனித கஃபாவை ஹஜ் செய்தல் என்ப வைகளாகும். பின்வரும் பகுதியில் மேற்கூறப்பட்ட ஐம்பெரும் கடமைகளையும் சற்று விளக்கமாகவும், தெளிவாகவும் பார்ப்போம்.

1. உலகில் வணங்கப்படுவதற்குத் தகுதியானவன் அல்லாஹ் என்ப தையும், அவனது தூதுத்துவத்தை மனிதர்களுக்குப் போதிக்க வந்தவர்களில் இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என் பதையும் ஏற்றுக்கொள்ளல். அதன் விரிவான விளக்கத்தைப் பார்ப்போம். உலகில் மனித இனமும், ஜின் இனமும் வணங்கி வழிப்படுவதற்குரிய உண்மையான இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லையென்றும், அவன் தனித்தவன், இணை துணையற்றவன் என்றும் நம்ப வேண்டும். மேலும் உலகில் அவனது தூதுத்துவத்தைப் போதித்தவர்களில் இறுதி யானவர் முஹம்மத்(ஸல்)அவர்கள் என்று நம்பிக்கை கொண்டு அந் நம்பிக்கையினை நாவால் மொழிந்து வெளிப்படுத்தவும் வேண்டும். இவ்விரு முக்கிய அம்சங்கள் மனிதனது அனைத் துச் கிரியைகளும் ஏற்றுக் கொள்ளப்படுதவற்குரிய முக்கிய அடிப்படைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அவ்விரு அடிப்படைகளின்றி எந்தவொரு மனிதனும் முஸ்லிமாகக் கரு தப்பட மாட்டான். மேலும் மனிதன் செய்யும் எக்கிரியையாக இருந்தாலும் அவன் அதனை நடைமுறைப்படுத்தும்போது அல் லாஹ்வுக்காகவே செய்கின்றேன் என்ற தூய்மையான எண்ணம் அவனது உள்ளத்தில் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்ப துடன் அவனது கிரியைகளும், நடைமுறைகளும் நபியவர்களது வழி முறைகளுக்கொப்பவே இருக்கவும் வேண்டும். மேலும் நபி (ஸல்) அவர்கள் நமக்கு எவைகளை மார்க்கத்திலுள்ளவை என கற்றுத்தந்தார்களோ அவற்றைக் கொண்டே நாம் அல்லாஹ்வை வணங்கி வழிப்பட வேண்டும்.

இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதை ஏற் றுக் கொள்வதின் கருத்தாவது, அவர்கள் அல்லாஹ்வின் புறத்தி லிருந்து எவைகளையெல்லாம் நமக்கு எடுத்துச் சொல்கின்றாரோ

அவையனைத்தும் அவன் கூறும் சட்டங்கள் என நம்ப வேண்டும். அத்துடன் அவைகளை நமது வாழ்விலும் எடுத்து நடக்க வேண்டும். அதேபோன்று அவர்கள் எவைகளையெல்லாம் செய்ய வேண்டாம் என தடுத்திருக்கின்றார்களோ, அவைகளில் ஈடுபடாது நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். மேற்கூறப்பட்ட இரு விஷயங்களையும் ஒருவன் உறுதியாக நம்பும்போது அவன் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றான். அத்துடன் படைப்பினங்களுக்கு அடிமையாய் இருந்து தனது வாழ்வை அழித்துக் கொள்வதிலிருந்தும், இறை தூதர்கள் அல்லாதோரைப் பின்பற்றுவதிலிருந்தும் பாதுகாக்கப் படுகின்றான்.

2. தொழுகையை நிறைவேற்றுதல். தொழுகையை நிறைவேற்றுதல் என்பதின் கருத்தாவது, இஸ்லாம் நமக்குக் கட்டளையிட்டதின் பிரகாரம் ஒவ்வொரு தொழுகையையும், அதனது உரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். மேலும் அவைகளது நிபந்தனைகளையும், ஒழுங்குகளையும் கவனித்து நபியவர்கள் எவ்வாறு தொழுது காட்டினார்களோ அதன்பிரகாரம் தொழுது வரவும் வேண்டும் என்பதாகும். மேலும் ஒவ்வொரு மனிதனும் ஒரு நாளைக்கு ஐவேளை என்ற அடிப்படையில் அல்லாஹ்வை தொழுது வணங்கி வழிப்பட வேண்டுமென இஸ்லாம் பணித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு கடமையாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகையையும் பார்ப்போம். அவைகளில் அதிகாலையில் நிறைவேற்றும் தொழுகைக்கு பஜ்ர் என்றும், நண்பகலில் நிறைவேற்றும் தொழுகைக்கு ளுஹர் என்றும், பிற்பகலில் நிறைவேற்றும் தொழுகைக்கு அஸ்ர் என்றும், அந்தி சாயும் நேரத்தில் நிறைவேற்றும் தொழுகைக்கு மக்ரிப் என்றும், இரவில் நிறைவேற்றும் தொழுகைக்கு இஷாவென்றும் கூறப்படுகின்றது.

ஆக ஒரு அடியான் எப்போது அத்தொழுகைகளை சிறந்த முறையில் நிறைவேற்றி வருகின்றானோ அப்போது அவன் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றான் என இஸ்லாம் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றது. ஒருவன் அத்தொழுகைகளை

நிறைவேற்றுவதின் மூலம் பெற்றுக் கொள்ளவிருக்கும் நன்மைகளில் சிலதைப் பார்ப்போம். இஸ்லாம் எதிர்பார்ப்பது போன்று எவன் அத்தொழுகைகளை சரியான முறையில் நிறைவேற்றி வருகின்றானோ அப்போது அவனது உள்ளம் விருத்தியடைகின்றது. அவ்வணக்கத்தின் மூலம் அவன் சந்தோஷமடைகின்றான். அவ்வணக்கத்தை சிறந்த முறையில் அவன் நிறைவேற்றும் போது அவனது சிந்தனா சக்தியும், உடம்பும் வலுப்பெறுகின்றன. ஷைத்தான் அவனிலே ஏற்படுத்தக்கூடிய சோம்பலை விட்டும் அவன் பாதுகாக்கப்படுகின்றான். மேலும் இஸ்லாத்தில் நிராகரிக்கப்பட்டவைகள், வெறுக்கப்பட்டவைகள் போன்றவைகளைத் தவிர்ந்து நடக்க அவ்வணக்கம் அவனுக்கு வழிவகுக்கின்றது. இஸ்லாத்துக்கு யாரெல்லாம் எதிரிகளாக இருக்கின்றார்களோ அவர்களுடன் இவனும் எதிரியாய் இருக்கின்றான். இஸ்லாமிய சகோதரர்களோடு ஒற்றுமையாய் இருந்து அவர்களுடன் சந்தோஷமாகவும் வாழ்ந்து வருகின்றான். இதுபோன்ற இன்னும் எண்ணற்ற நன்மைகளை அவ்வணக்கத்தின் மூலம் அவன் பெற்றுக் கொள்கின்றான்.

3. ஏழைவரி கொடுத்தல். ஏழைவரி கொடுப்பதென்பதின் கருத்தாவது, அல்லாஹுத்தஆலா தான் நாடியவனுக்கு சொத்து, செல்வங்களை அருளியிருக்கின்றதைப் பார்க்கின்றோம். அவ்வாறு அருளிய அச்செல்வம் அவனிடம் ஒரு வருடம் பூரணமாக இருந்தால், அவன் இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களுக்கமைய அச்செல்வத்திலிருந்து ஏழைகளுக்குரிய பங்கை கொடுத்துவிட வேண்டும். குறிப்பாக அவ்வணக்கத்தை நிறைவேற்றும்போது குர்ஆன் எக்கூட்டத்தினருக்கு கொடுக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றதோ அக்கூட்டத்தினருக்கு மாத்திரமே கொடுக்க வேண்டும். மேலும் எவன் இஸ்லாம் கூறுவதின் பிரகாரம் அக்கடமையை நிறைவேற்றி வருகின்றானோ அவனுக்கு அல்லாஹுத்தஆலா பலவிதமான நன்மைகளை வழங்குகின்றான். என இஸ்லாம் குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றது. அந்நன்மைகளில் சிலதை இங்கே பார்ப்போம். நாம் நமது செல்வத்திலி

ருந்து அவ்வரியை உரியவர்களுக்குக் கொடுக்கும் போது நம்மிடத்திலிருந்து கஞ்சத்தனம் நீங்கி விடுகின்றது. நமது செல்வத்திலிருந்து ஏழைகளுக்குரிய பங்கை கொடுக்கும்போது நமது செல்வம் பெருகிக் கொண்டே போகின்றது. நமது இஸ்லாமிய சகோதரர்களுக்கு எண்ணிலடங்காத தேவைகள் இருந்து கொண்டிருக்கும். என்றாலும் அவைகளை நிறைவு செய்து கொள்ளுமளவுக்கு அவர்களிடம் பணம் இருக்காது. நாம் அவர்களுக்குரிய பங்கை கொடுக்கும்போது அதன்மூலம் அவர்களது தேவைகளை அவர்கள் நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அப்போது அவர்களது தேவையை நாம் நிறைவேற்றி வைத்தவர்களாக ஆகிவிடுகின்றோம்.

மேலும் நமது செல்வத்திலிருந்து அவர்களுக்குரிய பங்கைக் கொடுக்கும்போது அவர்களுக்கும் நமக்குமிடையில் அன்பு, பரஸ்பர ஒற்றுமை போன்றவைகள் ஏற்படுகின்றன. அவ்வணக்கத்தை நாம் நிறைவேற்றுகையில் இஸ்லாமிய சமுதாயத்தில் யாசகம் கேட்டுத்திரியும் கூட்டத்தை அழித்து விடுகின்றோம். மற்றொரு வகையில் அவர்களையும் நம்மைப் போன்று கண்ணியமாக வாழ வழிவகுக்கின்றோம். நம்மிடம் அதிகம் செல்வம் இருந்தால் நிச்சயம் ஏழைகள் அதைப்பார்த்து பொறாமைப்படுவார்கள். நாம் அவர்களுக்குரிய பங்கைக் கொடுக்கும்போது அவர்களது பொறாமையிலிருந்தும், ஓரக்கண் பார்வையிலிருந்தும், அவர்களது தீங்குகளிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது. அவ்வரியைக் கொடுக்கும்போது தன்னிடம் காணப்படும் செல்வந்தன் என்ற அகங்காரம் நீங்கி, தாழ்மையோடு நடந்து கொள்வதற்கோர் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றது. அவ்வணக்கத்தில் நாம் ஈடுபடும்போது நமது ஏழை சகோதரர்களது நிலைமைகளையும் சற்று சிந்தித்துப் பார்க்க வாய்ப்பளிக்கின்றது. இவைபோன்று இன்னும் எத்தனையோ நன்மைகளை அவ்வணக்கத்தில் ஈடுபடுவோருக்கு இஸ்லாம் ஏற்படுத்தி வைத்திருக்கின்றது.

4. ரமழான் மாதத்தில் நோன்பு வைத்தல். ரமழான் மாதத்தில் நோன்பு

வைப்பதென்பதின் கருத்தாவது, ரமழான் மாதத்தை அடைந்து கொள்ளும் ஒவ்வொரு முஸ்லிமும் அந்நாட்களில் அதிகாலையி லிருந்து சூரியன் மறையும்வரை தனது உணவையும், குடிப் பையும், மனைவியுடன் உடலுறவு கொள்வதையும் தவிர்ந்து கொள்ள வேண்டும். அதேபோன்று இஸ்லாம் எவைகளையெல் லாம் நோன்பை முறிக்கக்கூடியவை எனக்கூறியிருக்கின்றதோ அவைகளையும் தவிர்ந்து நடக்க வேண்டும். இப்படியாக தன் னைக் கட்டுப்படுத்தி அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதற்கே நோன்பு எனப்படுகின்றது. ஒரு முஸ்லிமானவன் நோன்பு வைத்து அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதின் மூலம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றான். அந்நன்மைகளில் சில தையும் இங்கே பார்ப்போம். ஒருவன் அவ்வணக்கத்தை சிறந்த முறையில் நிறைவேற்றும்போது அவனது உள்ளம் தூய்மைய டைகின்றது. தீய செயல்களும், தீய எண்ணங்களும் அவனை விட்டும் தூரமாகின்றன. அவனது ஆன்மாவும் அவ்வணக்கத் தின் மூலம் வலுப்பெறுகின்றது.

அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவ்வணக்கத்தை அவன் நிறைவேற்றும் போது தனக்கு விருப்பமானவைகளையும் தவிர்ந்து நடக்கின்றான். அவன் பசித்திருந்தும், தாகித்திருந்தும், ஏனைய சில காரியங் களை செய்வதிலிருந்து ஒதுங்கியிருந்தும் அவ்வணக்கத்தை நிறைவேற்றி வரும்போது எக்கஷ்டத்தையும் இலேசான முறை யில் சகித்துக் கொள்ளும் தன்மையைப் பெறுகின்றான். மேலும் அவ்வணக்கம் அல்லாஹ்வுக்கும், அவனுக்குமிடையிலான ஒன் றாக இருப்பதால் அதனை எவ்வாறும் நிறைவேற்றலாம் என்றில் லாமல் அல்லாஹ் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற பயத்தோடு சிறந்த முறையில் நிறைவேற்ற எத்தனிக்கின் றான். மேலும் தனது எல்லாக் கடமைகளையும் சரிவர நிறை வேற்ற வேண்டும் என்ற ஒரு பொறுப்புணர்வையும் அவ்வணக் கம் அவனிலே ஏற்படுத்துகின்றது. நோன்பு வைத்து பசி, தாகத் தோடு இருக்கையில் தனது இஸ்லாமிய ஏழை சகோதரர்கள்

உண்ண உணவின்றியும், குடிக்க நீரின்றியும் எவ்வாறு கஷ்டப் படுகின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கொரு வாய்ப்பளிக் கின்றது. அவ்வணக்கம் அவனது உடலுக்கு பூரண ஆரோக்கி யத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது. இவை யனைத்தும் அவ் வணக்கத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகளில் சிலதாகும்.

5. மக்கா நகரிலுள்ள க.்.பா என்ற ஆலயம் சென்று அல்லாஹ்வை ஹஜ் செய்வதாகும். மக்கா சென்று ஹஜ் செய்தவதென்பதின் கருத்தாவது, யாரிடம் பணமும், உடம்பில் சக்தியும், வழிப்பய ணத்தால் பயமின்றியும் இருக்கின்றார்களோ அவர்கள் தங்களது வாழ்வில் ஒரு முறையேனும் அம்மக்கா நகர் சென்று இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களுக்கமைய அவ்வணக்கத்தை நிறை வேற் றுவதையே ஹஜ் எனப்படுகின்றது. அவ்வாறு ஒருவன் அக்கட மையை நிறைவேற்றும் போது அவன் பலவிதமான நன்மை களை பெற்றுக் கொள்கின்றான். அவைகளில் சிலதை இப்பகுதி யில் பார்ப்போம்.

அக்கடமையை நிறைவேற்ற மக்கா நகர் செல்லும் அனைவ ரும் வெள்ளை ஆடையை அணிந்து செல்வதாலும், அவர்கள் அனைவரும் அறபா மைதானம் போன்ற இடங்களில் ஒரேநேரத் தில் ஒன்று கூடுவதாலும் மறுமையின் காட்சிகளை நினைவு படுத்துகின்றது. தனக்கு அல்லாஹ்வின் புறத்தால் வழங்கப்பட்ட செல்வத்தையும், உடல் பலத்தையும் அவனது பாதையில் செலவு செய்வதற்குரியவாறு உள்ளத்தை பழக்கப்படுத்திக் கொள்ள அவ்வணக்கம் வழிவகுக்கின்றது. அல்லாஹ்வுக்கென்ற எண்ணத்தில் அவ்வணக்கத்தை நிறைவேற்றச் செல்வதால் அவ னது அன்பைப் பெற்று அவனுக்கு நெருக்கமான அடியார்களில் ஒருவனாக மாறுகின்றான். அக்கடமையை நிறைவேற்ற பல நாடுகளிலிருந்தும், பல திசைகளிலிருந்தும் பல்லாயிரக் கணக் கான மக்கள் வருவதால் அவகளுக்கிடையில் இஸ்லாமிய சகோ தரத்துவம் வலுப்பெறுகின்றது. அதேபோன்று ஒருவர் மற்றவரை அறிந்து கொள்வதற்கும், அவர்களது கஷ்ட, துன்பங்களைப் பரி மாறிக் கொள்வதற்கும், அவர்களுக்கிடையில் உதவி ஒத்தாசை

யாக இருப்பதற்கும், பரஸ்பர அன்பைப் பரிமாறிக் கொள்வதற்கும் அவ்வணக்கம் வழிவகுக்கின்றது.

இவைதான் இஸ்லாம் கூறும் பிரதானமான ஐந்து கடமைகளும், அவைகளின் மூலம் கிடைக்கும் பிரயோஜனங்களிற் சிலதுமாகும். ஆகவே அவ்வணக்கங்கள் பெற்றுத்தரும் நன்மைகள் பலநூறு இருப்பதால் அவைகளை தெரிந்து கொள்ள விரும்புவோர் அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகிய இரு நூல்களிலும் தேடிப் பெற்றுக் கொள்ளவும்.

**இஸ்லாமிய கொள்கை அடிப்படை.**

இஸ்லாம் கொள்கையடிப்படையிலும், மார்க்க சட்டதிட்டங்களினடிப்படையிலும் உருவானதோர் மார்க்கமாகும். அதுகூறும் சில மார்க்க சட்டதிட்டங்களைப்பற்றி முன்னய பகுதிகளில் விளக்கியிருக்கின்றோம். அதேபோன்று மார்க்கத்தின் முக்கியமான ஐந்து கடமைகளையும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். இப்பகுதியில் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்தவைகளையும், நபி (ஸல்) அவர்களின் புறத்திலிருந்து வந்தவைகளையும், சரியான சட்டதிட்டங்களையும், மறைவானவைகளையும் நம்பிக்கை கொள்தல் என்ற கருத்தில் அமையும் ஈமானைப் பற்றிப் பார்ப்போம். நாம் நமது வாழ்வில் கட்டாயம் நம்ப வேண்டிய முக்கிய அம்சங்கள் என ஆறு விஷயங்களை இஸ்லாம் நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றது. அந்த ஆறு விஷயங்களும் முறையே அல்லாஹ்வையும், அவனது வானவர்களான மலக்குகளையும், அவனது வேதநூல்களையும், அவனால் அனுப்பப்பட்ட இறைத்தூதர்களையும், மறுமை நாளையும், தனக்கு ஏற்படும் நல்லவை, தீயவை அனைத்தும் அவனது ஏற்பாட்டின் பிரகாரமே நடக்கின்றன என்பவைகளையும் நம்பிக்கை கொள்வதாகும். மேற்கூறப்பட்ட ஆறு விஷயங்களையும் சற்று விரிவாகவும் தெளிவாகவும், ஒன்றன் பின் ஒன்றாகவும் எடுத்து நோக்குவோம்.

**இஸ்லாமிய கொள்கை அடிப்படைகள்.**

**அல்லாஹ்வை நம்பிக்கை கொள்தல்.**

நாம் கட்டாயமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய ஆறு விஷயங்களில் படைத்தவன் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது முதலி

டத்தை வகிக்கின்றது. அவனை நம்பிக்கை கொள்வதென்பதின் கருத்தாவது, அவன்தான் நம்மைப் படைத்தவன், பரிபாலித்துக் கொண்டிருப்பவன், தனித்தவன், இணை துணையற்றவன், வணக் கத்துக்குரியவன் என ஏற்றுக் கொள்வதாகும். இவ்வாறு ஏற்றுக் கொள்வதுதான் இஸ்லாமிய முக்கிய அடிப்படையாகவும், சிறந்த அறி வாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. வணக்கத்துக்குரிய நாயன் ஒருவன் இருக்கின்றான் என்பதை எவ்வாறு நம்புவது? என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் உரிய முறையில் இஸ்லாம் எதிர்பார்க்கும் அடிப்படையில் அவனை நம்பிக்கை கொள்ளலாம்.

அல்லாஹ்வைப்பற்றி உரிய முறையில் நம்பிக்கை கொள்வதென்ப தின் கருத்தாவது, அவன்தான் இவ்வுலகிலிருப்பவைகளின் நாயனும், அரசனுமாவான். அவன்தான் இப்பாரிய உலகைப் படைத்து அதனை நிர்வகித்துக் கொண்டிருக்கின்றான். அவன்தான் வணக்கத்துக்குரிய இணையற்ற நாயன். அவனுக்கு பூரணத்துவமிக்க பெயர், பண்புகள் இருக்கின்றன. அவன் எல்லாக் குறைகளை விட்டும், அவனால் படைக்கப்பட்ட படைப்பினங்களுக்கு ஒப்பாகுவதை விட்டும் தூய் மையானவன் என்று உள்ளத்தால் உண்மைப்படுத்தி நாவினால் மொழிவதாகும்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான். அவனது சிந்தனை சீராக செயல்படும் காலமெல்லாம் அக்கொள்கையின் அடிப்படையில் தான் வாழ்ந்து வருகின்றான். எப்போது அவனது அடிப்படைக் கொள் கைக்கு மாற்றமான சில கருத்துக்கள் அவனதுள்ளத்தில் திணிக்கப் படுகின்றதோ அப்போது அவன் நம்பிமிருந்த உண்மையிலிருந்து தூரமாக்கப்பட்டு வழிகெடுக்கப்படுகின்றான். அதனை அல்குர்ஆன் பின்வருமாறு உண்மைப் படுத்துகின்றது. *அல்லாஹ் மனிதர்களை எ(ந்த மார்க்கத்)தில் படைத்தானோ அத்தகைய இயற்கை மார்க்க(மா கிய இஸ்லா)த்தை(பற்றிப்பிடித்து நிலைத்திருப்பீராக!)(30.30).*

மேலேயுள்ள இறைவசனம் கூறும் பித்ரா என்ற அரபுச் சொல் மனிதனது அடிப்படை நிலையான இஸ்லாத்தையே குறிக்கின்றது.

அதனால்தான் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதன் காபிராக, அல்லது நயவஞ்சகனாக, அல்லது இஸ்லாமியனாக யாராயிருந்தாலும் அவனால் தாங்கிக் கொள்ள முடியாத கஷ்டங்களும், துன்பங்களும் ஏற்படுகின்றபோது அவனுக்குச் சூழாலுள்ள அனைத்தையும் மறந்துவிட்டு தன்னைப் படைத்த உண்மையான இறைவனின் பக்கம் திரும்பி கடவுளே! எனது கஷ்டத்தையும், துன்பத்தையும் நீக்கி விடுவாயாக! என அழைப்பதைக் காணுகின்றோம்.

மனிதன் பிறக்கும்போதே இஸ்லாத்தின் அடிப்படையில் பிறக்கின்றான் என்பதின் கருத்து யாதெனில், அவன் பிறக்கும்போதே தன்னைப் படைத்தவன் அல்லாஹ் என்பதையும், அவன்தான் வணங்கப்படக்கூடியவன் என்பதையும் தான் அவனது அடிமை என்பதையும் ஏற்றுக் கொண்டவனாகவே பிறக்கின்றான் என்பதாகும். அவன் எதனை ஏற்றுக் கொண்டவனாக இவ்வுலகில் பிறக்கின்றானோ அதே அடிப்படையில் அவனுக்கு எவ்விதக் கருத்துத் திணிப்பையும் ஏற்படுத்தாமல் விட்டுவிடுவோமேயானால் அவன் கடைசி வரையும் அதே கருத்தில் இருந்து கொண்டிருப்பான் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இன்றைய நிலமை அவ்வாறன்று அவன் பிறந்து வளர்ந்து வரும்போதே அவனது கொள்கைகளும், கோட்பாடுகளும் மாற்றப்பட்டு விடுகின்றன. அதனை தெளிவுபடுத்தும் முகமாக நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், எல்லாக் குழந்தைகளும் பிறக்கும் போதே இஸ்லாத்தினடிப்படையில்தான் பிறக்கின்றன. ஆனால் அவர்கள் பிறந்ததன்பின் அவர்களுடைய பெற்றோர்கள்தான் அவர்களை யூதர்களாகவும், கிரிஸ்தவர்களாகவும், நெருப்பு வணங்கிகளாகவும் மாற்றி விடுகின்றார்கள் எனக் கூறுகின்றார்கள்(ஹதீஸ்).

மேலேயுள்ள நபிமொழியின் பிரகாரம் பார்க்கும்போது, மனிதன் உலகில் பிறக்கும்போது முஸ்லிமாகவே பிறக்கின்றான் என்பது தெளிவாகின்றது. அதனால்தான் நபி (ஸல்) அவர்கள் மேற்கூறப்பட்ட பொன்மொழியைக் கூறும்போது அவனது பெற்றோர்கள் அவனை முஸ்லிமாக மாற்றுகின்றார்கள் என்ற வார்த்தையைப் பிரயோகிக்கவில்லை. இதிலிருந்து மனிதன் அடிப்படை இஸ்லாத்தில்தான் பிறக்கின்றான் என்பதும், அவனது பெற்றோர்கள்தான் அவனை அந்த

அடிப்படையிலிருந்து தூரமாக்கி யூதர்களாக, கிறிஸ்தவர்களாக, நெருப்பு வணங்கிகளாக அல்லது வேறு கொள்கையுடையவர்களாக மாற்றிவிடுகின்றார்கள் என்பதும் தெளிவாகின்றது. அக்கருத்தின் அடிப்படையில்தான் ஒருவன் இஸ்லாம் தவிர்ந்த ஒரு வழிமுறையை ஏற்றுக் கொள்ளும்போது அவன் இஸ்லாத்திலிருந்தும், அடிப்படை யிலிருந்தும் வெளியேறியவனாகக் கருதப்படுகின்றான்.

உலகில் வாழும் மனிதர்களில் சீரான சிந்தனையுள்ள மனிதன் மட்டும்தான் அவன் பிறக்கும் போதிருந்த அடிப்படைக் கொள்கை யான ஓறிரைக் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றான். அதாவது இந்த உலகத்தையும், அதிலே படைக்கப்பட்டிருக்கின்ற வானம், பூமி, மலை, கடல், மனிதன், மிருகம், பயிர் பச்சைகள், ஏனைய மரம், செடி, கொடிகள் போன்ற எல்லாப் படைப்பினங்களையும் பார்த்து சிந்திக்கின்ற ஒருவன் அவைகளைப் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டுமென்பதையும், அவன்தான் அல்லாஹுத்தஆலா என்பதையும் ஏற்றுக் கொள்வான். இச்சந்தர்ப்பத்தில் உலகில் காணப்படும் படைப்பி னங்களை யார் படைத்தார்கள்? என்ற விஷயத்தில் மனிதர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களில் முக்கிய மூன்று கருத்துக்களைப் பார்ப்போம்.

- உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு படைப்பினமும் ஒரு படைப் பாளன் இன்றி தாமாகவே உருவாகியவை என ஒரு தரப்பினர் கூறுகின்றார்கள். அவர்கள் கூறும் இக்கருத்தை சிந்திக்கக்கூடிய எந்த மனிதனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஏனெனில் சீரான சிந்தனையுள்ள எந்தவொரு மனிதனும் படைத்தவனின்றி ஒரு பொருள் உருவாகியது என்றோ, அல்லது செய்தவனின்றி ஒரு செயல் நடைபெற்றது என்றோ ஒருபோதும் கூற மாட்டான். அவர்கள் கூறும் அக்கருத்து மனித சிந்தனைக்கு எடுபடாத கருத்தாகும்.
- படைப்பினங்கள் தங்களைத் தாங்களே படைத்துக் கொண்டிருக் கின்றன என மற்றுமொரு தரப்பினர் கூறுகின்றார்கள். பொதுவாக எப்பொருளும் தன்னைத்தானே படைத்துக் கொள்ள முடியாது

என்ற உண்மையை சிறந்த முறையில் சிந்தித்து செயலாற்றும் ஒவ்வொருவனும் புரிந்து கொண்டிருப்பான். ஏனெனில் அப் பொருள் உருவாவதற்கு முன் அதன் நிலையே இல்லை என்ற கருத்தில் இருக்கும்போது, எவ்வாறு அதனால் படைக்கக்கூடிய ஒன்றாக இருக்க முடியும்?

- உலகிலுள்ள படைப்பினங்களைப் படைத்து அவைகளைப் பரிபாலித்துக் கொண்டிருக்கும் ஒருவன் இருக்கின்றான். அவன் இல்லாமையிலிருந்து உருவானவனுமல்ல, அழியக் கூடியவைகளைப் போன்று அழிந்து போபவனுமல்ல என மற்றுமொரு தரப்பினர் கூறிவருகின்றார்கள். இதுதான் சரியான கூற்றாகும். இச்சரியான கூற்றைத்தான் அல்லாஹுத்தஆலா கேள்வி அடிப்படையில் கூறி நிரூபிக்கின்றான். அல்லது அவர்கள் எப்பொருளுமின்றி (தாமாகவே) படைக்கப்பட்டு விட்டனரா? அல்லது அவர்கள்தான் படைக்கின்றவர்களா? (52.35).

மேற்கூறப்பட்ட திருவசனத்தின் பிரகாரம் படைப்பினங்கள் படைத்தவனின்றி உருவானவைகளுமல்ல. அதேநேரம் தாமாகவே தங்களைப் படைத்துக் கொண்டவைகளுமல்ல. மாற்றமாக அவைகளைப் படைத்தவன் இஸ்லாம் மார்க்கம் கூறுவது போன்று அல்லாஹ் என்ற பெயரில் இருந்து கொண்டிருக்கின்றான் என்பது தெளிவாகின்றது. ஏனெனில் பொதுவாக ஓரிடத்திலிருந்து ஒரு சத்தம் வெளியானால் அச்சத்தத்தை ஏற்படுத்தியவன் இருக்கத்தான் வேண்டும். அதேபோன்று நாம் காணும் பொருட்களை எடுத்துக் கொண்டாலும் அப்பொருட்களை தயாரியத்தவன் இருக்கத்தான் வேண்டும். அதேபோன்று ஓரிடத்தில் ஒரு வேலை நடந்திருக்கின்றதென்றால் அவ்வேலையைச் செய்தவர்கள் இருக்கத்தான் வேண்டும். உலக விஷயங்களே இப்படியிருக்கும் போது நிச்சயம் இந்த உலகையும், அதிலுள்ளவைகளையும் படைத்தவன் இருக்கத்தான் வேண்டும் என்பது புலனாகின்றது.

படைத்தவனின்றி எப்பொருளும் இல்லை என்ற சட்டம் தெளிவான ஒன்றாகும். அதனை சிந்திக்கக்கூடிய அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். அதனை ஒருவன் ஏற்க மறுத்தால் அவனைப் பைத்தியக்காரன் என்றோ, அல்லது மடையன் என்றோதான் கூற வேண்டும்.

மேற்கூறப்பட்ட கருத்தை முஸ்லிமல்லாத மாற்று மதத்தைச் சேர்ந்த சிந்தனைவாதிகளும், விஞ்ஞானிகளும், தத்துவ வித்துவான்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அந்நிய மதத்தவர்களில் முப்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் எழுதிய "அல்லாஹு ததஜல்லா பீ அஸ்ரில் ஆலம்" என்ற அரபு நூலை வாசித்துப் பார்ப்போமேயானால் அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

அந்நூலிலே அவர்கள் கூறுகையில், பொதுவாக உலகில் வாழும் கல்விமான்களும், பாமரர்களும் உண்மையான இறை விசுவாசிகளாகவே இருக்கின்றர்கள். ஆனால் சிறந்த முறையில் கல்வி கற்காமல் அதிலே அங்கொன்றும், இங்கொன்றுமாக கற்றுக் கொண்டவர்கள்தான் இறைவன் இல்லையென்றும், உலகும், அதிலுள்ளவையும் தாமாகவே உருவாகியவையெனவும் உளருகின்றார்கள். எனக்கூறுகின்றார்கள்.

மேலும் "மனிதன் தானாக இயங்கச் சக்தியற்றவன்" என்ற நூலை எழுதிய கிரீசி மொரிசன் என்பவர் கூறுகையில், மனிதனது வளர்ச்சியும், அவன் ஆற்ற வேண்டிய கடமைகளை உணர்ந்து செயல்படுவதும் அல்லாஹ் என்றொரு கடவுள் இருக்கின்றான் என ஏற்றுக் கொண்டதின் வெளிப்பாடாகும். குறிப்பாக மனிதன் அதிகதிகமாக இஸ்லாத்தைப் பின்பற்றி வரும்போது அவனது உண்மை நிலைப்பாடு என்னவென்பது வெளிப் படுவதுடன், அவன் படிப்படியாக முன்னேறி அல்லாஹ்வுடன் நெருங்கிய தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்கின்றான். அப்படிப்பட்ட ஒரு இறைவிசுவாசி அல்லாஹ்வை நெருங்கும் வகையில் தொழுதுவரும் போது அவனிடமே தனது தேவைகளைக் கேட்டுப்பெற்றுக் கொள்கின்றான். அப்படிப்பட்ட ஒருவனிடம் காணப்படும் அமைதியும், கொடைத்தன்மையும், தெளிவான சிந்தனையும், கண்ணியமும் ஒருபோதும் இறைமறுப்பாளர்களிடம் காணப்படமாட்டாது.

அந்த இறைவிசுவாசம் மனிதர்களிடம் காணப்பட வில்லையாயின் மனித நடைமுறைகள் பெறுமதியற்றுப் போய்விடும். அத்தோடு உலகக் கட்டுப்பாடுகளும், நடைமுறைகளும் சரிவரப் பின்பற்றப்படாமல் அநியாயங்களும், அழிச்சாட்டியங்களும் உலகில் தலைவிரித்தாடும். ஆதலால் தான் நம்மைப் படைத்த ஒருவன் இருக்கின்றான் எனும் நம்பிக்கையில் அவனது கட்டளைகளுக்கு வழிப்படுவது அவசியமாகின்றது.

மேலும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சிந்தனை குறிப்பிட்ட வரையறைக்குற்பட்டதாகும். அவ்வரையறைக்கு உற்பட்டவைகளை மாத்திரமே சிந்திக்க சக்தி பெறுகின்றது. அதற்கப்பாற்பட்டவைகளை அச்சிந்தனையால் ஒருபோதும் சிந்தித்து உணர முடியாது. ஆதலால் இந்த உலகையும், அதிலிருக்கும் படைப்பினங்களான சூரியன், சந்திரன், நட்சத்திரம், பயிர், பச்சைகள் போன்ற அனைத்தையும் படைத்த இறைவன் அல்லாஹ் இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவன் எப்படிப் பட்டவன்? எந்த அமைப்பில் இருக்கின்றான்? அவனது நடை முறைகள் என்னவென்பதையெல்லாம் சிந்திக்க முற்படக் கூடாது.

மேலும் மனிதர்கள் உலகில் எல்லாப் பாகங்களிலும் பரந்து வாழ்கின்றார்கள். அவ்வாறு வாழக்கூடிய அவர்கள் சந்தோஷமான முறையில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகி வருகின்றார்கள். அதேநேரம் அவர்கள் எப்படிப்பட்ட கஷ்ட, துன்பங்களுக்கு ஆளாகினாலும் அவர்களை அதிலிருந்து காப்பாற்றக்கூடிய கடும் சக்தி வாய்ந்த ஒருவன் அவர்களுக்கு மேலால் இருக்கின்றான் என்பதை அறிந்து வைத்திருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு திடமான நம்பிக்கை அவர்களிடத்தில் காணப்படுவதின் மூலமும் இந்த இஸ்லாம் மார்க்கம் இயற்கையில் உருவான சத்திய மார்க்கம்தான் என்பது தெளிவாகின்றது எனக் கூறுகின்றார்.

மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற உணர்வுகளும் அல்லாஹ் என்றொருவன் இருக்கின்றான் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அதனை பல உதாரணங்களைக்கூறி தெளிவுபடுத்தலாம். அதிலொன்றாக பொதுவாக மனிதன் கஷ்டத்துக்கும், துன்பத்துக்கும் ஆளாகக் கூடிய ஒருவன் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்வாறு அவனுக்கு கஷ்ட, துன்பங்கள் ஏற்பட்டால் அவன் வாய்மூடியிருக்கும் ஒரு சடப்பொருளல்ல. மாற்றமாக அவனது கஷ்டத்தையும், துன்பத்தையும் தன்னைப் படைத்தவனிடம் முறையிட்டு பிரார்த்திக்கின்றான். படைத்த இறைவனும் அவனது பிரார்த்தனையை ஏற்று அவனது கஷ்ட, துன்பங்களை நீக்கி வைக்கின்றான். அதனை நாம் கண்கூடா

கப் பார்க்கவும் செய்கின்றோம். இவ்வாறான ஒரு நிகழ்ச்சி நம்மத்தியில் இடம் பெறுவதால் உண்மையான கடவுள் என்றொருவன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும் மனிதன் கேட்கும் பிரார்த்தனைகளுக்கு விடையளிக்கப் படுகின்றன என்பதற்கு இஸ்லாம் பல ஆதாரங்களை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக முஸ்லிம்கள் அனைவரும் அவைகளை அறிந்து வைத்திருக்கின்றார்கள். தெரிந்து கொள்ளாதோர் தெரிந்து கொள்வதற்காக சில ஆதாரங்களை இங்கே பார்ப்போம். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. இன்னும் உங்களுடைய இரட்சகன் கூறுகின்றான். நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி)யுங்கள். நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்கு பதிலளிப்பேன்(40.60).

மற்றொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றது.(உங்களுடைய தெய்வங்கள் சிறந்தவையா?) அல்லது கடுந்துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டவனுக்கு, அவனை இவன் அழைத்தால் (அவனுக்குப்) பதிலளித்து, மேலும் (அவனுடைய அத்துன்பத்தை நீக்கி வைப்பவன் சிறந்தவனா? (27.62).

மேலும் நபிமார்களது பிரார்த்தனைக்கு அல்லாஹுத்தஆலா விடையளித்ததைப்பற்றிக் கூறுகையில் பின்வருமாறு கூறுகின்றது. நூஹையும் (நினைவு கூர்வீராக!) முன்னர் அவர் (பிரார்த்தனை செய்து) அழைத்த போது அவருக்கு (அவரது பிரார்த்தனையை ஏற்று) நாம் பதில் கூறினோம்(21.76).

மற்றொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றது. நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத் தேடியபோது உங்களுக்கு அவன் பதிலளித்தான்(8.9).

நபிமார்களுக்கும், இறைத் தூதர்களுக்கும் வழங்கப்பட்ட அற்புதங்களும் அல்லாஹ் என்றொருவன் இருக்கின்றான் என்பதை தெளிவுபடுத்துகின்றன. அவர்கள் காட்டிய அற்புதங்கள் வழமைக்கு மாறானவையாகவும், மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாகவும் இருந்தன. நபிமார்களும், அவர்கள் கொண்டு வந்த வேதங்களும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துவதற்கே அவர்களுக்கு அவ்வாறான அற்புதங்களை அல்லாஹ் வழங்கினான். மேலும் நபிமார்கள் நிகழ்த்திக்

காட்டக்கூடிய அற்புதங்கள் அவர்களை நபிமார்களாக அனுப்பிய ஒரு வன் இருக்கின்றான் என்பதற்குரிய தெளிவான அத்தாட்சியாகும். அந்த அற்புதங்களுக்குதாரணமாக பின்வரும் சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

நபி மூஸா (அலை) அவர்கள் ஏகத்துவப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் அவர்களது எதிரியான பிர்அவ்னும், அவனது சகாக்களும் மூஸா (அலை) அவர்களுக்கும், அவர்கள் போதித்த ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் முடிவுகட்டும் முகமாக அவர்களைத் துரத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இவர்களும் ஓடிக் கொண்டிருந்தார்கள். இடையில் கடல் குறிக்கிடவே நபி மூஸா (அலை) அவர்களைப் பார்த்து அவர்களது தோழர்கள் எங்களை பிர் அவ்னும், அவனது கூட்டத்தினரும் பிடித்துக் கொள்வார்கள் எனக் கூறினார்கள். அவர்கள் கூறிய அவ்வார்த்தையை அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். நிச்சயமாக நாம்(அவர்களால்) பிடி பட்டு விடுபவர்கள் தாம் என்று அவர்கள் கூறினார்கள்(26.61).

அதைக்கேட்ட மூஸா (அலை) அவர்கள் தனது தோழர்களை சமாதானப்படுத்தும் வகையில் நீங்கள் பயப்பட வேண்டாம். எனது இறைவன் இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கொரு வழிகாட்டுவான் எனக்கூறினார்கள். அவர்கள் கூறிய அவ்வார்த்தையை இறைவன் பின் வருமாறு கூறிக்காட்டுகின்றான். (அதற்கு) ஒரு போதும் இல்லை! நிச்சயமாக என்னுடன் என்னுடைய இரட்சகன் இருக்கின்றான். (இதிலிருந்து ஈடேறும்) வழியை நிச்சயமாக எனக்கு அவன் காட்டுவான் என்று (மூஸாவாகிய) அவர் கூறினார்(26.62).

மூஸா நபியவர்கள் இறைவன் மீது வைத்திருந்த அபார நம்பிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும் வகையில் அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு பின்வருமாறு பணிக்கின்றான். நாம்(அவரிடம்)உம்முடைய கைத்தடியைக் கொண்டு இக்கடலை அடிப்பீராக! என்று அவருக்கு கூறினோம்(7.160).

அக்கட்டளையின் பிரகாரம் மூஸா (அலை) அவர்கள் தனது கையிலிருந்த தடியால் அக்கடலை அடிக்கின்றார்கள். அக்கடலும் பன்னிரண்டு பாதைகள் கொண்ட கடலாக மாறுகின்றது. அப்பாதைகளில்

ஒன்றினூடாக மூஸா (அலை) அவர்களும், அவர்களது தோழர்களும் பாதுகாப்பாக கடந்து சென்றார்கள். அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த பிர்அவ்னும், அவனது சகாக்களும் கடலில் இறங்கிச் செல்லுகையில் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் கடல் முன்பிருந் தவாறே மாறியது. அதற்குள் அகப்பட்டுக் கொண்ட பிர்அவ்னும், அவனது சகாக்களும் நீரில் மூழ்கி மரணிக்கின்றார்கள். அதன்பின் மூஸா (அலை) அவர்களும், அவர்களது தோழர்களும் பாதுகாப்பாக கடலிலிருந்து வெளியேறினார்கள்.

அதேபோன்று நபி ஈஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹுத் தஆலா மரணித்தவர்களை உயிர் கொடுத்து எழும்பும் தன்மையைக் கொடுத்திருந்தான். இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் அவர்களது தோழர்கள் குடிக்க நீர் கேட்ட போது அல்லாஹுத்தஆலா அவர்களது கைவிரல்களின் இடுக்குகளிலிருந்து நீர் வெளியாக்கச் செய்தான். அதேபோன்று நபியவர்கள் ஏகத்துவப் பிரச்சாரத்தில் ஈடுபட் டுக் கொண்டிருக்கையில் அன்று வாழ்ந்த மக்கா குறைஷிக் காபிர்கள் நபியவர்களிடம் தாங்கள் நபியென்பதற்கு ஒரு அற்புதத்தை நிகழ்த்திக் காட்டுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்கள். நபியவர்களும் அதனை இறைவனிடம் முறையிட்டார்கள். அப்போது உங்களுடைய விரலை சந்திரனின் பக்கம் அசையுங்கள், அச்சந்திரன் இரண்டாகப் பிளந்து கொள்ளும் என அவன் கட்டளை பிறப்பிக்கின்றான். அதன் பிரகாரம் அவர்களும் தனது ஆட்காட்டி விரலை சந்திரனின் பக்கம் அசைக்க அச்சந்திரன் இரண்டாகப் பிளந்து காணப்பட்டது. அக்காட்சி பொய் யென்பதற்கு இடமில்லாதவாறு அக்குறைஷிக் காபிர்களும் கண்கூடா கக் கண்டார்கள். இவ்வாறான அற்புதங்களை மக்களுக்கு தெளிவு படுத்துவதன் மூலம் அதனை நிகழ்த்துபவன் ஒருவன் இருக்கின் றான் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்துகின்றான். அதேபோன்று நம்மி டத்தில் காணப்படக் கூடிய இறுதிவேதம் அல்குர்ஆனும் பாரியதோர் அற்புதமாகும்.

மக்களுக்கு வழிகாட்டியாக அனுப்பப்பட்ட நபிமார்களையும், இறைத்தூதர்களையும் நம்பிக்கை கொள்வதும் அல்லாஹ் என்றொரு வன் இருக்கின்றான் என்பதனை தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ்வி

னால் அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள்தான் அவனது தூதுத்துவத்தைக் போதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள்தான் மனித சமுதாயத்தில் உண்மை பேசக்கூடியவர்களாகும். அல்லாஹ்வின் கட்டளைகளையும், சட்டதிட்டங்களையும் போதிக்கும் விஷயத்தில் ஒருபோதும் பொய் பேசவே மாட்டார்கள். இதேநேரம் மனிதர்களில் தாமும் நபி தான் என வாதிடும் சிலர் இருக்கின்றார்கள். அவ்வாறு நபித்துவத்தை தக்க ஆதாரமின்றி வாதிடுபவர்கள் பொய்யர்களாகும். நபிமார்கள் உண்மையானவர்கள் என்ற அடிப்படையில் தான் அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு அற்புதங்களை வழங்கியும், அவர்களது பிரார்த்தனைகளை ஏற்று பகைவர்களை அழித்தும் பலவாறு உதவி செய்தும் கண்ணியப்படுத்தியிருக்கின்றான். அவ்வாறின்றி அவர்களும் பொய்யர்களாக இருந்தால், தான் நபியென வாதிட்ட பொய்யர்களை எவ்வாறு இழிவுபடுத்தி அழித்தானோ அதேபோன்று அவர்களையும் அழித்திருப்பான்.

நபிமார்களுக்கும், தூதர்களுக்கும் அல்லாஹுத்தஆலா உதவி செய்ததின் மூலம் அவர்கள் உண்மையானவர்கள் என்பது தெளிவாகின்றது. அவர்களை உண்மையாகவே விசுவாசிப்பவன் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவர்கள் என்றே நம்புகின்றான். எனவே அவர்களை தூதராக அனுப்பியவனும் நிஜமாக இருந்து கொண்டிருக்கின்றான் என்பதை நம்பி அவனையே வணங்கவும் வேண்டும்.

உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்பினமும் தாம் இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும்? என்பதை அறிந்து செயல்படுவதும் அல்லாஹ் என்றொரு கடவுள் இருக்கின்றான் என்பதையே தெளிவுபடுத்துகின்றது. பொதுவாக மனிதன், மிருகம், பறவை, ஊர்வனம் போன்ற அனைத்துப் படைப்பினங்களும் எவ்வாறு தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையை அல்லாஹுத்தஆலா அவைகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றான். அதன்பிரகாரமே ஒவ்வொரு படைப்பும் வாழ்ந்து வருகின்றன. அந்த அடிப்படையில்தான் குழந்தை பிறந்தவுடன் தனது தாயின் மார்பகத்தில் வாய் வைத்து பாலருந்தும் முறையை கற்றுக் கொள்கின்றது. அவ்வாறே அக்குழந்தை பால் அருந்தும்போது அதன் முகத்திலும், நாவிலும், கழுத்திலும், கீழ்த் தாடையிலும், மூச்சு விடுவதிலும் ஏற்படுகின்ற

தொடர் மாற்றங்கள் எவ்வித முன்னறிவுமின்றி வல்லோனின் வழிகாட்டலின் மூலமே இடம்பெறுகின்றன. அதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. (அதற்கு) எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய தோற்றத்தை கொடுத்து பின்னர் வழியையும் காட்டியிருக்கிறானோ அவன்தான் எங்கள் இரட்சகன் என்று அவர் கூறினார்(20.50).

மேலும் மனிதன் சிந்தித்து செயல்படுவதற்குரியவாறு அறிவையும், சக்தியையும், அவனுக்கு அவசியமானவைகளையும் கற்றும் கொடுத்திருக்கின்றான். மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட அந்த அறிவைப் பயன்படுத்தித்தான் தான் எவ்வாறு வாழவேண்டும்? என்ற முறையை அறிந்து அவன் செயல்படுகின்றான். அதேபோன்று பறவைகள், மிருகங்கள், ஊர்வனங்கள் போன்ற வைகளுக்கும் மனிதனால் செய்ய முடியாத பல ஆச்சரியப்படக் கூடிய காரியங்களைச் செய்யும் தன்மையைக் கொடுத்திருக்கின்றான். அவைகளை இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள விரும்புவோர் எறும்பு, தேனி, புறா போன்ற பறவைகள் எவ்வாறு வாழ்ந்து வருகின்றன? அவைகளுக்குரிய உணவுகளை எவ்வாறு பெற்றுக் கொள்கின்றன? அவைகள் தங்கியிருக்கக்கூடிய கூடுகளை எவ்வாறு கட்டிக் கொள்கின்றன? என்பவைகளைச் சற்றுப் பாருங்கள். பறவைகள், மிருகங்கள் எனப்பாராது அவைகளுக்கும் வழிகாட்டக் கூடியவாறு வல்ல அல்லாஹ் இருந்து கொண்டிருக்கின்றான் என்பதை தெளிவுபடுத்தும் ஆச்சரியமான விஷயங்களைத் தெரிந்து கொள்வீர்கள்.

**மலக்கு(வானவர்)களை நம்புதல்.**

அல்லாஹ்வின் படைப்புகளில் மலக்குகள் எனப்படும் வானவர்களை நம்புவது ஈமானின் இரண்டாவது அம்சமாகும். வானவர்கள் எனப்படுவோர் மனித, ஜின்னினங்களினது கண்களுக்குப் புலப்படாதவாறு வாழ்ந்து வரும் ஒரு படைப்பினமாகும். அல்லாஹுத்தஆலா மனித, ஜின்னினங்களைப் போன்று அவர்களைப் படைக்காமல் ஒளியினால் அவர்களைப் படைத்து, அவனை வணங்கி வழிப்படும் வகையில் அதற்குத் தேவையான அறிவை மட்டுமே கொடுத்திருக்கின்றான். அதனால்தான் அவர்கள் எல்லா நேரங்களிலும் அவனை வணங்கிக் கொண்டும், துதித்துக் கொண்டும், புகழ்ந்து கொண்டுமிருகின்றார்கள்.

இவ்வாறான சிறப்புகளோடு அவர்கள் படைக்கப்பட்டிருந்தாலும் அல்லாஹ்விடம் இருக்கக்கூடிய எப்பண்பும் அவர்களிடம் கிடையாது. ஆதலால் அவர்களால் எப்பொருளையும் படைக்கவோ, அல்லது அழிக்கவோ அல்லது எந்த உயிரினத்துக்கும் உணவளிக்கவோ, அவர்களுக்குரிய உணவைத் தடுக்கவோ முடியாது என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறில்லாமல் அவர்கள் அல்லாஹ்வுக்கு நெருக்கமானர்கள் எங்களுக்கு முடியாத சில காரியங்களை அவர்களால் நிறைவேற்றி வைக்க முடியும் என்ற அடிப்படையில் அவர்களை வணங்கவோ, அல்லது அவர்களிடம் உதவி தேடவோ, அல்லது அல்லாஹ்வுக்குச் செய்யும் வேறு எந்த வணக்கத்தையேனும் அவர்களுக்குச் செய்யவோ கூடாது. யாராயினும் அவ்வாறு செய்தால் அவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தவனாகவும், இஸ்லாத்திலிருந்து வெளியேறியவனாகவும் கருதப்படுகின்றான்.

அவ்வானவர்கள் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளுக்கு முற்று முழுதாக கட்டுப்பட்டு, அடிபணிந்து நடப்பதற்குரியவாறு அவனது சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மையையும், அச்சட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலையும் அவன் வழங்கியிருக்கின்றான். மேலும் அவ்வானவர்களின் எண்ணிக்கையில் சிலதை மாத்திரமே நமக்குக் கூறப்பட்டிருந்த போதிலும் அவர்களின் எண்ணிக்கை மட்டிட முடியாத ஒன்றாகும். அதனை அல்லாஹ்வைத்தவிர வேறு எவராலும் மட்டிட்டுக்கூற முடியாது. அவ்வளவு அதிக எண்ணிக்கையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அதனை உறுதிப்படுத்தி அல்லாஹுத்தஆலாவே அவனது திருமறையில் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றான். மேற்கூறப்பட்ட வர்ணனைகளோடு அவ்வானவர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நம்பிக்கை கொள்வதோடு அவர்களோடு தொடர்புடைய பின்வரும் விஷயங்களையும் நாம் கட்டாயம் நம்பக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவைகள் பின்வருமாறு:

- அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரம் அவர்கள் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என நம்ப வேண்டும்.

- அவர்களில் பெயர் கூறி எங்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட் டவர்களை அவர்களது பெயர்களுடனும், பெயர் கூறப்படாத இன் னும் அதிகமானோர் இருக்கின்றார்கள் எனவும், அவர்களது பெயர் களை அறிந்து கொள்வது நம்மீது அவசியமில்லை என்றும் நம் பிக்கை கொள்ள வேண்டும்.
- நமக்கு குர்ஆன், ஹதீஸ் மூலம் அறிவிக்கப்பட்டவர்களுக்கிருக் கும் பண்புகளையும், வர்ணனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களில் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களது வர்ணனையைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், நான் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்களை ஒருமுறை அவர்களது உண்மையான தோற்றத்தில் கண்டேன். அவர்களுக்கு வானத்தை மறைத்துக் கொள்ளுமளவுக்கு 600 இறக்கைகள் இருந்தன எனக்கூறுகின்றார்கள். மேலும் அல்லாஹுத்தஆலா வானவர்களுக்கு அவர்களது தோற்றத்திலிருந்து மனித தோற்றத்துக்கு மாறுவதற் குரிய சக்தியையும் வழங்கியிருக்கின்றான் என்பதையும் நம்ப வேண்டும். ஒருமுறை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி ஈஸா (அலை) அவர்களுடைய தாயிடம் செல்லுகையில் சாதாரண மனி தருடைய தோற்றத்திலே சென்றுள்ளார்கள் என்பதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிட்டுக் கூறுகின்றான். அவர் சரியான ஒரு மனிதருடைய உருவத்தில் அவருக்குமுன் தோற்றமளித்தார் (19.17).

மற்றுமொரு முறை நபி(ஸல்)அவர்கள் தங்கள் தோழர்களு டன் பள்ளி வாயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வெள்ளை ஆடையும், கறுப்புத் தலை முடி யும் கொண்ட ஒரு பயணியைப் போன்று நபித் தோழர்களால் அறிந்துகொள்ள முடியாதவாறு சமூகமளித் துள்ளார்கள். அவ்வா றான தோற்றத்தில் வந்த அவர்கள் நபி (ஸல்) அவர்களின் காலோடு தனது காலை சேர்த்தவராகவும், அவரது இரு கைக ளையும் நபியவர்களது இரு தொடைகளின் மீது வைத்தவராக வும் உட்கார்ந்தார்கள். பின்பு நபியவர்களிடம் இஸ்லாத்தையும்,

ஈமானையும், இஹ்ஸானையும், மறுமை நாளையும், அதனது அடையாளங்களையும் கற்றுத்தருமாறு கேட்டார்கள். அவர்களது கேள்விகளுக்குரிய விடைகளை நபியவர்கள் கூறியதும், அவை களை உண்மைப்படுத்தியவராக எழுந்து சென்று விட்டார்கள். அவர்கள் சென்றதன் பிறகு நபியவர்கள் தன் தோழர்களைப் பார்த்து அவர்தான் ஜிப்ரீல் (அலை) அவர்களாவார்கள். அவர் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு கற்றுத்தர வந்தார் எனக் கூறினார்கள். இதேபோன்று அல்லாஹுத்தஆலா நபிமார்களான இப்றாஹீம் (அலை), லூத் (அலை) போன்றோரிடம் அனுப்பிய மலக்குமார்களை மனிதர்களின் தோற்றத்தில்தான் அனுப்பி வைத் தான் என்பதை அவனது அருள்மறை நமக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

- அவர்கள் என்னென்ன வேலைகளை செய்து கொண்டிருக்கின்றார் கள் என குர்ஆனும், ஹதீஸும் கூறிக்கொண்டிருக்கின்றதோ அவைகளையும் நாம் கட்டாயம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவர்கள் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்து கொண்டு, இரவு பக லாக அவனை எவ்வித களைப்பின்றியும், மனச்சோர்வின்றியும் வணங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவர்களில் சில ருக்கு அவன் குறிப்பான சில வேலைகளைக் கொடுத்து பொறுப் புச் சாட்டியிருக்கின்றான் என்பதையும் நம்ப வேண்டும். அதனடிப் படையில் ஜிப்ரயீல்(அலை)அவர்களை நபிமார்களுக்கும், இறைத் தூதர்களுக்கும் வஹி எடுத்துச் செல்பவராகவும், மீக்காயில் (அலை) அவர்களை மழைக்கும், தாவரங்களுக்கும் பொறுப்பான வராகவும், மாலிக் (அலை) அவர்களை நரகத்துக்கு பொறுப்பான வராகவும், இன்னும் சில மலக்குகளை மனித சமுதாயத்தின் பாது காப்புக்காகவும் நியமித்திருக்கின்றான் என அல்குர்ஆன் கூறிக் கொண்டிருக்கின்றது. எனவே அவைகளையும் நாம் கட்டாயம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இஸ்லாம் கூறும் வானவர்களை நாம் சரியான முறையில் நம் பிக்கை கொள்ளும்போது நமக்குப் பல நன்மைகள் கிடைக்கப் பெறு கின்றன. அந்நன்மைகளில் சிலதை இங்கே பார்ப்போம்.

- மேற்கூறப்பட்டவாறு வானவர்கள் இருக்கின்றார்கள் என்பதை மனிதன் ஏற்றுக் கொள்ளும்போது அல்லாஹ்வின் சக்தியையும், வல்லமையையும், கண்ணியத்தையும் அறிந்து கொள்கின்றான். மேலும் மனித சமுதாயத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் வல்லமைகளும் அவனால் வழங்கப்பட்டவை என்பதைப் புரிந்து கொள்கின்றான்.
- மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கென்றும், அவர்களது செயல்களை எழுதுவதற்கென்றும் அல்லாஹுத்தஆலா வானவர்களை நியமித்திருப்பதால் இம்மனித சமுதாயத்தின் மீது அவன் எவ்வளவு அக்கறை காட்டுகின்றான் என்பது தெளிவாகின்றது.
- அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வானவர்கள் கட்டுப்பட்டு நடப்பது போன்று தானும் அவனது கட்டளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என மனிதன் நினைத்து செயல்படுகையில் அவன் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களில் ஒருவனாக ஆகிவிடுகின்றான்.

**வேதங்களை நம்புதல்.**

மனிதன் கட்டாயமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய விஷயங்களில் மூன்றாவது விஷயம் அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேதங்களை நம்பிக்கை கொள்வதாகும். அல்லாஹ்வுக்கும், மனிதனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ஞாபகப்படுத்துவதற்காகவும், மனிதன் தன்னைப் படைத்தவனுக்கு மாறுசெய்து வாழும் போது அவனை திருத்துவதற்காகவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அனுப்பப்பட்ட வழிகாட்டல்களுக்கே வேதங்கள் எனக்கூறப்படுகின்றது. இவ்வேதங்கள் இறக்கப்பட்ட மற்றுமொரு காரணம் உலகில் வாழும் மனிதர்கள் நல்லவைகளைச் செய்வதோடு தமது சகோதரர்களுக்கும் நன்மையான காரியங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

வேதங்களை நாம் நம்பும்போது கீழ்வரும் விஷயங்களையும் அவசியம் நம்பக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவைகள் பின்வருமாறு:

- அவ்வேதங்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான் இறக்கப்பட்டன என நம்பிக்கை கொள்ள வேண்டும்.

- அவ்வாறு இறக்கப்பட்ட வேதங்களில் பெயர் குறிப்பிடப்பட்டவைகளையும், அவை யாருக்கு இறக்கப்பட்டன என்பதையும் இஸ்லாம் நமக்கு எவ்வாறு தெளிவுபடுத்தியிருக்கின்றதோ அவ்வாறே அவைகளை நம்ப வேண்டும். அதனடிப்படையில் இறுதி வேதமான அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், இன்ஜீல் வேதம் நபி ஈஸா (அலை) அவர்களுக்கும், தவ்றாத் வேதம் நபி மூஸா(அலை)அவர்களுக்கும், சபூர் வேதம் நபி தாவுத் (அலை) அவர்களுக்கும் வழங்கப்பட்டன என்று நம்ப வேண்டும். மேலும் பெயர் குறிப்பிடப்படாத வேதங்கள் மற்றும் சில நபிமார்களுக்கு வழங்கப்பட்டன என்றும் சுருக்கமாக நம்ப வேண்டும்.
- அந்நான்கு வேதங்களில் கூறப்பட்டு வந்திருக்கும் செய்திகளில் மனிதனது கருத்துத் திரிவுக்கு ஆளாகாத சரியான செய்திகளை உண்மைப்படுத்த வேண்டும். அவைகளில் இறுதியாக இறக்கப்பட்ட அல்குர்ஆனின் சட்டதிட்டங்களை மாத்திரமே இம்மனித சமுதாயம் நடைமுறைப்படுத்த வேண்டும். காரணம் அக்குர்ஆனின் வருகையோடு அதற்கு முன் இறக்கப்பட்டவைகளிலுள்ள சட்ட திட்டங்களனைத்தும் மாற்றப்பட்டுவிட்டன. அதனை உண்மைப்படுத்தி அல்லாஹ்வே தனது அருள்மறையில் தெளிவாகக் கூறிக்கொண்டிருக்கின்றான். மேலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கப்பட்ட நான்கு வேதங்களும் கொள்கை சம்பந்தப்பட்டவைகளில் ஒருமித்த கருத்தையே கொண்டிருக்கின்றன என்றும், அவைகள் நேர்மை, நீதி, நற்பண்புகள் போன்றவைகளை போதிப்பதுடன் அநியாயம், கெடுதிகள், வேதங்கள் கூறும் சட்டங்களை கருத்துத் திரிப்பு செய்தல் போன்றவைகளை வெறுத்து அவைகளுக்கெதிராக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்றும் நம்ப வேண்டும். மேலும் அல்குர்ஆன் கூறும் அதிகமான சட்ட திட்டங்களில் ஏனைய வேதங்கள் ஒன்றுபட்டாலும் சில சட்ட திட்டங்களிலும், அவைகளது விரிவான விளக்கங்களிலும் மாறுபடுகின்றன என்பதையும், ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஏற்றவாறு தான் அல்லாஹ் அவர்களுக்குரிய சட்டதிட்டங்களை வழங்கியிருக்கின்றான் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**முன்னய வேதங்களிலிருந்து அல்குர்ஆன் எவ்வாறு வேறுபடுகின்றது.**

இப்பகுதியில் இறுதியாக இறக்கப்பட்ட இறுதி வேதம் அல்குர் ஆன் அதற்குமுன் இறக்கப்பட்ட மூன்று வேதங்களிலிருந்தும் எவ் வாறு வேறுபடுகின்றது? என்பதைப் பார்ப்போம்.

- அல்குர்ஆன் வானத்திலிருந்து இறக்கப்பட்ட வேதங்களில் இறுதி யானதாகும். மேலும் எல்லா சமுதாயத்தினருக்கும், எல்லாக்கால, நேரங்களுக்கும் தேவையான சட்டதிட்டங்களை உள்ளடக்கிய வேதமாகும். அவ்வேதத்திற்கு முன்னர் இறக்கப்பட்டவைகள் கொண்டு வந்த அனைத்து சட்ட திட்டங்களையும் இக்குர்ஆன் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அதேநேரம் அவைகளில்லாத வேறு சில வணக்கங்களையும், நற்குணங்களையும், சட்டதிட்டங் களையும், கோட்பாடுகளையும் இது உள்ளடக்கியிருக்கின்றது.
- இக்குர்ஆனில் முன்னய சமுதாயங்களின் செய்திகளும், பின்னால் வரக்கூடிய சமுதாயங்களின் செய்திகளும் நிறையவே காணப்படுகின்றன.
- முன்னய வேதங்களில் காணப்படும் சட்டங்களில் எவைகளை இஸ்லாம் ஆமோதிக்கின்றதோ அவைகள் கட்டாயம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளாகும். அவ்வாறு ஆமோதிக்காத வைகள் மனிதர்களின் கருத்துத் திரிவுக்கு உற்படுத்தப்பட்டவை என்ற அடிப்படையில் தட்டிக்கழிக்கப்படுகின்றன.
- அல்குர்ஆன் இலக்கணத்திலும், மொழித்திறனிலும், உயர்ந்து காணப்படுகின்றது. ஆதலால்தான் அதனது வசனங்களிலும், கருத் துக்களிலும், மொழித்திரனிலும், மறைவானவைகளை அறிவிக்கும் விஷயத்திலும், அதனது சட்டங்களிலும், அதுகூறும் அனைத்து விஷயங்களிலும் உயர்ந்தே காணப்படுகின்றது. அதனால்தான் முன் னய வேதங்களைப் பின்பற்றி வருவோர் அனைவரும் அல்குர் ஆன் கூறும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றார்கள். காரணம் அவர்களின் வேதங்களில் கூறப்பட்டவைகளை இக்குர் ஆன் உண்மைப்படுத்தி நன்மாராயம் கூறிக் கொண்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் நாமும் முன்னைய வேதங்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தால் அவைகளை விட்டுவிட்டு அல்குர்ஆன் கூறும் கூற்றுப்படி நடப்பது நம்மீது கட்டாயக் கடமையாகின்றது. மேலும் மனிதன் இக்குர்ஆன் குறிப்பிடாத எக்கிரியைகளைச் செய்தாலும், அவை மனிதர்களுக்கு மத்தியில் புகழப்படக்கூடிய கிரியையாக இருந்தாலும் சரிதான் அவைகளை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஏனெனில் அவன் அருளிய வேதங்களில் இறுதியானதும், மனித, ஜின் இனத்துக்கு பொதுவானதும் இக்குர்ஆனாகும். அதுகூறும் சட்டங்கள்தான் சட்டங்களாகக் கணிக்கப்படுமே தவிர வேறு எந்த சட்டங்களும் இஸ்லாம் அங்கீகரித்த சட்டமாக கருதப்படமாட்டாது. மேலும் இக்குர்ஆன் ஏனைய வேதங்களைப் போன்றல்லாது கூட்டல், குறைத்தல், கருத்துத் திரித்தல் போன்றவைகளிலிருந்து அல்லாஹுத்தஆலாவினால் பாதுகாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு பாதுகாக்கும் பொறுப்பை அவனே ஏற்றுக் கொண்டிருக்கின்றான். அதனைப் பற்றி அவன் கூறுகையில் பின்வருமாறு கூறிக் காட்டுகின்றான். நிச்சயமாக நாம்தான் (திக்ரு என்னும் இவ்)வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்பவர்கள்(15.9).

மேலேயுள்ள வசனத்தில் அல்லாஹுத்தஆலா திக்ர் என்ற ஒற்றைச் சொல்லில் கூறினாலும், அச்சொல் அல்குர்ஆனையும், நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் போன்றவைகள் அடங்கிய ஹதீஸையும் குறிப்பிடுகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இவ்வேதத்தின் சிறப்பியல்புகளில் உள்ள மற்றுமொரு விஷயம் யாதெனில் இக்குர்ஆன் மனித உள்ளங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. அதனால்தான் இக்குர்ஆன் ஓதப்படுவதை செவிமடுப்போர் அம்மொழியை அறியாதவர்களாக இருந்தாலும், அல்லது அதனது கருத்துக்களைப் புரியாதவர்களாக இருந்தாலும் அவர்களது உள்ளங்களில் ஒருவித மாற்றம் ஏற்படுவதை உணர்வார்கள். இவை அல்குர்ஆனில் காணப்படக்

கூடிய சில சிறப்பியல்புகளாகும். அதேநேரம் இவை தவிர்ந்த இன்னும் எத்தனையோ சிறப்பியல்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை அறிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் அவைகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் நூல்களை வாசித்தறிந்து கொள்ளவும்.

- அல்குர்ஆனை எவரும் மனனமிட்டுக் கொள்ளும் வகையில் அல்லாஹுத்தஆலா அதனை இலேசாக்கி வைத்திருக்கின்றான். அதனால்தான் இன்று இஸ்லாமியர்களின் அதிகமான குழந்தைகள் அதனை சிறந்த முறையில் மனனமிட்டிருப்பதைக் காணுகின்றோம்.
- உலகில் காணப்படக்கூடிய சட்டதிட்டங்களில் நேர்மையானவைகளையும், மகத்துவத்துவமிக்கவைகளையும், சிறப்பானவைகளையும், பூரணமானவைகளையும் கூறும் ஒரு வேதமாகவே இக்குர்ஆன் காணப்படுகின்றது. அச்சட்டங்களில் சிறியவையாக, அல்லது நீண்டவையாக இருந்தாலும் அவையனைத்தையும் சுருக்கமாகவும், விரிவாகவும் தெளிவுபடுத்துகின்றது. அக்குர்ஆனை சிறந்த முறையில் வாசித்தறிகின்ற ஒவ்வொருவனும் அவன் மாற்று மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அதுகூறும் சட்டதிட்டங்களையும், கட்டளைகளையும், கொள்கைகளையும் நிச்சயம் ஏற்றுக் கொள்வான்.

சேர் வில்யம் மூர் எனும் வரலாற்றாசிரியர் "முஹம்மதின் வாழ்க்கை வரலாறு" என்ற தனது நூலில் குறிப்பிடுகையில், அல்லாஹ் என்றொரு கடவுள் இருக்கின்றான் என்பதனை நிரூபிக்கும் முகமாக அல்குர்ஆனில் சிந்தனை ரீதியான ஆதாரங்களும், அறிவு ரீதியான ஆதாரங்களும் நிறையவே காணப்படுகின்றன. அவன்தான் கீர்த்திமிக்க அரசனாகவும், மனிதர்கள் உலகில் செய்யும் கிரியைகளுக்கு நாளை மறுமையில் கூலி வழங்குபவனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான். எனவே நல்லவைகளை ஏற்றும் தீயவைகளை தவிர்ந்தும் நடப்பதுடன், பருவ வயதையடைந்த ஒவ்வொருவரும் அவனையே வணங்கி வழிப்படவும் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு வணங்கி வழிப்படுவதில்தான் அவர்களுக்கு ஈருலக வெற்றியும் இருந்து கொண்டிருக்கின்றது எனக்கூறுகின்றார்.

மேலும் ஜியூன் என்பவர் கூறுகையில், குர்ஆன் கூறும் சட்டதிட்டங்கள் மார்க்கக் கட்டளைகளோடும், ஒழுக்க அடிப்படைகளோடும் சுருங்கிக் கொள்ளவில்லை. மாற்றமாக அது இம்மை, மறுமை சம்பந்தப்பட்டவைகளையும், கொள்கை அடிப்படைகளையும், மனித உரிமை சம்பந்தப்பட்டவைகளையும், வரி சம்பந்தப்பட்டவைகளையும், உலகம் சீராக இயங்குவதற்குரிய அடிப்படைகளையும் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. மேலும் அநியாயம் இழைத்தவனுக்கும், மது, சூது, திருட்டு, விபச்சாரம் போன்றவைகளில் ஈடுபட்டவனுக்கும் உரிய தண்ட னைகள் வழங்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமெனக் கூறி மனித சமுதாயத்துக்குத் தேவையான எல்லாவிதமான சட்டதிட்டங் களையும் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான சட்ட திட்டங்களையும், கட்டளைகளையும் உள்ளடக்கியிருப்பதுதான் அக் குர்ஆன் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்தது என்பதற்கு மிகப் பெரிய ஆதாரமாகும் எனக்கூறுகின்றார்.

மற்றுமொரு இடத்தில் அவர் கூறுகையில், இந்த சிறப்புக்குரிய அல்குர்ஆன் உலக சட்டதிட்டங்களை உள்ளடக்கிய யாப்பாக இருப்ப தோடு குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்துக்குரிய யாப்பாகவும் காணப் படுகின்றது. மேலும் அதிலே இம்மை, மறுமை சம்பந்தப்பட்டவை களும், நிரந்தர வெற்றிக்குரிய வழிவகைகளும் நிறைந்து காணப்படு கின்றன எனக்கூறுகின்றார்.

**நபி வழிமுறைகள் (ஹதீஸ்).**

நபி (ஸல்) அவர்கள் கூறியவை, செய்தவை, அங்கீகரித்தவை போன்ற அனைத்தும் நபிவழிமுறை(ஹதீஸ்)எனப்படும். நபிவழி முறை (ஹதீஸ்) குர்ஆனுடன் ஒன்றிப்பிறந்த ஒன்றாகும். அதனால்தான் அக் குர்ஆனுடைய சட்ட திட்டங்களை நபிவழி முறை(ஹதீஸ்)கள் விவ ரிப்பதையும், தெளிவுபடுத்துவதையும், சுருக்கமாகக் கூறப்பட்டவை களை விரிவாக தெளிவுபடுத்துவதையும், குர்ஆன் தலையிடாமல் விட்டுவிட்ட சட்டதிட்டங்களை நபிவழிமுறை(ஹதீஸ்)கள் எடுத்துக் கூறுவதையும் காணுகின்றோம். மேலும் இந்நபி வழிமுறை(ஹதீஸ்) இஸ்லாத்தின் சட்ட யாப்புகளில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. மேலேயுள்ள பகுதியில் அல்லாஹுத்தஆலா இக்குர்ஆனை பாதுகாப்ப

தாக அவனே பொறுப்பேற்றிருக்கின்றான் என்பதைப் பார்த்தோம். அவ்வாறு அவன் குர்ஆன் எனக் குறிப்பிட்டிருந்தாலும் அதற்கு விளக்கவுரையாக வந்த நபிவழிமுறை(ஹதீஸ்)யும் அதிலே அடங்கிவிடுகின்றது என்பதில் துளியளவும் சந்தேகமில்லை.

நபி(ஸல்)அவர்கள் அறிவித்து விட்டுச் சென்ற ஹதீஸ்கள் இன்று ஏராளமான கிரந்தங்களில் தொகுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அதிகமான ஹதீஸ்கள் காணப்பட்டாலும் அவைகளில் செயல்படுத்துவதற்கு பொருத்தமானவை எவை? பொருத்தமற்றவை எவை? என்பதை மார்க்க அறிஞர்களும், சட்ட வல்லுனர்களும் தரம் பிரித்து அறிவிப்பாளர் வரிசைகளோடு தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

**வேதங்களை நம்புவதின் பிரயோஜனங்கள்.**

- அல்லாஹுத்தஆலா ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அவர்களை நேர்வழிப்படுத்தக்கூடிய, அவர்கள் செய்து கொண்டிருக்கும் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடிய, அவர்களுக்கு அறிவுரை வழங்கக் கூடிய வேதங்களை அனுப்பியதன் மூலம் அவன் இம்மனித சமுதாயத்தோடு எவ்வளவு அன்பானவனாக இருக்கின்றான் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.
- அல்லாஹுத்தஆலா ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அவர்களது தன்மைக்கும், சக்திக்கும் ஏற்றவாறு மார்க்க சட்டதிட்டங்களை கடமையாக்கியதன் மூலம் அவனது பரந்த அறிவையும், ஞானத்தையும் புரிந்து கொள்ள முடிகின்றது.
- மனிதர்களது சிந்தனைகள் வெளிப்படுத்தும் நச்சுக் கருத்துக்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வழிவகுக்கின்றது.

**தூதர்களை நம்பிக்கை கொள்ளல்.**

கட்டாயமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய விஷயங்களில் நான்காவது விஷயம் அல்லாஹ்வினால் இம்மனித சமுதாயத்துக்கு மற்றுமொரு வழிகாட்டியாக அனுப்பப்பட்ட இறைத் தூதர்களை நம்பிக்கை கொள்வதாகும். இஸ்லாத்தின் பார்வையில் இறைத்தூதர்களென்போர் யாவர் என்பதை நாம் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதன்பிரகாரம் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹி அறிவிக்கப்பட்டு,

அவைகூறும் சட்ட திட்டங்களை பிறருக்கு கற்றுக் கொடுக்குமாறு பணிக்கப்பட்டவர்கள் அனைவரும் இறைத்தூதர்களாவார்கள். அவ்வாறு அனுப்பப்பட்ட இறைத் தூதர்களில் முதலாமவர் நூஹ்(அலை) அவர்களும், இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்களுமாவார்கள் என இஸ்லாம் கூறுகின்றது. அல்லாஹுத்தஆலா உலகில் வாழ்ந்த எல்லா சமுதாயத்தினருக்கும் அவர்களுக்குரியவாறு மார்க்க சட்ட திட்டங்களை கடமையாக்கினான். அத்துடன் அவைகளை தனது தூதர்களிடம் ஒப்புவித்து மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்துமாறு கட்டளை பிறப்பித்தான். வேறுசில சந்தர்ப்பங்களில் புதிய சட்டதிட்டங்களைக் கொடுக்காது முன்னய தூதர் கூறிச்சென்றவைகளை ஞாபகப்படுத்துமாறு கூறியும் சிலரை அனுப்பியிருக்கின்றான்.

இறைத்தூதர்கள் என்போர் நம்மைப்போன்ற மனிதர்களாகும். இன்று சிலர் தவறாகக்கருதிக் கொண்டிருப்பது போன்று அவர்களுக்கு அல்லாஹ்விடம் காணப்படக்கூடிய படைக்கும் வல்லமையோ, ஏகத்துவத் தன்மையோ, மனிதர்களுக்கு ஏற்படும் கஷ்ட, துன்பங்களை நீக்கும் தன்மையோ கிடையாது. அதனால்தான் சாதாரண மனிதர்களுக்கு ஏற்படும் நோய், மரணம், கஷ்டம், துன்பம், உணவுத் தேவை போன்றவைகள் அவர்களுக்கும் இருந்து வந்திருக்கின்றன. மேலும் இறைத்தூதர் என்ற சிறப்பு ஒருவருடைய முயற்சியாலோ, அல்லது அவரது கடும் உழைப்பாலோ கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. அல்லாஹ் யாரைத் தேர்ந்தெடுத்து அந்த சிறப்பைக் கொடுக்க விரும்புகின்றானோ அது அவர்களுக்கு அவன் வழங்கும் பெரும் அருட்கொடையாகும். மேலும் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய இறைத்தூதர்கள் மனித சமுதாயத்தில் சிறப்புக்குரியவர்களாக இருப்பதோடு அல்லாஹ்விடத்திலும் மதிப்புக்குரியவர்களாக இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்

**இறைத்தூதர்களை நம்பிக்கை கொள்வதோடு தொடர்புடையவைகள்.**

இறைத் தூதர்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்தவர்கள் என்பதனை நம்பிக்கை கொள்ளும் நாம் அவர்களுடன் தொடர்புடைய கீழ்வருபவைகளையும் நம்பக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

- இறைத்தூதர்கள் என்ற பெயரில் வந்த அனைவரும் போதித்த தூது அல்லாஹ்வின் புறத்தால் வழங்கப்பட்ட உண்மையான தூது என்பதை நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த இறைத் தூதர்களையும், அவர்கள் கொண்டு வந்த தூதையும் நம்பும் ஒருவன் அவர்களில் ஒருவர் கொண்டு வந்தவைகளில் சிலதை மறுப்பானேயானால் அவன் எல்லா தூதர்களையும் நிராகரித்து விட்டவனாகவே கருதப்படுகின்றான். ஆகவே இறைத்தூதர் ஈஸா (அலை) அவர்களையோ, அல்லது மூஸா (அலை) அவர்களையோ, அல்லது முஹம்மத் (ஸல்) அவர்களையோ ஒருவன் நிராகரித்து விட்டானென்றால் அவன் உலகுக்கு அனுப்பப்பட்ட எல்லா இறைத் தூதர்களையும் நிராகரித்து விட்டவனாவான். அதன்பிரகாரம் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவன் முஹம்மத் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாதபோது அவன் ஈஸா (அலை) அவர்களையும், அவரது சட்டதிட்டங்களையும் ஏற்றுக் கொள்ளாதவனாகவே கணிக்கப்படுகின்றான். ஏனெனில் அவருடைய வேதத்திலேயே அவருக்குப் பின்னால் அஹ்மத் எனப்படும் ஒரு இறைத்தூதர் வருவார் என்றும், அவர் மனிதர்களுக்கு மத்தியிலிருக்கும் அனாச்சாரங்களையும், வழிகேடுகளையும் அகற்றி அவர்களுக்கு நேர்வழியைக் கற்றுக் கொடுப்பார் என்றும் அவரே கூறியிருக்கின்றார்.
- அல்லாஹுத்தஆலா தனது அருள்மறையில், அல்லது நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் மூலமாக இப்றாஹீம், மூஸா, ஈஸா, முஹம்மத் என யாரையெல்லாம் பெயர் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றானோ அவர்களையும், அவர்களுக்குரிய அப்பெயர்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் பெயர் குறிப்பிடப்படாத வேறு சில தூதர்களும் இருக்கின்றார்கள் என்றும், அவர்கள் குறிப்பிட்ட சமுதாயத்துக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும், அவர்களது பெயர்களை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் நமக்கில்லை என்றும் பொதுவாக நம்ப வேண்டும்.

- அவர்கள் அறிவித்துச் சென்றவைகளில் மனிதர்களின் கருத்துத் திரிவுக்கு உற்படாதவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- அத்தூதர்களுக்கெல்லாம் இறுதியானவராக அனுப்பப்பட்ட முஹம் மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த வேதம் கூறும் சட்டதிட் டங்களை மாத்திரமே நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**தூதர்களை நம்புவதின் பிரயோஜனங்கள்.**

மேற்கூறப்பட்ட இறைத்தூதர்களை நாம் நம்பிக்கை கொள்ளும் போது பலதரப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றோம். அவ் வாறு பெற்றுக் கொள்ளும் நன்மைகளில் சிலதைப் பார்ப்போம்.

- அல்லாஹுத்தஆலா காலத்துக்குக் காலம் இறைத் தூதர்களை அனுப்பி மனித சமுதாயத்துக்கு நேர்வழி காட்டுவதின் மூலம் அவன் தனது அடியார்கள் மீது எந்தளவு அன்பு வைத்திருக் கின்றான் என்பதையும், அவர்களை ஷைத்தானுடைய தீங்குகளிலி ருந்து பாதுகாப்பதற்காக எந்தளவு முக்கியத்துவம் எடுத்துக் கொள்கின்றான் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அந்த இறைத்தூதர்களின் மூலம் இம்மனித சமுதாயத் துக்கு அவன்தான் நேரான வழியை கற்றுக் கொடுக்கின்றான். அத்தோடு இம்மனிதன் உலகில் வாழும் சந்தர்ப்பத்தில் யாரை வணங்கி வழிப்பட வேண்டும்? எவ்வாறு வணங்க வேண்டும்? ஈருலக வெற்றியையும் அவன் பெற்றுக் கொள்வதென்றால் எந்த முறையில் செயல்பட வேண்டும்? என்பதையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றான்.
- அல்லாஹுத்தஆலா இம்மனித சமுதாயத்துக்கு வழங்கிய அருட் கொடைகளை எண்ணி அவனுக்கு அதிகதிகமாக மனிதன் நன்றி செலுத்துகின்றான். அதன்மூலம் பெரும் நன்மைகளை கொள்ளை யடித்துக் கொள்கின்றான்.
- அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் என்ற அடிப்படையில் அல் லாஹ்வை வணங்கி வழிப்பட்டு, அவனது தூதை மனிதர்க ளுக்கு கற்றுக் கொடுத்தார்கள். அத்துடன் அவர்கள் மனித சமு தாயத்தில் சிறப்பானவர்களாகவும், நற்குணங்கள் நிறைந்தவர்களா

கவும், அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதில் முதலிடத்தை வகிக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள் என்ற அடிப்படையில் மனிதன் அவர்களை நேசித்து, கண்ணியப்படுத்தி அவர்களுக்கேற்றவாறு அவர்களைப் புகழ்வதின் மூலம் அதற்குரிய நன்மையையும் அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொள்கின்றான்.

**மறுமை நாளை நம்பிக்கை கொள்ளல்.**

மனிதன் கட்டாயமாக நம்பிக்கை கொள்ள வேண்டிய கடமைகளில் ஐந்தாவது கடமை மறுமை நாளைப்பற்றி நம்பிக்கை கொள்வதாகும். மறுமை நாளைப்பற்றி இஸ்லாம் குறிப்பிடுகையில், உலகில் பிறந்து மரணித்த அனைத்து உயிரினங்களும் எழுப்பப்பட்டு அவர்கள் உலகில் செய்த கிரியைகள் பற்றி விசாரிக்கப்படுவார்கள். விசாரணையின் பின் நல்லது செய்தவர்களுக்கு சுவனமும், தீமை செய்தவர்களுக்கு நரகமும் கொடுக்கப்படும். அவ்வாறு ஒன்று கூட்டப்பட்டு கூலி கொடுக்கப்படுகின்ற நாளுக்கே மறுமை நாளென்றும், இறுதி நாளென்றும் இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கின்றது. அப்படியான ஒருநாள் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் வந்தேதீரும் என்று நம்பிக்கை கொள்ளுமாறும் அந்நாளில் வெற்றி பெறுவதற்கேற்றவாறு இவ்வுலகில் நற்கிரியைகளில் ஈடுபட்டு வருமாறும் இஸ்லாம் நம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்றது.

எப்போது நாம் மறுமை நாளென்று ஒன்று இருக்கின்றது என ஏற்றுக் கொள்கின்றோமோ, அப்போது அதனுடன் தொடர்புடைய பின் வரும் மூன்று விஷயங்களையும் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவைகள் பின்வருமாறு:

- என்றோ ஒருநாள் மரணிக்கப் போகும் நாம் நமது மரணத்தின் பின் நிச்சயம் எழுப்பப்படுவோம் என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனை இன்னும் தெளிவாகக் கூறுவதென்றால், நாளை மறுமையில் மரணித்த உயிரினங்களை எழுப்புவதற்கு எந்த வானவரை அல்லாஹ் நியமித்திருக்கின்றானோ அவர் சூர் எனும் குழலை ஊதும்போது மரணித்து மண்ணறையிலே உறங்கிக் கொண்டிருந்த அனைத்து மனிதர்களும் நிர்வாணமாகவும்,

தமது பாதங்களில் பாதணி அற்றவர்களாகவும், கத்னா செய்யப் படாதவர்களாகவும் எழுப்பப்படுவார்கள் என்று நம்ப வேண்டும்.

- அவ்வாறு எழுப்பப்பட்ட மனிதர்கள் தாங்கள் உலகில் செய்தவை களைப் பற்றி விசாரிக்கப்பட்டு கூலி கொடுக்கப்படுவார்கள் எனவும் நம்பவேண்டும். ஆக உலகில் பிறந்து வாழ்ந்த எந்த மனிதனாக இருந்தாலும் அவன் உலகில் செய்த செயல்களைப்பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவான். அதன்பின் அவனது செயல்களுக் கேற்றவாறு கூலி வழங்கப்படும். உலகில் நன்மை செய்து வாழ்ந் தோருக்கு அவர்களது நன்மையைப் போன்று பத்து மடங்கு அதிகரித்து அதற்கேற்றவாறு கூலி வழங்கப்படும். ஆனால் தீமை செய்தோரைப் பொருத்தவரை அவர்களது தீமைகளின் பிரகாரமே எவ்விதக் கூட்டலும், குறைப்புமின்றி தண்டனை வழங்கப்படும். இத்தீர்ப்பில் எவரும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். இவ் வாறு அல்லாஹுத்தஆலா நாளை மறுமையில் மனிதர்களை எழுப்பி அவர்கள் உலகில் செய்த விஷயங்களைப் பற்றியெல்லாம் ஏன் விசாரிக்க வேண்டும்? என்ற கேள்வி நம் உள்ளங்களில் எழ லாம். அவன் அந்நாளை முக்கிய ஒரு காரணத்தை முன்னிட்டே ஏற்படுத்தி வைத்திருக்கின்றான்.

அக்காரணம் யாதென? நீங்கள் வினவலாம். உங்கள் வினா வுக்குரிய விடையைப் பார்ப்போம். அதாவது அல்லாஹுத்தஆலா இம்மனித சமுதாயத்தை ஒரு முக்கிய நோக்கத்திற்காகத்தான் படைத்திருக்கின்றான் என்பதை அறிவோம். அந்நோக்கத்தை சரி வர நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் காலத்துக்குக் காலமெனவும், நேரத்துக்கு நேரமெனவும் நபிமார்களையும், தூதர் களையும், வேதங்களையும் அனுப்பி அதனை அவர்களுக்கு ஞாப கப்படுத்திக் கொண்டிருந்தான். அதுமட்டுமின்றி அவ்வேதங்கள் கூறுவதின் பிரகாரமும், தூதர்களின் வழிகாட்டல்களின் பிரகாரமும் நடக்கும் படியும் அவர்களைக் பணித்துக் கொண்டிருக்கின்றான். எனவே உலகில் வாழும் காலத்தில் இம்மனிதன் பிறந்த நோக் கத்தை நிறைவேற்றுகின்றானா? படைத்தவனின் கட்டளைகளுக் கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றானா? என்ப

தைப் பார்க்கத்தான் இவ்வாறானதோர் தீர்ப்பு வழங்கும் நாளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான்.

இன்றைய உலகில் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் முற்று முழுதாக வழிப்பட்டு நடப்பவர்களும் இருக்கின்றார்கள். அதேநேரம் அவனது கட்டளைகளை பொருட்படுத்தாது, ஏதோ பிறந்து விட்டோம் என்ற அடிப்படையில் வாழ்ந்து வருவோரும் இருக்கின்றார்கள். மேலும் இம்மனித சமுதாயத்தில் நல்லவைகளைச் செய்து வாழும் நல்லடியார்களும் இருக்கின்றார்கள். தீயவைகளைச் செய்து வாழும் தீயவர்களும் இருக்கின்றார்கள். அதேபோன்று தம்மைப் படைத்த கடவுள் அல்லாஹ் என்ற ஒருவன் இருந்து கொண்டிருக்கின்றான் என நம்புவோரும் இருக்கின்றனர். அப்படியொரு கடவுள் இல்லை அனைத்துமே இயற்கையின் நியதி எனக்கூறிக் கொண்டிருப்போரும் இருக்கின்றனர்.

இவ்வாறு மனிதர்கள் பலதரப்பட்ட நிலையில் வாழ்ந்து விட்டு நாளை மறுமையில் அவனை சந்திக்கும் போது அவர்களனைவருக்கும் ஒரே தரத்தில் நீதிவழங்கப்படுவதென்பது நீதியாலும், நியாயத்தாலும் அணுவளவேனும் அநியாயம் செய்யாத அந்த வல்லோனை குறைகூறுவதற்கு இடமளித்து விடுகின்றது. அதனால் தான் அல்லாஹுத்தஆலா இவ்வாறானதோர் நாளை ஏற்படுத்தி நல்லவர்களுக்கு சுவனமென்றும், தீயவர்களுக்கு நரகமென்றும் தீர்ப்பளிக்கவிருப்பதாக அவனது அருள்மறையில் இன்று வரையும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றான். அதேபோன்று நாளை மறுமையில் மனித சமுதாயத்தில் நல்லவர்களையும், தீயவர்களையும் பிரித்து வைப்போம் என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான். முஸ்லிம்களை குற்றவாளிகளைப்போல் நாம் ஆக்கி விடுவோமா? உங்களுக்கு என்ன நேர்ந்தது எவ்வாறு நீங்கள் தீர்ப்பளிக்கின்றீர்கள்? (68.25).

- நாளை மறுமையில் அல்லாஹுத்தஆலா வழங்கவிருக்கும் கூலி ஒன்றோ சுவனமாக, அல்லது நரகமாக இருக்கும் என்பதை நம்

பிக்கை கொள்ள வேண்டும். சுவனம், நரகம் என்பது அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கவிருக்கும் இரு பரிசுப் பொருட் கள் என்பதை அறிந்து கொண்டோம். அப்பரிசுப் பொருட்களை யார் யாருக்கு அவன் கொடுக்க விருக்கின்றான் என்பதையும் நாம் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். சுவனத்தைப் பொறுத்தவரையில் யாரெல்லாம் அவனது கட்டளைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு, அவனது தூதர் காட்டும் வழிமுறையின் பிரகாரம் நடந்து, எல்லா வணக்கங்களையும் அவ னுக்கென்ற தூய எண்ணத்தோடு நிறைவேற்றி வருகின்றார்களோ அவர்களுக்கு வழங்கவிருக்கும் சன்மானமாகும்.

அல்லாஹுத்தஆலா அவனது நல்லடியார்களுக்கென அதனை படைத்திருந்தாலும் அதிலே பல்வேறுபட்ட வித்தியாசங்களைக் கொண்ட படித்தரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நல்லடியார் களின் தரத்திற்கேற்பவே அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அச்சுவ னத்தைப் பற்றி இஸ்லாம் வர்ணித்துக் கூறுகையில், மனிதனது கண்கள் கண்டிராத, காதுகள் கேட்டிராத, அவனது உள்ளத்தால் சிந்தித்துப் பார்க்க முடியாத பலதரப்பட்ட இன்பங்களும், சுக போகங்களும் நிறைந்து காணப்படுகின்ற பூங்காவனம் எனக்கூறிக் கொண்டிருக்கின்றது.

நரகத்தைப் பொறுத்த வரையில் யாரெல்லாம் அவனது கட்ட ளைகளையும், சட்டதிட்டங்களையும், கோட்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளாமல் அவனையும், அவனது தூதரையும் நிராகரித்து, அவர்களது மனோ இச்சையின் பிரகாரம் வாழ்ந்து விட்டு மர ணிக்கின்றார்களோ அவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் தண்ட னையாகும். அல்லாஹுத்தஆலா அந்நரகத்தை உலகில் வாழும் பாவிகளுக்கென படைத்து வைத்திருந்தாலும் அதிலும் பலதரப் பட்ட வித்தியாசங்களைக் கொண்ட படித்தரங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. பாவிகளின் தரத்திற்கேற்பவே அவர்களை அவைகளில் போட்டு வேதனை செய்யப்படும்.

மேலும் இஸ்லாம் அந்நரகைப்பற்றி வர்ணித்துக் கூறுகையில், அதிலே மனிதர்களின் சிந்தனைக்கு எட்டாத துன்பங்களும், அழிச் சாட்டியங்களும், நோவினைகளும், வேதனைகளும் நிறைந்து காணப்படும் பாதாளக்குழி எனக்கூறிக் கொண்டிருக்கின்றது. மேற் கூறப் பட்டவைகளுடன் இறுதிநாள் நெருங்குவதற்குரிய அடை யாளமாக இஸ்லாம் எவைகளையெல்லாம் கூறியிருக்கின்றதோ அவைகளையும், அந்நாட்களில் இடம்பெறவிருக்கின்ற சோதனை களையும், வேதனைகளையும் நம்பிக்கை கொள்வதும் மறுமை நாளை நம்பிக்கை கொள்வதில் உள்ள ஒரு பகுதியாகும். அத்து டன் மனிதனது மரணத்துக்குப் பின் அவனுக்கு நடக்கவிருக் கும் பின்வரும் விஷயங்களை நம்பிக்கை கொள்வதும் மறுமை நாளை நம்பிக்கை கொள்வதின் ஒரு பகுதியாகும். அவைகள் பின்வருமாறு:

- மனிதன் மண்ணறையில் புதைக்கப்பட்டதும் அம்மண்ணறையில் அவனுக்கு பலவிதமான வேதனைகளும், சோதனைகளும் இருந்து கொண்டிருக்கின்றன என்பதனை நம்ப வேண்டும். அதாவது மனிதன் மண்ணறையில் புதைக்கப் பட்டதும், அல்லாஹுத் தஆலா அவனுக்கு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி விடுவான். பின்பு அவனது கடவுளைப் பற்றியும், அவனது மார்க்கத்தைப் பற்றியும், அவனுக்கு மார்க்கத்தைப் போதிக்க வந்த நபியைப் பற்றியும் விசாரிக் கப்படுவான். அவன் உலகில் வாழும் சந்தர்ப்பத் தில் உண்மையாகவே அல்லாஹ்வை கடவுளாகவும், அவனால் அனுப்பப்பட்ட தூதரை இறைத்தூதராகவும், சத்திய மார்க்கமான இஸ்லாத்தை அவனது மார்க்கமாகவும் ஏற்று உண்மை இறை விசுவாசியாக வாழ்ந்து வந்திருந்தால் அக்கேள்விகளுக்கு சிறந்த முறையில், அல்லாஹ்தான் தனது கடவுள் என்றும், நபி முஹம் மத் (ஸல்) அவர்கள்தான் தனக்கு அனுப்பப்பட்ட இறைத்தூதர் என்றும், இஸ்லாம்தான் தான் பின்பற்றி நடந்த மார்க்கம் என்றும் பதில் கூறக்கூடியவாறு அல்லாஹ் அவனை ஆக்கிவிடுவான்.

மேற்கூறப்பட்டதற்கு மாற்றமாக யாரெல்லாம் உலகில் வாழும் போது அவனைக் கடவுளாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை தூதராகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும் ஏற்காது நிராகரித்து வாழ்ந்து வந்தார்களோ அவர்களை அக்கேள்விகளுக்குரிய சரியான பதிலைக் கூறத் தெரியாதவர்களாக அல்லாஹ் ஆக்கிவிடுவான். ஆக அவர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஹா, ஹா எனக் குத் தெரியாதே என்ற பதிலைத்தான் கூறிக் கொண்டிருப்பார்கள். மேலும் நயவஞ்சகனிடமும், இஸ்லாம் மார்க்கத்தில் சந்தேகத்தோடு இருந்தவனிடமும் அக்கேள்விகளை கேட்கப்படும்போது தனக்குத் தெரியாது. மனிதர்கள் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள் அதன் பிரகாரமே தானும் சொல்லிக் கொண்டிருந்தேன் எனக்கூறு வான் என நம்ப வேண்டும்.

- மண்ணறையில் இறைவிசுவாசிகளுக்கு கிடைக்கவிருக்கும் சுக மான வாழ்வையும், இறைநிராகரிப்பாளர்களுக்கு கிடைக்கவிருக் கும் வேதனை நிறைந்த வாழ்வையும் நம்ப வேண்டும். நாளை மறுமையில் கிடைக்கவிருக்கின்ற சுகபோகங்கள் சுவனத்திலும், வேதனைகள் நரகத்திலும் இருப்பதாகத்தான் அறிந்து வைத்திருக் கின்றோம். அப்படியிருக்கும் போது அச்சுகபோகங்களும், வேத னைகளும் மண்ணறையில் எவ்வாறு காணப்படும்? அதனைப் பற்றி அறிந்து கொள்வது நமது கடமையாகும். அதாவது மனி தன் மரணித்து மண்ணறையில் வைக்கப்பட்டதும் அவன் உல கில் நடந்து கொண்ட முறைபற்றி விசாரிக்கப்படுவான். விசாரிக் கப்பட்ட பின் அவன் நல்லவனாக இருந்தால் மனிதர்கள் அனை வரும் ஒன்று கூட்டப்படும் நாளான மஹ்ஷர் எனப்படும் நாள் வரும்வரை அவனது கப்று விசாலமாக்கப்பட்டு, சுவனத்தின் வாயில்களில் ஒரு வாயில் திறந்து விடப்படும். அவ்வாயிலினூ டாக சுவனத்தின் இன்பங்கள் அவனது கப்றுக்கு வந்து கொண் டிருக்கும். மறுமை நாள் வரையும் அவ்வின் பங்களை அவன் அனுபவித்துக் கொண்டிருப்பான்.

அதேபோன்று மண்ணறையில் புதைக்கப்பட்டவன் கெட்டவ னாகவும், இறைநிராகரிப்பாளனாகவும், நயவஞ்சகனாகவும் இருந்

தால் அவனது கப்று அவனை நெருக்கி வேதனை செய்து கொண்டிருப்பதுடன், அவனது மண்ணறையின் பக்கம் நரகத்தினது வாயில்களில் ஒருவாயில் திறந்து விடப் படும். அதிலிருந்து வரும் வேதனையும், சூடும் அவனை மறுமை நாள் வரும்வரை தாக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறுதான் மண்ணறையில் இன் பங்களும், வேதனைகளும் இருந்து கொண்டிருக்கும்.

**மறுமை நாளை விசுவாசிப்பதின் பலாபலன்கள்.**

நாம் மறுமை நாளென்று ஒன்று இருக்கின்றது என்பதை உண் மையாக நம்பிக்கை கொள்ளும்போது அதற்காக அல்லாஹ்விடமிருந்து பல நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றோம். அவ்வாறான நன்மைகளில் சிலதைப் பார்ப்போம்.

- மறுமை நாளில் மனிதனுக்கு கொடுக்கப்படவிருக்கின்ற இன்பங் களையும், துன்பங்களையும் அவன் அறிந்து கொள்ளும் போது அந்நாளில் கிடைக்கவிருக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அதிகதிகமாக நற்கிரியைகளில் ஈடுபடுவதற்கு முயற்சிப்பான்.
- அந்நாளின் தண்டனைகளைப் பயப்படும் ஒருவன் உலகில் வாழும் காலத்தில் தீயவைகளைச் செய்வதைத் தவிர்ந்து நடக்க முயற்சிக்கின்றான்.
- மறுமைக்குரியவைகளை ஒருவன் அவனது வாழ்வில் எடுத்து நடக்கும்போது உலகிலுள்ளவைகள் அவனுக்குக் கிடைக்காமல் தப்பிப் போய்விடுகின்றன. அவ்வாறு தப்பிப் போனாலும் அவைகளை நினைத்து மனம் வருந்த மாட்டான். மாற்றமாக அவைகளுக்குப் பகரமாக நாளை மறுமையில் அவைகளை விட சிறந்தவைகள் கிடைக்கும் என மன அமைதி பெறுகின்றான்.
- மறுமையை நம்பும் போது உலகில் மனிதனுக்கு ஏற்படும் கஷ்ட, துன்பங்களில் பொறுமையாய் இருந்து அவைகளுக்குரிய கூலியை அவன் அல்லாஹ்விடம் எதிர்பார்த்திருக்கின்றான்.

**மறுமையில் எழுப்பப்படுவதை நிராகரிப்பதும், அதற்குரிய பதிலும்.**

மனிதனது மரணத்தின் பின் அவன் மீண்டும் எழுப்பப்படுவான். எழுப்பப்பட்டு உலகில் செய்த காரியங்களைப்பற்றி விசாரிக் கப்படுவான். அவனது செயல்களுக்கேற்ப நன்மையோ, தீமையோ வழங்கப்படும் என்ற கருத்தை அறிவு ரீதியாகவோ, அல்லது சிந்தனை ரீதியாகவோ ஏற்றுக்கொள்ள முடியாது என்று சில மடையர்கள் கூறிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அவ்வாறு அவர்கள் கூறும் கருத்தை நாம் சற்று எடுத்து நோக்குவோமேயானால் அது பல வகையில் தவறான கருத்தாக இருந்து கொண்டிருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் மறுமையில் எழுப்பப்படுவதை நிராகரிப்பது தவறானது என்பதற்கு சில ஆதாரங்களை உங்கள் முன் வைக்கின்றோம். அவைகளை வாசித்து நீங்களும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

- மரணித்தவர்கள் எழுப்பப்பட மாட்டார்கள் எனக்கூறும் அவர்களது கருத்து தவறானது என இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். (மரணித்த பின்னர் நிச்சயமாக உயிர் கொடுத்து) அவர்கள் எழுப்பப்படவே மாட்டார்கள். என்று நிராகரிப்போர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். (நபியே!) நீர் கூறுவீராக அவ்வாறல்ல. என் இரட்சகன் மீது சத்தியமாக! நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். பின்னர் நீங்கள் செய்து கொண்டிருந்தவைகளைப்பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவிக்கப்படுவீர்கள். மேலும் அ(வ்வாறுசெய்வ)து அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதாகும்(64.7).
- சிறந்த முறையில் சிந்திக்கும் மனிதனும் அது தவறான கருத்து என்பதை ஏற்றுக்கொள்வான். ஏனெனில் மரணித்தவர்களை அல்லாஹுத்தஆலாவால் எழுப்ப முடியும் என்பதை இம்மனித சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இவ்வுலகிலே மரணித்த சிலரை அவன் உயிர்ப்பித்துக் காண்பித்திருக்கின்றான். அதற்குதாரணமாக பின்வரும் சம்பவங்களை எடுத்துக் கொள்ளலாம். ஒருமுறை நபி மூஸா (அலை) அவர்களது சமுதாயத்தினர் நபி மூஸா (அலை) அவர்களைப் பார்த்து நீங்கள் கூறக்கூடிய இறைவனை நாம் பார்க்கக்கூடியவாறு காட்டினாலே தவிர

நீங்கள் கூறும் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூறினார்கள். இவ்வாறு அச்சமுதாயம் முரண்டு பிடிப்பதைக் கண்ட இறைவன் அவர்கள்மீது கோபம் கொண்டு அவர்களை மரணிக்கச் செய்தான். பின்பு மூஸா நபியவர்களது பிரார்த்தனையை ஏற்று அவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி உலகில் வாழவைத்தான். அவர்கள் கூறிய அவ்வார்த்தையை அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான். மூஸாவே! நாங்கள் அல்லாஹ்வைக் கண்கூடாகக் காணும்வரை உம்மை நாம் விசுவாசிக்க மாட்டோம்(என்று கூறினார்கள்)(2.55).

அதேபோன்று நபி மூஸா (அலை) அவர்களது காலத்தில் கொலை செய்யப்பட்ட ஒருவனின் விஷயத்தில் பனூ இஸ்ரவேலர்கள் மோதிக் கொண்டார்கள். இறுதியாக அதற்கு தீர்வு காணும் முகமாக நபி மூஸா (அலை) அவர்களிடம் வந்து முறையிட்டார்கள். நபி மூஸா (அலை) அவர்கள் அப்பிரச்சினையை தனது இறைவனிடம் முறையிட்டார்கள். அவர்களது பிரச்சினையை தீர்த்து வைக்கும் முகமாக அல்லாஹுத்தஆலா அவர்களுக்குரிய தீர்ப்பைக் கூறும்போது, நீங்கள் ஒரு மாட்டை அறுத்து அதனது சில பகுதிகளை எடுத்து மரணித்தவனை அடியுங்கள். அவ்வாறு அடித்தால் மரணித்தவன் எழுந்து அவனை யார் கொலை செய்தார்கள்? என்பதைக் கூறுவான் எனக்கூறினான். அவர்களும் அக்கட்டளைக்கிணங்கி அவ்வாறே செய்ய மரணித்த அம்மனிதன் அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் உயிர் பெற்றெழுந்து தன்னை கொலை செய்தவன் இன்னான்தான் என்பதை அறிவித்து விட்டு மீண்டும் இறந்து விட்டான்.

அதேபோன்று மற்றுமொரு சம்பவத்தை அல்குர்ஆன் பின்வருமாறு கூறிக் கொண்டிருக்கின்றது. அதாவது முன்னைய காலத்தில் வாழ்ந்த மக்களில் ஆயிரக்கணக்கானோர் மரணத்துக்குப் பயந்து அம்மரணத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தங்கள் வீட்டை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் அவ்வாறு வீட்டிலிருந்து வெளியேறியதற்குரிய காரணம் தாம் வீடுகளிலிருந்தால்தான் அல்லாஹுத்தஆலா தங்களை மரணிக்கச்

செய்வான் என்று எண்ணிக் கொண்டிருந்ததாகும். மனிதன் எங்கிருந்தாலும் அல்லாஹுத்தஆலா அவனை மரணிக்கச் செய்வான் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக அவர்களைப் பார்த்து நீங்கள் மரணிப்பீர்களாக! என்ற வார்த்தையைக் கூறினான். அவர்களனைவரும் அவ்விடத்திலே மரணித்து விட்டார்கள். பின்பு அவர்கள்மீது கருணை கொண்டு மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பி வாழச்செய்தான். அதேபோன்று அல்லாஹ்வின் உத்தரவின் பேரில் மரணித்தவர்களை உயிர்ப்பிக்கும் தன்மையை நபி ஈஸா (அலை) அவர்களுக்கும் வழங்கியிருந்தான். இவ்வாறு இவ்வுலகையும், அதிலுள்ளவைகளையும் படைத்த இறைவனால் அவன் விரும்பியவாறு அழிக்கவும் முடியும், உண்டாக்கவும் முடியும் என்பதை தெளிவுபடுத்தும் முகமாக இஸ்லாம் எண்ணற்ற சம்பவங்களை நமக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

**கப்றின் இன்ப, துன்பங்களை நிராகரிப்பதும், அதற்குரிய பதிலும்.**

மண்ணறையில் புதைக்கப்பட்டவர்கள் இன்பமோ, துன்பமோ அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற கருத்தை இன்று சிலர் ஏற்க மறுக்கின்றார்கள். இவ்வாறு மறுப்பதற்கு அவர்கள் கூறும் காரணம் யாதெனில் மரணித்த ஒருவரை நாம் மண்ணறையில் புதைத்து விட்டு மீண்டும் அதனைத் தோண்டிப் பார்த்தால் அதில் புதைக்கப்பட்டிருப்பவர் அதே நிலையில் இருப்பதையும், அம்மண்ணறை எவ்வித விசாலமோ, அல்லது நெருக்கமோயின்றி காணப்படுவதையும் தான் அறிந்து கொள்கின்றோம். இவ்வாறிருக்கும்போது எவ்வாறு அது நல்லோர்களுக்கு விசாலமாகவும், தீயோர்களுக்கு நெருக்கமாகவும் இருப்பதோடு அதிலே அவர்கள் இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றார்கள் எனக் கூறலாம்? எனக்கேட்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறும் கருத்து தவறானது என்பதற்கு பல ஆதாரங்களை முன் வைக்கலாம். அவைகளில் சிலதை எடுத்து நோக்குவோம்.

- அக்கருத்து இஸ்லாம் மார்க்கம் கூறும் சட்டதிட்டங்களின் பிரகாரம் தவறானதாகும். ஏனெனில் அல்குர்ஆனும், ஹதீஸும் மண்ணறையிலே இன்பமும், துன்பமும் இருந்து கொண்டிருக்கின்றன என தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு இஸ்

லாத்தின் மூலாதாரங்கள் கூறும் விஷயங்களை நாம் ஒருபோதும் பொய்ப்பிக்கலாகாது.

- சிறந்த முறையில் சிந்திக்கும் மனிதனும் அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றான். காரணம் மனிதனிடம் காணப்படும் உறக்கம் மரணத்தின் ஒன்றுவிட்ட உடன் பிறப்பாகும். அதன்பிரகாரம் ஒருவன் உறங்கும் போது பல கனவுகளைக் காணுகின்றான். அவன் காணும் கனவுகளில் விசாலமான இடத்தில் சந்தோஷமாக இருப்பதாகவும், நெருக்கடியான இடத்தில் கஷ்டப்படுவதாகவும் காணுகின்ற கனவுகளும் இருக்கத்தான் செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு கனவுகண்டு கொண்டிருக்கும்போதே அவன் விழித்து விடுகின்றான். விழித்துப் பார்க்கையில் அவன் எந்த இடத்தில் உறங்கிக் கொண்டிருந்தானோ அதே இடத்தில் அதே விரிப்பில் எவ்வித மாற்றமுமின்றி, அவன் கண்டு கொண்டிருந்த கனவின் எவ்வித தடயங்களுமின்றி இருப்பதைப் அறிந்து கொள்கின்றான். குறிப்பாக கப்றிலே நடக்கின்ற இன்பங்களையோ, துன்பங்களையோ எவராலும் அறிந்துகொள்ள முடியாது. அவ்வாறு அறிந்து கொள்ளக்கூடிய தன்மையிருந்தால் மறைவானவைகளை நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற பேச்சுக்கே இஸ்லாத்தில் இடம் இல்லாமல் போய்விடும். அப்போது மறைவானவைகளை நம்பிக்கை கொள்பவனும், நம்பாமல் நிராகரிப்பவனும் சமமாகி விடுவார்கள்.

மேலும் உறங்கிக் கொண்டிருக்கும் ஒருவன் காணும் கனவில் வரக்கூடிய இன்பங்களையும், துன்பங்களையும் எவ்வாறு அவனைத்தவிர வேறு எவராலும் காணமுடியாதோ, அதேபோன்றுதான் மண்ணறையின் இன்பத்தையும், துன்பத்தையும் அதை அனுபவித்துக் கொண்டிருப்பவனைத் தவிர வேறு எவராலும் கண்டுகொள்ள முடியாது. மேலும் அல்லாஹுத்தஆலா இம்மனித சமுதாயத்துக்கு குறிப்பிட்ட அறிவையும், சிந்தனையையும், உணர்வுகளையுமே வழங்கியிருக்கின்றான். அப்படியிருக்கும்போது உலகில் நடக்கும் எல்லா விஷயங்களையும் அவர்களால் அறிந்து

கொள்ள முடியாது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும் மனிதனது பார்வைக்கும், செவிப்புலனுக்கும் எவ்வாறு ஒரு வரையறை இருக்கின்றதோ, அதேபோன்றுதான் அவனது உள்ளத்துக்கும் சிந்திக்கக்கூடிய ஒரு வரையறை இருக்கின்றது என்பதையும் நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் அதிகமான மனிதர்களுக்கு தெரியாமலிருக்கின்ற மற்றுமொரு விஷயத்தையும் நான் இவ்விடத்தில் ஞாபகத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதாவது மண்ணறையின் இன்பமும் சரி, துன்பமும் சரி மரணித்து மண்ணறையில் புதைக்கப்பட்டவனுக்கு மாத்திரம்தான் வழங்கப்படுகின்றது என நாம் நினைத்து விடக்கூடாது. மாறாக மரணித்தவன் மண்ணறையில் புதைக்கப்பட்டாலும் சரி, அல்லது குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டு பாதுகாக் கப்பட்டாலும் சரி, அல்லது மிருகங்கள் சாப்பிட்டு மிருகங்களின் வயிற்றில் போய்ச் சேர்ந்தாலும் சரி, அல்லது பாலை வனத்திலோ, ஆகாயத்திலோ எறியப்பட்டாலும் சரி, அல்லது நெருப்பில் எரித்து சாம்பலை கடலில் கரைத்து விட்டாலும் சரி மண்ணறையில் புதைக்கப்பட்டவனுக்கு எவ்வாறான இன்பமும், துன்பமும் இருக்கின்றதோ அதேபோன்ற இன்பமும், துன்பமும் அவர்களுக்கும் இருக்கத்தான் செய்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இதனை இஸ்லாமும் நமக்கு பல இடங்களில் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

**ஏற்பாட்டை(கத்ரை) நம்புதல்.**

அல்லாஹுத்தஆலாவின் அறிவின் பிரகாரமும், ஞானத்தின் பிரகாரமும் உலகில் நடக்கவிருப்பவைகளை முன்கூட்டியே எழுதிவைத்த ஒன்றுக்கே (கத்ர்) ஏற்பாடு எனப்படும். அவை உலகிலுள்ளவைகளைப்பற்றிய அல்லாஹ்வின் முன்னறிவிப்பாகும். அவைகளை அவன் எப்போது எந்த நேரத்தில் நடக்க வேண்டும் என விரும்பினானோ அதன் பிரகாரம் அவைகளை நேரகாலத்துடன் எழுதி விட்டான்.

(கத்ரை) ஏற்பாட்டை நம்புவதெனும்போது உலகில் நடந்தவை, நடந்து கொண்டிருப்பவை, நடக்கவிருப்பவை அனைத்தையும் அல்லாஹ் அறிந்து வைத்திருக்கின்றான் என்பதை நம்பக் கடமைப்பட்டி

ருக்கின்றோம். மேலும் அவன் எது நடக்க வேண்டும் எனக்கருது கின்றானோ அது நடந்தே தீரும் என்றும், எவை நடக்கக்கூடாது என நினைக்கின்றானோ அவை எக்காரணம் கொண்டும் நடக்காது என்றும் நம்ப வேண்டும். அவன் படைப்பினங்களின் அனைத்து சொல், செயல்களையும் அவைகளைப் படைப்பதற்கு முன்னமே அவ னது ஏற்பாட்டில் எழுதி விட்டான் என்றும், அவன் எவைகளைப் படைக்க விரும்பி அவனது ஏற்பாட்டில் எழுதி வைத்தானோ அவை நடக்கும் என்றும் நம்ப வேண்டும்.

அல்லாஹுத்தஆலா தனது கட்டளைகளுக்கு வழிப்படுமாறும், விலக்கள்களை தவிர்ந்து நடக்குமாறும் இம்மனித சமுதாயத்தைப் பணித்திருக்கின்றான். அத்தோடு அப்படிக் கட்டுப்பட்டு நடப்போருக்கு சிறந்த வெகுமதிகளையும் தரவிருப்பதாகக் கூறிக் கொண்டிருக்கின் றான். எனவே அவ்வாறு கட்டுப்பட்டு நடப்பதற்குரிய நன்மையை அவனிடத்திலிருந்து எதிர்பார்த்தவாறு நாம் அக்கட்டளைகளுக்கு கட் டுப்பட்டு நடக்க வேண்டும். அதேபோன்று அவன் தடுத்தவைகளைச் செய்தால் அவன் என்ன தண்டனைகளை வழங்கவிருக்கின்றானோ அவைகளைப் பயந்து, அவைகளை விட்டும் விலகி நடக்கவும் வேண்டும். தான் ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டால் அதற்கு வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். அதற்கு மாறாக ஒரு தீயசெயலை செய்து விட்டால் அச்செயலில் ஈடுபட்ட மைக்காக அழுது மன்றாடி அவனிடம் பாவமன்னிப்புத் தேடவும் வேண்டும்.

நாம் (கத்ரை) ஏற்பாட்டை சரியான முறையில் ஏற்றுக் கொள்வ தின் கருத்தாவது, நாம் ஒரு செயலை செய்யுமுன் அதனை எவ் வாறு செய்ய வேண்டும் என்பதை அறிந்து அதன் பிரகாரமே பெற் றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவனுக்குரிய உணவை அவன் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் அதற்குரியவாறு அவன் தொழிலில் ஈடுபடவேண்டும். தொழிலென்றால் தான் நினைத்த தொழில் களில்லாமல் இஸ்லாம் எத்தொழில்களை செய்ய அனுமதித்திருக்கின் றதோ அவைகளில் ஈடுபட்டு அவனது உணவை தேடிக்கொள்ள வேண்டும். அத்தொழிலின் மூலம் அவன் தேடிய உணவைப் பெற

றுக் கொண்டால் அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண் டும். அதற்கு மாறாக அவனுக்குரிய அன்றைய உணவு கிடைக்கவில் லையாயின் அல்லாஹ் எழுதிய ஏற்பாட்டின் பிரகாரமே நடக்கின்றதென் பதை உணர்ந்து அதனைப் பொருந்திக் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் அல்லாஹ்வின் ஏற்பாட்டை ஏற்றுக் கொள் ளும் போது நமதுள்ளம் அமைதியடைகின்றது. ஆத்மா சாந்தியடை கின்றது. நாம் சந்தோஷமான முறையில் வாழ நமதுள்ளம் வழி வகுக் கின்றது. நடந்து முடிந்தவைகளைப்பற்றி நினைத்து கைசேதப்படா மல் இருப்பதற்கு உள்ளம் பக்குவமடைகின்றது. மனிதனது எல்லாக் காரியங்களும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமே நடக்கின்றது என நாம் நம்பும்போது நம்மில் ஒருவித மன உறுதி ஏற்பட்டு, அவனது அருளிலிருந்து நிராசையடையாமலிருக்கவும் வழிவகுக்கின்றது. தான் செய்து கொண்டிருக்கும் தொழிலிலோ, அல்லது கிரியைகளிலோ, எவ் வளவு கஷ்டங்கள் இருந்த போதிலும் தனது குறிக்கோளை அடைந்து கொள்ளும்வரை குறிக்கிடுகின்ற அனைத்துக் கஷ்டங்க ளையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் நம்மில் ஏற்படுத்துகின்றது.

இப்படியான ஒரு நம்பிக்கையில் வாழ்ந்து வருவதால்தான் இஸ் லாத்தை பின்பற்றி வரும் உண்மையான இறைவிசுவாசிகள் இஸ் லாத்தை ஏற்றுக் கொள்ளாதோர்களை விடவும் நூற்றுக்கு நூறு வீதம் சந்தோஷமாகவும், அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு உண்ண உணவின்றியும், குடிக்க நீரின்றியும், உறங்க உறைவிடமின்றியும் இருந்த போதிலும் அவர்கள் சந்தோஷமாய் இருப்பதைக் காணலாம். அதற்கு மாறாக அல்லாஹ்வினது ஏற்பாட்டில் நம்பிக்கை கொள்ளாதோர் வாழும் நாட்டை எடுத்துப் பார்த்தால், அவர்களில் பிரச்சினைகள் எனக் கதறு வோரையும், கஷ்டங்கள் எனக் கூக்குறலிடுவோரையும், அவைகளைச் சகிக்க முடியாமல் தனது சகோதரர்களை கொலை செய்வோரையும், பிறரது பொருட்களை கொள்ளையடிப்போரையும், தற்கொலைகளில் ஈடு படுவோரையுமே காணலாம். இதற்கெல்லாம் காரணம் யாது? என ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும், துன்

பங்களையும் சகித்துக் கொள்ள முடியாமல் சக்தியற்றுக் கிடக்கின்றார் கள் என்பது தெளிவாகும்.

ஆனால் ஏற்பாட்டை நம்பிக்கை கொள்ளும் இறைவிசுவா சிகள் வாழும் இஸ்லாமிய நாட்டை எடுத்துப் பார்ப்போமேயானால் அந்நாடு களில் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளின்றி நிம்மதியாக வாழ்ந்து வரு வதை நம்மால் கண்டு கொள்ளலாம். அதற்குரிய ஒரே காரணம் நாம் மேலே கூறியதுபோன்று அவர்களுக்கு ஏற்படும் அனைத்தும் அல் லாஹ்வின் விதிப்படிதான் நடக்கின்றது என்ற அடிப்படையில் வாழ்ந்து வருவதாகும். மேலும் அவர்களைப் படைத்த இறைவன் அவர்க ளுக்கு நன்மையைத் தவிர வேறெதையும் விரும்ப மாட்டான் எனவும் நம்பி வருகின்றார்கள். அவர்களுக்கு ஏற்பட்டவைகள் கஷ்ப்பானவைக ளாக இருந்தாலும் சரிதான் அவைகளது இறுதி முடிவு அல்லாஹ் விரும்பிக் கொள்ளும் வகையில்தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

**இஸ்லாமிய வணக்கம்.**

இஸ்லாமிய வணக்கமென்பது அல்லாஹுத்தஆலா எவைகளை யெல்லாம் செய்யுமாறு மனிதர்களுக்கு கட்டளையிட்டிருக்கின்றானோ அவைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதையும், அவன் எவைகளையெல் லாம் செய்ய வேண்டாம் எனத் தடுத்திருக்கின்றானோ அவைகளை தவிர்ந்து நடப்பதையுமே குறிக்கும். அவ்வாறு கூறும்போது அல் லாஹ் விரும்பக்கூடிய சொல், செயல் சம்பந்தப்பட்ட அந்தரங்கமான, வெளிப்படையான அனைத்துக் காரியங்களும் வணக்கங்களாகக் கருதப்படுகின்றன.

**வணக்கத்துக்குரிய நிபந்தனைகள்.**

நாம் அல்லாஹ்வை வணங்குவதென்றால் சில நிபந்தனைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமாகக் கருதப் படக்கூடிய இரு நிபந்தனைகளை நாம் அறிந்து கொள்வது அவசிய மாகின்றது. ஏனெனில் நாம் செய்யும் நற்செயல்களில் அவ்விரு நிபந்த னைகளும் காணப்பட வில்லையாயின் அவைகளை ஒருபோதும் அல் லாஹுத்தஆலா ஏற்றுக் கொள்ளமாட்டான். அவ்விரு நிபந்தனைகளும் பின்வருமாறு:

- நாம் செய்யும் நற்செயல்கள் அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத் தோடு இருக்க வேண்டும்.
- நாம் செய்யும் நற்செயல்கள் நபி (ஸல்) அவர்களது வழி காட்டல் களுக்கமைய இருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டதின் பிரகாரம் நாம் எந்த நற்செயல்களை செய்வதானாலும் முதலில் அவைகளை அல்லாஹ்வுக்காகவே செய்கின்றோம் என்ற உண்மையான எண்ணம் இருக்க வேண்டும். அத்தோடு அந் நற்செயல்களை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் எவ்வாறு செய்ய வேண்டும் எனக்கூறினார்களோ, அல்லது இவ்வாறுதான் செய்ய வேண்டுமென செய்து காட்டினார்களோ அதற்கமைய இருக்க வேண் டும். அவ்வாறு செய்யும் போதுதான் நாம் அல்லாஹ்வையும், அவன் மார்க்கமாக்கியவைகளையும் பின்பற்றி நடந்தோம் என்ற கருத்தில் கணிக்கப்படுவோம். உதாரணத்துக்கு தொழுகையை எடுத்துக் கொள் வோம் அத்தொழுகையை நாம் தொழும்போது அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்திலும், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அத்தொழு கையை எவ்வாறு நமக்கு தொழுது காண்பித்தார்களோ அதன் பிரகார மும் தொழுது வருவோமேயானால் அவ்வணக்கத்தை உரிய முறை யில் அல்லாஹ்வின் கட்டளைக்கும், நபியவர்களின் வழிமுறைக்கும் ஏற்ப நிறைவேற்றியிருக்கின்றோம் எனக்கருதப்படுவோம்.

இவ்வாறு இந்த இரு நிபந்தனைகளையும் இஸ்லாம் ஏன் விதித் திருக்கின்றது? அதற்குரிய காரணம்தான் என்னவென சிலர் கேட்க லாம். அதற்குரிய விடையை பலவாறாகக் கூறலாம். அவைகளில் சிலதை இங்கே பார்ப்போம்.

- நாம் எவ்வணக்கத்தை செய்வதென்றாலும் அவ்வணக் கத்தை அல்லாஹ்வுக்கென்ற தூய்மையான எண்ணத்தோடு செய்யுமாறு அவன் நம்மைப் பணித்திருக்கின்றான். நாம் அவ்வாறு செய்யாது அவ்வணக்கத்தை அவனால் படைக்கப்பட்ட வேறொருவனுக்கு செய்யும்போது நாம் அவனுக்கு இணை வைத்தவனாக ஆகிவிடு கின்றோம். அதிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வதற்காகத் தான் அவ்விரு நிபந்தனைகளையும் நமக்கு விதித்திருக்கின்றான்.

மனிதன் ஒரு வணக்கத்தை நிறைவேற்றும் போது அல்லாஹ்வுக் கென்ற தூய்மையான எண்ணத்தில்தான் நிறைவேற்ற வேண்டும் என்பதைப்பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான். நீங்கள் அவனுக்கே வணக்கத்தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக அவனையே அழையுங்கள்(7.29).

- மார்க்கத்தில் சட்டதிட்டங்களை நிர்ணயிப்பது அல்லாஹ்வுக்கு மாத்திரமுரிய உரிமையென அவன் கூறிக் கொண்டிருக்கின்றான். எவன் மார்க்கத்திலுள்ளவைகளை விட்டுவிட்டு வேறொன்றை வணங்குகின்றானோ அவன் அல்லாஹ்வுக்குரிய உரிமையில் தலையிட்ட பாவத்துக்கு ஆளாகிவிடுகின்றான். அதன்மூலம் அவனுக்கு இணை வைத்தவனாகவும் மாறிவிடுகின்றான்.
- அல்லாஹுத்தஆலா இஸ்லாம் மார்க்கத்தை பூரணமாக்கி விட்டதாகக் கூறுகின்றான். எவன் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உள்ளதாகக்கூறி வணங்கி வழிப்படுகின்றானோ, அப்போது அல்லாஹ்வுக்குத் தெரியாத ஒன்றை அவன் தெரிந்து கொண்டான் என்ற அடிப்படையில் அல்லாஹ்வின்மீது களங்கம் கற்பிக்கின்றான்.
- மனிதர்கள் நினைத்தவாறும், தாம் விரும்பியவாறும் வணங்கலாம் என்றிருந்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் வணங்கி வருவார்கள். அப்போது மனித வாழ்க்கை நரக வாழ்க்கையாக மாறி பிரச்சினைகளும், குழப்பங்களும் தலை விரித்தாடும். ஆதனால்தான் எல்லோரும் ஒரே முறையில் வணங்குமாறு இஸ்லாம் நம்மைப் பணிக்கின்றது.

**இறைவணக்கங்கள் யாவை?**

இஸ்லாம் கூறும் வணக்கங்கள் அதிகம் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் மிகவும் முக்கியமானவையாக தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், பெற்றோருக்கு பணிவிடை செய்தல், உறவினர்களை சேர்ந்து நடத்தல், உண்மை பேசுதல், வாக்குகளை நிறைவேற்றல், நம்பிக்கைக்கு துரோகம் செய்யாதிருத்தல், நல்லவைகளை தனது சகோதரனுக்கு எடுத்துச் சொல்லல், தீயவைகளைச் செய்யவிடா

மல் அவனைத் தடுத்தல், பாதையில் மனிதர்களுக்குத் தீங்கு விளை விக்கும் பொருட்களை அகற்றிவிடுதல், அநாதைகளோடும், ஏழைக ளோடும், வழிப்போக்கர்களோடும், மிருகங்களோடும் அன்பாய் நடந்து கொள்ளல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

மேலும் அல்லாஹ்வை தியானித்தல், அவனிடம் பிரார்த்தனை செய்து தனது தேவைகளைப் பெற்றுக் கொள்ளல், அவனிடமே பாது காப்புத் தேடல், உதவி தேடல், தனது காரியங்களனைத்தையும் அவ னிடம் ஒப்படைத்தல், தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி அழுது மண்றாடி அவனிடம் பாவமன்னிப்புக் கேட்டல், தனக்கேற் படும் கஷ்டங்களையிட்டு பொறுமையாயிருத்தல், தனக்கேற்படும் நன் மையான காரியங்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்தல், தனக்கு ஏற் படுவது இன்பமாக, அல்லது துன்பமாயிருந்தாலும் அதனைத் தாராள மனதுடன் பொருந்திக் கொள்ளல், அவனுக்கே பயப்படல், அவனையே நேசித்தல், அவனுடைய சுவனத்துக்கு ஆதரவு வைத்தல், தான் செய் யும் தீயவைகளை நினைத்தும், தனது உதாசீனத்தால் அவனுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களை விட்டுவிட்டதை நினைத்தும் வெட்கப்படல் போன்றவைகளும் வணக்கத்திலுள்ள வைகளாகும். இவைபோன்ற கூறப்படாத இன்னும் எத்தனையோ வணக்கங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளனைத்தையும் கூறுவதென் றால் இச்சிற்றேடு இடம் கொள்ளாது.

**வணக்கத்தின் சிறப்பு.**

இஸ்லாமிய வணக்கம் என்பது அல்லாஹ்வுக்குச் செய்ய வேண் டிய ஒரு வழிப்பாடாகும் என்பதனை அறிந்துகொண்டோம். அவனை வணங்கி வழிப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே இம்மனித சமுதாயத்தை அவன் படைத்திருக்கின்றான். அத்துடன் அவனை வணங்கி வழிப்படும் மனிதனை மிகவும் நேசிக்கின்றான். அத்தோடு அம்மனித சமுதாயம் நிறைவேற்ற வேண்டிய வணக்கங்களையும், இதர சட்டதிட்டங்களையும் எடுத்துக் கூறுவதற்காகவும், தெளிவுபடுத் துவதற்காகவும் பல தூதர்களையும், வேதங்களையும் அனுப்பிக் கொண்டிருந்தான். அவ்வேதங்களும், தூதர்களும் கூறும் சட்ட திட்

டங்களை எடுத்து நடப்பவர்களை புகழ்ந்தும், அவைகளுக்கு மாறு செய்கின்றவர்களை இகழ்ந்தும் கூறுகின்றான்.

மேலும் இஸ்லாமிய மார்க்க சட்டதிட்டங்களும், வணக்கங்களும் மனிதர்களை கஷ்டப்படுத்துவதற்காகவோ, அல்லது அவர்களுக்கு அவைகளின் மூலம் நெருக்கடியை உண்டு பண்ணுவதற்காகவோ ஏற் படுத்தப்பட்டவைகளல்ல. மாற்றமாக உயரிய ஒரு காரணத்தை முன் வைத்தே கடமையாக்கப்பட்டிருக்கின்றன. அவ்வணக்கங்களை யாரெல் லாம் சரிவர பின்பற்றி நடக்கின்றார்களோ அவர்களுக்கு மட்டிட முடி யாத நன்மைகள் கூலியாக வழங்கப்படவிருக்கின்றன. மேலும் அவ் வணக்கங்களை மனிதன் நிறைவேற்றும்போது அவனுக்குத் தெரியா மலே பல சிறப்புக்கள் அவனை வந்து சேருகின்றன. அவ்வணக்கங் களின் மூலம் அவனது உள்ளமும், உடலும் தூய்மை பெறுவதோடு, இஸ்லாம் கூறும் உயர்ந்த அந்தஸ்துக்கும் அவனை இட்டுச் செல்கின்றன.

இம்மனிதன் தனது வாழ்வையும், சுற்றுச் சூழலையும் சீராக்கிக் கொள்வதற்காக அவ்வணக்கங்களின்பால் தேவையுடையவனாக இருக் கின்றான். அதற்காக அவன் அவ்வணக்கங்களில் ஈடுபட வேண்டுமெ னவும் கட்டாயப்படுத்தப் பட்டிருக்கின்றான். ஏனெனில் மனிதன் இயற் கையிலேயே பலவீனமானவனாகவும், மடையனாகவும் இருந்து கொண் டிருப்பதால் எப்போதும் அவன் அல்லாஹ்வின் உதவியை எதிர்பார்த்தி ருக்க வேண்டிய நிலையிலிருக்கின்றான். ஒரு அடியான் தனது உடம்மை உற்சாகமாக வைத்துக் கொள்ள உணவும், குடிபானமும் எவ்வாறு அவனுக்குத் தேவைப்படுகின்றதோ அதேபோன்று அவனது உள்ளமும், உயிரும் வலுப்பெற்றிருப்பதற்கு வணக்கம் எனும் உணவு தேவைப்படுகின்றது. மனிதனது உடலுக்கு உணவும், குடி பானங்களும் தேவைப்படுவதைவிட அவனது உள்ளத்துக்கும், உயி ருக்கும் வணக்கம் எனும் உயிர்ச்சத்து அவசியம் தேவைப்படுகின் றது. ஏனெனில் மனிதன் தனது உள்ளத்தையும், உயிரையும் வைத்தே கணிக்கப்படுகின்றான்.

மனிதன் மனிதனாக இருப்பதற்கு அவ்விரண்டும் அவசியமாயிருப் பதுடன், எப்போதும் அவையிரண்டும் சீராகவும், வலுவாகவும் காணப்

படவும் வேண்டும். அவையிரண்டும் சீர்பெற வேண்டுமென்றால் வணக்கத்தின் மூலம் மாத்திரமே சீர் பெறுகின்றன. அதேபோன்று உள்ளங்கள் அமைதியடைவதென்றாலும் அல்லாஹ்வை வணங்குவதின் மூலமும், அவனை தியானிப்பதின் மூலமுமே அமைதியடைகின்றன. மனிதனுக்குக் கிடைக்கும் இன்பமும், சந்தோஷமும் வணக்கங்களின் மூலமன்றி வேறு வழிகளால் பெற்றுக் கொள்ளப்பட்டால் அவை நிலைத்திருக்கக் கூடிய சந்தோஷமாகவோ, இன்பமாகவோ இருக்க மாட்டாது. அவைகளின் மூலம் பெற்றுக் கொள்ளும் இன்பமும், சந்தோஷமும் உண்மையானவை போன்று அவனுக்குத் தென்பட்டாலும் இறுதியில் அவைகள் போலியானவை என்பதை அவனாகவே அறிந்து கொள்கின்றான்.

ஆனால் அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதின் மூலம் ஏற்படக் கூடிய இன்பமும், சந்தோஷமும் என்றும் நிலைத்திருக்கக் கூடியதாகும். அது ஒருபோதும் துண்டிக்கப்படவோ, அல்லது நீங்கிவிடவோ மாட்டாது. மாற்றமாக அதுதான் சிறந்ததாகவும், பூரணமானதாகவும், உண்மையானதாகவும் இருந்து கொண்டிருக்கின்றது. எவன் தன்னோடு நிலைத்திருக்கக்கூடிய சந்தோஷத்தை எதிர்பார்க்கின்றானோ அவன் அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி வழிப்பட வேண்டும். அந்த அடிப்படையில் வணங்கி வழிப்படும் இறைநேசர்களும், நல்லடியார்களும்தான் உலகில் மிகவும் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். எனவே தான் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும் என்று நினைக்கும் ஒருவன் தனது வாழ்நாளை அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவதில் செலவளிக்க கடமைப்பட்டிருக்கின்றான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வணக்கத்தின் சிறப்பம்சங்களிலுள்ள மற்றுமொரு விஷயம் யாதெனில் மனிதன் நல்லவைகளில் ஈடுபடுவதற்கும், நிராகரிக்கப் பட்டவைகளை விட்டுவிடுவதற்கும், கஷ்டங்களின்போது மன ஆறுதல் அடைவதற்கும், வெறுப்புகளை நீக்கிக் கொள்வதற்கும், துன்பங்களை இலேசாக்கிக் கொள்வதற்கும், அவைகளை தாராள மனதோடு ஏற்றுக் கொள்வதற்கும் அவ்வணக்கங்கள் வழிவகுக்கின்றன.

அதனது சிறப்பம்சங்களிலுள்ள மற்றுமொரு விஷயம், ஒருவன் இறைவனை வணங்கி, வழிப்பட்டு வரும்போது அவனது படைப் பினங்களை வணங்காமலிருப்பதற்கும், அவைகளிடம் தனது தேவை களை முறையிடாமலிருப்பதற்கும், அவைகளுக்கு பயப்படாமலிருப்ப தற்கும், அவைகளிடம் எதனையும் ஆதரவு வைக்காமலிருப்பதற்கும் வழிவகுக்கின்றது. இவ்வாறிருக்கும் போதுதான் அவன் உலகில் கண்ணியமானவனாகவும், தலை நிமிர்ந்து நடக்கக் கூடியவனாகவும், உயர்ந்த மதிப்பைப் பெற்றுக் கொண்டவனாகவும் காணப்படுகின்றான்.

மேற்கூறப்பட்ட எல்லா சிறப்பம்சங்களையும்விட சிறந்து விளங்கக் கூடிய அவ்வணக்கங்கள் பெற்றுத்தரும் அல்லாஹ்வின் திருப்பொருத் தமும், அவனது நரகிலிருந்து பெரும் பாதுகாப்பும், சுவனத்தைப் பெற்றுத் தரும் வெற்றியும் இருந்து கொண்டிருக்கின்றன.

**இஸ்லாத்தில் பெண்கள் நிலை.**

இஸ்லாம் மார்க்கம் உலகில் தோன்றுவதற்கு முன்னால் வாழ்ந்த பெண்ணினம் கீழ்த்தரமாகவும், அவர்களுடைய உரிமைகள் பறிக்கப் பட்டவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள் என்பதை வரலாறுகள் நமக் குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று இஸ்லாத் துக்குப் பிறகு தோன்றிய சில மதங்களும், கொள்கைகளும், பிரிவுக ளும் இஸ்லாத்துக்கு முன் காணப்பட்ட அதே நிலையைப் பின்பற்றி பெண் இனத்தை இழிவாக நடத்தி வந்தார்கள். அந்நிலை இன்றும் சிலமதங்களில் இருந்து வருவதைக் காணலாம். ஆனால் அவைக ளுக்கு நேர்மாறாக இஸ்லாம் மார்க்கம் அப்பெண்களை பல வகையி லும் கண்ணியப்படுத்தி அவர்களது உரிமைகளை வழங்கி, அவர் களை ஆண்களின் ஒரு பகுதியென்றே கூறிக் கொண்டிருக்கின்றது. மேலும் மனிதர்களில் சிறந்தவர்கள் தங்கள் மனைவியருடன் சிறந்த முறையில் நடந்து கொள்பவர்கள் எனக்கூறி அவர்களது அந்தஸ்தை மேலும் ஒருபடி உயர்த்தியிருக்கின்றது. இவ்வாறு இஸ்லாம் அவர்க ளுக்கு பல உரிமைகளை வழங்கி கண்ணியப்படுத்திக் கொண்டிருக் கின்றது. எனவே இப்பகுதியில் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக் கும் உரிமைகளில் சிலதைப் பார்ப்போம்.

குறிப்பாக ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டால் தனது தாயி டமிருந்து பால் அருந்தும் உரிமையை அக்குழந்தை பெற்றுக் கொள்கின்றது. மேலும் அக்குழந்தையை சிறந்த முறையில் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை அக்குழந்தையின் பெற்றோர்களுக்கு இஸ்லாம் வழங்கியிருக்கின்றது. அச்சிறு பிராயத்தில் அவள் தனது பெற்றோர்க ளின் கண்குளிர்ச்சியாகவும், அவர்களதும், அவளது சகோதர, சகோதரி களதும் அன்பிற்குரியவளாகவும் காணப்படுகின்றாள்.

அடுத்த கட்டமாக அவள் வளர்ந்து பெரியவளாகி விட்டால் கண் ணியத்துக்குரியவளாக மாறிவிடுகின்றாள். ஆதலால்தான் அவளுக்கு மற்றவர்களால் ஏற்படும் தீங்குகளையிட்டு அவளது பெற்றோர் வெறுப் புக் கொள்பவர்களாக ஆகிவிடுகின்றார்கள். மேலும் அவர்கள் அப்பரு வத்தில்தான் கண்ணை இமைகாப்பது போன்று அவளைக் காத்து வருகின்றார்கள். அவளை தீய கைகள் தீண்டுவதையோ, அல்லது கெட்ட வார்த்தைகளால் நோவினைப்படுத்துவதையோ, கடைக்கண் பார்வைகளால் அவள் கவரப்படுவதையோ விரும்பாது அவளை வீட் டினுள் வைத்தே பாதுகாத்து வருகின்றார்கள். இவ்வாறான கண்ணி யத்தை அவள் அவ்வயதில் பெற்றுக் கொள்கின்றாள்.

அடுத்த கட்டமாக அவளது திருமண வயது வந்து விட்டால் அல்லாஹ்வின் வார்த்தையைக் கொண்டும், அவனது கடுமையான கட்டளையின் பேரிலும் திருமணம் செய்து கொடுக்கப்படுகின்றாள். அதேபோன்று அவள் பிறந்த வீட்டை விட்டு தனது புதிய உறவுடன் அவனது வீட்டுக்குச் சென்று விட்டால் அங்கே அவள் கண்ணிய மாகவும், பாதுகாப்பாகவும், அன்பாகவும், பாசமாகவும் நடத்தப்பட வேண்டுமென கணவனையும், அவனது குடும்பத்தினரையும் இஸ் லாம் பணித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் எந்த வகையிலும் அவளுக்கு நோவினைகளை ஏற்படுத்தாமல் சிறந்த முறையில் பாது காக்கப்பட வேண்டுமெனவும் கணவனைப் பணித்துக் கொண்டிருக் கின்றது. அவளுடன் அவ்வாறு நடந்து கொள்வது அவனது கட்டா யக் கடமையெனக் கூறி வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

அடுத்த கட்டமாக அவள் தாயின் ஸ்தானத்தை அடைந்து விட் டால் அவளது குழந்தைகள் அவளுக்கு பணிவிடை செய்வதையும்,

அவளுடன் அன்பாய் நடந்து கொள்வதையும் கடமையெனப் போதித் துக்கொண்டிருக்கின்றது. இஸ்லாத்துக்கு முரணானவைகள் தவிர்ந்த ஏனைய அவளது அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடக் குமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு கட்டுப்பட்டு நடப்பது அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு சமமானது எனவும் போதித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று அவளுக்குத் தீங்கி ழைத்து நோவினை செய்வதையும், அவளது மனதை புண்படுத்து வதையும் கண்டிக்கின்றது. அவ்வாறு நடந்து கொள்பவர்களுக்கு அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதற்குள்ள தண்டனையைப் போன்றும், பூமியில் அழிச்சாட்டியம் செய்வதற்குரிய தண்டனையைப் போன்றும் தண்டனை வழங்கப்படுமென எச்சரித்துக் கொண்டிருக்கின்றது.

அடுத்த கட்டமாக அவள் சகோதரி என்ற ஸ்தானத்துக்கு வந்து விட்டால், அவளை இஸ்லாமியர்கள் தமது சகோதரிகளாக நினைத்து நடந்து கொள்ளுமாறும், அவளுக்கேற்படும் துன்பங்களை தங்களது துன்பங்களாக நினைத்து அவளுக்கு ஒத்தாசையாக இருந்து கொள் ளுமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் அவள் அந்நிய சக்திகளால் தீண்டப்படும் போது அதற்காக கோபம் கொள்ளுமாறும், அதிலிருந்து அவளை பாதுகாக்குமாறும், எப்போதும் அவளுடன் கண்ணியமாகவும், ஒழுக்கமாகவும் நடந்து கொள்ளுமாறும் பணித் துக் கொண்டிருக்கின்றது. மேலும் அப்பெண் தனது தந்தையின் இரண்டாம் தாரமாக இணைந்து ஒருவனது சித்தியின் ஸ்தானத் துக்கு வந்துவிட்டால், அவளைச் சேர்ந்து நடப்பதிலும், அவளுக்கு அன்பு செலுத்துவதிலும், கண்ணியப்படுத்துவதிலும், பணிவிடை செய் வதிலும் தாயைப் போன்று கவனித்து வருமாறும் போதித்துக் கொண்டிருக்கின்றது.

அடுத்த கட்டமாக அவள் பாட்டியாக மாறிவிட்டாலோ, அல்லது அவளது வயது முதிர்ந்து விட்டாளோ அவளுடைய குழந்தைகளி டமும், அவளது பேரக் குழந்தைகளிடமும், ஏனைய அனைத்து உற வினர்களிடமும் அவளுடைய அந்தஸ்து உயர்ந்து காணப்படுகின்றது. அவள் கேட்பவைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறும், அவளு டைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுமாறும், அவளோடு அன்பாக

வும், ஆதரவாகவும் இருக்குமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் ஒரு பெண் அவளது குடும்பத்தினரும், உறவினர்களும், அவளுக்குத் தெரிந்தவர்களும் இல்லாத ஒரு இடத்துக்குச் சென்று விட்டால், இஸ்லாமிய சகோதரி என்ற முறையில் ஒரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய பொதுவான கடமைகளைச் செய்து கொடுக்குமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் அவளை கண்ணியமான முறையில் வழிநடத்தி அன்பாய் நடந்து அவளுக்கேற் படும் தீங்குகளை தடுப்பதுடன், அவளை கடைக்கண் கொண்டு தானும் பாராமல், ஏனையோரையும் பார்க்கவிடாமல் தடுக்க வேண்டு மெனப் போதித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஏனைய மதங் களிலும், சமூகங்களிலும் காணப்படாத இக்கடமைகளை முஸ்லீம் சமூகம் மாத்திரம் இன்று வரையும் கடைபிடித்து வருவது இஸ்லாத் தின் மேன்மையையே தெளிவுபடுத்துகின்றது.

பெண்களுக்குத் தேவையானவைகளை சொந்தமாக்கிக் கொள்ள வும், அவளிடமிருக்கும் ஒரு பொருளை கூலிக்குக் கொடுக்கவும், அல்லது கொடுக்கல், வாங்கல் செய்யவும், இதுபோன்ற ஏனைய ஒப் பந்தங்களைச் செய்து கொள்ளவும் அவர்களுக்கு அனுமதியளித்திருக் கின்றது. அதேபோன்று மார்க்க விஷயங்கள், மார்க்கம் அனுமதித்தவை கள் போன்றவைகளை கற்றுக் கொள்ளவும், கற்றுக் கொடுக்கவும் அனுமதி வழங்கியிருக்கின்றது. மேலும் ஆண்களும், பெண்களும் மார்க்கத்தில் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை தவற விடும் பட்சத்தில் அவர்களை பாவிகள் எனவும் கூறி கண்டிக்கின்றது.

இஸ்லாம் பெண்களை கண்ணியப்படுத்தும் வகையிலுள்ளது தான், அவர்களையும் அவர்களுடைய மானத்தையும் பாதுகாக்குமாறு போதித்துக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று அவளை தீய வார்த் தைகளிலிருந்தும், கெட்ட பார்வைகளிலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டு முகமூடி அணிந்தே வெளிச் செல்லுமாறு வலியுறுத்துகின் றது. அவளது அங்க உறுப்புகள் தெரியும் வகையில் ஆடைய ணிந்து நடமாடுவதையும், அந்நிய ஆண்களோடு கலந்திருப்பதையும், அவளுக்கு தீங்கு விளைவிக்கும் ஏனைய அனைத்துக் காரியங்களை விட்டும் தவிர்ந்து நடக்குமாறும் பணித்துக் கொண்டிருக்கின்றது.

அவளுக்குரிய உணவு, குடிப்பு, உடை போன்றவைகளின் செலவு களை கணவனே கவனித்துக் கொள்ள வேண்டுமெனவும், அவளுடன் அவன் அன்பாகவும், பாசமாகவும் இருந்து அவளுடனான தொடர்பை பலப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிக்கின்றது. அவளுக்கு எந்த நிலையிலும் அநியாயமோ, நோவினையோ செய்யக் கூடாதெனவும் போதித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் கணவனுக் கும், மனைவிக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டு, அப்பிரச்சினைகள் அவர்களிருவரதும் நிம்மதியையும், சந்தோஷத்தையும் கெடுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுகின்ற வரை அவ்விருவரும் பிரிந்து வாழலாம் எனவும் சட்டம் வழங்கியிருக்கின் றது. மேலும் அவர்களுடைய வாழ்க்கை நரக வாழ்க்கையாக மாறி, சமாதானத்துக்கே இடமில்லை என்றிருக்கின்றபோது அவளை விவா கரத்து செய்து விடுமாறும் கணவனுக்குக் கட்டளையிடுகின்றது.

மேலும் கணவன் மனைவிக்கு அநியாயம் செய்வதையும், இல் லற வாழ்க்கையில் அவளுடன் மோசமாக நடந்து கொள்வதையும் கண்டித்து, அவ்வாறான நிலைகள் காணப்படும் பட்சத்தில் அவள் அவனை பிரிந்து வாழுமாறும் போதித்துக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக்கும் உரிமைகளிலுள்ள மற்றுமொரு விஷயம்தான் ஒருவனிடம் உணவு, குடிப்பு, ஆடை, தங்குமிட வசதி போன்றவைகள் அளவுக்கதிகமாக இருந்து தன்னால் நீதமாகவும் நடந்து கொள்ள முடியுமென்றால் ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு, அல்லது மூன்று, அல்லது நான்கு மனைவிகளை மண முடித்துக் கொள்ளலாம் என சலுகை வழங்கியிருக்கின்றது. இவ்வாறு இஸ்லாம் பலதார மணத்தை அனுமதியளித்திருப்பதில் ஆண்களுக் கும், பெண்களுக்கும், அவர்கள் வாழும் சமூகத்துக்கும் பல நன் மைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்நன்மைகளை பலதார மணத்தை வெறுப்பவர்களால் ஒருபோதும் அறிந்துகொள்ள முடி யாது. ஏனெனில் இஸ்லாம் ஏன் அவ்வாறு அனுமதி வழங்கியி ருக்கின்றது என்ற உண்மையை தெரியாதவர்களாகவும், அதன் மூலம் அம்மனைவியருக்குக் கிடைக்கும் நன்மைகளை அறியாதவர்களாக வும் இருக்கின்றார்கள். குறிப்பாக பலதார மணத்தால் பெண்கள்

அடைந்து கொள்ளும் சில நன்மைகளை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இங்கே குறிப்பிடுகின்றேன். அவைகள் பின்வருமாறு:

- இஸ்லாம் விபச்சாரத்தினால் ஏற்படும் பல பின்விளைவுகளையும், பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு அதனை ஹராமாக்கியிருக்கின்றது. மேலும் வெட்கம் அவனை விட்டும் விலகிப் போகின்றது. அதிலீடுபடும் பெண்களின் மானமும், கண்ணியமும் பறிக்கப்படுகின்றன. அவ்விபச்சாரத்தின் மூலம் அவள் இழிவாக்கப் படுவதோடு, அவளது குடும்பமும் இழிவாக்கப்படுகின்றது. மேலும் அவ்விபச்சாரத்தின் மூலம் பிறக்கும் குழந்தை பிற்காலத்தில் அதனது உறவுமுறையைத் தெரியாது இழிவான முறையில் வாழ வேண்டியேற் படுகின்றது. அதேபோன்று எந்தவொரு மருந்துகளாலும் குணப்படுத்த முடியாத வயிற்றோட்டம், எய்ட்ஸ் போன்ற நோய்கள் தொற்றிக் கொள்வதோடு, மனநோய்களாலும் பாதிக்கப் படுகின்றான். மனித குலத்துக்கு இஸ்லாம் எப்போது விபச்சாரத்தை ஹராமாக்கி அதில் ஈடுபடுபவனுக்கு கடுமையான தண்டனையையும் விதித்ததோ அப்போதே அவன் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வாழக்கூடியவாறு அவனுக்கு திருமணத்தை ஆகுமாக்கி, தேவைப்படும் பட்சத்தில் ஒரே நேரத்தில் நான்கு மனைவியரோடு குடித்தனம் நடத்தலாம் எனவும் சட்டம் வகுத்திருக்கின்றது.

  இவ்வாறானதொரு சட்டத்தை வகுத்திருப்பதால் மேற்கூறப்பட்ட விபச்சாரம் இடம்பெறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய் விடுகின்றது. மேலும் இஸ்லாம் வகுத்திருக்கும் அச்சட்டத்திலிருந்து ஆண்களையும், பெண்களையும் தடுப்பது நாம் அவர்களுக்குச் செய்யும் பெரும் அநியாயமாகும். நாம் அவ்வாறு அவர்களைத் தடுக்கும்போது சில சந்தர்ப்பங்களில் இஸ்லாம் தடுத்த விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கும் அவர்கள் முனைந்து விடுவார்கள். அப்போது அக்குற்றத்தை நாமும் சுமக்க வேண்டிய ஒரு நிலை யேற்படுகின்றது. மேலும் உலகில் எல்லாப் பகுதிகளிலும், எல்லா நாடுகளிலும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்

கையைவிட அதிகமாகவே காணப்படுகின்றது. இது யுத்த காலங்களில் மிகவும் தெளிவாகவே காணப்படக்கூடிய ஒன்றாகும். இவ்வாறு பெண்கள் அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு ஆணும் ஒரே மனைவியுடன் வாழ முறற்பட்டால் பல பெண்கள் திருமணமின்றியிருக்க வேண்டிய ஒரு அவல நிலையேற்படுகின்றது. அவ்வாறிருப்பது அவர்களுக்குப் பெரும் பிரச்சினையாகவும், மனச்சங்கடமாகவும் இருப்பதோடு, சில சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்கள் மானங்களைப் பொருட்படுத்தாது விபச்சாரத்தில் ஈடுபடக்கூடிய நிலையும் உருவாகின்றது.

- திருமணம் என்பது உடல் ரீதியான இன்பத்தை அனுபவிப்பதற்கு மாத்திரம் செய்து கொள்ளப்படும் ஒரு உறவு முறையல்ல. மாற்றமாக அதிலே ஒருவித சந்தோஷம், மன ஆறுதல், நிம்மதி, குழந்தைப்பேறு போன்ற மகிழ்ச்சிகரமான விஷயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. குழந்தைச் செல்வம் இஸ்லாத்தின் பார்வையில் பெருமதிமிக்க ஒன்றாக கருதப்படுகின்றது. ஆதலால் தான் அக்குழந்தையை சிறந்த முறையில் ஒழுக்க மாண்புகளோடு வளர்த்து வருவதை பெற்றோர்களது கடமை என இஸ்லாம் போதித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு பெண் தனது கணவனின் மூலம் குழந்தைகளைப் பெற்று அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்து வருவாளென்றால் அவர்களே அவளது கண் குளிர்ச்சியாகவும், சந்தோஷப் பொக்கிஷங்களாகவும் மாறி விடுகின்றார்கள். ஆக ஒரு பெண் தனிமையிலிருந்து அங்கு மிங்கும் அலைந்து திரிவதைவிட தன்னைப் பாதுகாத்து, அரவணைக்கக்கூடிய, குழந்தைகளைப் பெற்றுத் தரக்கூடிய ஒருவனைத் திருமணம் செய்து வாழ்வதே சிறந்ததாகும்.
- இஸ்லாம் எல்லா விஷயங்களிலும் நீதமாகவும், நியாயமாகவுமே நடந்து கொள்கின்றது. அந்த அடிப்படையில் பெண்களுடைய விஷயத்திலும் நீதத்தைக் கடைபிடிக்கின்றது. எல்லாப் பெண்களும் ஒரேதரத்தில் வைத்துக் கணிக்கப்பட வேண்டுமென மனித குலத்தைப் போதித்துக் கொண்டிருக்கின்றது. ஆதலால்தான் வச

தியின்மையாலும், வேறுசில காரணங்களாலும் திருமணமேயின்றி வீடுகளில் முடங்கிக் கிடக்கும் பெண்களுக்கும், வாழக்கூடிய வயதில் தமது கணவன்மாரை இழந்துவிட்டு தவியாய்த் தவிக்கும் பெண்களுக்கும் மறுவாழ்வு கொடுக்குமாறு போதித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களையும் கருணைக் கண் கொண்டு பார்க்குமாறு பணித்துக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாம் இவ்வாறு போதித்துக் கொண்டிருக்கையில் திருமணம் முடித்த ஒரு பெண் தனது கணவனுக்கு இன்னொருத்தி இரண்டாம் தாரமாக வருவதை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? ஒரு மனைவி தனது கணவனுக்கு இன்னொருத்தி இரண்டாம் தாரமாக வருவதை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் இரண்டாம் தாரமாக வருபவள் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழ வழிவகுக்கின்றாள். எனவே மேற்கூறப்பட்ட காரணங்களை மனதில் கொண்டு திருமணம் செய்து கணவன்மாருடன் வாழ்ந்து வரும் பெண்கள் தமது கணவனும் இன்னொருத்தியும் சேர்ந்து வாழ இடங்கொடுப்பது சிறந்ததா? அல்லது ஏனைய தமது இஸ்லாமிய சகோதரிகள் திருமணமின்றியும், வாழ்க்கையில் ஒரு சந்தோஷமின்றியும் வீடுகளில் முடங்கிக் கிடக்கச் செய்வது சிறந்ததா?

ஒருவன் பல மனைவியரை மணந்து அவனும், அவனது சமுதாயமும் சந்தோஷமாக வாழ்வது சிறந்ததா? அல்லது அவனது ஆசையை கட்டுப்படுத்த முடியாமல் மாற்றானின் மனைவியோடு தொடர்பு கொண்டு குடும்பங்களையும், சமுதாயத்தையும் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கி அழிச்சாட்டியங்களை ஏற்படுத்துவது சிறந்ததா?

ஒருவன் இஸ்லாம் அனுமதித்ததின் பிரகாரம் இரண்டோ, மூன்றோ, நான்கோ பெண்களை திருமணம் முடித்துக் கொண்டு அவர்களுடன் சந்தோஷமாக வாழ்வது சிறந்ததா? அல்லது ஒரு மனைவியோடு இருந்து கொண்டு அவளுக்குத் தெரியாமல் பல காதலிகளோடு சுற்றித் திரிவது சிறந்ததா? இவைகளில் எது

சிறந்தது என பெண்களும், பலதார மணத்தைத் தடுக்கும் ஆண் களும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

- இன்று மாற்றுமதத்தினர் நினைத்துக் கொண்டிருப்பது போல இஸ்லாம் பலதார மணத்தை ஒவ்வொருவரும் செய்து கொள்ள வேண்டுமென கட்டாயப் படுத்தவில்லை. அதனால்தான் இன்று இஸ்லாமியர்களிலும் அவர்களில் அதிகமானோர் ஒரு மனைவியு டனே ஆயுள் முழுவதும் வாழ்ந்து வருவதைக் காணுகின்றோம். தனக்கு ஒருத்தி போதுமென்று ஒருவன் கருதும் போது அவன் அவளுடனே வாழ்ந்து வருவதில் எத்தவறுமில்லை. அதேநேரம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியமும் அவனுக்கில்லை.
- பெண்களின் தேகாரோக்கியம் ஆண்களது தேகாரோக்கியத்திலும் பார்க்க முற்றிலும் மாறுபட்டதாகும். அதன்பிரகாரம் ஒரு பெண் ணால் ஆண்களைப் போன்று எல்லா நேரங்களிலும் உடலுறவுக்கு தயாராகிவிட முடியாது. அவளுக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் காலங்களில் சிலவேளை பத்து நாட்களையும் தாண்டி தீட்டு வெளியாகிக் கொண்டிருக்கும், அல்லது ஒவ்வொரு மாதத்திலும் இரு வாரங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும். பிரசவத் தீட்டு ஏற்படும் காலங்களிலும் பெரும்பாலும் நாட்பது நாட்கள் தொடராக வந்து கொண்டிருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவளு டன் உடலுறவு கொள்வதை இஸ்லாம் தடுத்திருக்கின்றது. அதையும் மீறி ஒருவன் அவர்களுடன் உடலுறவு கொண்டால் பல நோய்கள் ஏற்படுமென்று இஸ்லாமும், வைத்தியத் துறையும் எச்சரித்துக் கொண்டிருக்கின்றது.

மேலும் அவளுக்கு குழந்தை தரித்திருக்கும் போதும் அவன் எதிர்பார்ப்பது போன்று அவனது ஆசையை அவளால் நிறை வேற்றி வைக்கமுடியாதவளாக இருக்கின்றாள். ஆனால் ஆண்க ளுக்கோ அவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படாது எப்போதும் உடலுறவுக்கு தயார் நிலையிலே இருக்கின்றார்கள். ஆண்களது நிலையும், பெண்களது நிலையும் இவ்வாறிருக்கையில் ஆண்கள்

பலதார மணம் செய்து கொள்வதை அவனது மனைவியும், சமுதாயமும் தடுக்கும் போது இஸ்லாம் தடுத்து எச்சரித்துக் கொண்டிருக்கின்ற விபச்சாரத்தில் அவன் திருட்டுத்தனமாக ஈடுபட்டு அவனையும், அவனது வாழ்க்கையையும், அவனது குடும்பத்தையும் அழித்துக் கொள்வதற்கு வழிவகுக்கின்றது.

- திருமணம் செய்துகொண்ட எல்லாக் கணவன்மாறும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள ஆசைப்படுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. சில சந்தர்ப்பங்களில் சிலருடைய மனைவியரிடம் காணப்படும் உடல் பலவீனத்தாலோ, அல்லது நோயினாலோ, அல்லது மலட்டுத் தன்மையினாலோ குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருப்பார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவளை விவாகரத்துச் சொல்லி விடாது அவளையும் வைத்துக் கொண்டு, தனக்குக் குழந்தையைப் பெற்றுத் தரக்கூடிய இன்னொருத்தியையும் மணமுடித்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கின்றது? அதற்கு இஸ்லாமும் அனுமதி வழங்கித்தானே இருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் மற்றுமொரு விஷயத்தையும் நாம் மறந்து விடக்கூடாது. அதாவது மனைவி குழந்தை பெற்றுக் கொள்ளக்கூடிய முறையிலிருந்து கணவனது உடல் பலவீனத்தாலோ, அல்லது நோயினாலோ, அல்லது அவனிடம் காணப்படும் மலட்டுத்தன்மையினாலோ குழந்தையை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பிழந்து நிற்கின்றான். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மனைவி விரும்பினால் அவனிடமிருந்து விவாகரத்துக் கேட்டு அவனைப் பிரிந்து வேறொரு திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கும் இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது.
- வேறு சில சந்தர்ப்பங்களில் அவளுக்கு பாரிசவாதம் போன்ற தீராத நோய்கள் ஏற்பட்டு அவளால் அவனுக்குரிய கடமைகளையும், உதவிகளையும் செய்து கொடுக்க முடியாமல் போய்விடுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அவன் அவளை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு திருமணம் செய்து கொள்வதைவிட அவளையும் வைத்துக் கொண்டு அவளோடு சேர்ந்து வாழக்கூடியவாறு இன்னொ

ருத்தியையும் மணந்து கொள்வதுதான் சிறந்தது. அதற்கு முதல் மனைவியும் கட்டாயம் அனுமதி வழங்கத்தான் வேண்டும்

- வேறு சில சந்தர்ப்பங்களில் மனைவியின் குணங்கள் மோசமா னவையாகவும், கல்மனம் படைத்தவளாகவும், அல்லது மோசமான கொள்கையுடையவளாகவும், அல்லது மோசமான நடைமுறைகள் உள்ளவளாகவும் காணப்படுவாள். இச்சந்தர்ப்பங்களில் அவள் தனது கணவனுக்குரிய கடமைகளை ஒருபோதும் சரிவர நிறை வேற்ற மாட்டாள். அவன் எதிர் பார்ப்பவைகளை உரிய முறையில் செய்து கொடுக்க மாட்டாள். இவ்வாறான நிலைகளில் அவன் அவளை விவாகரத்துச் செய்வதைவிட அவளையும் வைத்துக் கொண்டு அவனோடு அன்பாய் இருக்கக்கூடிய ஒரு பெண்ணை மறுமணம் செய்து கொள்ளலாம். அப்போது அவனது இரண் டாம் தாரத்தின் மூலம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து, எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து சந்தோஷமான முறையில் வாழ்ந்து வருவான். அதுமட்டுமின்றி அவனுக்கு குழந்தைகள் இருந்தால் அவர்களை சிறந்த முறையில் வளர்த்து ஆளாக்கி அவர்களது எதிர்கால நன்மைக்கு எதுவெல்லாம் தேவையோ அவைகளையும் கவனித்து செய்து வரக்கூடியவளாகவும் இரண் டாம் தாரம் காணப்படுவாள். இப்படிப்பட்ட காரணங்களுக்கெல் லாம் மறுமணம் செய்வதை இஸ்லாம் அனுமதித்திருக்கின்றது.
- குழந்தை கருவில் தரிப்பதற்கு ஒரு பெண்ணுடைய சக்தியை விட ஆணுடைய சக்திதான் அதிகமாகத் தேவைப்படுகின்றது. அதற்குரியவாறு அல்லாஹுத்தஆலா ஆணினத்துக்கு சிறந்த சக் தியைக் கொடுத்து படைத்திருக்கின்றான். அதனடிப்படையில் ஒரு ஆண் அறுபது வயதிலும் குழந்தையைப் பெற்றுக்கொள்ள சக்தி பெறுகின்றான். அதற்கும் மேலாக அவனுக்கு போதிய சக்தியும், உடல் வலிமையும் இருந்தால் அவனது நூறு வயதுக்குப் பிற கும் அவனால் குழந்தையைப் பெற்றுக் கொடுக்க முடியும். ஆனால் பெண்ணைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் அவளு டைய நாட்பதாவது வயதோடு, அல்லது அதைவிட சற்று கூடிய

வயதோடு குழந்தை பெறும் பாக்கியத்தை இழந்து விடுகின்றாள். இந்த அடிப்படையில் வைத்துப் பார்த்தாலும் அவனுக்கு ஆகு மாக்கப்பட்ட பலதார மணத்தை தடுப்பதின் மூலம் இஸ்லாமிய சமுதாயத்தைப் பெருக்குவதற்குத் தடைக் கற்களாக இருக்கின் றோம் என்ற குற்றத்துக்கு ஆளாகின்றோம்.

- ஒருவன் மறுமணம் செய்து கொள்வதின் மூலம் முதல் மனை விக்கு இரண்டாமவளால் பல நன்மைகள் இருந்து கொண்டிருக் கின்றன. எப்போது அப்பெண் தனது கணவனுக்கு இரண்டாம் தாரமாக வருகின்றாளோ அப்போது அவனுடைய அதிகமான வேலைகளை அவளே கவனித்துக் கொள்கின்றாள். அல்லது முத லாமவளுக்கு உதவி ஒத்தாசையாக இருந்து செயல்படுகின்றாள். அதன்மூலம் முதலாமவள் ஒருவித நிம்மதியடைகின்றாள். அத னால்தான் சில புத்தி சாதுர்யம் படைத்த பெண்கள் தமக்கு வயது முதிர்ந்து, கணவனுடைய தேவைகளைத் தம்மால் நிறை வேற்றி வைக்க முடியாது எனக்கருதும் போது மற்றுமொரு பெண்ணை மணமுடிக்குமாறு கணவன்மார்களுக்கு ஆலோசனை வழங்குவதைப் பார்க்கலாம்.
- சில சந்தர்ப்பங்களில் வறுமையில் சிக்கித் தவிக்கும் பெண்களை, அல்லது அநாதைப் பெண்களை, அல்லது பாதுகாப்பதற்கு ஒரு உறவின்றியிருக்கின்ற பெண்களை பாதுகாக்கும் பொருட்டு இரண்டாம் தாரமாக மணமுடித்துக் கொள்வோரும் இருக்கின்ற னர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய எண்ணத்திற் கேற்ப அவர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.
- நம்மைப் படைத்த இறைவன் அல்லாஹ்தான் பலதார மணத்தை ஆகுமாக்கியிருக்கின்றான். அவன்தான் தனது அடியார்களது நிலைப்பாடுகளையும், தேவைகளையும் மிகவும் சிறந்த முறையில் அறிந்தவனாக இருக்கின்றான். அத்துடன் அவர்களோடு அன்பான வனாகவும், இரக்கமானவனாகவும் இருக்கின்றான். அதனடிப்படை யில்தான் அவன் ஆண்களுக்கு அவசியம் எனக்கருதிய பலதார மணத்தையும் ஆகுமாக்கியிருக்கின்றான். அவ்வாறு அவன் ஆகு

மாக்கியவைகளை நாம் நிராகரிப்பதும், அவை பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி எனக் கூறுவதும், மறுமணம் செய்து கொள்ள முனைவோரைத் தடுப்பதும் அல்லாஹ்வுக்குரிய உரி மைகளில் தலையிடுவதாகும்.

இவ்வாறுதான் அல்லாஹுத்தஆலா தனது மார்க்கத்தின் சிறப் பியல்புகளையும், அவன் இயற்றிய சட்டங்களின் காரணங்களை யும், முக்கியத்துவங்களையும் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின் றான். எனவே மேற்கூறப்படவைகளின் மூலம் பலதார மணத்தை இஸ்லாம் ஆகுமாக்கியிருப்பதில் எவ்வளவு பெரிய நன்மைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து கொண்டோம். அவைகளை அறியாதவர்கள்தான் பலதார மணத்தை வெறுத்து அதற்கெதிராக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். வல்ல அல்லாஹ்தான் அவர்களுக்கும் புரிந்து கொள்ளும் தன்மையைக் கொடுக்க வேண்டும்.

மேலும் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகளில் சொத் துரிமையும் ஒன்றாகும். அவளது குடும்பத்தினர்களில் ஒருவர் மர ணித்து அவர் சில சொத்துக்களையும் விட்டுச் சென்றி ருந்தால் அச்சொத்தில் அவளுக்கும் பங்கிருப்பதாகக் கூறிக் கொண்டிருக்கின் றது. அதனடிப்படையில் தாயுக்கும், மனைவிக்கும், மகளுக்கும், சகோ தரிகளுக்கும் குறிப்பிட்ட ஒருபகுதி இருப்பதாகத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. அதனை இறந்தவர் விட்டுச் சென்றவைகளின் சட்டங்கள் அடங்கிய நூலில் மிகவும் விரிவாகப் பார்க்கலாம்.

இஸ்லாம் வழங்கும் நீதியின் பூரணத்துவத்தை தெளிவுபடுத் தும் வகையில்தான் அனந்திரச் சொத்தில் ஆணுக்குரிய பங்கில் அரைவா சியை பெண்ணுக்குக் கொடுக்குமாறு பணித்துக் கொண்டிருக்கின் றது. ஆனால் இஸ்லாமிய அடிப்படைகளையும், சட்டதிட்டங்களையும் அறியாத சில மடையர்கள் அச்சட்டத்தை அநியாயம் எனக்கருதி ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே அளவில் வழங்கப்பட வேண்டுமென குதர்க்கவாதம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குரிய விடையை மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவதென்றால் அச்சட்டத்தை இயற்றியவன் அல்லாஹ்வாகும். அவன்தான் தனது

அடியார்களின் நிலைகளை அறிந்து சட்டம் வகுத்திருக்கின்றான். அவன் வகுத்த சட்டங்களில் ஏன் என்ற கேள்விக்கே இடம் கிடையாது எனக்கூறலாம்.

அவர்களால் இச்சட்டத்தை எவ்வாறு அநியாயம் எனக்கூற முடியும்? உலகிலுள்ள மதங்களில் சிறந்த, தெளிவான, நியாயமான சட்டங்களை போதித்துக் கொண்டிருக்கும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மார்க்கமாகும். அதுகூறும் சட்டங்களில் எவ்விதத்திலும் அநியாயம் காணப்பட மாட்டாது. அதனை அவர்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமெனில் இஸ்லாம் இச்சட்டத்தை என்ன காரணங்களினடிப்படையில் வகுத்திருக்கின்றது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். எனவே இப்படியான சட்டங்களை இஸ்லாம் எந்த அடிப்படையில் வகுத்திருக்கின்றது? அதற்குரிய காரணங்கள் யாவை? என்பவைகளை ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஒருவன் இவ்வாறான சட்டங்களை வகுத்திருப்பது எவ்வளவு நியாயமானது என்பதை அறிந்து கொள்வான்.

இப்பகுதியில் மேற்கூறப்பட்டவாறு சட்டமியற்றியதற்கு இஸ்லாம் கூறும் காரணத்தைப் பார்ப்போம். முதலில் ஒருவனுக்கு மனைவியாக வரப்போகும் பெண்ணுக்குரிய மஹ்ர் பணத்தையும், அவளுக்குரிய இதர செலவுகளையும் அவன்தான் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதை மனதில் வைத்துக் கொண்டு பின்வரும் பகுதியைப் பாருங்கள். உதாரணத்துக்கு ஒரு மகனும், மகளும் இருக்கின்ற ஒருவன் மரணிக்கின்றான் என வைத்துக் கொள்வோம். அவன் மரணித்ததும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரகாரம் மகள் ஒரு பங்கையும், மகன் அவளது பங்கைப் போன்ற இரு பங்குகளையும் எடுத்துக் கொள்கின்றார்கள். பின்பு அவர்களிருவரும் திருமண வயதை அடைந்து விடுகின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் மகனைப் பொறுத்த வரையில் அவன் தனக்கு மனைவியாய் வரவிருப்பவளுக்கு மஹ்ர், வீடு கொடுப்பதோடு அவளுக்கும், குழந்தைகளுக்கும் வாழ்நாள் முழுதும் உணவளிக்க வேண்டியவனாகவும் ஏனைய தேவைகளை நிறைவு செய்ய வேண்டியவனாகவும் இருக்கின்றான்.

அவனது சகோதரியைப் பொறுத்தவரையில் அவள் கணவனிட மிருந்து மஹ்ர் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றாள். அத்துடன் அவ ளிடமிருக்கும் பணத்திலிருந்து கணவனுக்கோ, அல்லது குழந்தை களுக்கோ, அல்லது வீட்டுத் தேவைகளுக்கோ செலவு செய்ய வேண் டிய அவசியமும் அவளுக்கில்லை. ஆக அவள் தனது தந்தையின் செல்வத்திலிருந்து கிடைப்பதையும், கணவனிடமிருந்து கிடைப்பதை யும் பெற்றுக் கொள்கின்றாள். நிலமை இவ்வாறிருக்கும் போது பொறுப்புக்கள் நிறைந்து காணப்படக் கூடிய மகனுக்கு இருபங்குகள் கொடுப்பதில் என்ன தவறு இருக்கின்றது? அவ்வாறு கொடுக்காவிட் டால் அவனுக்கு இழைக்கப்படும் அநியாயமாகக் கருதப்பட மாட்டாதா?

இவ்வாறு இஸ்லாம் பெண்களை பலவகையிலும் கண்ணியப் படுத்திக் கொண்டிருக்கையில் உலக நியதிகளும், கட்டுப்பாடுகளும் அவர்களுக்கு என்ன கண்ணியத்தை வழங்கி விட்டன? இஸ்லாத் துக்கு அப்பாற்பட்ட நியதிகளையும், நடைமுறைகளையும் பின்பற்று வோர் தமது பெண் குழந்தைகள் 17, அல்லது 18 வயதை அடைந்து விட்டால் அவளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பயந்து அவளைத் தொழிலிலே ஈடுபடுத்தி விடுகின்றார்கள். அத்தோடு அவளது உரிமைகளையும், உடமைகளையும் பறித்து இழிவுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவளது அழகையும், உடலையும் பயன்படுத்தி பல வழிகளில் பணம் திரட்டிக் கொண்டிருக்கின்றர்கள். இவ் வாறு உலக நியதிகளும், நடைமுறைகளும் இருந்து கொண் டிருக்கையில் அவைகளிலும் பார்க்க அவளுடைய விஷயத்தில் இஸ் லாத்தின் கண்ணோட்டம் எவ்வளவு மேம்பட்டுக் காணப்படுகின்றது.

ஆகவே இஸ்லாத்தின் கொடியின் கீழ் வாழும் பெண்தான் தன்னு டைய குடும்பத்தார், பெற்றோர் போன்றோருடன் இருக்கும் போதும், கணவனுடைய பாதுகாப்பில் இருக்கும் போதும், குழந்தைகளுடைய ஆதரவில் இருக்கும் போதும் அவளுடைய குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், வயோதிபம், ஏழ்மை, செல்வச் செழிப்பு, சுகயீனம், தேகாரோக்கியம் போன்ற எல்லா நிலைகளிலும் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றாள்.

இன்று சில இஸ்லாமிய நாடுகளிலும் முஸ்லிம் என்ற பெயரில் வாழ்ந்து வரும் சிலர் பெண்களுக்குரிய உரிமைகளையும், சுதந்திரங்களையும் வழங்காது அவர்களை அவமதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களது நடைமுறைகளை வைத்து ஒருபோதும் நாம் இஸ்லாத்தைத் தப்பாக எடைபோட்டு விடக் கூடாது. ஏனெனில் அவர்கள் இஸ்லாத்தையும், அது கூறும் சட்டதிட்டங்களையும் சரியான முறையில் அறிந்து கொள்ளாத காரணத்தால்தான் அவ்வாறு செய்கின்றார்களே தவிர இஸ்லாம் அதற்கு எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது. மாறாக அவர்கள் செய்யும் அந்த இழி செயல்களை செய்ய வேண்டாம் என்றே தடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆக அவர்கள் தாம் செய்யும் இழிசெயலிலிருந்து தம்மைத் திருத்திக்கொள்ள இஸ்லாம் கூறும் வழிகாட்டல்களின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

மேற்கூறப்பட்டவைகளின் பிரகாரம் பெண்களுக்கு அன்பு செலுத்தல், அவர்களது கற்பைப் பாதுகாத்தல், அவர்களுடன் அந்நியோன்யமாக நடந்து கொள்ளல், பிறரின் தீங்குகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் போன்றவைகளின் மூலம் இஸ்லாம் அவர்களைக் கண்ணியப்படுத்தியிருக்கின்றது. ஆனால் இன்றைய நவீன யுகத்தில் வாழ்வோர் அவைகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால்தான் அப்பெண்களை வைத்து பணம் திரட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு பெண்கள் முகமூடி அணிவதை அநாகரீகம் எனக்கூறி வருகின்றார்கள். பெண்கள் தமது மறைக்கப்பட வேண்டிய அங்க அவையங்களை வெளிக்காட்டிக் கொண்டு நடமாடுவது அவர்களுக்கு ஆபத்தையும், நோவினையையும் விளைவிக்கும் என்பதையும் அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அப்படியில்லையென்றால் பெண்கள் தமது அழகுறுப்புக்களான மார்புப் பகுதி, தொடை போன்றவைகளை வெளிக்காட்டிக் கொண்டிருப்பதற்கும் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கும் தொடர்பிருப்பதாக எவ்வாறு கூறுவார்கள்? அவர்களின் கருத்துப்படி அறிவையும் கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்வதற்கு பெண்கள் மெல்லிய, குட்டையான, இறுக்கமான

ஆடைகளைத்தான் அணிய வேண்டுமா? இக்கேள்விகளை ஒவ்வொருவரும் தத்தமது உள்ளத்திடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் அழகான பெண்களை அரைகுறை ஆடைகளுடன் விளம்பரத்தில் நடிக்குமாறு பணிக்கும்போது அவளை எந்த வகையில் கண்ணியப்படுத்தி விட்டார்கள். அவ்வாறான விளம்பரங்களில் அழகான பெண்களை பயன்படுத்தும் அவர்கள் பிற்காலத்தில் அவளது அழகு குறைந்து விட்டால், அல்லது அவளுக்கு வயதாகி விட்டால் அவளை ஏனைய பொருட்களைப் போன்று ஒதுக்கியல்லவா விடுகின்றார்கள்? மேலும் நாகரீகம் என்ற போர்வையில் அழகான பெண்களை இவ்வாறு நடத்தும் இவர்கள் அழகற்ற, அல்லது வயது முதிர்ந்த பெண்களுக்கு என்ன முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றார்கள்? பெரும்பாலும் அவர்களை முதியோர் இல்லங்களிலும், அகதி முகாம்களிலும் தள்ளிவிட்டு அவர்களை சந்திக்கச் செல்லாமலும், அவர்கள் எவ்வாறு இருக்கின்றார்கள்? என்பதைப்பற்றி நலம் விசாரிக்காமலும் அனாதரவாகவல்லவா விட்டுவிடுகின்றார்கள்? வேறுசில சந்தர்ப்பங்களில் ஓய்வூதியம் என்ற பெயரில் சிறு தொகையைக் கொடுத்து அதன்மூலம் வாழ்ந்து வருமாறல்லவா பணிக்கின்றார்கள்? அக்காலத்தில் அவர்களுக்கு உறவென்று சொல்லிக் கொள்ளவோ, அல்லது அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைக்கவோ, அல்லது அவர்களுக்கு அன்பு காட்டவோ ஒரு உறவின்றி துர்பாக்கியவதிகளாக அல்லவா வாழ்ந்து வருகின்றார்கள்?

ஆனால் இஸ்லாத்தின் வட்டத்துள் வாழும் ஒரு பெண்ணுக்கு வயது அதிகரிக்கும் போதுதான் அளவுக்கதிகம் அவள் கண்ணியப் படுத்தப்படுகின்றாள். அவளுடைய குழந்தைகள், உறவினர்கள் அவளுக்கு பணிவிடை செய்வதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இத்தன்மை பெண்கள் வயது முதிர்ந்த காலத்திலும் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உணர்த்த வில்லையா? அதனை உலகிலுள்ள மதங்களில் இஸ்லாம் மாத்திரமே இன்று வரையும் போதித்துக் கொண்டிருக்கின்றது.

முகமூடி அணிந்து தனது உடலை மறைத்துச் செல்லும் பழக்கத்தை அநாகரீகம் என்று கூறுவது தவறான கருத்தாகும். மாற்ற

மாக அவர்கள் கூறும் ஆடைகுறைப்பில் தான் பெண் வேதனையும், துன்பமும் அடைகின்றாள். அதற்கு தாரணமாக பல விஷயங்களைக் கூறலாம். அவைகளில் ஒன்றாக மேற்கத்திய நாடுகளில் வாழும் மக்கள் தமது ஆடைகளைக் குறைத்து மிருகங்களைப் போன்று வாழுவ தால்தான் அவர்கள் உடலுறவில் ஆர்வமிழந்து காணப்படுகின்றார்கள். மேலும் அவர்களுடைய நாகரீகம் வளர்ந்து செல்லும் போதெல்லாம் அவர்களது ஆடை குறைப்புக்களும் அதிகரித்து பெண்ணின் பெரும்பகுதி மறைக்கப்படாமல் வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகளும், கலாச்சாரங்களும் தொடர்ந்து கொண் டிருந்தால் படிப்படியாக அவர்களது ஆடைகள் குறைந்து இறுதியில் நிர்வாண கோலத்தில் நடமாடுபவர்களாக மாறி விடுவார்கள். இவ்வாறு தான் ஒரு பெண் இஸ்லாத்தின் கீழிருந்தால் எவ்வாறிருப்பாள். அதற்கு மாறாக நடந்து வந்தால் எவ்வாறிருப்பாள் என்பதனை இஸ் லாம் மனித சமுதாயத்துக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது.

அன்பார்ந்த சகோதரர்களே!

இச்சிற்றேட்டை வாசித்த நீங்கள் இஸ்லாத்தின் மகிமையையும், அது உள்ளடக்கியிருக்கும் சிறந்த கருத்துக்களையும், நீதி நியாயங் களையும், அது மக்களுக்கு எவ்வளவு அவசியமான மார்க்கம் என் பதையும் புரிந்து கொண்டிருப்பீர்கள். அதேநேரம் இஸ்லாம் மார்க்கம் இவ்வளவு சிறப்புமிக்கதாக இருந்து கொண்டிருக்கையில் அதனைப் பின்பற்றி வரும் முஸ்லிம்கள் ஏன் ஏனையோருக்கு முன்னுதாரணமாக இருப்பதில்லை? ஏன் அவர்கள் அது போதிக்கும் சட்டங்களிலிருந்து மிகவும் தூரமாயிருக்கின்றார்கள்? இஸ்லாம் பயங்கரவாதத்தைப் போதிக்கும் மார்க்கம் என உலகில் பரவலாகக் கூறப்படுகின்றதே அக் கருத்தின் உண்மை நிலைப்பாடு என்ன? என்ற கேள்விகள் உங்களுள் ளத்தில் எழலாம். அவைகளுக்குரிய விடைகளையும் தெளிவுபடுத்து வது என்மீது அவசியம் எனக்கருதுகின்றேன். இதோ அவைகளுக் குரிய விடைகள்.

- தற்காலத்தில் இஸ்லாத்தைப் பின்பற்றி வரும் முஸ்லிம்கள் உரிய முறையில் இஸ்லாத்தைப் பின்பற்றுவதில்லை. அவர்களது நடை முறைகளை வைத்து அவைகளைத்தான் இஸ்லாம் போதிப்பதாக

ஒருபோதும் நாம் தவறாக எடைபோட்டு விடக்கூடாது. அவ்வாறு எண்ணுவது இஸ்லாத்தின் மீது களங்கம் கற்பிப்பதாகும். மாற்றமாக இஸ்லாத்தைப் பற்றியும் அதுகூறும் நடைமுறைகளைப் பற்றியும், நீதி நியாயங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள இஸ்லாத்தின் அடிப்படை நூல்களான அல்குர்ஆனிலும், ஹதீஸிலும், இஸ்லாத்தை சரியான முறையில் எடுத்துக் கூறும் ஏனைய நூ களிலும் வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறான தவறுகளைச் செய்ய வேண்டாம் என்றே இஸ்லாம் தடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்வீர்கள்.

மேலும் இஸ்லாம் எவ்வாறான சட்டதிட்டங்களைப் போதித்துக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள மற்றுமொரு வழி. அதனை உரிய முறையில் பின்பற்றி வருவோரைப் பார்த்தும் அறிந்து கொள்ளலாம். அவர்களது நடைமுறைகளை வைத்து இஸ்லாம் எவ்வளவு சிறப்புமிக்க மார்க்கம் என்பதையும், சிறியது, பெரியது எனப்பாராது நல்லவை, தீயவைகளை ஒன்று விடாமல் அறிவித்திருப்பதையும், அவைகளைப் பின்பற்றி வருவோர் ஒழுக்கத்தின் சிகரத்தில் இருப்பதையும் அறிந்து கொள்வீர்கள். மாற்றமாக தவறுகளில் ஈடுபடுவோரை மாத்திரம் கருத்திற் கொண்டு இஸ்லாத்தை மோசமான மார்க்கமெனக் கூறுவது எவ்விதத்திலும் நியாயமாக மாட்டாது?

- இன்று முஸ்லிம்கள் எல்லா விஷயங்களிலும் பின்னடைந்து காணப்படுவதற்குரிய முக்கிய காரணம். அவர்கள் இஸ்லாத்தை விட்டும் தூரமாகியிருப்பதனாலாகும். பொதுவாக இஸ்லாம் முன்னேற்றப் பாதையையும், வளர்ச்சியையும் கற்றுக் கொடுக்கும் உன்னத மார்க்கமாகும். ஆதலால்தான் இஸ்லாத்தை உரிய முறையில் பின்பற்றி வந்த முன்னோர்களது நீதி, நியாயங்கள் நிறைந்த ஆட்சிக்கு பல அந்நிய நாடுகள் பலநூறு ஆண்டுகளாக கட்டுப்பட்டு வந்தன.

உதாரணத்துக்கு சிலுவை யுத்தத்துக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினர் உற்பத்தியிலும் சரி, ஆராய்ச்சியிலும் சரி என்ன முன்

னேற்றத்தைக் கண்டிருந்தார்கள்? அந்த யுத்தத்துக் பின் முஸ் லிம்களோடு ஒன்று சேர்ந்ததனால்தானே முஸ்லிம்களின் நுணுக்க மான அறிவுகளைப் பயன்படுத்தி முன்னேறினார்கள்? வரலாற்றாசி ரியர்களால் இருண்ட காலமென வர்ணிக்கப்படும் காலத்தில் வாழ்ந்த அவர்கள் மடமையின் உச்ச கட்டத்திலல்லவா வாழ்ந்து கொண்டிருந்தார்கள்? அக்கால கட்டத்தில் முஸ்லிம்கள்தானே சிறந்த மக்களாக கணிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்?

மேலும் இஸ்லாத்தின் அடிப்படையில் அன்பையும், நியாயத் தையும் கடைபிடித்து ஆட்சி செய்து வாழ்ந்த நாடுகளில் அந் நாட்டவர்களின் சிறந்த வழிமுறைகளைக் கண்டு அவர்களது எதிரிகளும் அவ்வாட்சிக்குக் கட்டுப்பட்டு வாழவில்லையா? இவ் வாறிருக்கையில் இஸ்லாத்தை உரிய முறையில் பின்பற்றி வந்த இஸ்லாமிய சமுதாயத்தை அவர்களது சத்திய மார்க்கம் பின்ன டையச் செய்ததா? அல்லது உண்மையான முன்னேற்றப் பாதையி லிருந்து அவர்களைத் தடுத்ததா? மாற்றமாக அல்லாஹ்வை நிரா கரித்து வாழ்ந்தவர்கள்தானே அக்காலத்தில் மிகவும் இழிவானவர்க ளாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்? தற்காலத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம்கள் இஸ்லாத்தை உரிய முறையில் பின்பற் றாததால்தான் பிழவுபட்டும், அந்நிய நாடுகளின் அநியாயங்களுக் கும் இலக்காகிக் கொண்டிருக்கின்றார்கள்.

மார்க்க அடிப்படைகளில் முன்னேற்றமின்றி பொருளாதாரத்தி லும், நாகரீகத்திலும் மாத்திரம் முன்னேற்றம் இருந்தால் போதாது என்பதை இச்சந்தர்ப்பத்தில் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குதாரணமாக இன்றைய மேற்கத்திய நாடுகளை எடுத்துக் கொள்ளலாம். அவர்களிடம் இஸ்லாத்தைத் தவிர மற்ற எல்லாமே இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் அவர் கள் என்ன நன்மையை அடைந்து கொண்டார்கள்? நாகரீகம் என்ற பெயரில் அநியாயங்களும், அழிச்சாட்டியங்களும், தனது சகோதரனை அடிமைப்படுத்துவதும், பலவீனமான மக்களை அடக்கியாள்வதும்தான் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி அவர்களில்தான் சதி, திருட்டு, கொலை,

கொள்ளை, தற்கொலை, மனநோய் போன்ற எத்தனையோ பிரச்சி னைகள் தலைவிரித்தாடுகின்றன. எனவே தம்மை வழிநடத்திச் செல்லக்கூடிய சத்திய மார்க்கமின்றிப் பொருளாதார, நாகரீக முன் னேற்றங்கள் கெடுதிகளைத்தான் ஏற்படுத்துமே தவிர நன்மைகளை விளைவிக்க மாட்டாது என்பது தெளிவாகின்றன.

- இஸ்லாம் பயங்கரவாதத்தைப் போதிக்கும் மார்க்கம் என்பதும் இட்டுக் கட்டப்பட்ட பொய்யாகும். அத்துடன் இஸ்லாத்தைப் பின் பற்றிவரும் மக்களை அதிலிருந்து தூரமாக்குவதற்கு மேற்கொள் ளப்படும் சூழ்ச்சிகளில் ஒரு வகையுமாகும். ஏனெனில் இஸ்லாம் அன்பையும், பாசத்தையும், மன்னிக்கும் மனப்பான்மையையும் போதிக்கும் மார்க்கமாகும். ஜிஹாத் செய்வதற்கு வாளைப் பயன் படுத்துமாறு இஸ்லாம் பணித்தாலும், அதனை ஒரு நோயாளியின் நன்மையைக் கருதி அவனது உடம்பிலுள்ள மோசமான இரத் தத்தை வெளியாக்கப் பயன்படுத்தும் ஒரு ஊசிக்கு உதாரணமா கக் கொள்ளலாம். எனவே ஜிஹாதினுடைய நோக்கம் மக்களது உயிரைக் குடிப்பதும், இரத்தத்தை ஓட்டுவதுமல்ல. மாற்றமாக மக்கள் சிறந்த முறையில் வாழுவதற்காக மனிதர்கள் மனிதர்க ளுக்கு அடிமைகளாக இருக்காமல் அல்லாஹ்வின் அடிமைகளாக இருக்க வேண்டும் என்பதின்பால் அழைப்பதற்கு மேற்கொள்ளப் படும் ஒரு வழிமுறையாகும்.

இஸ்லாமிய சமுதாயம்தான் உலகில் வாழ்ந்த சமுதாயங்களில் சிறந்த சமுதாயமாகும். அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு வெற்றி பெற்று சிறந்த ஆட்சியை ஏற்படுத்திய சமுதாயமும் இஸ்லாமிய சமுதாயமேயாகும். அதனை சிறந்த முறையில் அறிந்து கொள்ள வேண்டுமெனில் இஸ்லாமிய வரலாறுகளைப் புரட்டிப் பாருங்கள் தெரிந்து கொள்வீர்கள். அதற்குதாரணமாக சில வரிகளை இங்கே குறிப்பிடுகின்றேன்.

இஸ்லாமியர்கள் தங்கள் எதிரிகளை வெற்றி கொண்ட போது என்ன செய்தார்கள்? அகங்காரங் கொண்டார்களா? அல்லது மக் களை அடக்கியாண்டார்களா? அல்லது அவர்களை கண்டந்

துண்டமாக வெட்டினார்களா? அல்லது அவர்களை மானபங்கப் படுத்தினார்களா? அல்லது அவர்களில் வயோதிபர்களையும், பெண் களையும், சிறார்களையும் கொலை செய்தார்களா? அவர்களுடன் எப்படி நடந்து கொண்டார்கள்?

நபியவர்களுக்கு கடுந் துன்பத்தை விளைவித்த மக்கா குறை ஷிக் காபிர்களுடன் மக்காவை வெற்றி கொண்டபோது நபியவர் கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? அவர்களையும் மன் னித்து, அவர்களது கைதிகளையும், உடமைகளையும் பாதுகாத் துக் கொடுக்க வில்லையா?

ரோம், பாரசீகம் போன்ற நாடுகளை வெற்றி கொண்ட முஸ் லிம்கள் அந்நாட்டவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? அவர்களுக்குச் சதி செய்தார்களா? அல்லது அவர்களது பெண்க ளைக் கற்பழித்தார்களா? அல்லது வணக்கஸ்தலங்களிலிருந்த பாதிரிமார்களுக்கும், சந்நியாசிகளுக்கும் தீங்கு விளைவித்தார்களா? அல்லது பூமியில் அழிச்சாட்டியம் செய்து மிருகங்களைப் போன்று திரிந்தார்களா? அல்லது வீடுகளையும், மரங்களையும் அழித்து நாசமாக்கினார்களா? மேற்கூறப்பட்டவைகளில் எதிலே ஈடுபட்டார்கள்?

சிலுவை யுத்தத்துக்கு முன் பல கொடுமைகளை விளைவித் துக் கொண்டிருந்த மக்களுக்கு சிலுவை யுத்தத்தில் வெற்றி கொண்ட சலாஹுத்தீன் என்பவர் என்ன செய்தார்? அவர்களது படைத் தளபதிகளை மன்னித்து, அவர்களது காயங்களுக்கு மருந்திட்டு வைத்தியம் செய்ய வில்லையா? அவர்களது கைதி களை தண்டனைக்கு உட்படுத்தாமல் விடுதலை செய்யவில் லையா? இவ்வாறு முஸ்லிம்களின் வரலாறுகளில் மதிப்பிற்குரிய விஷயங்கள்தான் நிறைய இடம் பெற்றிருக்கின்றன. அதுமட்டு மின்றி அந்நற்குணங்களால் மக்களை இஸ்லாத்தின்பால் ஆர்வ மூட்டி இஸ்லாத்தில் இணையச் செய்த சரித்திரங்களும் நிறை யவே இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மாற்று மதத்தவர் கள் இவ்வாறு நடந்து கொள்வார்களா? அல்லது மேற்கத்தியர்க ளிடம்தான் அவ்வாறான பண்புகள் இருக்கின்றனவா? அதற்குரிய

விடையை நான்கூற வேண்டிய அவசியமில்லை. அதைத்தான் நீங்கள் பார்த்தும், கேட்டும் அறிந்து கொண்டிருக்கின்றீர்கள்.

ஹிட்லர், முஸோலினி, லெனின், ஸ்டாலின், அநியாயக்கார சர்பியர்கள் போன்றோர் எங்கே பிறந்தவர்கள்? அவர்கள் ஐரோப்பிய நாடுகளில் பிறந்த கொடுங்கோலர்களில்லையா? அவர்கள் பல்லாயிரக்காணக்கான மக்களை கொடுமைக்கு மேல் கொடுமைப்படுத்தி கொலை செய்யவில்லையா? அவர்களைத்தானே இன்றைய உலகம் நாகரீகத்தின் அடையாளச் சின்னங்கள் எனப்போற்றிக் கொண்டிருக்கின்றது. தற்போது கூறுங்கள்! உண்மையான பயங்கரவாதிகள் யார்? முஸ்லிம்களா? அவர்களா?

மேலும் அணுவாயுதம், விஷ ஆயுதம் என பல ஆயுதங்களைக் கண்டு பிடித்தவர்கள் யார்? யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளோடு மிகவும் மோசமாக நடந்து கொள்வோர் யார்? பெண்களை மலடிகளாக மாற்றுவதும், மக்களுடைய செல்வங்களையும், சுதந்திரங்களையும் பறிப்பதும் யார்? எய்ட்ஸ் போன்ற நோய்களை பரவச் செய்பவர்கள் யார்? அவர்கள் மேற்கத்தியவாதிகளும், அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருவோருமில்லையா? எனவே அவர்கள்தான் உண்மையான பயங்கரவாதிகளாவார்கள்.

ஆனால் முஸ்லிம்கள் மேற்கொள்ளும் ஜிஹாத் பொய்யை அழித்து உண்மையை நிலை நாட்டவும், அவர்களையும். ஆவர்களது சொத்து, செல்வங்களையும், நாடுகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் மேற்கொள்ளும் வழிமுறையாகும். அதனை எவரும் பயங்கரவாதம் எனக் கூறமுடியாது. ஏனெனில் அவ்வாறு அவைகளைப் பாதுகாத்துக் கொள்ள போரிடுவது நியாயமான ஒன்றாகும். இன்று சில இஸ்லாமிய இளைஞர்களிடம் ஜிஹாத் என்ற பெயரில் சில தவறுகள் இடம் பெற்றாலும் அவைகள் பயங்கரவாதிகள் விளைவிக்கும் தீங்குகளைவிட மோசமானவைகளல்ல. அப்படியிருந்தாலும் அவர்களது அச்செயல்களை இஸ்லாமோ, இஸ்லாமிய சமுதாயமோ அங்கீகரிக்கவில்லை. எனவே அறிவு கொடுக்கப்பட்டடோர் இஸ்லாத்தையும், அதனது சட்டதிட்டங்களையும் நடுநிலையிலிருந்து சிந்தித்தே விமர்சிக்க வேண்டும்.

**முடிவுரையில் அறிவுரை.**

அன்பார்ந்த சகோதரர்களே!

இதுவரையும் பார்த்தவைகளிலிருந்து இஸ்லாத்தின் சிறப்பம்சங்களையும், அதுதான் வெற்றிக்குரிய ஒரே மார்க்கம் என்பதையும், அதனை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து கொண்டீர்கள். தற்போது உங்களையும் இஸ்லாத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றேன். இஸ்லாத்தில் இணைவது எவ்வாறு? என நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது. இதோ அதற்குரிய பதிலையும் கூறிவிடுகின்றேன்.

ஒவ்வொரு மனிதனும் உலகில் பிறக்கும் போது அவனைப் படைத்த வல்ல நாயன் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டவனாகவே பிறக்கின்றான் என்பதை முதலில் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவன் பிறந்த அதே நிலையிலே இருந்து கொண்டிருந்தால் அவன் அடிப்படை முஸ்லிமாவான். அவன் பருவ வயதை அடைந்தபின் மீண்டும் அவனது இஸ்லாத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கில்லை.

ஆனால் அவன் முஸ்லிமல்லாத பெற்றோர்களிடம் வளர்ந்து அவர்கள் பின்பற்றிய மதத்தையோ, அல்லது வேறொரு மதத்தையோ ஏற்றுக் கொண்டிருந்தால், அவனது முன்னய மதத்தை விட்டுவிட்டு இஸ்லாத்தில் சேர்ந்து கொள்வது அவசியமாகின்றது. அந்த அடிப்படையில் அவன் வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ் என்பதனையும், அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பின்பு அதுகூறும் மார்க்க சட்டதிட்டங்களான தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை நடைமுறைப்படுத்தி வரவேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தி வருபவன்தான் உண்மையான முஸ்லிமாவான்.

எனவே நாமும், நமது ஏனைய சகோதரர்களும் சத்தியத்தை அறிந்து அதன் பிரகாரம் நடப்பதற்கும், அதனை அறிந்து கொள்ளாதோருக்கு அறிவித்துக் கொடுப்பதற்கும், நாளை மறுமையில்

நாமனைவரும் வெற்றி பெற்ற கூட்டத்தினரில் சேர்ந்திருப்பதற்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் நல்லருள் புரிவானாக! ஆமீன்.

وصلى الله تعالى وسلم على نبينا محمد وآله وصحبه وسلم

--அர்அர்--

مطابع الحميضي ت 4581000 ف 4592217 الرياض

# الطريق إلى الإسلام

## باللغة التاميلية

تأليف

الشيخ / محمد ابراهيم الحمد

ترجمة

صلاح الدين محمد أنيس

مراجعة

عبد العزيز شاجهان

دار الورقات العلمية للنشر والتوزيع

الرياض ٣٢٦٥٩ ص.ب ١١٤٣٨ هاتف :٤٢٢٨٨٣٧ ناسوخ ٢٩٣٢٤٠٧



Designed By : 0126734555

# الطريق إلى الإسلام

تأليف الشيخ :
محمد إبراهيم الحمد

ترجمة :
محمد أنيس صلاح الدين

دار القاسم للنشر والتوزيع
الرياض - الشفا - هاتف : ٤٢٠١١٧٧ - فاكس : ٤٢٢٨٨٣٧